நவம்பர் 2014

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/142/News/2014

# சோதிட கேசரி

ISSN 2012-5143

விலை ரூபா 75 /-

மலர்: 7 இதழ்: 08

கார்த்திகை மாத இதழ்



சனிப்பெயர்ச்சி பலன்கள்

மனிதர்களை வசீகரிக்க...

சிறுவர் சிறப்பு பகுதிகள்

பாவங்கள் போக்கும் புனித வேங்கடாத்ரி

கார்த்திகை மகாதீப தரிசனம்

விஷ்ணுவின் அவதாரமாய் கபில மகரிஷி

www.jeyechandrans.com



முகூர்த்த பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

JEYECHANDRANS
The Art of Fashion

இல.194,மெயின் வீதி, கொழும்பு-11.
011-2448870, 011-2448860
SKYPE : jeyechandrans555

433,காலி வீதி, வெள்ளவத்தை
011-4528435,011-4528438
SKYPE : jeyechandrans888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடகேசரி
SOTHIDA KESARI
Astrological Magazine - Tamil
மலர்: 7 | இதழ்: 08





**ஸ்ரீ முருகன் ஸ்தோத்திரம்**
கந்தனே! கடம்பனே! கருத்தினில்
உறைந்திடும்
கருணை வடிவான குகனே!
கண்களோ பன்னிரண்டிருந்திடுனும்
ஏழையைக்
காக்க ஒரு கண்ணுமிலையோ!

# இந்துக்களின் "தேசிய மந்திரமாய்" விளங்கிடும் காயத்ரி!

ஆத்ம சாந்தியை அள்ளித் தருபவை மந்திர உச்சாடனங்கள். மந்திரங்களுக்கெல்லாம் மூலமாயும் தாயாகவும் விளங்குவது காயத்ரி மந்திரமாகும். நான்கு வேதங்களில் சொல்லப் பட்டுள்ளவற்றிற்கெல்லாம் சாரமாய் காயத்ரி மந்திரம் போற்றப்படுகின்றது.

இம்மையிலும், மறுமையிலும் நற்கதி அடைய வேண்டும் என விரும்பிடுவோர் யாவரும், முறைப்படி காயத்ரி மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

ஆண்களும், பெண்களும் அவசியம் காயத்ரி மந்திரத்தை ஜபித்து, உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, இதர எல்லா நலன்களையும் அடைதல் வேண்டுமென புராண காலத்து ரிஷிகளும் வலியுறுத்தி வந்துள்ளார்கள்.

காயத்ரி மந்திரத்தின் அளவற்ற பெருமையை பிரபஞ்ச சாரமும் தெளிவாக்குகின்றது. "வீட்டிலிருந்து காயத்ரி மந்திரத்தை ஜபம் செய்தால் ஒரு பங்கு பலனுமும், ஆற்றங்கரையில் ஜபம் செய்தால் இரண்டு பங்கு பலனும், ஹோமத்தின் அருகில் ஜபித்தால் ஆயிரம் மடங்கு பலனும், ஆலயத்திலும் புண்ணிய ஷேத்திரத்திலும் ஜபித்தால் நூறாயிரம் மடங்கு பலனும் கிடைத்திடும்" எனவும் தர்ம சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வளவு சிறப்பைப் பெற்று விளங்கிடும் காயத்ரி மந்திரத்தை நாமும் சிரத்தையுடன் சொல்லி வாழ்வில் அளவிலா நலன்களைப் பெற்றிடுவோம்!

இம்மாத இதழில் பெரும் புண்ணியம் அளித்திடும் மகா தீப தரிசனம், விஷ்ணுவின் அவதாரமாய் போற்றப்படும் கபில மகரிஷி, வரலாறாய் நிலைத்து நிற்கும் அதி உன்னத கோயில் சிறப்பங்கள், கலிபோர்னியா லிவர்மோரின் சிவவிஷ்ணு ஆலயம், ஜோதிடத்தின் பிறப்பிடம், கலசதீர்த்தம் ஒரு சமய சஞ்சீவி, அரசன் செய்ததே சிறப்பு, கார்த்திகை மாதத்து சுபதினங்கள், அனுமனின் புனிதமான விஸ்வரூபம் ஆகிய கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் பலவும், கார்த்திகை மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கை ஆகின்றன.

ஆசிரியர்

## ஜய வருடம் கார்த்திகை மாதம் 17.11.2014 முதல் 15.12.2014 வரை

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | ராசி<br>21.11.2014 விருச்சிக புதன்<br>22.11.2014 மகர செவ்வாய்<br>3.12.2014 சிம்ம குரு<br>7.12.2014 தனுசு சுக்கிரன்<br>8.12.2014 தனுசு புதன் | | குரு |
| | | | ல / சந்திரன் |
| செவ்வாய் | சூரியன் சுக்கிரன் | புதன் சனி | ராகு |

| | | | |
|---|---|---|---|
| குரு | புதன் | | சனி |
| கேது | அம்சம்<br>3.12.2014<br>அதிசாரம் மேசம் குரு | | சூரியன் ராகு |
| | | | சுக்கிரன் |
| | சந்திரன் செவ்வாய் | ல | |

**Publisher:** Express Newspapers (Ceylon) (Pvt) Limited,
185, Grandpass Road, Colombo - 14,
Tel.: + 94 117 322700 (30 Lines) Fax: + 94 112 439987
website: www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிட கேசரி இதழை நான் வழமையாக வாசித்து வருகிறேன். கோயில் சிற்பங்கள் பற்றிய கட்டுரைகளும் படங்களும் மிகவும் நன்றாக உள்ளன. எமது மனப் பூர்வமான பாராட்டுகள்.

**மா.கமலகண்ணன்**
**கொழும்பு**

ஆன்மீக இதழை நான் தொடர்ந்து படித்து வருகின்றேன். இதழில் பிரசுரிக்கப்பட்டு வரும் "பகவத்கீதைத் துளிகள்" கட்டுரைகள் மனதிற்கு சாந்தியைத் தரவல்லனவாக இருக்கின்றன. தொடர்ந்து வெளியிடுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வ.சியாமளாதேவி,**
**நீர்கொழும்பு**

# விமர்சன சிற்பிகள்

சோதிட கேசரி ஆன்மீக மாத இதழை நான் ஒவ்வொரு மாதமும் வாசித்து வருகின்றேன். இதில் வழங்கப்படுகின்ற ராசி பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் மிகவும் பொருத்தமுடையதாக இருக்கின்றன. நன்றி

**N.R.C.சந்தோஷ்**
**குமார், கொழும்பு**

ஒவ்வொரு மாதமும் சோதிட கேசரியில் பிரசுரிக்கப்படும் சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் கட்டுரைகள் பல விடயங்களில் சிந்தனையைத் தெளிவுபடுத்துவதாக உள்ளன. தொடர்ந்து பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ்.எம்.சுந்தரமகாலிங்கம்**
**திருகோணமலை**




சோதிட கேசரியில்கடந்தசிலமாதங்களாகபிரசுரிக்கப்பட்டுவரும் சிறுவர்களுக்கான கதைகள் குழந்தைகளால் மிகவும் விரும்பப்படுகின்றன. தொடர்ந்துபிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**K.ராஜராஜேஸ்வரி,**
**மட்டக்களப்பு**

சோதிட கேசரியில் கடந்த பல மாதங்களாகப் பிரசுரிக்கப்பட்டு வரும் சோதிடத்துளிகள் பகுதி எம்போன்ற சோதிடத்தில் ஆர்வமுள்ள வாசகர்களுக்கு மிகவும் உபயோகமாகவுள்ளது. நன்றிகள் பல!

**எம்.எம்.கைலாசநாதர்,**
**வெள்ளவத்தை**

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டுவரும் சுபதினங்களுக்கான விபரப் பட்டியல் எமது குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பா.நம்புநாயகி**
**யாழ்ப்பாணம்**

சோதிட கேசரி இதழை நான் மறந்தும் படிக்காமல் இருப்பதில்லை. போதி தர்மர் தொடர்பான கட்டுரைகள் மிகவும் சுவாரஸ்யமானதாக இருப்பதால் எமது இல்லத்தில் நானும் மற்றவரும் தொடர்ந்து வாசித்து வருகின்றோம்.

**எம்.துரைராஜ பாண்டியன்**
**தெஹிவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவில்லாத காலமாய் இருப்பவன் கண்ணன்

**கேட்டல், நினைத்தல், தியானித்தல் என்னும் ரகசியமான செயல்களிலே மிக முக்கிய மானது மௌனம். அதனால் ரகசியங்களில் மௌ னமாக இருப்பவன் கண்ணன்.**

ஒவ்வொரு ஜீவனிலும் ஆத்மா உறைகின்றது. அந்த ஆத்மா உடலை விட்டு அகலும் போது மர ணம் சம்பவிக்கின்றது. அந்த ஆத்மாவை எடுத்துக் கொள்ளும் மரணமாக கண்ணன் இருக்கின்றான். இந்த உலகில் எல்லா உயிர்களும் பிறக்கின்றன, வளர்கின்றன, சில காலம் வாழ்கின்றன, இன விருத்தி செய்கின்றன, முதிர்கின்றன, இறுதியில் அழிகின்றன. இந்த ஆறு மாற்றங்களிலே தாயின் வயிற்றிலிருந்து உயிர் தோன்றுவதே முதலானது. அத்தகைய பிறப்பாக இருப் பவன் கண்ணன்.

உலகிலே ஏமாற்றுபவர்கள் பல வகைகளில் ஏமாற்றுகிறார்கள். அத்தகைய ஏமாற்றுச் செயல்க ளிலே சூதாட்டமே மிகக் கொடியது. ஆசை காட்டி மோசம் செய்யவல்லது. அதனால் ஏமாற்றுகிறவர் களில் சூதாட்டமாக கண்ணன் இருக்கின்றான். அந்த வழி உயிர்களுக்கு எண்ணற்ற இன்னல் களைத் தரவல்லது. அதனால் அதை யாரும் பின் பற்றக் கூடாது என்ற கருத்தைத் தெளிவு படுத்தவே கண்ணன் சூதைத் தன் பிரதிநிதியாகக் கூறுகிறான். ஒளிர்பவற்றில் கண்ணன் தேஜஸாக, பிரகாசமாக இருப்பவன். தவறு செய் வோரை தண்டிப்பவர்கள் ஆளும் பிரதிநிதிகள், அத்தகையவர்களில் செங் கோலாக நல்ல நீதியைச் சொல்பவனாக இருப்பவன் கண்ணன்.

வெற்றியை விரும்புபவர்கள் நீதியுடனும் நியா யத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். அதனால் வெற்றியை நாடுபவற்றில் நியாயமாக இருப்பவன் கண்ணன். துறவிகளின், அறிவாளிகளின் ஞான மாக இருப்பவன் கண்ணன்.

இவ்வுலகில் நடக்கும் எல்லா செயல்களுக்கும் காரணம் இருக்கும். அந்தக் காரணமே, உயிர்களின் வித்து கண்ணன். இந்த உலகில் எல்லா உயிர்களு க்கும் பொருட்களுக்கும் முடிவு உண்டு. முடி வில்லா தது காலம் மட்டுமே. அந்தக் காலமாக இருப்பவன் கண்ணன். முயற்சி, அதைத் தொடர்ந்து வரும் வெற்றியாக இருப்பவன் கண்ணன்.

பெண்களின் புகழ், புத்தி, பொறுமை, நினைவு, வாக்கு, உறுதி, விசுவாசம், அதிர்ஷ்டம், செல்வம் என்று எல்லாமாக இருப்பவன் கண்ணன். இதில் கண்ணன் பெண்மையை போற்றும் தன்மையை அறியலாம். ஆணாதிக்க வர்க்கத்தினரிடையே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர் களின் குணங்கள் அனைத்தும் தானே என்று கூறி பெண்மையைப் பெருமை படுத்துகின்றார்.

திறமை, செழுமை, நன்மை, நல்லொளி மிக்க அனைத்துமே கண்ணன். அவை கண்ணனின் சாயலாக இருக்கின்றன. கண்ணனின்றி இந்த உலகம் இல்லை. அவனது சிறப்புகளுக்கும் மகிமைகளுக்கும் முடிவே கிடையாது. முடிவில்லாத காலமாய் இருப்பவனும் கண்ணனே...

**சா.மெய்யப்பன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேஷம்

**ஜய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**

*உறுதியும் தெளிவும் கொண்டு விளங்கும் மேஷராசி வாசகர்களே!*

*உங்களின் ராசிக்கு இம்மாதம் குரு தொழில் ஸ்தானத்தையும், விரைய ஸ்தானத்தையும் அட்டமஸ்தானத்தையும் பார்ப்பதால் தொழிலில் எப்படிப்பட்ட போட்டிகளையும் ஜெயிக்கும் வல்லமை பெறுவீர்கள்.*

**பணியாளர்களுக்கு:**

பணியாளர்கள் செய்யும் தொழிலில் பலதரப்பட்ட கஷ்டங்கள் இருந்து வந்தாலும் தொழில் திறமை இருப்பவர்களுக்கு அதிகாரிகளிடம் நல்ல மதிப்பு இருக்கும். கட்டுமானத் தொழில் இரும்பு சாமான் உற்பத்தியில் திறமையை காட்டுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் இருக்கும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

அரசாங்க ஆதரவு கிடைக்கும். கேட்ட கோரிக்கைகளை ஏற்று தொழிற்சங்க போராட்டங்கள் வெற்றி பெற வழி கிடைக்கும். சமத்துவ சமுதாய மனநிலை உள்ளவர்களுக்கு மக்களின் பேராதரவு கிட்டும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு:**

குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் விழுவது நீங்கள் செய்யும் தொழிலில் மேன்மையை அடைவீர்கள். கருத்து வேற்றுமை இருந்தவர்கள் உங்களிடம் இணைந்து செயல்படுவார்கள். தொழிலில் வளர்ச்சியும் வருமானமும் அதிகரிக்கும். ஒன்லைன் வர்த்தகம் நல்ல பலனை தரும்.

**கலைஞர்களுக்கு:**

கலைதுறையினர் பல சோதனைகளை தாண்டி நல்ல நிலைக்கு வர முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுவீர்கள். வாய்ப்புகள் நாடி வரும். கலைஞர்களில் சிலருக்கு அரசு விழாக்களில் வாய்ப்புகள் வந்து சேரும். பொருளாதார நன்மை பெறுவீர்கள்.

**பெண்களுக்கு:**

பெண்களின் சுயதொழில் வளர்ச்சியை தரும். கணவரின் தொழிலுக்கு உங்களின் ஒத்துழைப்பை தருவீர்கள். குடும்பத்தில் பலரிடமும் பல வித அனுபவத்தை பெறுவீர்கள். வரவுக்குள் செலவுகளை கட்டுப்படுத்தி கொள்வீர்கள்.

**மாணவர்களுக்கு:**

கல்வியில் கவனம் செலுத்துவீர்கள். பொருளாதாரம் சட்டம் சார்ந்த கல்வி முன்னேற்றம் தரும். உயர்கல்வி தடை நீங்கி பயிலும் வாய்ப்புகள் கிட்டும். சிறப்பு தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

22.11.2014 சனி காலை 08.04 முதல் 24.11.2014 திங்கள் பகல் 01.37 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

ஆரம்பத்தில் சில சிரமங்களை அடைந்தாலும் பின்னால் நன்மையை அடைவீர்கள். வசதி வாய்ப்புகளை பெருக்கி கொள்வீர்கள். பெண்களுக்கு வளர்ச்சியைத் தரும்.

**பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

பரந்த எண்ணம் கொண்டு விளங்கும் உங்களுக்கு கலைத்துறையில் வரவேற்பு இருக்கும். கனவில் கண்ட நிகழ்வு நிஜத்தில் நடக்கும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்:**

கார்த்திகை மாதம் உங்களுக்கு உயர்வின் காலம், ஆன்மீக சிந்தனையும், வளர்ச்சியை எதிர் பார்த்து காத்திருந்த உங்களுக்கு வாய்ப்புகள் வந்து சேரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

ஆரஞ்சு, பச்சை, இளம் சிவப்பு.

**அதிர்ஷ்ட திசைகள்:**

கிழக்கு, வடக்கு, மேற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

திங்கள், வியாழன், புதன்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

சனிக்கிழமை பைரவர் வழிபாடுகளும், மாரியம்மன் வழிபாடுகளும் செய்து வர நன்மை உண்டாகும்.

## குபேரன்

குபேரன் மக்களுக்கு சுகத்தைக் கொடுத்து ஸம்பத்தையும் செல்வத்தையும் வளரச் செய்பவன்.

* குபேரம் மநுஜாஸீதம்
* ஸகர்வம் கர்வவிக்ரஹம்
* ஸ்வர்ணச்சாயம் கதாஹஸ்தம்
* உத்தராதிபதிம் ஸ்மரேத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்



**16.12.2014 முதல் 19.12.2017 வரை**

ஜய வருடம் மார்கழி மாதம் 1ஆம் தேதி 16.12.2014 செவ்வாய் கிழமை பகல் 02.44 மணிக்கு துலாராசியிலிருந்து விருச்சிக ராசி விசாகம் 4ம் பாதத்தில் பிரவேசிக்கிறார்.

19.12.2017 வரை மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து நீடிக்கிறார்

16.12.2014 முதல் 25.01.2015 வரை விசாகம் 4ம் பாதம்

18.10.2015 முதல் 27.03.2016 வரை. 12.08.2016 முதல் 19.11.2016 வரை அனுச **நட்சத்திரம்**

கேட்டை நட்சத்திரம்

31.07.2015 முதல் 05.09.2015 வரை துலாராசி விசாக நட்சத்திரம்

வக்ர கதி

15.03.2015 முதல் 31.07.2015 வரையும்.

| | | | |
|---|---|---|---|
| **மீனம்** | **மேஷம்** | **ரிஷபம்** | **மிதுனம்** |
| **கும்பம்** | 03.07.10 *பார்வை* | | **கடகம்** |
| **மகரம்** | | | **சிம்மம்** |
| **தனுசு** | **விருச்சிகம்** சனி | **துலாம்** | **கன்னி** |

27.03.2016 முதல் 12.08.2016 வரையும்.

09.04.2017 முதல் 05.08.2017 வரையும்.

**சனீஸ்வரர் பயோடேட்டா**

தந்தை பெயர் : சூரியன்

தாயார் பெயர் : சாயா

அதிதேவதை : யமன், குரு, காலபைரவர்

வேறு பெயர்கள் : மந்தன், சாயா மார்த் தாண்டன்.

நட்சத்திர அதிபதி : பூசம், அனுசம், உத்தி ரட்டாதி

சொந்த வீடுகள் : மகரம், கும்பம்

திசை ஆண்டுகள் : 19

நட்பு கிரகங்கள் : சுக்கிரன், ராகு, புதன், குரு

பகை கிரகங்கள் : சூரியன், சந்திரன், கேது, செவ்வாய்

ராசியில் சஞ்சார காலம் : இரண்டரை ஆண் டுகள்

பாதிக்கும் ராசிகள் : ரிஷபம், சிம்மம்

பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகள் : தனுசு, மகரம். மேசம். ரிஷபம், சிம்மம், துலாம், விருச் சிகம், மீனம்.

உகந்த கிழமை : சனி

நவரத்தினகல் : நீலம்

சமித்து : வள்ளி

எண்ணெய் : நல்லெண்ணெய் (எள்)

உலோகம் : இரும்பு

## மிக உயர்ந்த பிரார்த்தனை

ஜீவர்கள் பகவானுக்குத் தொண்டு செய்ய வெண்டும் தொண்டு செய்யும் போது தமக்கென ஒரு பலனையும் கருதாமல் இருக்க வேண்டும். பகவானுடைய பிரீதி ஒன்றுக்காகவே பகவானுக்குத் தொண்டு செய்தல் வேண்டும். இந்தக் கோரிக்கைக்கு விரோதமான எந்தவித நினைவுகளும் ஆசைகளும் எங்களிடம் உண்டாகாமல் இருக்க வேண்டும். இதுவே பகவானிடம் வேண்டுவதற்குரிய மிகவும் உயர்ந்த பிரார்த்தனையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான வசிப்பிற்கு அற்புதமான
# வாஸ்து குறிப்புகள்

ஒரு வீடு அமையும் இடத்தின் அமைப்பும், வீட்டின் அமைப்பும் வாஸ்து முறைப்படி எப்படி அமைய வேண்டும் எப்படி அமையக் கூடாது என்றும் மாறாக அமைந்து விட்டால் எந்த விதமான பலன்கள் நடைமுறைக்கு வரும் என்றும் பார்ப்போம்.

நான்கு புறத்திலிருந்தும் வரும் சாலைகள் சந்தித்துக் கொள்ளும் நான்கு வழிச்சாலை இடத்தில் வடகிழக்கில் தெருக்குத்து உண்டாகுமாறு வீடு அமையக் கூடாது.

மற்ற மூலைகளை விட வடகிழக்கு மூலை உள் பக்கமாக வளைத்து இருக்கக்கூடாது. மேற்கண்ட வாஸ்து தோஷப்படி அமைந்து விட்டால், அந்த வீட்டில் வசிக்கும் ஆணுக்குப் பெயரும் புகழும் கெட்டுப்போகும். தொடர்ந்து அடுத்தடுத்து நோய் களுக்கும் ஆளாக வேண்டி வரும்.

வடகிழக்கு மூலை உள்வளைந்து குறைந்திருக்கின்ற இடத்தையோ வீட்டையோ வாங்கினால், அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு வருமானம் குறையும், சேமிப்பு இருப்பு சொத்துக்கள் குறையும், உடல் ஆரோக்கியம் குறையும்.

மற்ற மூலைகளைவிட வடகிழக்கு மூலை சற்று கூடுதலாக வளர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு அமைந்தால் அந்த வீட்டிற்கு இடத்திற்கு வாஸ்து யோகம் உண்டாகும். மாறாக, மற்ற மூலைகளை விட வடகிழக்கு மூலை அதிகமாக கூடுதலாகக் குறைந்திருந்தால் அந்த வீட்டில் வசிக்கும் பெண்ணுக்கு நோய் நொடிகள் உண்டாகும்.

மேற்கு சார்ந்த வடக்கு, வடமேற்கு, மூலை வடக்கு சார்ந்த மேற்கு திசைகளில் தரை மேல் பகுதி யிலோ, தரை கீழ்ப் பகுதியிலோ அதிகமாகத் தண்ணீர்த் தொட்டிகள் இருந்தால் அந்த வீட்டின் மருமகளுக்கு கிட்னி சம்பந்தப்பட்ட மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

கிழக்குத் திசையின் மத்தியப் பகுதியில் பிரதான நுழைவாயில் படிக்கட்டுகள் இருந்தால் பங்காளப் பிரச்சினையும், அந்த வீட்டில் வசிக்கும் உறுப்பினர் களுக்கும் பிரச்சினைகள் வந்து, தொடர்ந்து சேர்ந்து வாழ முடியாமல் தற்காலிக, நிரந்தரப் பிரிவு உண்டாகும்.

பெரும் பணத்தொகை, விலையுயர்ந்த நகைகள், ஆபரணங்கள் சொத்துப் பத்திரங்கள், மற்றும் முக்கியப் பதிவேடுகளைப் பாதுகாக்கும் அறையை ரகசிய அறையை வீட்டின் தரை கீழ்தளப் பகுதியில் அமைக்க நினைப்பவர்கள் வடகிழக்கு மூலையில் அமைத்தால் வாஸ்து யோகம் உண்டாகும்.

கிழக்கு அல்லது தெற்குத் திசைகளில் பிரதான நுழைவாயில் வைப்பவர்கள், தென் கிழக்குத் திசைப்பகுதியில் வைக்கக் கூடாது. மேலும் மிகப்பெரிய நுழைவாயிலாக இருந்தாலும் தோஷம் உண்டாகும். மாறாக அமைந்தால் வாஸ்து தோஷம் உண்டாகி, அந்த வீட்டின் ஆண் வாரிசுக்கு தோஷம் ஏற்படும்.




தென்கிழக்குத் திசையில் மிகப் பெரிய பிரதான நுழைவாயில் இருந்து, அந்த நுழைவாயில் பாதையில் தரைகீழ்தளப் பகுதியில் தண்ணீர்த் தொட்டி இருந்தால், அந்த வீட்டின் மூத்த வாரிசு ஆண்மகனாக இருந் தால் அந்த ஆணுக்கு ஆயுள் பங்கம் ஏற்படலாம்.

தென்கிழக்கு மூலையில் பிரதான நுழைவாயில் இருந்து அதையடுத்து தொடர் ந்து வரிசையாக அடுத்தடுத்து பகுதி நுழை வாயில்கள் இருந்தால், அந்த இடத்தின் முதலாளிக்கு அதிகமாகப் பெண் குழந்தைகள் இருக்கும்.

மற்ற மூலைகளைவிட தென்கிழக்கு மூலை வளர்ந்திருந்தால் அந்த வீட்டில் இருப்பவர்களுக்கு ஆண் வாரிசு இருக்காது. மாறாக ஆண் வாரிசு இருந்தால் அவருக்கு அதிகமாகப் பெண் குழந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைகள் பிறப்பார்கள்.

மற்ற மூலைகளை விட தென்கிழக்கு மூலை வளர்ந்திருந்தாலும், கிழக்கு மத்தியப் பகுதியில் தண்ணீர்த் தொட்டி, கிணறு, சம்ப், போரிங் இருந்தால், அந்த வீட்டின் மூத்த பெண்ணுக்கு இரண்டரை வயதில் அதிக ஜுரம், நரம்புத்தளர்ச்சி, தலை சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உண்டாகும்.

தென்கிழக்கு மூலையில் சமையலறை இருந்து, சமையலறைச் சுவரின் தென்கிழக்கு மூலையில் பெரிய ஜன்னல் இருந்தால், அந்த வீட்டின் ஆண்களுக்கு அடிக்கடி கோபம் வரும்.




மொத்த இடத்தின் (பிளாட்) பாதிக்கு வடக்குத் திசையில் வீடு கட்டிவிட்டு, தென்கிழக்கு மூலையில் பிரதான நுழைவாயில் இருந்து, தென் மேற்கு மூலையில் கிணறு போர், சம்ப் இருந்தால் அவ்வீட்டில் உள்ளவர்களுக்கு நீரிழிவு (சுகம்), வயிறு சம்பந்தமான நோய்கள் உண்டாகும். அந்த வீட்டிலுள்ள பெண்களுக்கும் தற்கொலை மனப்பான்மை உண்டாகும்.

இதுவரை தரை தளத்தில் வடகிழக்கு, கிழக்கு மத்தி, தென்கிழக்கில் நுழைவாயில் இருந்தால் என்னென்ன பலன்கள் நடைமுறைக்கு வரும் என்றும் வீட்டின் உள் அமைப்பு வெளிப்புற அமைப்புகள் எப்படியிருக்க வேண்டுமென்றும் மாறியிரு ந்தால் என்னென்ன பலன்கள் நடக்குமென்றும் பார்த்தோம். தற்போது வீட்டின் முதல் மாடியில் கிழக்குத்திசை சார்ந்த நுழைவாயில் இருந்தால் என் னென்ன பலன்கள் நடைமுறைக்கு வரும் என்று பார்ப் போம்.

முதல் மாடிக்கு ஏறும் படிக்கட்டு, லிப்ட் வழிகள் தென்கிழக்குத் திசையில் இரு ந்து மாடிப் பகுதி வீட்டின் பிரதான நுழைவாயில் வட கிழக்கு மூலையில் இருந்தால், இது சிறப்பான வாஸ்து அமைப்பாகும்.

அந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு எதிர்பார்த்த

**வறுமை நீங்கவும்... திருமணம் நடக்கவும்...**

விதேஹி தேவி கல்யாணம்
விதேஹி பரமம் சுபம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி
யசோ தேஹி த்விஷோ தேஹி

என்ற ஸ்லோகத்தை தினமும் 108 முறை சொல்லி வரவும்.

கூடுதல் முன்னேற்றங்கள் அடுத்தடுத்து நடைமுறைக்கு வரும் ஆரோக்கியம், பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

முதல் மாடிக்கு ஏறும் படிக்கட்டு, லிப்ட் வழிகள் வடகிழக்குத் திசையில் இருந்து மாடிப் பகுதி வீட்டின் பிரதான நுழைவாயில் கிழக்குப் பகதியில் இருந்தால், அந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு இதயம், நெஞ்சின் உள்ளுறுப்புகள் சார்ந்த நோய்கள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

முதல் மாடிக்கு ஏறும் படிக்கட்டு, லிப்ட் வழிகள் தென்மேற்குத் திசையில் இருந்து, மாடிப்பகுதி வீட்டின் பிரதான நுழைவாயில் கிழக்குப் பகுதிகளில் இருந்தால், அந்த வீட்டின் ஆண் வாரிசுக்கு தோஷம், நோய் உண்டாகும். சூதாட்டம் போன்றவற்றில் ஈடு பட்டு சொத்து இழப்பு ஏற்படும்.

முதல் மாடிக்கு ஏறும் படிக்கட்டு லிப்ட் வழிகள் வடமேற்குத் திசையில் இருந்து, மாடிப்பகுதி வீட்டின் பிரதான நுழைவாயில் கிழக்கு சார்ந்த பகுதியில் இருந்தால், அந்த வீட்டின் பிரதான நுழைவாயில் வடகிழக்கு மூலையில் இருந்தால், இது சிறப்பான வாஸ்து அமைப்பாகும்.

அந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு எதிர்பார்த்த கூடுதல் முன்னேற்றங்கள் அடுத்தடுத்து நடைமுறைக்கு வரும். ஆரோக்கியம், பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

ஒரு வீட்டின் அமைப்புகள் வாஸ்து முறைப்படி இருந்து விட்டால், அங்கு வசிப்பவர்கள் வளமுடன் வாழ்வது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய ஆண்டு
# கார்த்திகை மாதத்துச் சுபதினங்கள்

## மாங்கல்யம் செய்ய, தொழில் துவங்க, கடன் வாங்க, புது வாகனம் வாங்க, திருமணம், சீமந்தம் செய்ய

| மாதம் | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | காலை | லக்னம் | லக்னம் |
|---|---|---|---|---|---|---|---|
| நவம்பர் 20 | வியாழன் | திரயோதி | சித்திரை | சித்த | 10.30 - 11.30 | மகரம் | தேய் |
| நவம்பர் 27 | வியாழன் | சஷ்டி | சித்திரை | சித்த | 10.00 - 11.00 | மகரம் | வளர் |
| நவம்பர் 28 | வெள்ளி | சப்தமி | அவிட்டம் | சித்த | 06.30 - 07.30 | விருச்சிகம் | வளர் |
| டிசம்பர் 01 | திங்கள் | தசமி | உத்திரட்டாதி | சித்த | 09.30 - 10.30 | மகரம் | வளர் |
| டிசம்பர் 10 | புதன் | சதுர்த்தி | பூசம் | சித்த | 06.00 - 07.00 | விருச்சிகம் | தேய் |

## கடன் தீர (கொடுக்க)

| மாதம் | கிழமை | பகல் |
|---|---|---|
| நவம்பர் 18 | செவ்வாய் | 12.00 - 01.00 |
| நவம்பர் 22 | சனி | 03.00 - 04.00 |
| நவம்பர் 25 | செவ்வாய் | 02.00 - 03.00 |
| நவம்பர் 30 | ஞாயிறு | 02.00 - 04.00 |
| டிசம்பர் 02 | செவ்வாய் | 12.00 - 02.00 |
| டிசம்பர் 06 | சனி | 03.00 - 04.00 |
| டிசம்பர் 10 | புதன் | 01.30 - 02.30 |
| டிசம்பர் 15 | திங்கள் | 12.00 - 02.00 |



## சத்திர சிகிச்சை செய்து குழந்தை பிரசவிக்க

| மாதம் | கிழமை | நட்சத்திரம் | காலை / பகல் | லக்னம் |
|---|---|---|---|---|
| நவம்பர் 17 | திங்கள் | உத்திரம் | 09.30 - 10.00 | தனுசு |
| நவம்பர் 18 | செவ்வாய் | உத்திரம் | 08.30 - 09.00 | தனுசு |
| நவம்பர் 19 | புதன் | அஸ்தம் | 09.30 - 10.00 | தனுசு |
| நவம்பர் 20 | வியாழன் | சித்திரை | 09.00 - 10.00 | தனுசு |
| நவம்பர் 21 | வெள்ளி | சுவாதி | 08.30 - 09.00 | தனுசு |
| நவம்பர் 26 | புதன் | உத்திராடம் | 03.30 - 04.30 | மேஷம் |
| நவம்பர் 27 | வியாழன் | திருவோணம் | 06.15 - 07.00 | விருச்சிகம் |
| நவம்பர் 28 | வெள்ளி | அவிட்டம் | 06.30 - 07.30 | விருச்சிகம் |
| டிசம்பர் 01 | திங்கள் | உத்திரட்டாதி | 06.30 - 07.30 | விருச்சிகம் |
| டிசம்பர் 02 | செவ்வாய் | ரேவதி | 06.00 - 07.00 | விருச்சிகம் |
| டிசம்பர் 04 | வியாழன் | பரணி | 03.30 - 04.30 | மேஷம் |
| டிசம்பர் 05 | வெள்ளி | கார்த்திகை | 03.30 - 04.15 | மேஷம் |
| டிசம்பர் 08 | திங்கள் | திருவாதிரை | 03.00 - 04.00 | மேஷம் |
| டிசம்பர் 09 | செவ்வாய் | புனர்பூசம் | 02.30 - 03.00 | மேஷம் |
| டிசம்பர் 10 | புதன் | பூசம் | 02.30 - 03.00 | மேஷம் |
| டிசம்பர் 12 | வெள்ளி | மகம் | 02.30 - 03.00 | மேஷம் |
| டிசம்பர் 13 | சனி | பூரம் | 03.15 - 03.45 | மேஷம் |



கணிப்பு: சோதிடர்
வாழப்பட்டி R.ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## மேஷம்

**எண்ணங்களை செயலாக்கும் மேஷராசி வாசகர்களே!**

உங்களின் வீட்டில் நீசமாகும் சனிபகவான் உங்களின் ராசிக்கு அட்டமஸ்தானத்தில் அமருவது நல்லதல்ல என்றாலும் ஆயுள் பலம் உண்டாகும் விசாக நட்சத்திரம் 4ம் பாதத்தில் நுழையும் போது விருச்சிக ராசியில் அமர்ந்து மூன்றாம் பார்வையாக தொழில் ஸ்தானத்தையும் ஏழாம் பார்வையாக இரண்டாமிடத்தையும், பத்தாம் பார்வையாக பூர்வபுண்ணிய ஸ்தானத்தை பார்வை இருப்பது சிலருக்கு நன்மையும் தீமையும் வழங்குவார்.

வருமானம், பொருளாதாரம் போன்ற நிலைகளில் தனஸ்தானத்தை பார்ப்பது கடன் பட்டு கடன் அடைக்க முடியாமல் அவதிப்படும் படியான நிலை உண்டாகும். ராசிநாதன் செவ்வாய் சனிக்கு பகை என்பதால் மேஷ ராசிக்காரர்களுக்கு சனி எப்பொழுதும் பாதிப்பை தந்தாலும் தன நட்சத்திரமான அனுசம் விருச்சிக ராசியில் உள்ளதால் சிலருக்கு நன்மையும் தருவார். இருந்தாலும் ஏழரை சனி என்பது இரண்டரை ஆண்டு கால பலனை வெவ்வேறு விதமாக சொன்னாலும் செய்தாலும் அட்டம சனி இரண்டரை ஆண்டுகாலம் பலன் என்பது ஏழரை ஆண்டு காலம் அனுபவிக்க வேண்டிய துன்பம் அன்னத்தையும் அடையும் நிலை உண்டாகும். எதை செய்தாலும் மற்றவரின் பார்வை யில் தப்பாக தெரியும். தர்மகாரியம் செய்தாலும் என்ன பாவம் செய்தானோ அதை நிவர்த்தி செய்ய தர்மம் செய்கிறான் என்று நம்மை ஏசுவார்கள். அட்டம சனி காலங்களில் நாம் வீட்டை விட்டு வெளியே வராமல் தலை பூட்டி இருந்தாலும் நம் கதவை தட்டி வம்புகள் வந்து சேரும். செய்யாத குற்றங்களுக்கு தண்டனையோ அவச்சொற்களோ அடைய வேண்டி வரும் என்பதால் யார் என்ன சொன்னாலும் அமைதியாக இருப்பது நல்லது. உங்களை வணங்கி மதிப்பு தந்தவர் கூட உங்களை டென்சன் ஏற்றி விட உங்களை குறைத்து பேசும் போது சரி இதுவும் நமக்கு நேரம் என்று அமைதியாக இருந்து வருவது நல்லது. கருட னை பார்த்து பயப்படும் பாம்பு சிவன் கழுத்தில் நின்று கருடா சௌக்கியமா என்று கேட்கும். அது போல தான் இந்த காலம் உங்களை பொறுமையை சோதிக்கும்படி அமையும் என்பதால் அமைதியாக இருந்து விட்டால் அவதி இல்லை.



சனி பஞ்சம ஸ்தானத்தை பார்ப்பதால் பூர்வீக சொத்து சம்பந்தமான வழக்குகள் தந்தை வழி சொத்து சம்பந்தமாக பிரச்சினைகள் புத்திரர்களால் ஏதாவது பிரச்சினைகள் வர விடாமல் குரு ஐந்தாம் பார்வையாக சனியை பார்ப்பதால் வரும் 2015 மே மாதம் வரை பாதிப்புகள் குறைவாக இருக்கும். குரு பெயர்ச்சிக்கு பின்பு பல இன்னல்களை அடைய வேண்டி வரும். கரு நாகம் என்ற நாகத்தை படைத்த ஆண்டவன் அதை பலகீனப்படுத்தும் சிறியா நங்கை என்ற வேரை படைத்தான். துன்பம் மட்டுமே வாழ்க்கை என்றால் யாரும் தாங்கமாட்டார். அது போல உங்களின் செல்வாக்கும், மதிப்பும் குறை யாது இருக்க வேண்டுமென்றால் வழிபாடுகள் மூலம் சரி செய்யவும், வரும் துன்பத்தில் எழுபத்தைந்து சதம் குறைக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பத்தாம் பார்வையாக புத்திர ஸ்தானத்தை பார்ப்பது புத்திரருக்கு அரசாங்க வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. மூன்றாம் பார்வையாக தொழில் ஸ்தானத்தை பார்ப்பதால் தொழில் நஷ்டம் விவசாயம் நஷ்டம், பால் பசு மாடுகளுக்கு புதிய நோய்கள் சார்ந்து விரை யம் ஆகுவது போன்ற பாதங்கள் நிகழும் என்றாலும் நல்லவர்களுக்கு இறைவனின் துணை இருப்பதால் வழிபாடுகளால் எல்லாம் நன்மையாக முடியும்.

**பரிகாரங்கள்:** சனிக்கிழமை ராகு காலத்தில் நல்லெண்ணெய் விளக்கு பைரவருக்கு போட்டு எள் கலந்த பலகாரம் செய்து நைவேத்தியம் செய்து வரவும், கால் ஊனமுற்ற ஆதரவற்றவர்களுக்கு உதவியும் அன்னமும் இட்டு வரவும், விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு தீமையைக் குறைக்கும்.

### அஷ்டதிக் பாலகர்கள்

பொதுவாக மக்கள் செய்கின்ற நற்காரியங்களையும் தீயகாரியங்களையும் ஆதித்யன், சந்திரன், அஷ்டதிக் பாலகர்கள் கண்காணித்துக் கொண்டு அச்செயல்களுக்கு ஸாக்ஷியாக இருக்கின்றனர் என மஹாபாரதம் சொல்கின்றது. எனவே மனிதன் தர்ம வடிவாயமைந்த அவர்களுடைய அருளைப் பெறுவதற்கும் தீயவற்றையகற்றி, நற்காரியங்களைச் செய்து வந்தால் எல்லா மங்களங்களையும் பெறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைவிடங்கள்

மறைவிடங்கள் ஆபத்தானவை. இதை யதார்த்த வாழ்வில் எளிதாய் பார்க்கலாம். மறைவிடங்கள் = குற்றங்கள் நடப்பதற்கான வசதியை ஏற்படுத்தித் தருகின்றன. வழிப்பறி, கற்பழிப்பு, கொலை, கொள்ளை, கள்ளக் காதல், கள்ளச் சாராயம் என்று கள்ளமும், கபடமும், குற்றமும் என பல விடயங்கள் அரங் கேற்றப்படுவது மறைவிடங்களில் தான். அதே போல் ஜாதக கட்டத்திலும் ஆபத்தான மறை விடங்கள் இருக்கின்றன.

லக்னத்திலிருந்து எண்ணினால் வரும் 6,8,12 ஆம் இடங்கள் கொடிய மறைவு ஸ்தானங்கள் என்றும், 3 ஆம் இடம் சுப மறைவு ஸ்தானம் என்றும் சோதிட விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**அதென்ன சுபமறைவு?**

3ஆம் இடம் இளைய சகோதர ஸ்தானமா கவும், ஒருவருக்கு கிடைக்கும் சகாயங்கள், புகழ், வெற்றி, அவரது ஆண்மை பெண்ணாக இருந்தால் பெண்மை, தைரியம், பயணம் மற்றும் அண்டை வீட்டார் முதலிய சுப விடயங்களை குறிப்பிடு வதால் இவ்விடத்தை சுப மறைவிடம் என்று முன் னோர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விடத்தில் அமரும் சுபகிரகங்கள் தன் இயல்பை இழந்து கெடுவதில்லை. மாறாக மேலே சொல்லப்பட்ட சுப விடயங்களுக்கு வலுச் சேர்க்கின்றன. ஆனால் மூன் றுக்குரிய கிரகம் வலு இழந்து நீச்சம் பெற்றிருந்தால் பலன் எதிர்மறையாக இருக்கும்.

6,8,12 ஆம் மறைவு இடங்களின் பலன்கள் முக்கியமானது. ஆனால் சற்று பிசகினால் வாழ்க் கையையே குலைத்துவிடும் இந்த அபாயகரமான மறைவிடங்கள்.

6ஆம் இடம் நோய், எதிரிகள், மாமன், பங்காளிகள், சிறைவாசம், தீயோர் சக வாசம், கொடூர காரியங்கள் செய்வது, பொருள் நட்டம், கடன், விஷ ஜந்துகளால் கஷ்டம், ஆயுதம் ஏந்துதல், பெண்களால் தொல்லை போன்ற விடயங்களை தெரிவிக் கிறது.அப்படியானால் இந்த மறைவிடம் வாழ்வில் எத்தனை முக்கியத்துவத்தை கொண்டுள்ளது என்பதை நீங்களே அவதா னித்துக்கொள்ளுங்கள்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், சூரியன் ஆறாமிடத் தில் பகை என்றால் பெற்றத் தகப்பனைச் சார்ந்தே பகை உண் டாகும்.சந்திரன் ஆறில் பகை என்றால் பெற்ற தாயைச் சார்ந்தே பகை உண்டாகும். அதே ஆறில் செவ்வாய் நின்றால் சகோதரர்களைச் சார்ந்தும், புதன் நின்றால் மாமன் வர்க்கமும், கல்வியாளர் களும், குரு நின்றால் உயர் வர்க்கத்தினர் மற்றும் தனவந்தர்களும், சுக்கிரன் நின்றால் பெண்களாலும், சனி நின்றால் கீழ் மக்கள் மற்றும் வேலைக்காரர்க ளாலும், இராகு/கேது நின்றால் சமக விரோதிகள் மற்றும் அந்நியர்களாலும் பகை உண்டாகும் என்று எளிதாக சொல்லிவிடலாம்.

அட்டம ஸ்தானம் என்று சொல்லப்படும் எட் டாமிட மறைவிடம் அதிமுக்கியமான விடயங் களை உள்ளடக்கியது. ஆயுள், மாங்கல்யம், ஆயு தங்களால் ஏற்படும் காயங்கள், யுத்தம், பாவம், பழி, முற்பிறவி தீவினைகள்,சகோதரனின் எதிரி, சிறுநீரக நோய், கண்டம், அரசாங்கத் தண்டனை, வீண் பொழுதுபோக்கு, கடன் கொடுத்தல், பண விரயம், பயம், தேவையில்லாமல் பிறரிடம் பணம் வாங்குதல்,கொலை, கத்திக்குத்து, வெட்டு, மர்மம், தொடர்ச்சியான துரதிர்ஷ்ட நிகழ்வுகள், கொடுமை யான செயல்களை செய்வதில் விருப்பம், சண்டை என எல்லாவற்றையும் இதன் பலம் அறிய முடியும்.

பொதுவாக எட்டாமிடமான இந்த மறைவிடத் தின் மூலம் ஒருவரின் ஆயுளை அறியலாம்.எட்டா மிடத்தின் அதிபதி உச்சம் பெற்றிருந்தால் அல்லது அவர் தன் சொந்த வீட்டில் ஆட்சி பெற்றிருந்தால் கூட ஆயுள் தீர்க்கம் தான். ஆனால் வாழ்நாள் முழு வதும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிய திருக்கும்.

1,4,7,10 போன்ற கேந்திர ஸ்தானங்களில் இருந் தாலும் ஆயுள் தீர்க்கம் தான். ஆனால் அந்தந்த இடங் களின் பலன்கள் வெகுவாக பாதிக்கப்படும்.

லக்னாதிபதி, பத்துக்குடையவன், எட்டுக்கு டையவன் இவர்கள் அடியோடு கெட்டுவிட்டால் ஜாதகர் சிறு வயதிலேயே மரணமடைந்துவிடுவார் என்று அடித்துச் சொல்ல முடியும்.

**கன்மத்தோன் சென்மநாதன்**
**கருதிய எட்டின் கோன்**
**கன்மத்தால் பலத்தால் தீர்க்க**
**ஆயுளைன் சரீரம் நல்லான்**
**வனமத்தோர் இரண்டு பேர்கள்**
**வலிமையேல் மத்தி மாயுள்**
**உன்மத்தான் ஒருவன் என்றால்**
**உரைக்கலாம் அற்பாயுள் தான்**

என்று ஜாதக பாரிஜாதம் என்ற பழம்பெரும் சோதிட நூல் எடுத்துரைக்கிறது. இதன் பொருள் என்ன வெனில், 1,6,8,10 இடத்து அதிபதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தானவை

மூன்று கிரகங்களும் பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் தீர்க்காயுளும், திடமான தேகமும் பெற்றவனாவான். அதில்லாமல் மேலே சொன்ன மூவரில் இருவர் மட்டும் பலம் பெற்றிருந்தால் மத்திம ஆயுள், ஒருவர் மற்றும் பலம் பெற்றிருந்தால் அற்பாயுள்.

அதே போல் லக்னாதிபதி 6,8,12 ஆம் மறைவிடங்களில் மறைவதும் ஆபத்து தான். உடன் எட்டாமிடத்து அதிபதி நீச்சம், பகை, பாப கிரகங் களுடன் சேர்க்கை என்று இருந்தால் குறைவான ஆயுள் என்று தீர்க்கமாக சொல்லலாம்.

உதாரணத்திற்கு மஹாகவி பாரதியாரின் ஜாதகத்தை எடுத்துக்கொள்வோம்.

கடக லக்னத்தின் இலக்னாதிபதி சந்திரன் 6 ஆமிடத்தில் மறைந்துவிட, எட்டாமிடத்தின் அதிபதி சனி மேஷத்தில் பத்தாம் இடத்தில் நீச்சம் பெறவும்,அவரது ஆயுள் 39 ஆண்டுகளிலேயே முடிந்துபோனது. ஆனால் புகழ் ஸ்தானமாகிய

| | | | |
|---|---|---|---|
| | கேது<br>சனி | | குரு |
| | | | லக்னம் |
| | | | |
| சந்திரன் | சூரியன்<br>சுக்கிரன்<br>செவ்வாய்<br>புதன் | ராகு | |

மூன்றாமிட அதிபதி (சுப மறைவு) புதனோ பூர்வ புண்ணியாதிபதியின் ஆட்சிபெற்று செவ்வாயுடன். லக்னாதிபதி சந்திரனோ குருவின் பார்வையில் விரைவில் மறைந்தாலும் விண்ணை முட்டும் புகழ் இன்னமும் இருக்கிறதே பாரதிக்கு.

பன்னிரண்டாம் இடமான மறைவிடத்தையும் அலசுவோம். இந்த மறைவிடம் விரயம், மோட்சம், தியாகம், சிறை தண்டனை, பொது ஜன விரோதம், வெளிநாட்டுத் தொழில், படுக்கை, இடப்பெயர்ச்சி, மனைவி மரணம், வாக்கு தவறுதல், தோழகை, அவமானம், போகம் போன்றவற்றை மறைவில்லாமல் காட்டக்கூடியது.

பொதுவில் இது விரயத்தையும், நாம் செலவு செய்யும் வகையை குறிப்பிடுவதாக வும் மற்றும் மோட்ச அல்லது முக்தி என்ற பக்குவத்தை குறிக்கின்றது.

பன்னிரண்டாம் வீட்டுக்குரியவன் அங்கேயே ஆட்சிப் பெற்றிருந்தால் ஜாதகர் பெரிய செலவாளியாக இருப்பார். ஆனால் 12 ஆமிடத்து அதிபதி முற்றிலும் வலுவிழந்து போயிருந்தால் தேவையானதற்கு கூட செலவு செய்யத் தயங்கும் கருமியாக இருப்பார்.12 ஆமிடத்தில் சுப அல்லது பாவ கிரகங்கள் இருந்தாலோ அல்லது அவர்களுடன் கலந்து 12 ஆமிடத்து அதிபதி இருந்தாலோ அந்த ஜாதகர் அவையறிந்து செலவு செய்பவராக இருப்பார்.

அதே தருணத்தில் 12 ஆமிடத்து அதிபதி 1 ஆம் இடத்தில் நின்றால் ஊதாரியாகவும், 2 ஆம் இடத்தில் நின்றால் குடும்பத்தில் தேவையற்ற செலவுகள் உண்டாகும். 3 ஆமிடத்தில் நின்றால் இளைய சகோதரத்தால் இழிவு மற்றும் புகழுக்கு களங்கம் ஆகியவை ஏற்படும். 4ஆமிடத்தில் நின்றால் தாய் வீடு மற்றும் வாகனத்தால் செலவு உண்டாகும். 5 ஆமிடத்தில் நின்றால் புத்திரர்களால் இழபபு ஏற்படும். 6 ஆமிடத்தில் இருந்தால் எதிரி மற்றும் தாயாதிகளால் பணவிரயமும், 7 ஆம் இடத்தில் நின்றால் மனைவி மற்றும் மனைவி தரப்பு ஆட்களால் இழப்பும், 8 ஆம் இடத்தில் நின்றால் ஆயுளுக்கு பங்கமும், அரசாங்க வழக்குகளால் விரயமும் ஏற்படும். 9 ஆம் இடத்தில் நின்றால் தகப்பனார் தரப்பினரால் இழபபும், 10 ஆம் இடத்தில் நின்றால் தொழிலில் விரயமும், 11 ஆம் இடத்தில் நின்றால் மூத்த சகோதரர்களால் இழப்பும், 12 ஆம் இடத்திலேயே நின்றால் செலவாளி என்றும் பொருள் கொள்ளலாம்.

அதே தருணத்தில் கிரக சேர்க்கை மற்றும் அதன் வலிமை பொறுத்தும் இந்த பலன் மாறுபடும். ஆக மறைவிடங்கள் மலையைப் போன்ற பலத்தையும் தரும்.எம்மை காலடியில் போட்டு மண்ணாக நசித்தும் விடும். அதனால் இந்த மறைவிடங்களால் ஏற்படும் தோஷத்திற்குரிய பரிகாரங்களை செய்து கொள்வதும், இந்த மறைவிட திசைகளில் உஷாராக இருப்பதும் நம் வாழ்வை சிதையாமல் பாதுகாக்கும் யுத்தி தான் எனவே மறைவிடங்களில் கவனமாக இருங்கள்.

*சோதிடர் குணா*
*அலைபேசி எண்* 0091 9940526366
*மின்னஞ்சல் முகவரி* athmavisa@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிபோர்னியா லிவர்மோரின் சிவ-விஷ்ணு ஆலயம்

*மனிதராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவர் சார்ந்த மதங்களின் கீழ், தெய்வ வழிபாடு என்பது ஒரு இன்றியமையாத விடயமாக சொல்லப்படுகிறது. ஆறுகள் யாவும் கடலில் சென்று கலப்பது போல, எந்த தெய்வத்தை நோக்கி மனிதர்கள் வழிபட்டாலும், அது மனிதர்களுக்கு மேம்பட்ட பரம்பொருளையே சென்று அடைகிறது என்பது தான் தெய்வவழிபாட்டின் தத்துவமாகும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து தெய்வ வழிபாட்டின் அதிமுக்கியத்துவத்தை நாம் உணர முடிகின்றது.*

மன அமைதி, ஆத்மபலம், தூய சிந்தனை, பரோபகார உணர்வு, கருணை உள்ளம் ஆகிய அனைத்து அறநெறிகளும் இறைவழிபாட்டின் மூலமாக மனிதர்களுக்கு கிடைக்கக் கூடிய அனுகூலக் கொடைகளாகும். இவற்றால் மனிதன் எல்லாவிதத்திலும் மேம்படுவது சர்வ நிச்சயம் என சாஸ்திரங்களும் புராணங்களும் தெரிவிக்கின்றன.

ஆகவே தான் ஒவ்வொரு ஊரின் நடுவிலும் பெரிய இராஜகோபுரம் அமையப் பெற்ற இந்து கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டன. அவர வர் வீடுகளில் இருந்தே காலையில் எழுந்தவுடன் ஊரின் மையத்தில் காணப்படும் இராஜ கோபுரத்தை உள்ளன்போடு கண்டு தொழுதால் மகாபுண்ணியம் என சொல்லப் படுகின்றது.

எனவே தான், "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என ஆன்மீக சான்றோர் சொல்லி வைத்தனர். இதைத் தொடர்ந்து சொல்லப்பட்டது தான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற சொல்லடையும்.

ஆகவே மனிதனின் மேம்பட்ட வாழ்க்கைக்கு இறைவழிபாடு இருந்தே ஆக வேண்டு மென்பது தெள்ளதெளிவாகிறது.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு தான் இந்துக்கள் இந்த உலகின் எந்த மூலையில் வசித்து வந்தாலும் இந்து ஆகம விதிகளுக்கு உட்பட்டு ஆலயங்களை எழுப்பி முழுமையான வழிபாடுகளை மேற்கொள்கின்றார்கள்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் லிவர்மோர் என்னும் இடத்தில் இப்பகுதி இந்துக் களால் ஒரு பிரம்மாண்டமான சிவ விஷ்ணு ஆல யம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில் வாழ்ந்த இந்து சமயம் சார்ந்த மக்களின் ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு ஆலயம் ஒன்றினை எழுப்புவதற்கு முடிவு செய்தார்கள்.

இதற்கு முன்னோடியாக கலிபோர்னியா வில் 1977ஆம் ஆண்டு இந்து சமுதாய கலாசார மையம் துவங்கப்பட்டது. இந்த மையத்தின் பெரு முயற்சியின் காரணமாக, சுமார் ஒன்பது ஆண்டுகள் கழித்து 1986ல் ஆலயம் எழுப்பும் எண்ணம் நிறைவேறியது.

அந்த ஆண்டிலேயே சிவவிஷ்ணு ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. 1998ஆம் ஆண்டில், பன்னிரண்டு ஆண்டுகள் பூர்த்தியான பின்பு ஆலயத் தின் மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடத்தப்பட்டது. இதில் கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த இந்து சமயிகள் பெருமளவில் கலந்து கொண்டு உற்சவத்தை சிறப்பித்தார்கள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லிவர்மோர் சிவவிஷ்ணு ஆலயத்தில், பிரதான ஆலயத்தை ஒட்டி ஒரு அரங்கமும் ஒரு சமையல் அறையும் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் பக்தர்களின் குடும்பங்களைச் சார்ந்த திருமணங்கள் இந்து சமய முறைகளின் படி ஆலயத்திலேயே நடத்தப்படும் வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டன. 1998ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகத்திற்கு பின்பாக ஆலயம் மிகவும் பிரபலம் அடைந்து அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் ஆலயத்தின் எல்லாவித விழாக்களிலும் பங்கேற்கும் நிலை உருவானது. உதாரணமாக விநாயக சதுர்த்தி தினத்தன்று சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருகின்றார்கள். பக்தர்களின் கூடுதல் வருகையை முன்னிட்டு ஆலய வளாகத்தை விஸ்தரிப்பு செய்யும் எண்ணமும் ஆலய நிர்வாகஸ்தர்களிடையே இருந்து வருகின்றது. லிவர்மோரின் சிவவிஷ்ணு ஆலயம் பக்தர்கள் கூட்டு ஆன்மீக சேவைகளான ஹோமங்கள், அபிஷேகங்கள், அலங்காரங்கள், ஆராதனைகள். அர்ச்சனைகள் முதலியவற்றை வழங்குகின்றது. பக்தர்களுக்கு பயனுள்ளதாக கருதப்படும் ஆலய பிரகாரம், நீர்தெளிப்பான், ஒலிபெருக்கி முதலிய வசதிகள் அடுத்தடுத்து செய்து முடிக்கப்பட்டன. அழகான சிற்ப வேலைகள் அனைத்தும் 1999ஆம் ஆண்டில் ஆலயத்தின் முழுமையாக செய்து முடிக்கப்பட்டன. இதன் பின்பு ஆலயத்தின் வெளிப்புறமும் ஆலய வளாகம் சிற்பங்களாலும் வர்ணங்களாலும் கண்ணைக் கவரும் கம்பீரத்தில் காட்சி தருகின்றன. கூட்டு முயற்சியில் ஓரினத்து மக்கள் மின்னுகின்ற ஓர் ஆலயத்தை எப்படி கட்டி முடிக்க முடியும் என்பதற்கு ஓர் சான்றாக லிவர்மோரின் சிவவிஷ்ணு ஆலயம் இருக்கின்றது. இந்து சமுதாய கலாசார மையத்தின் மூலமாக, இந்த ஆலயத்தில் வழிபாட்டுடன் கூட, பக்தர்களுக்கு தேவைப்படும் ஆன்மீகச் சொற்பொழிவுகள், சமய விளக்கங்கள், சங்கீத உபன்யாசங்கள் முதலியவையும் நிகழ்த்தப்படு கின்றன.

லிவர்மோரின் சிவவிஷ்ணு ஆலயத்தில் சங்கடகர சதுர்த்தி, கணபதி அர்ச்சனை, சிவபெருமானுக்கு 108 கலசாபிஷேகம் மற்றும் வில்வ அர்ச்சனை பாலாஜி என அழைக்கப்படும் வெங்கடேசருக்கு அனுதினமும் காலை சுப்பிரபாதம், ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமைகளிலும் சிவதிருக்கல்யாணம், ஞாயிற்று கிழமைகளில் கார்த்திகேயர் அபிஷேகமும், சகஸ்ர நாம அர்ச்சனையும், வெள்ளிக்கிழமைகளில் பார்வதிலட்சுமிபூதேவி ஆகியோருக்கு தசபுஜா துர்கை அபிஷேகம், ஒவ்வொரு புனர்பூச நட்சத்திரத்திலும் ராமர் அபிஷேகமும், ஒவ்வொரு சுவாதி நட்சத்திரதன்றும் நரசிம்ம அபிஷேகம் ஆகியவை மிகச் சிறப்பாக செய்யப்படுகின்றன. மேலும் சிவவிஷ்ணு பிரம்மோற்சவங்கள், புஷ்பயாகம், கணேசர் சதுர்த்தி, மகா சிவராத்திரி, ஆருத்ராஉற்சவம், வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தி, இராமநவமி, அனுமன் ஜெயந்தி, நரசிம்ம ஜெயந்தி, தீபாவளி, வரலட்சுமி விரதம், ஐயப்ப மகரத தீபம், மீனாட்சி திருக்கல்யாணம், கந்தசஷ்டி ஆகிய வருடாந்தர விழாக்களும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

**அபிதா மணாளன்**





noolaham.org | aavanaham.org

ரிஷபம்

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**கனவு காண்பது கூட நமக்கு நல்லபடியாக அமைய வேண்டுமென்று நினைக்கும் ரிசப ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு ஏழாமிடத்தில் சனி அமர்ந்து உங்களின் பாக்கிய ஸ்தானத்தையும் உங்களின் ராசியையும், உங்களின் சுகஸ்தானத்தையும் பார்வை இடுவது சனியின் பலம் அதிகரிக்கும். உங்களின் யோகாதிபதி சனி பகவான் ஏழாமிடத்தில் அமருவது உங்களுக்கு நல்ல பலன்களையும் ஏற்கனவே தர்ம கர்மாதிபதியாக சனி இருப்பதும் உங்களின் சக வளர்ச்சிக்கும் நன்மையை தரும். புதிய முயற்சிகள் புதிய தொழில் வாய்ப்புகள் வெளி நாட்டு தொடர்புகள் உண்டாகும் உங்களின்



ராசிக்கு ஏழாமிடத்தில் அமருவது கண்டச் சனியாகும். இந்தக் காலத்தில் ஆரம்பத்தில் குரு பார்வை இருப்பதால் நன்மையும் தீமையும் கலந்து வருவதுடன் தொழில் அபிவிருத்தியை அடையும். சொர்க்க பூமியாக உங்களின் விவசாயம் நல்ல படியாக அமையும். வண்டி வாகனம் புதிய வீடு கட்டுதல், வாகனங்களை புதுப்பித்தல் போன்ற நிகழ்ச்சிகள் உண்டாகும். உங்களின் தொழில் ஸ்தானாதிபதி சனி என்பதால் சனி பார்க்க தொழில் நன்மையை பெறுவீர்கள். தகப்பன் வழி சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் ஓரளவு நல்ல முடிவுகளை எட்டும். கடன் தொல்லை நீங்க கஷ்டங்களை விளக்கி கொள்ளுவீர்கள். உங்களின் கூட்டாளிகளால் சில பிரச்சினைகள் உண்டாகும். தேவையற்ற வார்த்தைகளால் உங்களின் மனதை புண்படுத்துவார்கள். பொறுமை அவசியம். மனைவி உடல் நலம் இல்லாமல் போவது, சிறுநீரக பிரச்சனை, நரம்பு சம்பந்தமான உபாதைகள், இரத்த சோகை போன்ற நோய்களால் மனைவி அவஸ்தை படும் படி அமையும். கருத்து ஒற்றுமை ஏற்படாது. உங்களின் தொழிலில் எந்த பாதிப்பையும் தராது என்றாலும் மனரீதியாக குழப்பம் உண்டாகும். திருமண தடைகள் கணவன் மனைவி உறவில் இணக்கமின்மை, இருவரும் பிரிந்து வேறு ஊர்களில் இருக்கும் நிலை போன்ற நிலை உண்டாகலாம் என்பதால் பிரிந்து விட்டதை எண்ணி வருந்த வேண்டாம். எல்லாம் சனி பகவானின் செயல் என்பதால் மனத்தில் சனி பகவானை வணங்கி கொள்ளவும். திறமையான அதிகாரிகளாக பணிபுரியும் அன்பர்களுக்கு தனக்கு கீழ் இருக்கும் ஊழியர்கள் ஒத்துழைப்பு தராமல் காலம் தாழ்த்துவது உங்களுக்கு மன அமைதி இன்றி இருக்கும். என்றாலும் உங்களின் பொறுமையும் தன்னம் பிக்கையும் இருந்தால் எந்த பிரச்சினையும் வராது.

குதிரை வேகத்தில் சென்ற உங்களுக்கு ஆமை வேகம் ஏற்க முடியாமல் போகலாம் என்பதால் இடத்திற்கு தகுந்தபடி உங்களை மாற்றி கொள்ளுவது நல்லது. உங்களின் பாக்கிய ஸ்தானத்தை சனி பார்ப்பது வெளியூர் பயணம், தீர்த்த யாத்திரை புண்ணிய தீர்த்தம் ஆடுதல் பரிகார பூஜைகள் செய்து பாவத்தை நிவர்த்தி செய்தல், கடல், நீர்மார்க்கமாக பயணம் செய்தல் போன்ற பலன்கள் கிட்டும். விவாசயம் தென்னை கோப்பி, போன்ற பொருட்கள் வியாபாரம் நன்றாக இருக்கும். இரும்பு சம்பந்தமான உருக்கு சாதனங்கள் விலை ஏற்றம் நல்ல லாபத்தை தரும். சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு கொள்ளுவீர்கள். மன கணக்குகள் தப்பினாலும் சனி பகவானின் கணக்கு தப்பாது. தர்ம, நியாயங்களுடன் செயல்பட்டு வந்தால் எந்த தண்டனையையும் சோதனைகளையும் அவரே குறைத்து கொள்ளுவார் என்றாலும் உங்களின் ராசிக்கு சனி பகவான் நன்மை தீமைகளை பகிர்ந்து அளிப்பார். சாதனைகளை செய்து வேதனைகளை தீர்த்து கொள்ளுவீர்கள். வாகனங்களில் புதிய வாகனம் வாங்க ஏற்கனவே இருக்கும் வாகனத்தை மாற்றிக் கொள்ள வாய்ப்புகள் உண்டாகலாம். வீட்டு மராமத்து பணிகள் செய்ய வேண்டி வரும். தாயாருக்கு உஷ்ணம் சம்பந்தமான உடல் உபாதைகளும் கழுத்து வலியும் உண்டாகலாம். இறைவழிபாடு செய்து வர எல்லாம் நன்மையாக அமையும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் சிவன் கோவில் சென்று நந்தியை வணங்கி சனி காயத்ரி சொல்லி நல்லெண்ணெய் தீபம் நந்திக்கு முன் போட்டு வணங்கி வரவும்.

### சர்வ மங்களும் உண்டாக

கீழ்க்கண்ட மந்திரத்தை செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை பதினாறு முறை பாராயணம் செய்து, ஸ்ரீ துர்க்கையை நமஸ்கரிக்க வீட்டில் சர்வ மங்களும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷபம்

## ஜய வருடம் கார்த்திகை மாதம்
## 17.11.2014 முதல் 15.12.2014 வரை



***நோக்கங்களை குறிக்கோளாக கொண்டு விளங்கும் ரிஷப ராசி வாசகர்களே!***

***இந்த மாதம் உங்களின் ராசிக்கு சனி பெயர்ச்சி ஆகும் காலம் வரை பாதிப்பிருக்காது. அதன் பின் உடல்நல குறைவும் குடும்ப பிரச்சினை, மனைவியுடன் சச்சரவு உண்டாகும். எளிய மக்களின் நன்மைக்காக பாடுபடுவீர்கள்.***

**பணியாளர்களுக்கு:**

பணிபுரியும் இடங்களில் கடந்த காலம் போல இல்லாமல் உங்களின் செல்வாக்கு சரியும். எதிர் கேள்வி கேட்க ஆட்கள் உருவாகுவார்கள். எதிலும் பொறுமையும், சகிப்புத்தன்மையும் அவசியம். கண்டம சனி இருப்பதால் பணியில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது நலனில் அதிக ஈடுபாடு கொள்ளுவதை குறைத்துக் கொள்ளுவீர்கள். வரவுக்கு மீறிய செலவு களை குறைத்து கொள்ளவும். அரசாங்க காரியம் எதிர் பார்த்தபடி நடக்கும். பொது பிரச்சினைகளில் நல்ல நிலையை அடைவீர்கள். பொருளாதார நிலை சீராகும்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானாதிபதி இம்மாதம் முழுவதும் நல்ல நிலையில் இருப்பதால் பாதிப்பில்லை. அடுத்து வரும் மாதம் சனி பெயர்ச்சிக்கு பின்பு கூட்டு தொழிலில் கவனம் தேவை. அட்டம ஸ்தானத்தில் செவ்வாய் அமர்ந்து குருவை பார்ப் பது நல்லதல்ல என்பதால் பிறரின் ஆலோசனை களை அறிந்து செயல் படுவது நல்லது.

**கலைஞர்களுக்கு:**

கலைஞர்களின் திறமை வெளிபடும். அரசாங்க விழாக்களில் கலந்து கொள்ளுவீர்கள். வெளிநாட்டு விருந்தினர் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள் வீர்கள். கலைஞர்களின் வளர்ச்சியில் உழைப்புக்கு உரிய மரியாதை கிடைக்கும்.

**பெண்களுக்கு:**

பெண்களின் திருமண தடை நீங்கி விரைவில் திருமணம் நடக்கும். ஏமாற்ற நினைத்தவர்களுக்கு தக்க பாடம் கொடுப்பீர்கள். சுயதொழில் நன்றாக இருக்கும்.

**மாணவர்களுக்கு:**

கல்வியில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். நிர்வாக துறை கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். சிறந்த மாணவராக விருது கிடைக்க வாய்ப்புள்ளது. ஆராய்ச்சி கல்விக்கு நல்ல மதிப்பெண் கிடைக்கும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

24.11.2014 திங்கள் பகல் 01.38 முதல் 26.11.2014 புதன் மாலை 05.18 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

எவ்வளவு முன்னெச்சரிக்கையாக செயல்பட் டாலும் அரசாங்க காரியங்களில் தடையும், தொழிலில் மந்தநிலையும் உண்டாகும். பொருளா தாரம் சற்று குறைவாக இருக்கும்.

**ரோகிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

தொழிலில் நன்மைகளை அடைவீர்கள். சில ருக்கு பணப்பிரச்சினைகளால் மன அமைதி கெடும். வங்கிகளில் கடன் கேட்டு முயற்சிகளை செய்வீர்கள்.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்:**

உண்மையை சொல்லி நன்மையை பெறு வீர்கள். பால் வளம் பெருகும். வாகன வசதி உண் டாகும். திருமண வாய்ப்புகள் நல்ல பலனை தரும். பொருளாதாரம் கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

வெண்மை, பச்சை, ஆரஞ்சு.

**அதிர்ஷ்ட திசை கள்:**

தெற்கு, தென் கிழக்கு, வடகிழக்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

வெள்ளி, புதன், சனி.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய் வங்கள்:**

நவக்கிரக வழிபாடு வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் வணங்கி விட்டு பைரவருக்கு வெண் பூசணியில் நெய் விளக்கு போட்டு வாழைப் பழம் நைவேத்தியம் வைத்து வணங்கிவர தடை நீங்கி நன்மை பெறுவீர்கள்.

### செல்வம் பெருக மந்திரம்

* 108 முறை சொல்லவும்
* லக்ஷ்மீபதே கமலநாப
* ஸுரேஸ விஷ்ணோ
* வைகுண்ட க்ருஷ்ண
* மதுஸுதன புஷ்கராக்ஷ
* ப்ரஹ்மண்ய கேஸவ
* ஜனார்தன வாஸுதேவ
* லக்ஷ்மீந்ருஸிம்ஹ
* மம தேஹி கரா வலம்பம்

மேற்கண்ட மந்திரத்தை லக்ஷ்மி நரசிம்மரை வழிபட்டு ஜெபிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம், உலோக மற்றும் கற்சிற்பங்கள், நடனம், இசை ஆகிய பாரம்பரிய கலைகளில் மனிதனின் படைப்புகளில் பெரிதாகப் பேசப்படுவதும், அவற்றின் நிலையான இருப்பால் காலங்களை கடந்து கலைப்பொக்கிஷங்களாய் வாழ்வதும் கற்சிற்பங்களேயாகும். ஒரு சாதாரண கல், சிற்பக்கலை அடிப்படையில் ஒரு மனித உருவத்தையோ, விலங்கின் வடிவத்தையோ, கடவுள் சிற்பங்களாகவோ அற்புதமாக உருவெடுப்பது சிற்பகலைஞனின் கைவண்ணத்தால் மட்டுமே. கலைஞனின் கை கல்லிலே வைக்கப்படும் வரையிலும் அந்தக் கல், கல்லாக மட்டுமே காணுகின்றது, கலையின் பரிணமிப்பு அங்கே இடம் பெறுவதில்லை. ஆகவே தான் கலைகளில் சிறந்தது சிற்பக்கலை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

காலத்தின் கண்ணாடியாக நாகரிக வளர்ச்சியை எடுத்துக்காட்டும் சான்றாக விளங்குவது சிற்பகலை ஒன்றே தான். பன்னாட்டு வரலாற்று தொன்மைகளை, அழியாமல் வீற்றிருக்கும் சிற்பங்கள் வாயிலாகவே பெரிய அளவில் அறிய முடிகின்றது. பேராலயங்களில் சிற்பக்கலைஞர்களால் செதுக்கி நிலை நிறுத்தப்பட்டுள்ள சிற்பங்கள் பல புராண வரலாறுகளை எடுத்தியம்பும் ஆன்மீக காலப் பெட்டகங்களாய் திகழ்கின்றன.


காலத்தால் அழிக்க முடியாத கலைக்காவியங்கள் என்னும் விதத்தில் தமிழகத்திலும் இந்தியா முழுவதிலும் ஆலயங்களிலும் சுற்றுலா தலங்களிலும் சிற்பக்கலையின் உன்னதத்தை பறைசாற்றுகின்ற வகையில் அற்புதமான கற்சிற்பங்கள் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றன. தமிழக்த்தை ஆட்சி செய்த அரசர்கள் யாவரும் சிற்பகலைக்கு மிகப்பெரிய முக்கியத்துவத்தை கொடுத்து, அந்த கலையை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார்கள்.

பண்டைய மன்னர்களால் காட்டப்பட்ட இந்த சிற்பக்கலை ஆர்வமானது பழந்தமிழ் பாடல்களிலும், இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்டுள்ளன. கல்லுக் குள்ளே ஒரு காவியத்தை படைக்க, மனதை மயக்குகின்ற சிற்பங்களை உருவாக்க, உளி யின் மூலமாய் உயிரோவியங்கள் படைக்கும் சிற்பிகளால் தான் முடியும். இந்தக் காரணம் கொண்டே பழங்கால மன்னர்கள் சிலை செதுக்கும் சிற்பிகளுக்கு மாறாத சிறப்பை அளித்து பரிசில்களையும் அள்ளி கொடுத்தனர்.

சிற்பக்கலையின் சிறப்பையும், சிற்பிகளின் திறமையையும் வெளிப்படுத்துகின்ற விதத்தில் எங்கு நோக்கினும் சிற்பங்களின் செழுமை காணப்படுவது தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயம் ஆகும்.

தொன்மை வாய்ந்த இந்த ஆலயத்தில் மூலவராய் கைலாச





# வரலாறாய் நிலைத்து நிற்கும் அதி உன்னத





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாதர் வீற்றிருக்கின்றார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த சிவத்தலம் அமையப்பெற்ற ஊர் கோவளம் என்பதாகும். இந்த ஆலயத்தின் மண்டபத்தில் பூமாதேவியுடன் வெங் கடேஸர், சூரியன், மகாலிங்கம், மகா காளி, நாகாத்தம்மன், சுவர்ண பைரவர் ஆகியோர் அமைந்துள்ளனர். இந்த ஆலயத்தின் தூண்களில் இராமாயண கதாபாத்திரங்கள் அற்புத சிற்பங்களாய் வடிக்கப்பட்டுள்ளன.

அதோடல்லாமல் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வ விக்கிரகங் களும் பிரகாரத்தில் அமையப் பெற்றுள்ள பரிகார தெய்வங்களும் விக்கிரகங்களும் மிக அழகாகவும் துல்லியமாகவும் செதுக்கப்பட்டுள்ளன.

மார்கண்டேயருக்கு அருள் புரிய சிவன் எமனை காலால் உதைத்த காட்சி மிகத் தத்துரூபமாக சிற்பத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்த சிற்பத்தை முழு மனதுட னும் மிகுந்த பக்தி சிரத்தையுடனும் வணங்கி வழிபட்டால் ஆயுள் அதிகரிக்கும் என்பது ஐதீகம். காஞ்சி கைலாச நாதர் ஆலயத்தில், பிதுர் தோஷ நிவர்த்தியை முன்னிட்டு அமாவாசையன்று கடலில் நீராடி மூலவரை வழிபடுகின்றார்கள். புரட்டாசி மகா ளய அமாவாசையன்று பிதுர் தோஷ நிவர்த்தி வழி பாட்டை இவ் வ ா ல [illegible]தி ல் மேற் கொண் டால் மிகச் சிறப்புடைய தாக இருக்கும் என்று சொல்லப் படுகின்றது.

# கோயில் சிற்பங்கள்

சிற்ப கலையின் சிறப்பை செப்புகின்ற வித மாய், இந்த ஆலயத்தில் விநாயக பெருமானை மூன்று வடி வங்களில் அற்புதமாய் செதுக்கி வைத்துள்ளார்கள். குபேர கணபதி, விஜய கணபதி, சிவசக்தி கணபதி ஆகியவையே அந்த மூன்று கணபதிகளின் நாமகரணங்களாகும். ஒவ்வொரு விநாயக சதுர்த்தி தினத் தன்றும் இந்த மூன்று விநாயகர்களுக்கும் விசேட பூஜைகளும் நடத்தப்படுகின்றன.

விநயாக சதுர்த்தி அன்று இவர்களை வழிபட்டால் குடும்பத்தில் ஐஸ்வர்யம் தங்கும் என்று நம்பிக்கை. இத்தலத்தின் அம்பிகையை கனகவல்லி என்று அழைக்கின் றார்கள். திருமணமாகாத பெண்கள் மாங்கல்ய பாக்கியம் வேண்டி கனகவல்லி தாயாரிடம் வேண்டிக் கொள்கின்றார்கள். ஆண்கள் திருமண பாக்கியம் வேண்டி சிவனுக்கு எதிரேயுள்ள நந்தீஸ்வரனுக்கு தாலி அணிவித்து வேண்டி கொள்கின்றார்கள். காஞ்சி புர மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள இந்த கைலாசநாதர் ஆலயம் சிவ சேத்திரங்களில் மிகவும் பழைமை ஒன்றாகும். காஞ்சி நகரத்தின் மேற்கு புறத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. கலை நயம் மிக்க சிற்பங்களுக்கு இந்த ஆலயம் பெயர் பெற்றதாக விளங்குகின்றது.

S.ஆகாஷ்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கார்த்திகை மாதம் தமிழ் மாதங்களில் பல விதங்களிலும் சிறப்புப்பெற்றதாகவிளங்குகின்றது. கார்த்திகைமனிதர்களுக்கு மனஉறுதிப்பாட்டினைத்தரவல்லதாகவும்,புண்ணியப்பலன்கள் பலவற்றையும் அளிக்கக்கூடிய மங்களகரமான மாதமாகவும் கருதப்படுகின்றது. மனதாலும் உடலாலும் சலிப்பற்ற தெம்பினைத் தரக்கூடிய மாதம் என்பதாலும், இல்லற வாழ்வில் இனிமையைத் தரக்கூடிய மாதம் என்பதாலும் இம்மாதத்தினை "திருமண மாதம்" என்றே சாஸ்திரம் அறிந்த ஆன்றோர் கூறுகின்றனர்.

ஜெகத்தினை காக்கின்ற சிவத்தினையும் அன்னை பராசக்தியையும் மனதில் நிறுத்திப் பிரார்த்தனைகள் செய்யவும், புனித விரதங்களை மேற்கொண்டு அம்மையப்பரின் அருளைப் பெறவும் கார்த்திகை மாதம் மிகவும் உகந்ததாகக் கொள்ளப்படுகின்றது. பொதுவாகவே கடவுள்களை மனதிலே இருத்தி செய்யப்படுகின்ற விரதங்கள் யாவும், மனிதர்களைத் தீமைகளிலிருந்து விலக்கி வைக்கவும், தூய எண்ணங்கள் மனதில் நிறைந்து நிற்கவும், பசித்தோர் புசித்திட அன்னதானங்கள் செய்யவும், மனிதநேய நெறியினை வளர்த்திடவும் பெரிதும் உதவுகின்றன. ஆகவேதான் புராணக்காலந்தொட்டு கற்றறிந்த சான்றோரும், ஆன்மீகப் பெருமக்களும், சித்தர்களும், ரிஷிபுங்கவர்களும் விரதம் அனுஷ்டிப்பதை ஒரு மிகச் சிறந்த தெய்வீகக் கைங்கரியமாக வலியுறுத்தி வந்துள்ளனர்.

கார்த்திகை மாதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற விரதங்களில் மிகவும் முக்கியமானதாக இருப்பது "உமாமகேஸ்வர விரதம்" ஆகும். இவ்விரதம் கார்த்திகை மாதப் பௌர்ணமி தினத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது. உமாமகேஸ்வர மூர்த்தம் மிகவும் மேலானதாக கொள்ளப்பட்டு இதற்கான விரதமும் பக்தர்களால் வெகு சிரத்தையுடன் உரிய அனுஷ்டானங்களுடன் மேற்கொள்ளப்படுகிறது. பூஜை அறையைச் சுத்தம் செய்து அழகிய கோலங்கள் இட்டு, கும்பம் வைத்து பூஜையை துவங்க வேண்டும். வெள்ளியினாலோ அல்லது வேறு பஞ்சலோகத்தாலோ ஆன சிவபார்வதி திருவுருவங்களை பஞ்ச கவ்வியத்தினால் அபிஷேகம் செய்து, புதிய வஸ்திரங்கள் அணிந்து திருவமுது படைத்து, தீப தூபங்கள் காட்டி மனமுருகி வணங்குதல் வேண்டும்.

இந்த உமாமகேஸ்வர விரதத்தை ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைப் பௌணர்மியில் அனுஷ்டிப்போர் இம்மையில் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெற்று மறுமையிலும் முக்திப் பேறு பெறுவர் என்பது திண்ணம். நீண்டகாலமாககண்பார்வை குன்றிப்போய் பெருந்துயரை அனுபவித்து வந்த திருணபிந்து என்னும் முனிவர், உமாமகேஸ்வர விரதத்தின் மகிமையை உணர்ந்து அதனைக் குறைவின்றிக் கடைப்பிடித்து மீண்டும் கண்பார்வை பெற்று நலமடைந்தார் எனப் புராணங்கள் கூறுகின்றன.

மேலும் உமாமகேஸ்வர விரதத்தினை முறைப்படி அனுஷ்டித்து இந்திரன் போன்ற தேவர்களும், வசிஷ்டர் போன்ற மகாமுனிவர்களும், ஜனகன், இந்துசேனன் போன்ற மன்னர்களும் பேறுகள் பலபெற்று நல்வாழ்வை எய்தினர் எனவும் புராணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. உமா மகேஸ்வர விரதத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், இவ்விரதத்தை கடைப்பிடிப்பதின் மூலமாக மனிதர்கள் அடையக் கூடிய பலன்கள் பற்றியும் உபதேச காண்டம், திருப்புராணம் முதலிய வற்றில் விவரிக்கப்பட்டுள்ளது.

கார்த்திகை மாதத்தில் வருகின்ற பிறிதொரு முக்கியமான விரதம் திருக்கார்த்திகை விரதம். இதனை தமிழ்நாட்டிலே மக்கள் யாவரும் ஒரு சிறப்புமிக்க விழாவாகவே கொண்டாடுகிறார்கள். இது கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நட்சத்திரத்திலே அனுஷ்டிக்கப்படுவது. கார்த்திகை நட்சத்திரத்திற்கு முன்பாகப் பரணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்னர் ரோகிணியும் உள்ளன.

கார்த்திகை நட்சத்திரத்துடன் நிகழும், சில சமயம் பரணியோடு கூடி நிகழும் மற்றும் சில காலங்களில் ரோகிணியுடனும் கூடிவரும். இவற்றுள் கார்த்திகையுடன் பௌர்ணமி சேர்ந்தால் அது மகா கார்த்திகை என்றழைக்கப்படுகின்றது. இந்நன்னாளை திருக்கார்த்திகை விரதம், கார்த்திகை தீபம், விளக்குத் திருநாள் என்றெல்லாம் பக்தர்கள் பெயரிட்டுப் போற்றுகின்றனர்.

பிரம்மா விஷ்ணு ஆகியோரிடையே எழுந்த பெரியோர் சிறியோர் எண்ணத்தையும் செருக்கினையும் அகற்றும் பொருட்டு அவர்கட்கு சிவபெருமான் சோதி ரூபம் காட்டியருளிய போது அதன் அடியும் முடியும் காண இயலாத பிரம்ம விஷ்ணு, "இச்சோதியினை எமக்குக் காட்டி அருளியது போல் அனைத்து அடியார்க்கும் காட்டியருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்கள். சிவபிரானும் "கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம்" என அருளினார். லோகநாயகன் காட்டியருளுகின்ற அச்சோதியினைக் குறிப்பதற்காகவே எங்கும் விஷேடமாகவும் பெரும்பக்தியுடனும் விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

"அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணமறுமே" என இயம்புகின்றார் திருஞானசம்பந்தப் பெருமான். இதனால் இறைவன் ஒளிவடிவினன், எல்லா விளக்கும் இறைவன் சொரூபமே என்பது சொல்லாமலே விளங்கும். கார்த்திகை தீபோசற்வத்திற்கு முதல்நாள் வீடுகளிலும், வியாபாரத்தலங்கிலும் மற்ற இடங்களிலும் தீபங்கள் ஏற்றி குதூகலமாகக் கொண்டாடுவார்கள். இத்தினத்தில் எல்லா திருக்கோயில்களிலும் திருவிழாக்கள் வெகு சிறப்பாக நடைபெறும். சில இடங்களில் தீபங்களைக் கொண்டு உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் சொக்கப்பானையை எரிப்பது வழக்கம்.

இதனில் சோதி சொரூபமாக இறைவனையும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்து பக்தர்கள் வழிபடுகின்றார்கள். கந்தபுராணம், சிவராத்திரி புராணம், அருணகிரி புராணம் முதலியவற்றிலும், சங்ககாலத்து நூல்கள் பலவற்றிலும் 'இறைவன் சோதிவடிவானவன்' என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இறைவழிபாடு முதலில் சூரிய வழிபாடாக பரிணமித்தது. அந்த வழிபாடே பின் வந்த காலங்களில் திருவிளக்கு வழிபாடாக மாறி தற்போது கார்த்திகை தீபமாக விளங்குகின்றது. கார்த்திகை மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகின்ற மற்றுமொரு முக்கியமான விரதம் "சோமவார விரதம்". சோமவாரம் என்பது திங்கட்கிழமையைக் குறிக்கின்றது. சோமவார விரதமானது கார்த்திகை மாதத்து முதல் சோமவாரம் தொடங்கி சோமவாரம் தோறும் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இவ்விரதத்தின்போது நாள் முழுவதும் உபவாசமிருப்பது உத்தமமாகக் கருதப்படுகிறது. அது இயலாதவர் ஒரு பொழுது இரவில் மட்டும் உணவு உண்ணலாம். இவ்விரதத்தினை வாழ்நாள் முழுவதுமோ, பன்னிரண்டு வருடங்ளுக்கோ, அல்லது மூன்று அல்லது ஒரு வருடத் திற்காயினும் அனுஷ்டித்தால் சிறப்பாகும்.

**ஜெயா நாகேந்திரன்**

# கார்த்திகை
## மாதத்துச் சிறப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் எழுத்துக்களின் வலிமையும்!

**ஒவ்வொருவருக்கும் பிறந்த தேதி எண், பிறந்த தேதியில் காணப்படும் எண்களை வரிசைக் கிரமமாகக் கூட்டினால் வரும் கூட்டு எண். இந்த இரண்டு வித எண்களை அனுசரித்தே வாழ்க்கைப் பாதை செல்லும். அதிருஷ்டம் என்பது கூட்டு எண்ணின் பலம்.**

இவை இரண்டும் ஒரே எண்ணாகவும் இருக்கலாம். அப்படியானால் அந்த எண் மிக்க வலிமை கொண்டதாக இருக்கும். பிறந்த எண்ணுக்கு விரோதமான கூட்டு எண்ணும் இருக்கலாம். இது தான் சற்றுச்சரியாக அமையாத வாழ்வு. இரட்டை மனம் என்பதற்கும் இதுவே காரணம்.

ஒற்றுமையான விரோதமான எண்களைப் பார்ப்போம்.

| எண் | ஒற்றுமை | விரோதம் | சமநிலை |
|---|---|---|---|
| 1 | 4,2,7 | 8 | 3,5,6,9 |
| 2 | 1,7,4,3,8 | 9 | 5,6 |
| 3 | 2,9 | 6 | 1,4,5,7,8 |
| 4 | 1,2,8 | 9 | 3,5,6,7 |
| 5 | மற்ற எல்லாமே | | |
| 6 | 9 | 3 | 1,2,4,5,7,8 |
| 7 | 2,1 | 8 | 3,4,5,6,9 |
| 8 | 1,4 | 5 | 2,3,6,7,9 |
| 9 | 3,6,5 | 2 | 1,4,7,8 |

பெண்களுடைய வாழ்வு என்று தனியாக எதுவும் காணப்படுவதில்லை. அவர்களுக்கு வரும் நோய் மட்டுமே அவர்களுடையது. மற்றப்படி அவர்களுடைய வாழ்வு என்பது கணவரின் சுக துக்கங்களைப் பின்பற்றியே தொடர்ந்து வருகிறது. தனக்கு அதிருஷ்டம் இருந்து கணவர் சரியாகத் தொழில் செய்யாவிடில் குடும்பத்தில் சிக்கல் வரும். இவர்கள் அதிருஷ்டமாக இருந்தால் வரும் கணவரும் அதிருஷ்டமாகவேதான் வருவார் என்பதும் உண்மை. கெட்ட குணங்களுடைய கணவரையும் பல பெண்கள் நல்ல வழியில் திருப்பியிருப்பதையும் பார்க்கலாம்.

சில பெண்களால் கணவரைத் திருத்தவும் முடிவதில்லை. தாம்பத்திய வாழ்வு எலியும் பூனையும் மாதிரி இருந்தால், ஜாதகக் கோளாறுதான் காரணம் என்று ஒரு வார்த்தையில் கூறி விடுவார்கள். அதுவும் காரணமாக இருக்கலாம். ஆனால் அதுதான் முடிவான காரணம் என்பதை ஒப்புக் கொள்ள முடிவதில்லை. நமது நாட்டில் ஜாதகம் பார்ப்பது என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் பழக்கம். ஆனால் பிறந்த எண்களைப் பற்றிச் சிறிதும் எண்ணுவதில்லை. ஜோதிடக் கலையைப் படித்ததாகக் கூறிக் கொள்ளும் மேதைகளின் அறிவு மிகக் குறைவு. பத்துப் பொருத்தங்கள் இருந்தும் நேர் விரோதமான எண்களுடையவர்கள் திருமணம் செய்து கொண்டால் அவர்கள் வாழ்வில் சிக்கல்கள் கண்டிப்பாக வரவே செய்யும்.

நாம் அனைவருக்கும் பெயர் சூட்டு விழா ஆடம்பரத்துடன் நடத்துகிறோம். நமது குழந்தைகளுக்கும் விமரிசையாகக் கொண்டாடுகிறோம். பெயருக்குப் பின் மாபெரும் சக்திகள் அடங்கியிருக்கின்றன என்பதை நாம் பலரும் இன்னமும் தெரிந்து கொள்ளவில்லை. பெயரில் இருக்கும் சக்தியை அறியாமல் இருக்கிறோம்.

ஆங்கில எழுத்துக்களுக்கு எண் வலிமையுண்டு. முற்காலத்தில் சால்ஸிடின் என்ற மேதைகள் எழுத்துக்களின் வலிமையைக் கண்டார்கள். இந்த மாதிரி எண் வலிமையைப் பத்தகோரஸ், கபாலா என்ற பிரிவுகளும் உணர்த்துகின்றன. ஆனால் அவை சரியாக இல்லை. இதை விவரித்தால் பலருக்குப் புரியாது. ஆகையால் பெண்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி எழுத்துக்களின் எண்களை மட்டுமே கொடுத்திருக்கிறேன். தமிழில் மட்டுமே பலருக்குக் கையெழுத்துப் போடத் தெரியும். இதை அதே சப்தம் வரும்படி ஆங்கிலத்தில் எழுதி எண் வலிமையைக் காணலாம்.

A B C D E G H I J K L M N O P Q R S T U V W X Y Z

1 2 3 4 5 8 3 5 1 1 2 3 4 5 7 8 1 2 3 4 6 6 6 5 1 7

நமக்குப் பின் நான்கு வித சக்திகள் இயங்கி வருகின்றன. அவையாவன : (1) பிறந்த எண். (2) கூட்டு எண். (3) பெயரின் எண், (4) பெயரில் எந்த எழுத்துக்களைக் கொண்டு அவ்வெண் காட்டப்படுகிறது.

பெயருக்கு முன் சிலர், முதல் எழுத்து, இனிஷியல் சேர்த்துப் போடுகிறார்கள். சிலர் கணவரின் பெயரில் ஒரு பாகம் அல்லது முழுவதையும் சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள். எப்படிப் போட்டு வந்தாலும் அந்தப் பெயர் தரும் எண் வலிமையைப் பார்க்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட நான்கு சக்திகளும் ஒன்றுக்கொன்று அநுசரணையாக இருந்தால் வாழ்வும் படிப்படியாக முன்னேற்றம் தரும். குழந்தைகளுக்குப் பெயர் சூட்டு விழாவில், கணவர், மாமியார், மாமனார் இவர்களுடைய அபிப்பிராயத்தை ஒட்டியேதான் பெயர் வைக்கிறோம். குழந்தையைப் பெற்ற (தாய்க்கு) மனைவிக்கு இதில் அதிகச் சுதந்திரம் இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரே சுலோகத்தில் சுந்தர காண்டம்**

யஸ்ய ஸ்ரீஹனுமான அனுக்ரஹ
பலாக் தீர்ணாம்புதிர் லீலயா
லங்கரம் ப்ராப்ய நிசாம்ய ராமதயிதாம்
பங்க்த்வா வனம் ராக்ஷஸான்
அக்ஷாதீன் விநிஹத்ய வீக்ஷ்ய தசகம்
தக்த்வா புரீம் தாம்புன
தீரணாப்தி கபிபிர்யுதோ யமநமத்தம்
ராமசந்த்ரம்பஜே

இதை தினமும் காலையிலும், மாலையிலும் கூறிவந்தால் சுந்தர காண்டத்தை முழுவதுமாகப் பாராயணம் செய்ததற்கு ஈடாகும்.

இரட்டை வரிசையில் 10 முதல் 108 வரையில் உள்ள ஒவ்வோர் எண்ணுக்கும் பிரத்தியேகக் குண விசேஷங்கள் இருக்கின்றன. சில எண்கள் வாழ்வில் பெருத்த முன்னேற்றத்தையும், வேறு சில எண்கள் சிக்கல்களையும் கொடுக்கும் சக்தி கொண்டவை. பழைய வழக்கங்களின்படியே செல்கிறோம்.

முற் காலத்தில் அடுப்பைச் சாணத்தால் மெழுகிக் கோலம் போட்டுச் சமையல் ஆரம்பித்தார்கள். தற்காலத்தில் காஸ், குக்கர் என்று நாகரிகத்தை நம் சௌகரியத்துக்கு எடுத்துக் கொள்கிறோம். ஆனால் பெயரில் மட்டும் பழைய அர்த்தமில் லாத பழக்கங்களைவிட மனம் இல்லை. ஆங்கிலம் நம் நாட்டு மொழி இல்லை என்ற ஒரு தப்பு அபிப்பிராயம் ஊறி விட்டது. இதன் சக்தி தெரியாதது தான் காரணம். எடுத்துச் சொல்லு வாரும் இல்லை. எண் 1 வரும் குழந்தைக்கு எண் 8 வரும் பெயரைச் சூட்டுகிறோம். அந்த குழந்தைக்கு அதைவிடக் கெடுதல் வேறு இல்லை.

ஆண்களில் சிலர் இந்த மாதிரியான எண் ஜோதிட நூல்களைப் படித்து மாற்றி அமைத்துக் கொள்கிறார்கள். ஆனால் பெண்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. அவர்கள் வீட்டில் தானே இருக்கிறார்கள் என்பார்கள் சிலர். வேறு சிலர், வீட்டுக்குத்தலைவன் ஆண் தானே என்று கூறுகிறார்கள். குடும்பம் என்றால் இருவரும் சேர்ந்ததே இருவருடைய எண்களும் சரியாக இருத்தல் அவசியம். சில பெண்களுக்கு இயற்கையாகவே பொருத்தமாக அமைந்திருக்கும்.

திருமணமான பின் கணவரின் பெயரைச் சேர்த்துப்போட ஆரம்பிப்பார்கள். சிக்கல் களும் ஆரம்பமாகும். ஆகையால் இவர்கள் பிறந்த வீட்டில் சுகப் பட்டுப் புகுந்த வீட்டில் கஷ்டப்படுகிறார்கள். வேறு சிலருக்கு முதலில் நன்றாக இல்லாமல் பின்பு கணவரின் பெயரைச் சேர்ப்பதால் நல்ல எண்ணாகவும் அமையலாம். இவர்கள் திருமணமான பின்பு சுகப்படுகிறார்கள். பொருத்தமான எண் என்றால் நம்முடைய இருவித எண்ணுக்கும் பொருத்தமாகவும், ஜாதகத்தில் கண்ட கிரகவலிமையைப் பொருத்தம் நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. அவ்வளவு தூரம் செல்லா விட்டாலும் ஓர் அளவாவது பார்த்துக் கொள்ள வேண்டும்.

**பாண்டிலட்சுமி தாஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதுகுத்தண்டிலோ மூளையிலோ சத்திர சிகிச்சை அல்லது வேறு ஏதாவது மருத்துவ சிகிச்சை செய்தால், அது ஒருவருடைய குண்டலினியையும் ஆன்மீக சாதனையையும் பாதிக்குமா?**

முதுகுத்தண்டு மற்றும் மூளையில் செய்யப்படும் சத்திர சிகிச்சைகள் எப்படி ஒருவரின் ஆன்மீக சாதனையை பாதிக்கும் என்பது பற்றியும், நாம் கிரகித்துக் கொள்ளும் திறனை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றியும் சத்குரு விளக்குகிறார்.

அதிர்ஷ்டவசமாக சத்திர சிகிச்சை செய்பவர்கள் உடல்மீது மட்டுமே சிகிச்சை செய்கிறார்கள். சக்தி நாடிகள் சந்திக்கும் சக்கரங்களைத் தொடுவதில்லை. ஏதோ ஒரு பெரிய பிரச்சினை இருந்தாலே ஒழிய யாரும் மூளை அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போவதில்லை. அதனால் அதைப் பற்றி பேசத் தேவையில்லை.

முதுகுத்தண்டில் செய்யப்படும் சத்திர சிகிச்சைகளால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே, அறுவை சிகிச்சைகள் செய்வதை விட, முதுகுத்தண்டை பலப்படுத்துவதையே நாம் பரிந்துரைப்போம். உண்மையில், அவ்விடத்தில் என்ன நடக்கிறது என்ற விழிப்புணர்வு உள்ளவர்களைத் தவிர, வேறு யாரும் முதுகுத்தண்டினைத் தொடக்கூடாது.

உங்கள் அனுபவங்கள் அனைத்திற்கும் மூலமே முதுகுத் தண்டுதான். நாம் தற்போது இருக்கும் நிலையின் எல்லைகளைக் கடக்க விரும்புகிறவர்களுக்கு, உடலிலேயே மிகவும் முக்கியமான பகுதி முதுகுத்தண்டு தான். அதனால் முதுகுத் தண்டில் மசாஜ், கைரோபிராக்டிக் சிகிச்சைகள் போன்ற வற்றைத் தவிர்ப்பது நல்லது. அப்படிப் பட்ட சிகிச்சைகளைச் செய்பவர்கள் தவறாகச் செய்கிறார்கள் என்று கிடையாது. தன் ஆன்மீக நிலை விரிவடைய வேண்டுமென விரும்புபவர்கள் இது போன்ற சிகிச்சைகளைத் தவிர்ப்பது நலம். ஏனெனில் உங்கள் கிரகிக்கும் திறன் உங்கள் முதுகுத்தண்டிலிருந்து தான் துவங்குகிறது.

ஏதாவது விபத்து ஏற்பட்டு, நிச்சயமாக சிகிச்சை தேவைப்படும் என்கிறபட்சத்தில் மட்டும், முதுகுத்தண்டில் சத்திர சிகிச்சை செய்து கொள்ளலாம். பொதுவாக முதுகுத்தண்டு சார்ந்த அறுவைச் சிகிச்சைகளைத் தவிர்ப்பதே சிறந்தது. மற்றப்படி கொஞ்சம் வலி, தொந்தரவு போன்றவை இருந்தால் இவற்றை நீங்களே சரி செய்து கொள்ளலாம். அதற்கு நீங்கள் சிறிது பாடுபட வேண்டியிருக்கும். ஆனால் உங்களால் சரி செய்து கொள்ள முடியும்.

உடலின் எந்தப் பாகத்தை விடவும் முதுகுத் தண்டு தன்னை உயிர்ப்பித்து, சீர் செய்து கொள்வதில் சிறப்பாக செயல்படுகிறது. தேய்ந்து போன டிஸ்க்கு பிரச்சினையால் அவதிப்பட்டோர் பலர். சில பயிற்சிகள் செய்வது மூலமாகவே அதிலிருந்து முழுமையாக வெளி வந்திருக்கிறார்கள்.

உயிர்த்தன்மையைப் பொறுத்தவரை, அழிந்து போன செல்களை சுலபமாக மறுஉருவாக்கம் செய்து புத்துயிரூட்டக்கூடிய உயிரோட்டமான இடம், முதுகுத் தண்டு, இதை உங்கள் மூளையிலும் மிகச் சுலபமாக செய்யலாம். டிமெனஷியா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், சரியான செயல்களைச் செய்தால், மூளையின் செல்களைப் புதுப்பிக்க முடியும்.

# முதுகுத்தண்டின் சத்திர சிகிச்சை குண்டலினியை பாதிக்குமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மூளையை, மனதை நீங்கள் எப்படி பயன் படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்து, எத்தனை நரம்பணுக்கள் உயிர்ப்பாக இருக்கின்றன என்பது மாறு படுகிறது. இந்த மாறுபாடு பெரிய அளவில் இருக்கிறது. நீங்கள் போதையில், மனச்சோர்வில் இருந்தால், இந்த எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும். சரியான செயல்களைச் செய்வது மூல மாக இந்த எண்ணிக்கையை உயர்த்தலாம். யாராக இருந்தாலும் சரி, கட்டாயமாக ஒவ்வொரு மனித ருக்கும் இது வரப் பிரசாதமாக இருக்கும்.

ஹென்றி மார்க்மேன் என்பவர், பளூ பிரெயின் பிராஜெக்ட் எனும் திட்டத்தில், மூளை மீது அபாரமாக ஆராய்ச்சி செய் துள்ளார். முதல்முறையாக, மூளையின் உறுப்புகள், செயல்பாடுகள் முழுவதை யும் கண்டறிந்து வரை படம் செய்துள்ளார்கள். ஒரு மெய்நிகர் எலக்டி ரானிக் மூளையை உருவாக்கி, மனித மூளையைப் போலவே செயல்படும் ஒரு பிர தியை கீபோர்டுடன் வைத்திருக்கிறார்கள். மூளை இருந்தாலும், அதை இயக்கும் கீ போர்டு தங்க ளிடம் இல்லாததுதானே பலரது பிரச்சனை.

### காலை தீப வணக்க மந்திரம்

காலையில் பூஜை அறையில் விளக்கு ஏற்றும் பொழுது கீழ்க்கண்ட மந்திரத்தை கூறி விளக்கு ஏற்றவும்.
(பலன் எல்லா காரியங்களும் வெற்றியடையும்.

"ஜோயம் பாஸ்கர வித்யஸ்த
கிரணோத்கர பாஸ்வா
தீப ஜ்யோதிர் நமஸ்துப்யம்
சுப்ரபாதம் குருஷ்வமே.


மூளையை முழுமையாய் இயக்கும் கீபோர்டு இருந்தால், நம் தேவை எதுவாக இருந் தாலும் அதை டைப் செய்யவும் முடிந்தால், நீங்கள் ஆயிரம் மடங்கு அதிக திறமைசாலியாக இருப்பீர்கள் அல்லவா? ஏனென்றால், மனித மூளை பலதரப்பட்ட செயல்களைச் செய்யும் திறமை வாய்ந்தது. மூளை என் பது அத்தனை நுணுக்கங்களைக் கொண்ட ஓர் இயந்திரம். பலரும், இதனைப் பயன்படுத்து வதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெறுவது கிடையாது. மூளையைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள அதீத கவனமும், அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது.

பலருக்கு, தங்கள் கம்ப்யூட்டரையே முழுமை யாகக் கையாளத் தெரிவதில்லை. அதன் செயல் பாட்டுத் திறனில் ஒரு சிறு பகுதியை மட்டுமே பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அந்த இயந்திரத்தைப் பயன் படுத்த பல்வேறு வழிகள் இருந்தாலும், எல்லோருக்கும் அதனை முழுமையாக பயன்படுத்தத் தெரிகிறதா என்ன? அது போலவே, மூளையையும் நாம் முழுமையாய் பயன் படுத்துவதில்லை.

மூளையை முழுமை யாய் பயன்படுத்தினால் உங்களால் பலவிதமான செயல்களைச் செய்ய முடியும். ஆனால் அதனை பயன்படுத்தும் அறிவு விரல் நுனிகளில் இருக்க வேண்டு மல்லவா? பிரச்சினை எங்கிருக்கிறது புரிகிறதா?

*சத்குரு வாசுதேவ்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோதிடத்தின் பிறப்பிடம்

திருக்கயிலையில் பார்வதி சிவனிடம் விளையாடுகிற போதெல்லாம் ஒவ்வொரு அற்புதம், அதிசயம் பிறந்துள்ளது. அப்படி ஒரு சமயத்தில் சிவன் ஜோதியாக இருக்கிறபோது பார்வதி தேவியார் ஜோதிக்கு இடதுபுறம் அமர்ந்து பல கேள்விக்கணைகளைத் தொடுக்கிற வாய்ப்பு கிடைத்த போது அம்பாள் சிவனிடம், "படியளக்கும் பரமசிவம் என்று பெயர் எடுத்த தாங்கள் உலகில் கூன், குருடு, செவிடு, நொண்டி, நோக்காடு, ஏழை, பணக்காரன் என்று படைத்தது நியாயந்தானா? தர்மந்தானா?" என பார்வதிதேவியார் வினவுகிறார்கள்.

அந்த கேள்விகளுக்கு பதில் அளிக்கிற தோனியில் பரமசிவக் கடவுள், "மனிதன் சில கர்மங்களையும் பாவங்களையும் செய்கிற நேரத்தில் சில நல்ல செயல்களையும் செய்கிறான். அவனுக்கு செல்வம், புகழ், நான் கொடுத்தால் அது அவனுடைய திறமையில் வந்ததாகச் சொல்லி நம்மை மறந்து விடுகிறான். அதே சமயம் துன்பம் மனிதனை வாட்டுகிற போது நம்மை வசைபாடவும் செய்ய ஏதுவாகிறான்.

இவற்றையெல்லாம் மாற்றி அமைத்து நம்மீது பழி வராமல் இருக்க ஒரு கலையை உருவாக்கினேன். இந்த நாழிகையில் இந்த திதியில் நட்சத்திரம், ராசி, இலக்கினம், பிறை, யுகம், நன்மை, தீமைக்கு தகுந்தாற்போல் இலாப நஷ்ட கணக்கை விதி, மதி, கதியாக புரிந்து நடந்து இருவினையைக் கடக்க அவர்கள் வழிபுத்தியைப் பயன்படுத்தி வரலாம் என விளையாட விட்டு விட்டேன்.

ஆன்மீகம், நாட்டியம், ஓவியம், இசை போல 64 கலையில் இது ஜோதிட கலையாக திகழட்டும்" என்று பதிலுரை தெரிவித்தார்கள்.

64 கலைகளில் தலை சிறந்த உயிரோட்ட சக்தியை முதன்மையாகக் கொண்ட கலையே ஜோதிட கலையாகும்.

எக்காலத்திற்கும் நிலைமைக்கும் ஏற்ப இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமாக அமையப் பெற்றதும் இதுவாகும்.

மேலும் நான் ஜோதியாக இருக்கும் போது நீ இடதுபுறம் இருந்து கேட்டதால் இனி இது ஜோதிடம் என திகழட்டும். ஜோதி இடம் மலர்ந்ததால் ஜோதிடம் வழி தரும். வாழ்ந்திட நல்ல வழி தரட்டும். ஜோதிடர்கள் ஜோதிடம் கேட்க வருபவர்களை இடதுபுறம் வைத்து சொல்ல வார்த்தை பலிதம் தரும்.

## ஜாதகம் எவ்வாறு பார்ப்பது?

பொதுப்படையாக, ஜாதகத்தில் எந்த இலக்கனத்தில் பிறந்தால் நல்லது, எந்த லக்கினத்தில் பிறந்தால் கெடுதல் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. எல்லா லக்கனங்களும் நல்லவையே; ஜாதகத்தில் நிற்கிற கிரகம் மட்டுமே ஜாதகரை யோகமுள்ளவராகவோ, யோகமில்லாதவராகவோ மாற்றுகிறது.

எந்த இலக்கினத்தில் பிறந்திருந்தாலும் இலக்கினாதிபதி வலுவடைந்து இருக்க வேண்டும். இலக்கினாதிபதி பாபர், சுபர் என்பது பற்றிக் கவலையில்லை.

ஒரு கிரகம் வலுவடைவது எனில் அதற்கு வரைமுறைதான் என்ன என்பதையும் விளக்கியாக வேண் டும். அதாவது ஆட்சி, உச்சம், மூலத் திரிகோணம், கேந்திர கோணம் போன் றவை பெறுவதேயாகும். அவ்வாறு இருக்கிற போது சுபக் கிரகத்தின் பார் வையை அக்கிரகம் பெறுமாயின் மிக வும் நல்லது.

லக்கினாதிபதி சுபக்கிரகமாக இருக்கலாம். அதே நேரத்தில் மூன்று, ஆறு எட்டாமிடம், பன்னிரெண்டாம் இடத்தில் நின்று அவரைப் பாபக்கிரகம் பார்த்தாலும் அல்லது நீசம், பகை முதலிய ஸ்தானங்களில் ஒன்றைப் பெற்றாலும் நற்பலனைக் கொடுக்குமா என்றால் கொடுக் காது.

அதே நேரத்தில் இலக்கினாதிபதி கெட்டிருக்கும் போது மூன்று, ஆறு, எட்டு, பன்னிரெண்டுக்கு உடைய அதிபதிகள் வலுப்பெற்று விட்டால் ஜாதகர் பல தொல்லைகளைச் சந்திக்க வேண்டி வரும்.

ஒரு பெரிய சூட்சுமத்தைக் கூற முற்படின் கேந்திர ஸ்தானாதிபதிகள் (1,4,7,10க்கு உடையவர்கள்) அசுப ஸ்தானமென்னும் ஆறு, எட்டு, பன்னிரண்டில் நின்று ஆறு, எட்டு, பன்னிரண்டுக்குடையவர்கள்.

கேந்திரஸ்தானம் ஏறினாலும் பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். இதிலிருந்து புலப்படும் உண்மை என்னவெனில் ஆறு, எட்டு, பன்னிரெண்டாம் இடத்து அதிபதிகள் சுபக்கிரகமாக இருப்பினும் அவர்கள் கெட் டவர்களே என்பதாம்.

கேந்திர ஸ்தானத்து அதிபதிகள் பாவக்கிரமாக வீற்றிருப்பினும் அவர்கள் யோகப் பலன்களைக் கொடுப் பதில் வல்லவர்கள். அதே சமயம் கெடாமலிருக்க வேண்டும். கெட்டவர்களை சுபக்கிரகங்கள் பார்க்க முற்படுகிற போது கெடுபலன்கள் குறைய வாய்ப்புண்டு.

நல்ல கிரகங்களைக் கெட்ட கிரகங்கள் பார்த்தால் நல்ல கிரகங்கள் செய்யும் நற்பலன்களில் குறைவு ஏற்பட்டே தீரும். இதனையன்றி யோகம் அளிக்கிற ஒரு கிரகத்துடன் அதற்குப் பகைக் கிரகமோ அல்லது ஆறு, எட்டுக்கு அதிபதிகள் சேர்ந்தாலும், யோகம் அளிக்கும் கிரகத்தின் கைகளைக் கட்டிவிட வாய்ப்புண்டு என்று மறுப்பதற்கில்லை. ஆக எந்த விதத்திலும் யோகம் அளிக்க வாய்ப்பு இல்லை.

முக்கியமாக கூற வேண்டுமாயின் சூரியனுடன் கூடிய கிரகம் தீய்ந்து விடுகிறபோது (அஸ்தங்கம் என ஜோதிட சாஸ்திரத்தில் கூறப்படுகிறது) நன்மையளிக்க ஒரு போதும் வாய்ப்பு இல்லை. இதனை பாதசாரத்தை வைத்து கணக்கிட முடியும்.

### ருத்திராட்சம் மகிமை

ஒரு முகம் மனோதிடத்தை வளர்க்கும்
இருமுகம் ஆசைகளைக் கட்டுப்படுத்தும்
மூன்று முகம் வேலை வாய்ப்பினைத் தரும்.
நான்கு முகம் பைத்தியம் தெளிவிக்கும்.
ஐந்து முகம் இதய பலம் கொடுக்கும்.
ஆறு முகம் மயக்கம், இரத்த அழுத்தம் போக்கும்.
ஏழு முகம் ஆயுளை அதிகரிக்கும்.
எட்டு முகம் செல்வ அபிவிருத்தி தரும்.
ஒன்பது முகம் முக்திக்கு வழி காட்டும்.
பத்து முகம் காசத்தைத் தீர்க்கும்.
பதினொரு முகம் தொற்று நோயைக் குணப்படுத்தும். பனிரெண்டு முகம் ஆண்மையை அதிகரிக்கும்.
மருத்துவ குணமுள்ள ருத்திராட்சம் அணிந்து மகிழுங்கள்

சூரியன் நின்ற பாதசாரத்தில் இருந்து முன்னும் பின்னுமாக 10 டிகிரி வரை நிற்கிற கிரகத்தை அஸ்தங்கம் என்ற கணக்கில் கொண்டு வர முடியும். அதே சமயம் சூரியனும் சந்திரனும் ஒன்றாக வரும் நாளான அமாவாசையை யோக நாட்களாகவே் கருதி வருகிறோம்.

சூரியனோடு நின்று சேர்ந்துள்ள சந்திரனுக்கு அஸ்தங்கம் கிடையாது. அதே நேரத்தில் மாறுபட்டு யோக நாளாகி அதுவும் விரதம் இவைகளில் லயித்து இதற்கும் ஒரு படி மேலே சென்றால் உத்ராயாணம் காலத்தில் வருகிற தை மாத அமாவாசையையும், தட்சனாயணம் காலத்தில் வருகிற ஆடி அமாவாசையை யும் இன்றளவும் வெகுச் சிறப்பாக கொண்டாடி வருகிறோம்.

டொக்டர் கச்சனம் நடராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசன் செய்ததே சிறப்பு

**"கண்டசிங்கன் என்னும் அரசன், பிரம்மபுரம் என்ற நகரத்தை ஆட்சி செய்து வந்தான்.**

அவனிடம் காற்படிகள் என்னும் மெய்க்காப்பாளன் இருந்தான்.

அரசன் கண்டசிங்கன் குதிரைமீது ஏறிக்கொண்டு வேட்டைக்குச் சென்றான். குதிரை மிரண்டு மிக விரைவாக ஓடியது. குதிரையைப் பின் தொடர்ந்து காற்படிகனும் ஓடினான். ஓர் இடத்தில் போய், குதிரை நின்றது. அரசனுக்கு தாகம் மேலிட்டது. திரும்பிப் பார்த்த பொழுது காற்படிகன் இறைக்கு இறைக்க ஓடி வந்தான்.

அவனைப் பார்த்து, "எனக்குத் தாகமாக இருக்கிறது. எங்கிருந்தாவது குடிக்கத் தண்ணீர் கொண்டு



வா" என்றான். உடனே தன் மடியில் வைத்திருந்த இரண்டு நெல்லிக்கனிகளை எடுத்து அரசனிடம் கொடுத்துவிட்டு, தண்ணீர் கொண்டு வருவதற்குச் சென்றான் காற்படிகன்.

தூரத்தில் இருந்த சுனையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அரசனுக்குக் கொடுத்துத் தாகத்தைத் தீர்த்தான். காற்படிகனுடைய சேவையை அரசன் புகழ்ந்து உயர் பதவி அளித்தான்.

சில நாட்களுக்குப் பிறகு காற்படிகனை அழைத்து "சிங்கள நாட்டு அரசகுமாரியை உன்னால், இங்கே அழைத்து வர இயலுமா?" என்று கேட்டான் அரசன்.

"நான் போய் அழைத்து வருகிறேன்" என்று கூறி கப்பலில் சிங்கள நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றான் காற்படிகன்.

காற்படிகன் ஏறிச்சென்ற கப்பல் நடுக்கடலில் உடைந்து மூழ்கி விட்டது. அவனை ஒரு சுறாமீன் விழுங்கி விட்டது. மீன் வயிற்றுக்குள் சென்றவன் அதைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தான். அதன்பின் நீந்திக் கொண்டிருக்கும் போது, மிதந்து கொண்டிருந்த கொடி ஒன்றைப் பற்றிக் கொண்டே நீந்திச் சென்றான். அந்தக் கொடியானது அவனைக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்தது.

கரையேறியதும் காற்படிகன் அங்கே ஒரு காளி கோயிலைக் கண்டு அங்கே சென்றான். அப்பொழுது தோழியர் பலர் சூழ, அரசகுமாரி கோயிலிலிருந்து வெளியே வந்தாள்.

அவளை பார்த்ததும் காற்படிகனுக்கு அவளிடம் காதல் உண்டாயிற்று. அரசகுமாரியின் தோழி ஒருத்தியைக் கூப்பிட்டு, தன் கருத்தை தெரிவித்தான். அவள் சென்று அவன் கூறியதை அரசகுமாரியிடம் சொன்னாள்.

அரசகுமாரி, காற்படிகனைப் பார்த்து, "உண்மையாகவே என்னை நீ காதலித்தால், இதோ இந்தக் கிணற்றில் இறங்கி முழுகி வா" என்று கூறினாள். அரசகுமாரி சொன்ன உடனே, காற்படிகள் அருகிலுள்ள கிணற்றில் முழுகி எழுந்தபோது, தன்

## காயத்ரியை அலட்சியம் செய்யக்கூடாது

காயத்ரியை அலட்சியம் செய்து விட்டு வேறு எந்த மந்திரசித்தியும் பெற முடியாது. ஸ்ரீ ராம கிருஷ்ணன் மடத்தில் மந்திரோபதேசம் செய்த குரு ஸ்ரீமத்சுவாமி விரேஸ்வரானந்தஜி மகராஜ் அவர்கள், காயத்ரி மந்திரத்தைக் குறைந்தபட்சம் பன்னிரண்டு அல்லது இருபத்தெட்டுதடவைஜபம் செய்த பிறகு இஷ்ட தெய்வ மந்திரத்தை ஜபம் செய்யுங்கள் என்று கூறினார்.

காயத்ரி மந்திரத்திற்கு உரிய முக்கியத்துவம் அளித்து இஷ்ட தெய்வ மந்திரத்தையும் ஜபம் செய்தவர்கள்தான் ஆன்மிகவாழ்க்கையில்மிகவும் நன்றாகமுன்னேறியிருக்கிறார்கள்என்பதை, நான் என் அனுபவத்தில் பார்த்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊரில் இருந்தான்.

"கப்பல் மூழ்கி இறந்து போன காற்படிகன், பிழைத்து வந்து விட்டான்" என்று ஊர் மக்கள் பேசிக் கொண்டனர். அரசனுக்குச் செய்தி எட்டியதும் காற்படிகனை வரவழைத்து விசாரித்தான். தான் புறப்பட்டது முதல் கிணற்றில் முழுகி எழுந்த வரையில் நிகழ்ந்தது அனைத்தையும் காற்படிகன் கூறினான்.

உடனே அரசன், காற்படிகனை உடன் அழைத்துக் கொண்டு அவன் கண்ட அரசகுமாரியைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டான். நடுக்கடலில் தென்பட்ட கொடியைப் பின் தொடர்ந்து கப்பலைச் செலுத்திக் காளிகோயிலை நோக்கிச் சென்றார்கள்.

வழக்கம் போல் அரசகுமாரி அன்று கோயிலுக்கு வந்திருந்தாள். அங்கு வந்திருந்த அரசனைப் பார்த்துக் காதல் கொண்டாள். தன் தோழி மூலம் அரசனுக்குச் செய்தி சொல்லி அனுப்பினாள். அவனும் அரசகுமாரியைக் காண விரும்புவதாக அதே தோழியிடம் சொல்லி அனுப்பினான்.



அரசன் கண்டசிங்கனை நேரில் கண்டு, தன்னுடைய கருத்தைத் தெரிவித்தாள் அரசகுமாரி. அதைக் கேட்ட அரசன் அவளிடம் "என்னை நீ காதலிப்பது உண்மையானால், நான் கூறுவதை மறுக்காமல் ஏற்று கொள்கிறாயா?" என்று கேட்டான். அவளும் அதற்குச் சம்மதித்தாள். உடனே அரசன் அரசகுமாரியிடம் காற்படிகனைச் சுட்டிக் காட்டி "இவன் என்னுடைய உயிர் நண்பன். இவனை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்றான். அரசகுமாரியும் அரசனுக்கு வாக்களித்தபடி காற்படிகனை மணந்து கொண்டாள்.

காற்படிகா, நான் தாகமாயிருந்தபோது, அன்று எனக்கு இரண்டு நெல்லிக் கனிகளை கொடுத்தாய்! இன்று இந்தப் பெண் கனியை உனக்கு அளித்திருக்கிறேன் என்று கூறிவிட்டு முன்பு காற்படிகன் முழுகிய கிணற்றில் அரசன் முழுகித் தன்னுடைய நகரம் போய்ச் சேர்ந்தான்.

அரசன், காற்படிகனுக்குச் செய்தது சிறந்ததா? அல்லது காற்படிகன் அரசனுக்குச் செய்தது சிறந்ததா? என்று கேட்டது வேதாளம்.

"காற்படிகன் அரசனுக்குக் கட்டுப்பட்டவன். ஆகையினால், அவனுடைய செய்கையைக் காட்டிலும் அரசன் செய்ததே சிறந்த காரியம்" என்று விடுவித்தான் விக்கிரமாதித்தன்.

உடனே வேதாளம் கட்டு அவிழ்த்துக் கொண்டு ஓடிப்போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

விக்கிரமாதித்தன் அதைத் தொடர்ந்து போய்க் கட்டித் தூக்கிக் கொண்டு வந்தான்.

வேதாளம் மறுபடியும் கதை சொல்லத் தொடங்கியது.

(தொடரும்)

## நிறை வாழ்விற்கு தியானம் அவசியம்

நமது வாழ்க்கை தூய வாழ்க்கையாகவும், நிறைவாழ்க்கையாகவும், நிம்மதியானவாழ்க்கையாகவும் அமைவதற்கு, நாள்தோறும் தியானத்தில் கவனம் செலுத்தி உழைக்க வேண்டும்.

ஒரு சில நிமிடங்களைக் கூட இறைவனுக்காக ஒதுக்க முடியாமல், உலக விவகாரங்களிலேயே மூழ்கியிருப்பவர்களாகப் பலர் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

சமுதாயத்தில் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகமாகி வருவதை அனுபவபூர்வமாக நாம் அறிந்திருக்கிறோம்.

எனவே முன்பு எப்போதையும் விட இன்று மக்களுக்கு ஆழமான இறைபக்தி தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிதுனம்

## ஜய வருடம் கார்த்திகை மாதம்
## 17.11.2014 முதல் 15.12.2014 வரை

***நீதிக்கு தலை வணங்கி தன்னை நம்பி வந்த வரை ஆதரிக்கும் மிதுன ராசி வாசகர்களே!***

***இம்மாதம் உங்களின் ராசிக்கு குருதனஸ்தானத்தில் உச்சம் பெற்று தொழில் ஸ்தானங்களை பார்ப்பதால் நிரந்தரமான தொழில் அமையும். வாய்ப்புகள் வந்து சேரும்.***

**பணியாளர்களுக்கு:**

பணியாளர்களின் நேர்மையையும் தன்னம்பிக் கையையும் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். தொழி லில் கவனம் செலுத்தி உற்பத்தியை பெருக்கி வரு வாயை அதிகரித்து கொள்ளுவீர்கள். பணியின் கடுமை குறையும். சர்ச்சைகளை குறைத்து நன்மை அடைவீர்கள். புதிய நண்பர்களின் கூட்டு கிடைக்கும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது நலனில் அக்கறையும், கவனமும் செலு த்தி உங்களால் ஆன உதவிகளையும், அதில் பங்கு அளிப்பும் உருவாக்குவீர்கள். பொது பிரச்சினைகளில் உங்களின் ஆலோசனைகள் நல்ல பலனை தரும். தேவைகளுக்கு பொருளாதார வளர்ச்சி கிட்டும்.

**வியாபாரிகளுக்கு:**

இதுவரை பல்வேறு தொழில்களை செய்து வந் தாலும் வாழ்வில் நிரந்தரமான தொழில் உருவாக இந்த காலம் என்பதால் உங்களின் முயற்சிகள் நல்ல தொழிலாக அமையும். வெளிநாட்டு வர்த் தகம் ஏற்றுமதி இறக்குமதியில் புதிய அனுபவம் கிட்டும். வருமானம் பெருகும்.

**கலைஞர்களுக்கு:**

கலைதுறையினர் போட்டிகளில் கலந்து கொள் ளும் வாய்ப்பு அமையும். தினமும் ஏதாவது ஒரு வரின் தொடர்பு உங்களை ஊக்கப்படுத்தும். அமை தியையும், அர்ப்பணிப்பையும் கொண்டு செயல் பட்டு பொருளாதாரத்தில் ஏற்றம் காண்பீர்கள்.

**பெண்களுக்கு:**

பெண்களின் முயற்சிகள் வளர்ச்சியை தரும். குறுகிய காலத்தில் வளர்ச்சியை எட்டுவீர்கள். குடும் பத்தில் சில பிரச்சினைகள் வரும். அதை சரியாக கொண்டு சென்று சமாளிப்பீர்கள். பணவரவு நன் றாக இருக்கும்.

**மாணவர்களுக்கு:**

கல்வியின் தடைப்பட்ட நிலை மாறி விரும் பிய கல்வி பயில வாய்ப்புகள் அமையும். வெளி நாட்டுக் கல்வி வாய்ப்பு நல்ல பலனை தரும். கப்பல் பொருளாதார கல்வி உங்களுக்கு பயனுள் ளதாக அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

26.11.2014 புதன் மாலை 05.19 முதல் 28.11.2014 வெள்ளி இரவு 07.54 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்:**

விவசாய பொருட்களுக்கு தொழிலில் விருத்தி அடையும். பால் வளமிக்க மாடுகள் வளர்ப் பவர்க ளுக்கு நல்ல லாபம் கிட்டும். உறவினர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

**திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

வெளிநாட்டு தொடர்புகள் நல்ல பலனை தரும். முகத்தில் ஏதாவது வடு வர வாய்ப்புள்ளது. கன வுகள் பலிக்கும். தெய்வ வழிபாடுகளும் கூட்டு பிரார்த்தனைகளும் நல்ல பலனை தரும்.

**புனர்பூசம் 1, 2, 3, ஆம் பாதங்கள்:**

செய்யும் தொழிலில் கூட்டு நல்ல பலன் தரும். அவசர உதவிக்கு நண்பர் உதவுவார்கள். கணி தத்தில் சிறந்து விளங்குவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**
பச்சை, இளம்மஞ்சள், வெண்மை.

**அதிர்ஷ்ட திசைகள்:**
மேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
புதன், வியாழன், வெள்ளி.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

அமாவாசை அன்று உங்களின் பித்ருக்களுக்கு நீர் நிலைகளில் திதியும், தர்ப்பணமும் தந்துவர தடைப் பட்ட காரியம் கைகூடும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும்.

## சிவன் வழிபாடு

* குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
* பனித்தசடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
* இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
* மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## மிதுனம்

சாதனைகள் செய்து சகல காரியங்களிலும் வெற்றியை காணும் மிதுன ராசி வாசகர்களே!

உங்களின் ராசிக்கு ஆறாமிடத்தில் சனி அமர்ந்து உங்களின் மூன்றாமிடத்தையும், அட்டம ஸ்தானத்தையும் பார்வை இடுவது நல்ல பலன்களை தரும். சனி பகவான் யோக பார்வையில் நீங்கள் இருக்கின்றீர்கள். கற்பனையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுவீர்கள். திசைகளில் எங்கு சென்றாலும் உங்களின் எண்ணமும் செயலும் உங்களை வளப்படுத்தும். குதிரை பந்தயம் போல் ஓட்டமாய் ஓடிக் கொண்டிருந்த செயல்பாடுகள் முற்றிலும் மாறி பதற்றமில்லாத வாழ்க் கையையும், தெளிவான மனநிலையையும் கொண்டு விளக்கி வருவார்கள். உங்களின் முயற்சி ஸ்தானத்தை சனி பத்தாம் பார்வையாக பார்ப்பது எந்த தொழில் செய்தாலும் உங்களின் முயற்சிக்கு நல்ல பலனை செய்து வருவார். குறிப்பிட்ட காரியங்களுக்காக நீங்கள் அமைய வேண்டிய நிலையும் மாறும். அரசாங்க காரியம் உங்களின் முயற்சிகளால் சீக்கிரம் நடக்கும். கோபத்தால் உண்டான பாதிப்புகளை உங்களின் சாதாரண போக்கால் மாற்றி நன்மைகளை பெறுவீர்கள். குடும்ப சம்மந்தமான சச்சரவுகள் நீங்கி நன்மை பெறுவீர்கள். எதிரிகள் பலகீனம் அடைவார்கள். எந்த ஊரில் இல்லாவிட்டாலும் சொந்த ஊரில் உங்களுக்கு செல்வாக்கு இருக்கும். உங்களின் மறைவு ஸ்தானங்களை சனி பார்ப்பதால் எந்தவிதமான சிக்கல்களிலும் நீங்கள் விரைவில் நன்மை பெறுவீர்கள். குரு தனஸ்தானத்தில் அமர்ந்து சனி பகவானை பார்ப்பதால் கடன் தொல்லை நிரந்தரமாக தீரும். வரண்ட பூமிகள் விளையும். பால், பசுமாடு விருத்தி, சுபகாரியம் நல்ல பலனை தரும். புதன் வீடு உங்களின் ராசி என்பதால் சனி நண்பனாக உங்களுக்கு காலத்தில் யாராவது வந்து உதவி செய்து விட்டு போவது நம்ப முடியாமல் இருக்கும். தனஸ்தானத்தில் குரு இருப்பது உங்களின் வளர்ச்சிக்கு வழியாக அமையும். முயற்சி ஸ்தானத்தை பார்ப்பதால் எடுத்த காரியம் முடிக்கும் வரை தொடர்ந்து செயல்படுவீர்கள். அட்டம ஸ்தானத்தை சனி பார்ப்பதும் உங்க ளின் ஆயுள் பலம் கூடும். கோர்ட்டு கேஸ்கள் சாதகமாக அமையும். தொழில் செய்பவர் களுக்கு நல்ல பணியாளர்கள் வந்து சேருவார்கள்.



அசைவ உணவுகள் மீது பிரியம் உண்டாகும். உங்களின் யோகாதிபதிகளான சுக்கிரனும், சனியும் இணையும் போதும் பார்க்கும் போதும் பல நன்மைகளை அடைவீர்கள். உயர் கல்வி பயில நினைப்பவர்களுக்கு அந்த காலத்தில் எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். பெண் களின் திருமண தடை நீங்கி வரன் அமையும் தாலி பாக்கியம் பெறுவார்கள். விரையஸ்தானத்தை பார்ப்பதால் திருமண நிகழ்ச்சிகள் அசையா சொத்துகள், விட்டு மனை கட்டுதல் போன்ற சுப விரைய செலவுகள் வந்து சேரும். பண வரவு வந்து சுப செலவுகளால் தேவைகளை நிறைவு செய்வீர்கள். பாக்கியஸ்தானதிபதி சனி என்பதால் வாரிசுகள் உருவாகுவதும் உண்டாகலாம். தனிதிறமைகளால் நன்மை உண்டாகும். வசதிகளுக்குத் தகுந்த வாகனம் வாங்குவீர்கள். உயர்பதவிகளில் இருப்பவர்களுக்கு நல்ல வசதி வாய்ப்புகளுடன் வீடுகள் அமையும். வெளியூர், வெளிநாடுகளின் தொடர்புகள் சிறப்பான பலன்களை தரும். சனிபெயர்ச்சி வரை சனி உங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்து தருவார்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு எள் கலந்த சாதம் வைத்து வணங்கி வரவும். நல்லெ ண்ணெய் விளக்கு மேற்கு நோக்கி திரி ஏற்றி வணங்கி வர சனி யோகாதிபதியாக நல்ல பலன்களை தருவார். ஆஞ்சநேயரை வணங்கி துளசி மாலை போட்டு வர எதிரிகள் உங்களை வணங்கி செல்வார்கள்.

### பிரார்த்தனை அளிக்கும் பலன்கள்

உயர்ந்த நன்மைகள் என்று எத்தனை உண்டோ அத்தனையையும் பிரார்த்தனைகளின் மூலம் நாம் பெற முடியும்.

மனிதனை மனிதன் என்ற நிலையிலிருந்து, தெய்வநிலைக்கு உயர்த்தும் ஏணியாகப் பிரார்த்தனை அமைந்திருக்கிறது.

தீய மனம் படைத்தவர்கள், தாழ்ந்த உள்ளம் கொண்டவர்கள் உலக ஆசைகளை அனுபவிப்பதற்காக மட்டும் இறைவனிடம் பிரார்த்தனை செய்வார்கள். தூய உள்ளம் கொண்டவர்கள், நிரந்தரமான ஆன்மிக நன்மைகளைத் தந்தருளும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்து பெற்று விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனோவசியப் பயிற்சிகள்

**சா**தனை செய்பவர்கள் அனுசரிக்க வேண்டிய விதிமுறைகள். மற்றவர்களுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறவர்கள் முதலில் தங்களுக்கு ஆரோக்கியத்தைத் தேடுவது மிக அவசியமாகும். தான் ஆரோக்கியமாக இருந்தால்தானே மற்றவர்களுக்கு அதைப் பற்றிச் சொல்லமுடியும்!

ஆதலால் சாதனை செய்ய விரும்புபவர்கள் ஆகாரநியமம், சரியான தூக்கம், ஒழுக்கம், மன உறுதி, சுத்தமான மனம், எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருக்க வேண்டும். உடல், மனம் இவற்றிற்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கக் கூடிய ஆகாரமான பானங்கள் மட்டுமே சாப்பிட வேண்டும்.

மது வகைகள், பீடி, சிகரெட், புகையிலை உபயோகிப்பதை அடியோடு விட்டு விட வேண்டும். காய்கறி வகை சைவ உணவுகளையே சாப்பிட வேண்டும்.

கோப தாபங்களை விட்டுவிட்டு எப்போதும் அமைதியுடனும் சிரித்த முகத்துடனும் இருக்கப் பழக வேண்டும்.

சாப்பிடும் போது மனதை அங்கும் இங்கும் அலைய விடாமல் சாப்பிடுகிறோம் என்ற உணர்வுடன் சாப்பிட வேண்டும். இதனால் சாப்பிட்ட உணவு எளி தில் ஜீரணமாகிவிடும்.

எந்த பானம் பருகினாலும் அதை மடமடவென்று ஒரே மிடராகக் குடித்துவிடாமல் கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்துச் சாப்பிட வேண்டும். எதையும் சுவைத்துச் சாப்பிடுவதால் அதில் உமிழ்நீர் கலந்து சென்று சாப்பிட்டது நன்கு ஜீரணமாக உதவி செய்கிறது.

பாலை மடமடவென்று குடித்தால் அது உடல் உள்ளே சென்று புளிப்படைந்து திரிந்து விடுகிறது. அதனால் அது விரைவில் ஜீரணம் ஆகாது. தண்ணீர் குடிக்கும் போதும் மெதுவாக சுவைத்துக் குடிக்க வேண்டும்.

அதேபோல ஆகாரம் சாப்பிடும் போதும் பதார்த்தங்களை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். அவசரம் அவசரமாக அள்ளி உணவை வயிற்றில் தள்ளி விடுவதால் அஜீரணம், மலச் சிக்கல் போன்றவைகள் ஏற்படுகின்றன. நன்றாக மென்று சாப்பிடும் போது உமிழ்நீர் கலந்து ஜீரண சக்தியை தூண்டி உதவி செய் கிறது.

உணவை அளவுடன் சாப்பிட வேண்டும். ருசியாக இருக்கிறது என்று எதையும் அளவுக்கு அதிகம் சாப்பிடக்கூடாது. இத்தகைய விதிமுறைகளை கண்டிப்பாகக் கடைப்பிடித்து வந்தால் நோய்கள் வருவது மிகக் குறைவாகவே இருக்கும்.

உணவில் அதிகப் பட்சம் காய்கறிகளை சேர்த்துக் கொள்ளுங்கள். பச்சைக் காய்கறிகளை சாலட் (Salad) ஆக செய்து சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

தக்காளி, வெங்காயம், கேரட், பீட்ரூட், முள்ளங்கி, வெள்ளிரிக்காய், கொஸ், இளம் வெண்டைக்காய் போன்றவைகளை சாலட்டாக செய்து அதனுடன் இஞ்சி பச்சை கொத்தமல்லி சேர்த்துச் சாப்பிடலாம். கொஞ்சம் எலுமிச்சை சாறு பிழிந்து குறைவாக அரை உப்பு, மிளகு போட்டு சாப்பிடுவது மிகச் சிறந்தது.

தேவையில்லாத விஷயங்களைப் பேசுவதையும் பலருடன் விவாதிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

கூடியவரை அமைதியாக உட்கார்ந்து செயல்படுங்கள். எதையும் நிதானமாகவும் பொறுமையுடனும் செய்து வந்தால் தவறு ஏற்படாது.

தினசரி காலையில் எழுந்ததும் எந்த சிந்தனையும் இல்லாமல் பத்து நிமிடம் முதல் பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைந்து வரையிலும் அமைதியுடன் உட்கார்ந்து வரவும். இதனால் உடலில் காந்தசக்தி விரயமா காமல் சேமிப்பில் சேருகிறது.

தினசரி குளிர்ந்த தண்ணீரில் குளிப்பது மிகவும் சிறந்ததாகும். எளிமையான, வெண்மையான ஆடை களை அணியுங்கள்.

மனதில் யாரைப் பற்றியும் குறைவாகவோ, உயர்வாகவோ மதிப்பிட்டு விடாதீர்கள். மனதால் கூட யாருக்கும் தீங்கு எண்ணக் கூடாது. மனதில் வேண்டாத கற்பனைகள் செய்வது, பிறரை எண்ணி ஏங்குவது போன்றவைகளால் உங்கள் சக்தி அதிகம் விரயமாகிறது.

ஒருவரிடம் பேசும் போது படபடவென்று நீங்கள் முதலில் பேசி விடாதீர்கள். முதலில் அவர்கள் பேசு வதை கவனித்துக் கேளுங்கள். அதன் பிறகே நீங்கள் பேச வேண்டும்.

யாருடன் பேசினாலும் பேசும் போது அவரது முகத்தை, கண்களைப் பார்த்து பேசுங்கள். தலை குனிந்து கொண்டோ, வேறு எங்கேயோ பார்த்த படி பேசாதீர்கள். இதனால் உங்களை அவர்கள் தவ றாகப் புரிந்து கொள்வார்கள்.

நாம் பேசுவதைவிட மனதில் எண்ணும் போது சக்திகள் அதிகமாகச் செலவாகின்றன என் பதை நினை வில் வைத்துக் கொள் ளுங்கள்.

**மனோசக்தி தரும் காந்தப் பார்வை (Magnetic Gaze)**

காந்தசக்தி என்னும் மகா சக்தி யானது நமது சரீரம் முழுவதும் நரம்பு மண்ட லங்களில் பரவி இருக்கி றது. இச்சக்திகள் இரண்டு வகையாக இருக் கின்றன.

ஒன்று பாயும் சக்தி Positive என்றும் மற் றொன்று தாங்கும் சக்தி Negative என்றும் இரண்டு வகையாகும்.

சில மனிதர்களின் சரீரத் தில் பாயும் சக்தி அதி கமாகவும் வேறு சிலரிடத்தில் தாங்கும் சக்தி அதிகமாகவும் வியாபித்து இருக்கும்.

உதாரணமாக சில மனிதர்களை நாம் பார்த்தவுடன் அவர் பார்வைக்கு எதிர் விழி விழிக்கச் சக்தியற்றவர்களாய் நம் கண்களை நாம் கீழே தாழ்த்திக் கொண்டு அடக்கத்துடன் ஒரு மரி யாதையுடன் நிற்கிறோம்.

நமது மனமும் அவர்கள் பேரில் ஈர்க்கப்பட்டு அவர்களிடம் சென்று பற்றிக் கொள்கிறது. ஆண், பெண்களுக்குள் இருக்கும் அன்னியோன்யத் துக்குக் காரணம் இதுவேயாகும்.

நாம் செய்வது என்ன என்று அறியாமலேயே மற்றவர்கள் நமக்கு வசியமாகும் விசேஷம் நமது பார்வையிலேயே திருஷ்டியிலேயே அமைந்து இருக்கிறது. இதைத் தான் "காந்தப் பார்வை" அல் லது ஹிப்நாடிசப் பார்வை என்பார்கள். நமது சரீ ரத்தில் இருந்து சக்திகள் கால், கை விரல்கள் மூலமா கவும் கண்கள் வழியாகவும் வெளியேறுகின்றன.

**பகவாத் பக்திக்காக எதையும் இழக்கலாம்!**

"பகவத்பக்திக்காகமட்டும்அவசியமானால் ஒருவன் பெற்றோ ரையும் நிராகரித்து விடலாம். இதற்கு உதாரணமாகப் பிரகலாதனையும்துருவனையும்சொல்லலாம். தன் தந்தை எவ்வளவு தடுத்தும் கேட்காமல், பிரகலாதன் ஹரிநாமத்தை ஜபம் செய்து வந்தான். தாயின் சொல்லையும் மீறிக் காட்டுக்கு துருவன் தவம் செய்யச் சென்றான். இவர்கள் பிழை செய்தவர்கள் அல்லர்.

பெரியவர்கள், மகான்களை நாம் வணங்கும் போது குனிந்து அவர்கள் பாதத்தைத் தொட்டு வணங்கும் போது அவர்களின் சக்தி பாதங்களின் விரல்கள் வழியாக நமது சரீரத்தில் பர வுகிறது. அதே சமயம் அவர்கள் தங்கள் கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்து கண்களால் நம்மைப் பார்க்கும் போதும் அவர்களது காந்த சக்தி நமது உடலில் பாய்கிறது. இதனால்தான் யோகிகள் மகான்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுவதை ஒரு நல்ல நோக்கத்துடன் ஏற்படுத்தியுள்ளனர்.

பல பெரியவர்கள், மகான்கள் தங்கள் பாதத்தை மற்றவர்கள் தொட்டு வணங்க அனுமதிக்காமல் கைகளா லேயே ஆசீர்வாதம் செய்வார்கள். இதற்குக் காரணம் தங்களிடம் உள்ள காந்தசக்தி பாதங்கள் வழியாக பாய்கிறதை இவர்கள் உணர்ந் துள்ளதேயாகும்.

பொதுவாக மற்றவர்களின் கண்களை நேராகப் பார்த்துப் பேசப் பழகுங்கள். உங்கள் மனதில் உள்ள திடசித்தம் உங்களது கண்களின் மூலமாக வெளியேற வேண்டும்.

யாரிடம் நீங்கள் பேசினாலும் அவர்களது கண் களைப் பார்த்துப் பேசப் பழகுங்கள். ஒருவரது கண்களின் கருவிழி களைப் பார்த்துப் பேசுவது மிகவும் சிறந்ததாகும். அப் போதுதான் உங்கள் சக்தி களை நீங்கள் பிரயோ கிக்க முடியும்.

நம் மனதில் எதைத் தீர்மானித் திருக் கிறோமோ அதை நமது பார்வை யினாலேயே தெரி வித்து விடலாம்.

வெறுமனே பராக்குப் பார்க்கும் கண்களையும் காரிய காரணமில்லாமல் கண்டபடி விழித்துக் கொண்டு இருக்கும் கண் களையும் உடை யவர்களின் இவ்வுலகில் சாதனைகள் செய் வது மிகவும் அரிதாகும்.

இப்படிப்பட்டவர்களால் எதையும் செய்ய இயலாது. அதனால் அமர்ந்து ஆழ்ந்து மற்றவர்கள் நெஞ்சத்தை ஊடுருவிச் செல்லத் தக்கதும் மற்றவர்கள் பார்வைக்கு அஞ்சாமல் எதிர் நோக்கக்கூடியதுமான பார்வையை அடைய அடிக்கடி இந்தப் பயிற்சிகளைச் செய்து வர வேண்டும்.

முதலில் பழக வேண்டியது என்னவென்றால் கண்களை களைப்படையச் செய்யாமல் வெகு நேரம் ஒரு பொருளைப் பார்த்து வருவதேயாகும். நேராக ஒரே இலக்கை பார்த்து வருவதேயாகும். நேராக ஒரே இலக்கை பார்த்துப் பழகும் வழிகள் பல உள்ளன.

***ராஜயோகி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியலார் பிரபஞ்சத் தோற்றத்தைப் பற்றியும், உயிரினங்களின் தோற்றத் தைப் பற்றியும் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார்களே தவிர, அவை எப்படித் தோன்றின என்று யாரும் உறுதியாகக் கூறவில்லை. பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளும் பெருவெடிப்பு வியூகத்திலும் எல்ம் எப்படித் தோன்றின என்று யாரும் உறுதியாகக் கூறவில்லை. பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளும் பெருவெடிப்பு வியூகத்திலும் எல்ம் எப்படி வெடித்தது என்று கூறப்படுகிறதே தவிர அது எப்படித் தோன்றியது என்று கூறப்படவில்லை.

மேலும் எல்ப் பற்றி கூறுகையில், அசையாமலே இருந்திருந்தால் பெருவெடிப்பு ஏற்பட்டிருக்கவும் அண்டங்களும், உயிரினங்களும் தோன்றியிருக்கவும் இடமில்லை. எனவே பிரபஞ்சத் தோற்றம் முதல் இன்று வரையுள்ள அத்தனை மாற்றங்களுக்கும் காரணமான மூலச் சக்தி ஒன்று உள்ளது. எல்லா ஆற்றல்களுக்கும் தோற்றுவாயான அந்த சக்தி எல்லையற்றது.



# மூல ஆற்றலே பரப்பிரம்மம்

எல்லா ஆற்றல்களும் அதில் இருந்தே தோன்றி, அதன் கிளை ஆற்றல்களாகவே செயல்படுகின்றன. எனவே அந்த வரம்பிலா ஆற்றல் தோற்றமும், அறிவும் அற்றதாய் என்றுமே குறையாதிருந்து எல்லா ஆற்றல்களையும் முறையாக இயக்கி வருகிறது என்ற உண்மை உறுதிப்படுகிறது.

இதையே இயற்பியலார் ஆற்றல் மாறாக் கோட்பாடு (law of Conservation) என்று விளக்கியுள்ளனர். அதன்படி ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஒரு வகை ஆற்றல் மறையுமாயின் அது சிறிதும் சேத மடையாமல் பிறிதொரு வகையில் வெளித் தோன்றும்.

எவ்வளவு தான் ஆராய்ச்சி செய்தபோதும் அறிவிய லார் இதற்கு மேல் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. எனவே "பிரபஞ்ச ஆற்றல் அனைத்திற்கும் மூல ஆற்றல் ஒன்று தான். அந்த மூல ஆற்றலே பரப்பிரம்மம்" என்று ஞானிகளும், யோகிகளும் கூறுகின்றனர்.

அந்த ஆற்றலின் வெளிப்பாடுகளாகவே மலை, கடல், ஆறு, மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, மனிதர் முதலான யாவும் இருப்பதால் ஞானிகள் இவை அனைத்திலும் அந்த பிரம்மத்தைக் காண்கின்றனர்.

ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் அந்த பிரம்மமே உள்ளது. மனிதன் எந்த உருவத்தை எந்த முறையில் வழிபட்டாலும் தன் மனதில் உள்ள இந்த பிரம்மத்தையே வழிபடுகிறான் என்று நான்கு வேதங்களும், உபநிடதங்களும் கூறுகின்றன. விஞ்ஞானிகளும், மெய்ஞானிகளும் இதையே "முடிவான பேருண்மை" (Ultimate Reality) என்று கூறுகின்றனர்.


பிரக்ஞானம் பிரம்மம், அகம் பிரம்மாஸ்மி, தத்வ மசி, அயமாத்மா பிரம்மம், ரிக்வேதம், யஜுர் வேதம், சாமவேதம் அதர்வண வேதம்.

வான், நெருப்பு, காற்று, நீர், நிலம் ஆகிய ஐந்து பூதங்களாக உள்ள பிரம்மமே நம் ஐம்புலன் களாகவும், உள்ளமாகவும், உயிராகவும் உள்ளது என்று முண்டக உபநிடதம் கூறுகிறது.

உலகனைத்தையும் கடந்து அண்டங்களுக்கெல்லாம் அப்பால் ஒளிரும் ஒளிதான் மனிதன் உள்ளத்திலும் ஒளியாகி நிற்கிறது. இயற்கை மனித சக்திக்கு அப் பாற்பட்டதாக உள்ளது. பொருளைப் பற்றி நுட்ப மாக ஆராய்ந்தால் சக்தியின் அளவு மாறுபட்டுத் தோன்றுகின்றது. சக்தியை அளக்கத் தொடங்கி னால் பொருளின் இயல்புகள் மாறிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கின்றன. ஆகையால் இயற்கையில் எது எப்படி நடக்கப் போகிறது என்பது கணக்கீடுகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக உள்ளது.

ஹீசன்பர்க்கின் நிலையாமைக் கொள்கை பற்றி (Law of Uncertainity), "நம்மால் ஊடுருவிப் பார்த்து அறிய முடியாத ஒன்று உண்மையிலேயே நிலை பெற்று வாழ்கின்றது. அது, மிக உயர்ந்த ஞானமாகவும், பேரொளிக் கதிர்வீசும் அழகாகவும் விளங்குகின்றது. நம் சிற்றறிவால் அதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை" என்கிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் உயர்ந்து விளங்குவதன் ஒரே காரணம் அவனது பகுத்தறிவே. மனிதனுக்கு மட்டும்தான் மனம் உள்ளது. அதனால்தான் அவன் மனிதன் என்று அழைக்கப்பட்டான் என்பது பழங்கால வாதம்.

இந்திய விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திரபோஸ் செடிகளுக்கும் மனம் உண்டு. செடிகளும், இன்பம் துன்பம் முதலான உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன என்ற உண்மையை தாம் கண்டுபிடித்த மன உணர்வைக் காட்டும் கருவியைக் கொண்டு உலகறிய நிரூபித்தார்.

தாவரம், விலங்கு, பறவை இனங்களும் இயற்கையாகத் தமக்குள்ள ஆற்றலால் தாங்கள் நுகர்வதற்கென்று படைக்கப்பட்ட பொருள்களைத் துய்த்து இன்ப, துன்பங்களை அனுபவிக்கின்றன. ஆனால், அறிவால் உயர்ந்த மனிதன் தன் வளர்ச்சிப் படிகளில் இயற்கையின் அம்சங்களையே மாற்றி அமைத்திருக்கின்றான். ஒரு தலைமுறையில் சில புதிய கற்பனைகளை உருவாக்குகின்றான். ஒரு தலைமுறையில் அவனது கற்பனைக் கனவுகளையே உண்மைச் சம்பவங்களாக மாற்றி விடுகின்றன.

**கற்பனைகளும் உண்மையாகலாம்**

கற்பனைகளின் உயர்வை கம்ப இராமாயணத்தில் வரும் சிற்சில காட்சிகளைக் கொண்டு அறியலாம். இந்திரஜித்தின் நிகும்பலை யாகம் இலக்குவனால் சிதைக்கப்பட்டது. பிறகு இந்திரஜித்திற்கும் இலக்குவனுக்கும் இடையே நடந்த போரில் இந்திரஜித் தேரையும், குதிரைகளையும், சாரதிகளையும் இழந்தான். அவன் அணிந்திருந்த கவசமும் வீரப் பட்டமும் சின்னாபின்னாமாயின. நிராயுதபாணியான இந்திரஜித் இமைப்பொழுதில் மேகத்தில் மறைந்து இராவணனிடம் போய்ச் சேர்ந்தான்.

விபீடணன் முடிசூட்டு விழா நடந்த பிறகு இராமன், சீதை, இலக்குவன் முதலானோர் இலங்கையிலிருந்து புட்பக விமானத்தில் வான்வழியாகச் சென்று அயோத்தியை அடைகின்றனர். கம்ப இராமாயணக் கற்பனைக் காட்சிகள் இப்போது கண்ணிற்காணும் உண்மைகளாகி உலகையே வலம் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த உண்மையை உறுதிப்படுத்தும் மற்றொரு சுவையான செய்தி 1986ஆம் ஆண்டு செப்டம்பர் "தினமணி" நாளிதழில் வந்துள்ளது: மகாபாரதத்தில் அதிகமாகச் சொல்லப்பட்டுள்ள பிரம் மாஸ்திரம் என்ற புராதன ஆயுதம் வெறும் கற்பனைக் கருவி அல்ல என்பது புதிய ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவருகிறது. பழங்காலத் தில் அந்தக் கருவியை மனிதர் கள் பயன்படுத்தியிருக்கலாம். காலப்போக்கில் இதை யாரும் பயுன்படுத்தாமல் விட்டிருக்கலாம் என்று ரஷ்ய ஆய்வாளர் டாக்டர் ஏ.ஏ.கொர்போஸ்கை தனது புத்தகத்தில் குறிப் பிட்டுள்ளார். அவுர் கூற்று உண்மையாகவே இருந் தாலும் இருபதாம் நூற்றாண்டில் அணு ஆயுதம் கண்டுபிடிக்கப்படும் வரை பிரம்மாஸ்திரம் ஒரு கற்பனைக் கருவியாகவே கருதப்பட்டது. அது இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது போன்ற ஓர் அணு ஆயுதமே என்று டாக்டர் போஸ்கை கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

*தம்மண்ணன்*

**இந்திரன்**

இந்திரனை உபாசிப்பதால் மக்கள் ஐஸ்வர்யத்தையும் ஸுகத்தையும் பெறுகின்றனர்.

ஐராவத கஜாரூடம்
ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம்
ஸகஸ்ர நயநம் ஸக்ரம்
வஜ்ரபாணிம் விபாவயேத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி கும்பம் ஆகும். கும்பத்தின் அதிபதி சனி ஆவார். அதன் சின்னம் கும்பம் சுமந்த புருஷன் ஆகும். சதயம் நட்சத்திரத்தின் அதிபதி ராகு ஆவார். அதன் சின்னம் பெண் குதிரை ஆகும்.



# ஜென்ம நட்சத்திரங்கள்

# சதயம்

எனவே, இவர்களிடம் அதிக முன் கோபமும், பிடிவாதமும் உண்டு. வஞ்சகம், சூது, கபடம் பொறாமை போன்ற குணங்களும் உண்டு. அதே சமயம் பிறர்க்கு உதவி செய்யக் கூடிய தர்மசிந்தனையும் உண்டு. இவர்கள் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்குக் கெட்டவன் என்ற கொள்கையுடன் செயல்பட நேரிடும்.

கொஞ்சம் சோம்பேறித்தனமும், மந்த புத்தியும் இவர்களிடம் உண்டு. நீதி, நேர்மை தவறாது செயல்படக் கூடிய குணமும் சிலரிடம் உண்டு. பணம் சம்பாதிப்பதிலும் அதைச் சேர்த்து வைப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்களாகத் திகழ்வார்கள்.

மக்களைத் தன் பக்கம் ஈர்க்கும் வண்ணம் ஏமாற்றிப் பேசக் கூடிய ஆற்ற லும் இவர்களிடம் உண்டு.

தனது தாய் தந்தையர் மீது இவர் கள் பாசமாக இருப்பார்கள். ஓரளவு நல்ல தெய்வபக்தியும் உண்டு. சகோதர பாசம் இவர்களிடம் சுமாராகவே இருக்கக் கூடும். கல்வியில் கெட்டிக்காரர்கள்.

நன்றாக படித்து பட்டம் பெறக் கூடிய யோகமும் இவர்களுக்கு உண்டு. சுமாரான அழகுடன் காட்சியளிப்பர், மாநிறமுடையவர்கள்.

இரும்பு, மின்சாரம், நெருப்பு, மெக்கானிக்கல், ஹோட்டல் சம்பந்தமான தொழில் செய்து இவர்கள் ஜீவனம் நடத்த நேரிடும். சிலர் அடிமைத் தொழில் செய்வர். சிலர் கூலி வேலை (அ) முரட்டு வேலை செய்து காலம் தள்ள நேரிடும். தன் குழந்தைகள் மீது இவர்கள் பாசமாக இருப்பார்கள். இவர்களது இல்வாழ்வில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலகும்.

சளித் தொல்லை, தலைவலி, சுரம், நெஞ்சு வலி, கால்வலி, முதுகுவலி போன்ற நோய்கள் இடை இடையே வந்து விலகும் இவர்களிடம் மந்தபுத்தியும் உண்டு.

அதே சமயம் நல்ல நேரம் வரும் போது சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய சக்தியும் உண்டு. நினைத்ததைச் சாதிக்கக் கூடிய மனவல்லமையும் இவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடம் உண்டு.

எதிரியை வெல்லக் கூடியச் சக்தியும் உண்டு. பழிவாங்கும் சுபாவமும் இவர்களிடம் உண்டு.

இனி, இதற்குரிய நான்கு பாதங்களில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள் பற்றி ஆராய்வோம்.

### முதல் பாதம்

சதயம் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் அம்சத்தில் தனுசுவிலும், திரேக்காணத்தில் துலாத்திலும் இருக்கக் கூடும். இவர்கள் ஓரளவு நேர்மையாகவும், நல்ல புத்திசாலியாகவும் சொகுசாக ஆடம்பரமாக வாழ்வதில் விருப்பமுடையவராகவும் இருக்கக் கூடும்.

தன்னைவிட சிறப்பாக வாழ்பவர்களைக் கண்டு இவர்கள் பொறாமைப்பட நேரிடும். பிறர் பொருளை அபகரிக்கக் கூடிய சுபாவமும் சிலரிடம் உண்டு. சிலரிடம் தீய பழக்கங்களும் இருக்கக் கூடும். இத்துடன் மேற்கூறிய பொதுவான பலன்களையும் சேர்த்துக் கொள்ளவும்.

### இரண்டாம் பாதம்

சதயம் 2 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் மகரத்திலும் திரேக்காணத்தில் கும்பத்திலும் இருக்கக் கூடும். பெரும் பாலும் இவர்கள் தில்லுமுல்லு பண்ணி முன்னுக்கு வந்து விடுவர். தனது லட்சியம் நிறைவேறும் பொருட்டு, தவறான வழியில் செல்லவும் இவர்கள் தயங்கமாட்டார்கள் எனலாம்.

சிலர் லஞ்சம் வாங்குதல், புகை பிடித்தல், மது அருந்து தல் போன்ற தீய பழக்கங்களில் ஈடுபட்டு, கெட்டபெயர் எடுக்க நேரிடும்.

இவர்களது ஜாதகத்தில் கிரகங்கள் பலமாக இருந்தால் தங்களது தீய குணங்களை வெளியில் தெரியாதவாறு மறைந்து விடுவர் என அறியவும். இத்துடன் சதயம் நட்சத்திரத்தின் பொதுவான பலன்களையும் சேர்த்துக் கொள்ளவும்.

### மூன்றாம் பாதம்

சதயம் 3 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் அம்சத்திலும் திரேக்காணத்திலும் கும்பத்தில் இருக்கக் கூடும். இவர்களிடம் ஓரளவு நல்ல புத்திசாலித்தனமும், சாமர்த்தியமாகப் பேசி, காரியத்தைச் சாதிக்கக் கூடிய ஆற்றலும் உண்டு. ஓரளவு நல்ல கல்வி ஞானம் உண்டு. பெரும்பாலும், இவர்கள் அடிமைத் தொழில் செய்ய நேரிடும். இத்துடன் சதயம் நட்சத்திரத்திற்குரிய பொதுவான பலன்களையும் சேர்த்துக் கொள்ளவும்.

### நான்காம் பாதம்

சதயம் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் அம்சத்தில் மீனத்திலும், திரேக்காணத்தில் கும்பத்திலும் இருக்கக் கூடும். இவர்களிடம் ஓரளவு நல்ல புத்திசாலித்தனமும், நேர்மையும் நினைத்ததைச் சாதிக்கக் கூடிய மன வல்லமையும் உண்டு.

தன் காரியத்தைச் சாதிப்பதற்காக பிறரிடம் காலில் விழவும் தயங்க மாட்டார்கள். மேல் அதிகாரியிடம மிகவும் பணிவாக நடந்து தனது காரியத்தைச் சாதித்து விடுவார்கள் எனலாம். இத்துடன் சதயம் நட்சத்திரத்தின் பொதுவான பலன்களையும் சேர்த்துக் கொள்ளவும்.

இனி, இவர்களுக்குத் தசாநாதர்கள் தரும் பலன்கள் பற்றி ஆராய்வோம்.

சதயம் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஆரம்ப தசை ராகு ஆகும். அதாவது சுமார் 16 வயது முடியும் வரை இவர்களுக்கு ராகு தசை நடைபெறும். எனவே, சுமார் 8 வயது முடியும் வரை தாய் தந்தையர்க்கு வருமானம் வருவதும் செலவாவதுமாக இருக்கும்.

ராகுதசை பிற்பாதியில் குடும்பத்தில் அநாவசியமான செலவுகளும், பிரச்சினைகளும் வந்து சேரும்.

நோய்த்தொல்லை, சத்துரு தொல்லை, உறவினர் விரோதம் முதலியன ஏற்படும் ஜாதகரது படிப்பும் திருப்திகரமாக இராது. S.S.L.C. தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் பெற்று, இவர் பாஸ் பண்ண நேரிடும். சிலர் தோல்வியடைய நேரலாம் என அறியவும்.

16 வயது முடிந்த பின்னர் குருதசை (16 ஆண்டுகள்) 32 வயது முடியும் வரை நடைபெறும். இதில் முதல் இரண்டு ஆண்டுகளில் மேற்கூறிய தீய பலன்கள் தொடரும்.

அதற்குப் பிறகு இவர் ஓரளவு நன்றாக படிக்க ஆரம்பிப்பார். ஸ்கூல் படிப்பைவிட காலேஜ் படிப்பு நன்றாக இருக்கும்.

மிகவும் சிரமப்பட்டு படிப்பை வெற்றிகரமாக முடித்து சேர்ப்பார்.

சுமார் 23வது வயதில் இவருக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கும். அதிலிருந்து இவரது வாழ்வில் ஒளி வீச ஆரம்பிக்கும்.

27வது வயதில் இவரது திருமணம் நடைபெறும். திருமண வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். திசை முடிவில் வீடு நிலம் (அ) வாகனம் வாங்கக் கூடிய யோகமும் வரக்கூடும்.

**A.பிரகஸ்பதி**

### ஆஞ்சனையர் வழிபாடு

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே
ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு
அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்
அளித்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணுவின் அவதாரமாய் போற்றப்படும்

# கபில மகரிஷி

*மகரிஷிகள் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் பொருட்டு இந்த பூமியில் அவதாரம் எடுக்கின்றார்கள். சில யோகிகள் தம்முடைய வாழ்வின் முற்பகுதியில் சாதாரண மனிதர்களாக வாழ்ந்து, இன்னும் சொல்லப் போனால் சாதாரண மனிதர்களை விட சற்றே தாழ்ந்தும் வாழ்ந்து, தமது வாழ்வின் பிற்பகுதியில் தலைசிறந்த யோகிகளாயும், ரிஷிகளாயும் மாநிலம் போற்றும் வகையில் வாழ்ந்து மக்களுக்கு நல்லதே செய்துள்ளனர்.*

உதாரணமாக, துளசி தாசர் தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை சிற்றின்ப வேட்கையில் கழித்து வந்தார். ஒரு காலக்கட்டத்தில், அவருடைய மனைவியே அவரை இடித்துரைத்து பிறவிப் பேரின் பம் காணுவதற்கு பரந்தாமன் பாதமே கதியென இருக்க வேண்டும் என்று நல்லுரை பகர்ந்தாள். இதனை நன்கு சிந்தித்து உணர்ந்து பரந்தாமனை எப் பொழுதும் நினைத்திருப்பதும், பகவத் நாமத்தை ஒவ்வொரு நொடியும் உச்சரித்திருப்பதும் தான் வாழ்வில் பேரின் பம் தரக்கூடிய விஷயங்கள் என்பதை அறிந்து கொண்டார். அதன் பின்னர் தம்முடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதும் மிகச் சிறந்த விஷ்ணு பக்தராய் இருந்து, தம்முடைய வாழ்நாள் தீர்ந்திடும் முன்பாகவே துளசி ராமாயணத்தை உலக மக்களுக்காக உருவாக்கி கொடுத்தார். திருப்புகழை இயற்றிய சிறந்த முருக பக்தனாகிய அருணகிரிநாதரும் கூட தன்னுடைய வாழ்நாளின் முதல் பகுதியை சாதாரண உலக இன்பங் களுக்கு அர்ப்பணித்து விட்டு, ஒரு சந்தர்ப்பத்தில் அந்த வாழ்வில் சலிப்படைந்து அதனை முடித்து கொள்ள எண்ணிய நேரத்தில் முருகனின் பேரருளால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டு திருப்புகழை இயற்றி இந்த உலகத்திற்கு அளித்து விட்டார். "காதந்த ஊசியும் வாராதே காணும் கடைவழிக்கே" என்னும் உயர்ந்த தத்துவத்தை அனுபவபூர்வமாக உணர்ந்து அறியும் வரையிலும், பட்டினத்தாரும் உலக இன்பங்களால் கவரப்பட்டு இறைவனை முழுவதுமாக மறந்தே வாழ்ந்து வந்தார். உலக இன்பங்கள் உண்மையான இன்பங்கள் இல்லை என்பதையும் இன்பம் யாவுமே துன்பமாகுமே என்பதையும் உணர்ந்த பின்பு தன்னுடைய வாழ்வின் பிற்பகுதியில் பட்டினத்தார் இறையருள் பெற்று பக்தியை கொண்டாடி வாழ்ந் தார். சில ஆன்மீக செம்மல்கள் தம்முடைய பிறவி யையே இறை தொண்டிற்காகவும் பொது நலத் தொண்டிற்காகவும் ஒதுக்கும்படியாக பிறவி எடுக் கின்றார்கள். உதாரணமாக ஆதி சங்கரர் சிறு வயதில் மற்ற சிறுவர்களை போல் வாழ்ந்திருந்தாலும், உரிய வயதில் தனது தாயை சம்மதிக்க வைத்து உலக நன்மைக்காக சந்நியாச வாழ்வை ஏற்றுக் கொண்டார். பாரதத்தின் தனிப்பெரும் புதல்வராய் அவதரித்து ஆன்மீக, பொதுநல சிந்தனையாளராக வாழ்ந்த சுவாமி விவேகானந்தரும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத் தாயின் பவித்திரமான சேவைக்காக தம் வாழ்வையே அர்ப்பணித்து கொண்ட வீர சந்நியாசியாவார்.

அதே போல உலக நன்மைக்காகவே அவதரித்தவர் கபில மகிரிஷி. வேத காலத்தில் அவதரித்த கபிலர் சம்கியா தத்துவப் பள்ளி நிறுவனர்களில் ஒருவராய் விளங்கியவர். கபிலமகரிஷி பாகவத புரணத்தால் சிறப்பித்து சொல்லப்படுகின்றார். பாரம்பரிய இந்து புராணங்கள் கபிலமகரிஷியை, பிரம்மாவின் பேரரான மனுவின் வழிதோன்றலாய் விவரிக்கின்றன. பகவத் கீதையில் கபிலரை ஒரு யோக, தவமுனிவராகவும், சித்திகள் கைவரப் பெற்ற, தெய்வீக சக்திகள் உடையவ ராகவும் விளக்கப்பட்டுள்ளது. பாகவத புராணத்தின் மூன்றாவது புத்தகத்தில் கபில மகரிஷியின் வரலாறுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கர்த்தம முனிவர் மற்றும் தேவஹுதி ஆகியோர் கபிலரின் பெற்றோர் எனவும், கபிலர் அனுசுயாவின் சகோதரர் எனவும், கபிலர் மகாவிஷ்ணுவின் அவதாரம் எனவும் பாகவத புராணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. தனது தந்தை கர்த்தம முனிவர் விட்டுச் சென்ற பின், தனது தாயான தேவஹுதி யோகத்திலும் தத்துவத்திலும் மேன்மை பெற்று மோட்சம் அடைவதற்கான வழியை காட்டினார் தனயனான கபிலமகரிஷி. கபிலர் இந்த பூமியில் விஷ்ணுவின் அவதாரமாய் அவதரித்ததே, பூமியில் ஏற்பட்டிருந்த ஆன்மீக தொய்வினை அவருடைய உபதேசங்களின் மூலமாக சரி செய்வதற்காகத் தான் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. பக்தி யோகத்தை இந்த புவியில் மிகுந்த பவித்திரத்தோடு பரப்பிய பெருமை கபில மகரிஷியையே சேரும். புத்தர் சம்பந்தப்பட்ட வரலாற்று நூல்கள், கபிலர் ஒரு மிகச் சிறந்த தத்துவ ஞானியென்றும் அவருடைய மாணாக்கர்கள் கபிலவாஸ்து என்கின்ற நகரத்தை உருவாக்கினார்கள் என்றும் புத்தர் பெருமான் தமது வாழ்நாளின் முதல் இருபத்தொன்பது வருடங்களை கபிலவாஸ்து நகரத்தில் கழித்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. துன்பங்களை இறக்கி வைப்பதில் யோகாவும் தியானமும் இரண்டு கருவிகளாக பயன்படுகின்றன என்ற கருத்தில் கபில மகரிஷி புத்தரின் கோட்பாடுகளை ஒத்திருந்தார். கபில வாஸ்து என்றால் கபிலரின் குணாதிசியங்கள் என்று பொருள் படுகின்றது. பகவத் கீதையில் கபிலரின் பெருமையை பற்றி கிருஷ்ண பகவனால் உரைக்கப்பட்டிருப்பதால் கபிலரின் பெருமையை நாம் நன்கு உணர முடிகின்றது. மரங்களில் நான் ஆலமரம், மாமுனிவர்களில் நான் நாரதர், கந்தர்வர்களில் நான் சித்திரரதன் மேலும் அப்பழுக்கற்ற உயிர்களில் நான் கபில மகரிஷி என்று கிருஷ்ண பகவான் கீதையில் சொல்லுவதிலிருந்தே கபில மகரிஷியின் அரும்பெரும் தன்மையினை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம். பாகீரத மன்னனின் அரும் தவத்தால் பூமிக்கு கங்கை வந்த நிகழ்வில் கபில மகரிஷிக்கு பெரும் பங்கு உண்டு என்று புராணங்கள் கூறுகின்றன.



கபிலரால் தோற்றுவிக்கப்பட்ட சம்கிய தத்துவங்கள் இந்து மதத்தின் பல இதிகாசங்களிலும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. மனிதர்களின் நடவடிக்கைகள் உடலை சுத்தப்படுத்துகின்றன. இருப்பினும் அறிவே இறுதியானதாகும். இதயத்தால் செய்யப்படுகின்ற தவறுகள் யாவும் மனிதனின் நடவடிக்கைளால் சரி செய்யப்படும் போது, பிரம்ம ஆற்றலின் ஒரு பகுதியானது அறிவு, பெருந்தன்மை, மன்னிக்கும் மனப்பண்பு, அமைதி, கருணை, உண்மை, கர்வமில்லாது இருத்தல், தன்மான உணர்வு, பற்றற்ற தன்மை, மற்றும் தவறு இழைக்காதிருத்தல் ஆகிய நற்குணங்கள் நிலைநிறுத்தப்படுகின்றன. இவையெல்லாம் ஒன்றிணைந்து வாழ்வில் மிக உயர்ந்த நிலை அடையவும் பிரம்ம வழியை உணரவும் உதவுகின்றன இவ்வாறு கபிலரால் சொல்லப்பட்டதாக சாந்தி பர்வா, மோட்ச தர்மபர்வா ஆகியவற்றில் தெரிவிக்கப் பட்டுள்ளன. சம்கிய தத்துவங்களையும் நல்ல நெறிகளையும் மனித சமுதாயத்திற்கு உபதேசிக்கவே நான் இந்த கபிலன் என்னும் உடலை தாங்கி பூமிக்கு வந்துள் ளேன் என கூறுகின்றார் கபில மகரிஷி. எனவே கபில மகரிஷியின் புனிதமான அவதாரமானது உலகுக்கு நன்னெறி அடிப்படையில் மீண்டும் பக்தி மார்க்கத்தில் புத்துயிர் அளித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**ஒத்தக்கடை ராமன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## கடகம்

**சந்தோஷமே உலகமென்று நினைக்கும் கடக ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு இதுவரை அர்த்தாஷ்டம சனி முடிந்து பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்வதால் பல கஷ்டங்களிலும் பொருளாதாரத்தில் பிரச்சினை வீடு, சொத்து வாகனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள். பின் சமஸ்தானத்தில் அமர்ந்து தனஸ்தானத்தையும் ஏழாமிடத்தையும், லாபஸ்தா னத்தையும் பார்வை இடுகிறார். மூன்றாம் பார்வையாக கூட்டு தொழில், மனைவி வெளியூர் பயணம் போன்றவை தடைப்படும். கூட்டு தொழில் செய்பவர்கள் தன் கூட்டாளிகளிடம் மன முறிவு ஏற்பட வாய்ப்புகள் அமையும். சந்தோஷமாக இருந்த குடும்ப வாழ்க்கையில் காரணமின்றி தன் மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். புத்திரர்களின் சுயதொழில் முன்னேற்றம் உண்டாகும். கடன் கட்டுக்குள் இருக்கும். எதிர்பார்த்த பணம் வருவதில் தாமதம் உண்டாகும். சோதனைகளையும் பிரச்சினைகளையும் சந்தித்து வந்த நிலை மாறினாலும் கடந்த கால அளவிற்கு பிரச்சினை வராது என்றாலும் சனி இருக்கும் இடம் சிறப்பு பார்க்குமிடம் பாழ் என்பதால் சனி விருச்சிக ராசியில் அமருவது உங்களின் வாழ்க்கையில் பஞ்சம ஸ்தானத்தில் அமரும் காலம் புத்திரர்களின் வளர்ச்சியும், குலதெய்வ வழிபாடு ஆன்மீக சிந்தனை, பரிகார பூஜைகள் செய்து பாவத்திலிருந்து விடுவித்து கொள்ளுதல், தெய்வ உபசரனைகளில் வெற்றி பெறுதல், ஜோதிடத்தில் மேன்மையை அடைதல் பூஜைகளில் கலந்து கொண்டு தெய்வ அருள் கிட்டுதல் போன்ற வாய்ப்புகள் அமையும். வாக்கு ஸ்தானத்தை சனி பார்ப்பதால் ஜோதிடத்தில் சற்று கவனமாக பலன் சொல்லுவது அவசியம். திருமண பொருத்தம் பார்த்து சொல்லும் போது ஏதாவது தவறுதலாக சொல்லி அதனால் பிரச்சனை வர வாய்ப்பு இருப்பதால் சற்று கவனமாக சொல்லுவது அவசியம். தவறு செய்பவர்களுக்கு தண்டனை பெறும் காலம், தவறு செய்தவர்கள் கவனமாக இருப்பது அவசியம். மலை போல வந்த பிரச்சினைகள் பனி போல உருகி வரும். உங்களிடம் கனிவாக பேசி காரியம் சாதித்து கொள்பவர்கள் உங்களை சுற்றி இருப்பார்கள். அதில் அதிக பெண்கள் இருப்பார்கள். அவர்களிடம் பேசும் போதும் செயல்களில் ஈடுபடும் போதும் கவனமாக இருப்பது நல்லது. சந்திரன் நீசமாகும். ராசி என்பதால் சனி நட்சத்திரத்தில் நீசமாகுவதால் பெரும்பாலும் சந்திரன் சனி இணையும் காலம் மிக கவனமுடன் இருப்பது அவசியம். அது போல கும்பத்தில் சந்திரன் உலாவும் காலமும் சற்று கவனமாக இருப்பது நல்லது. சனி கொடுத்தால் பார்த்து தருவார். சனி கொடுக்கும் காலம் 2017ல் வரும் போது பணவரவு தானே வந்து சேரும். கடவுள் கண் திறந்து பார்க்கும் காலம் என்பதால் அந்த காலத்தை பார்த்து புதிய தொழில் அமைத்து கொள்ளுவது நல்லது. எண்ணி துணிக கர்மம் எண்ணிய பின் எண்ணுவோம் என்பது இழுக்கு. சோதனை காலங்களை தாண்டி வந்து விட்ட உங்களுக்கு இனி முற்யோசனையும் ஆலோசனைகளும் மூலதனமாக கொண்டு செயல்பட்டு வாழ்வில் பல நன்மைகளை அடைவீர்கள்.



பரிகாரம்: வெண்ணெய் வாங்கி அதில் மெழுகு திரியை வைத்து கிழக்கு முகமாக திரி ஏற்றி நவகிரகத்தின் வழிபாடு செய்து வர எல்லாம் நன்மையாக அமையும். கௌமாரியம்மனுக்கு மஞ்சள் பொடி அபிசேகம் செய்து அரிசி மாவுடன் சர்க்கரை சேர்த்து நைவேத்தியம் செய்து வர தடைப்பட்ட பிரச்சினைகள் சரியாகும்.

### விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தைப் பெண்கள் தாராளமாய் படிக்கலாம்

வேதத்தில் இருப்பதை நேரில் படிக்க முடியாதவர்களுக்காகத் தான் மகாபாரதத்தை வியாசர் இயற்றினார். அதிலுள்ள ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் பெண்கள் தாராளமாகப் பாராயணம் செய்யலாம்.

மந்திரங்கள், சாஸ்திரங்கள், ஆன்மிக சாதனைகள் ஆகியவை அனைத்தும் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவருக்குமே உரியவை.

இது யுகநாயகரான சுவாமி விவேகானந்தரின் உறுதியான கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடகம்

**ஜய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**



*எப்பொழுதும் ஏதாவது ஒரு கணக்கு போட்டு கொண்டே இருக்கும் கடக ராசி வாசகர்களே!*

*இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம குரு பார்வை படும் இடம் சிறப்பாக அமையும். உங்களின் முயற்சிகளை ராகு வெற்றி பெற செய்வார். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.*

**பணியாளர்களுக்கு:**
பணியாளர்களின் போக்குகளில் சில மாற்றம் இருக்கும். உங்களின் ராசியை அட்டம பார்வை யாக செவ்வாய் பார்ப்பது நல்லதல்ல என்றாலும் மனரீதி யான குழப்பம் இருந்து மறையும். குறித்த நேரத்தில் காரியம் நடக்காமல் போனால் மனரீதி யான டென்சன் இருக்கும். பாதிப்பு அதிகம் இருக் காது. தேவை களுக்கு பணம் வரும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**
பொது விடயங்களில் உங்களுக்கு ஆர்வம் இருக்கும். மற்றவர்களுக்கு உதவுவது நல்லதென்று தோன்றும். கடைசிவரை எடுத்த காரியத்தில் உறுதி யாக இருந்து செயல்படுவீர்கள். மக்கள் உங்களை சுற்றி இருந்து கொண்டே இருப்பார்கள்.

**வியாபாரிகளுக்கு:**
வியாபாரத்தில் சில மந்த நிலை இருந்தாலும் மக்களின் கூட்டம் குறைவிருக்காது. தன்னை நம்பி வந்தவர்களுக்கு குறித்த நேரத்தில் பொருட்களை கொடுக்க சில சிரமங்களை அடைவீர்கள். சனி பெயர்ச்சிக்கு பின்பு தொழிலாளர் பிரச்சினை தீரும். முக மலர்ச்சியுடன் வரவேற்பீர்கள்.

**கலைஞர்களுக்கு:**
கலைஞர்களின் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். புதிய ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் வெளியூர் வெளிநாட்டு பயணம் பாராட்டும்படி யான நிகழ்ச்சிகளை செய்து ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தல் போன்ற நிகழ்வுகள் நடக்கும்.

**பெண்களுக்கு:**
பெண்களின் எழுச்சி உங்களை ஊக்கப்ப டுத்தும். பெண் உரிமைகளை மீட்க போராடு வீர்கள். குழந்தை களிடம் பிரியமாக இருப்பீர்கள். சுயதொழில் கூடுதல் லாபம் கிட்டும். பொருளா தார நிலை மேம்படும்.

**மாணவர்களுக்கு:**
கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். சிலருக்கு தடைபட்ட கல்வியை தொடரும் நிலை உண் டாகும். வேறு கல்வி மாற்றும் மாணவர்களுக்கு ஆரம்பத்தில் சில சிரமம் இருந்தாலும் அதில் வெற்றி காண்பீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**
20.11.2014 வெள்ளி இரவு 07.55 முதல் 30.11.2014 ஞாயிறு இரவு 10.17 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**புனர்பூசம் 4ஆம் பாதம்:**
பல பொறுப்புகளை வகிக்கும் உங்களுக்கு எதிலும் அலைச்சல் உண்டாகும். கனவுகளில் வரும் நிகழ்வுகள் நிஜத்தில் நடக்கும். பணம் தாரா ளமாக கிடைக்கும்.

**பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**
திருமண வாய்ப்புகள் அமையும். கொடுத்த இடத்தில் பணம் வரும். செய்யும் தொழிலில் லாபம் கிடைக்கும். வங்கி கடன் வசதிகள் உண் டாகும்.

**ஆயில்யம் 1, 2, 3. 4 ஆம் பாதங்கள்:**
கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். தலைமை அதிகாரிகளின் நற்பெயரை பணியாளர்கள் பெறுவார் கள். உடல் நலனில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டி வரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**
தூய வெண்மை, பச்சை, ஆரஞ்சு.

**அதிர்ஷ்ட திசைகள்:**
வடக்கு, வடமேற்கு, மேற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
திங்கள், புதன், வெள்ளி.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**
திங்கள் கிழமை ராகு காலத்தில் துர்க்கை அம்மனை வணங்கி சந்தனம், குங்குமம் வைத்து வாழைப்பழம் மூன்று வைத்து வணங்கி வர சகல காரியமும் அனுகூலமாக அமையும்.

## கடன் தொல்லையில் இருந்து விடுபட

கீழ்க்கண்ட சுலோகத்தை காலை, மாலை பாராயணம் செய்து வர கடன் தொல்லை நீங்கும்.

"ஓம் ருணத்ரய ஹரஸ் ஸுக்ஷ்ம, ஸ்தூல ஸர்வ
சுதப்பமாந், அபஸ்மார ஹாரஸ்மர்த்தா சருதிர்
காதா ஸம்ருதிர் மனு!!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேறு பெற்ற புலி

## சீரடி சாய்பாபா

அந்த காலத்தில் புலி, யானை, மாடு, கரடி, குரங்கு போன்ற பிராணிகளை வைத்து வேடிக்கை செய்வித்து சில்லறை சேகரிக்கும் மனிதர்கள் சிலர் வாழ்ந்து வந்தார்கள். ஒரு முறை சீரடியில் வண்டியில் புலியுடன் வந்தார்கள் சிலர். சாயிபாபாவின் புகழைக் கேட்டு நோய் வந்த புலியை அவர் முன் இரும்புச் சங்கிலியில் பிணைத்துப் பிடித்தவாறு வந்து அவரிடம் காட்டினார்கள்.

புலி வேகமாக சாயிபாபாவிடம் சென்று அவர் பாதத்தை வணங்கியது. வாலை மூன்று முறை தரையில் அடித்து உயிர் அற்று சாய்ந்தது. சரணம் அடைந்த புலிக்கும் முக்தி பேறு அளித்தார் சாயி பாபா. இன்றும் சீரடியில் இந்த புலியின் சிலையைக் காண முடியும்.

இன்று போல், சாய்பாபாவின் புகழ் உலகம் முழுவதும் பரவாத காலம் அது. ராம்லால் என்பவரை ஆட்கொள்ள நினைத்தார் சாயிபாபா.

மும்பையில் வசித்து வந்த ராம்லாலுக்கு கனவு ஒன்று தோன்றியது. அதில் சாயிபாபா தோன்றினார். தன்னை வந்து தரிசனம் செய்யும்படி கூறினார் சாயிபாபா. உடனே எழுந்த ராம்லால், கனவில் கண்ட மகானைத் தரிசனம் செய்தே தீர வேண்டும் என்று தீர்மானம் செய்தார். அவரைப் பற்றி யாரிடம் கேட்பது, அவர் பெயரும் தெரியவில்லை. இதுவரையில் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதும் இல்லையே. அன்று இரவு ராம்லால் சாலையில் நடந்து சென்ற பொழுது ஒரு புகைப்படத்தைக் கண்டார்.

அட... அட... இவர் தான், நம் கனவில் கண்ட அவர் என்று புரிந்து கொண்ட சாயிபா பாவின் பெயர், இருப்பிடம், முகவரி போன்றவற்றை கடைக்காரரிடம் தெரிந்து கொண்டு, சீரடிக்கு பயணம் செய்து, சாயிபாபாவை முதல் முறையாக தரிசனம் செய்தார். "ராம்லால், கனவும் நினைவும் உன் இருகண்களா?" என்று கேட்டார் சாயிபாபா. "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்ற மாணிக்க வாசகரின் வாக்கியத்திற்கு தக்கவாறு அருள் புரிந்தார் சாய்ராம். அந்த ராம்லால் தான் கடைசிக்காலம் வரையில் பாபாவின் அருகில் இருக்கும் பாக்கியம் பெற்றார்.

**இரா.மணிகண்டன்**

### சாதன சதுஷ்டயம்

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் ஆன்மிக சாதகன், நித்தியம் எது, அநித்தியம் எது? என்று விவேகத்தின் மூலம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்விதம் ஆராய்ந்தால், பிரம்மம் (கடவுள்) ஒன்று தான் நித்தியமானது, சாரமான வஸ்து, அடைவதற்கு உரியது என்பது தெரிய வரும். மற்றவை அனைத்தும் அநித்தியமானவை, சாரமற்ற சக்கை என்பது புலனாகும். இந்த நித்யாநித்ய வஸ்து விவேகம், உடல் புலன்கள் போன்ற கரணங்களில் வெளிப் பொருள்களால் உண்டாகும் சிற்றின்பங்களில் வெறுப்புக் கொண்ட வைராக்கியம், சமதமாதி ஷட்சம்பத்து என்று சொல்லப்படும் ஆறு விதச் சாத னைகள், மோட்சமே வாழ்க் கையில் அடைய வேண்டிய ஒரே ஒரு லட்சியம் என்ற மனநிலை ஆகியவை அனைத்தும் சேர்ந்தது சாதன சதுஷ்டயம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளும் பலன்களும்

# உணவு விடுதி



நீங்கள் ஓர் உணவு விடுதியைப் பார்த்துக் கொண்டு நிற்பது போல் கனவு கண்டால் உங்களுக்கு மிகவும் பிரியமான ஒரு நபருக்கு (அந்த நபர் ஆணாகவும் இருக்கலாம், பெண்ணாகவும் இருக்கலாம்) ஏதோ ஒரு சங்கடம் வரப்போகிறது. அந்தச் சங்கடத்திலிருந்து அவரைப் தப்புவிக்க உங்களால் முடியும். ஆனால், அந்த உதவியை நீங்கள் வெளிப்படையாகச் செய்ய முடியாது. மறைமுகமாகத்தான் செய்ய வேண்டியிருக்கும் மற்றவர்கள் அவரைத் திட்டும் போது, நீங்களும் சேர்ந்து திட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்படித் திட்டா விட்டால் நீங்கள் சந்தேகத்துக்குரியவராவீர்கள். எக்காரணத்தை முன்னிட்டும், அந்த நபரிடம் உங்களுக்கு இருக்கும் உள்ளன்பை இன்னும் சிறிது காலத்துக்கு நீங்கள் வெளியே காட்டிக் கொள்ள முடியாது.

நீங்கள் ஓர் உணவு விடுதிக்குள் நுழைவது போல் கனவு கண்டால் உங்களுடைய சொந்த விவகாரங்களில் சில சிக்கல்கள் ஏற்படப் போகின்றன. அந்தச் சிக்கல்கள் பெரும்பாலும் உங்கள் குடும்பத்தைப் பற்றியவையாகவே இருக்கக் கூடும். அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு நீங்கள் சில உறவினர்களின் உதவியை நாட வேண்டியது இருக்கலாம். அதற்குப் பதிலாக நீங்கள் தொடக்கத்திலேயே சிறிது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர் களானால் அந்தச் சிக்கல்களே ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

நீங்கள் ஓர் உணவு விடுதியில் வசிப்பது போல் கனவு கண்டால், நீங்கள் வசிக்கும் இடத்தில் அல்லது உங்கள் உத்தியோகத்தில் ஒரு மாறுதல் ஏற்படக் கூடும். ஆனால் அந்த மாறுதல் நிரந்தரமான தாய் இராது. சிறிது காலத்தில் நீங்கள் உங்கள் பழைய இடத்துக்கே அல்லது உத்தியோகத்துக்கே திரும்பி வந்து விடுவீர்கள். ஆகையால், பழைய தோழர்களின் தொடர்பை விட்டு விடாதீர்கள்.

ஓர் ஓட்டலில் உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்வது போல் கனவு கண்டால் உங்கள் பேரில் வீணான பழி சுமத்தப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதில் இருந்து நீங்கள் தப்ப வேண்டுமானால் நீங்கள் நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கும்சில நண்பர்களிடம் இருந்து சிறிது காலம் விலகியிருக்க வேண்டும் இல்லாவிட்டால் அந்த நண்பர்களே உங்களுக்கு எதிரிகளாக மாறி விடுவார்கள்.

நீங்கள் ஓர் ஓட்டலில் போய் யாருக்காவது காத்திருப்பது போல் கனவு கண்டால் ஒரு பெரிய பணக்காரர் அல்லது பதவியில் உள்ளவர் தயவு உங்களுக்கு தேவைப்படுகிறது. அவருடைய நட்பைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். ஆனால், உங்களுடைய முயற்சி இல்லாமலே அவரையும் உங்களையும் ஒன்று படுத்தி வைக்கக்கூடிய வாய்ப்பு ஒன்று வரப்போகிறது. அதுவரையில் நீங்கள் சற்றுப் பொறுமையாக இருப்பது நல்லது. ஏனென்றால், நீங்கள் அவசரப்படுவதால் மட்டும் உங்கள் காரியம் ஆகிவிடப் போவது இல்லை.

நீங்கள் ஓர் உணவு விடுதியில் உங்கள் செலவில் சில நண்பர்களை உண்ணச் செய்வது போல் கனவு கண்டால் உங்களுக்கு ஒரு பெரிய தன்மை ஏற்படப் போகிறது. அதைக் கண்டு உங்கள் நண்பர்கள் எல்லோரும் மகிழ்ச்சி அடையப் போகிறார்கள். ஒரு வேளை, உங்களுக்கு ஓர் ஆண் மகவு பிறக்கக்கூடும் அல்லது ஒரு புதிய சொத்துக்கு நீங்கள் உரிமையாளர் ஆகலாம்.

ஓர் உணவு விடுதியில் உங்களுக்கு அறிமுகம் இல்லாத பலரோடு நீங்கள் உணவு அருந்துவது போல் கனவு கண்டால் உங்களுடைய உத்தியோகத்தில் அல்லது தொழில் துறையில் சில சிரமங்கள் ஏற்படக்கூடும். அதற்குக் காரணம், நீங்களாகவே சில நபர்களை உங்களுடைய எதிரிகளாய் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் உண்மையில் உங்களுக்கு எதிரிகள் அல்லர். அவர்களிடம் உங்கள் நேசக்கரத்தை நீட்டுவீர்களானால் அவர்கள் அதைப் பற்றிக் கொள்ள தயாராய் இருக்கிறார்கள். அத்துடன் உங்கள் சிரமங்களும் தீர்ந்து போய்விடும்.

**தமிழ்வாணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிய சித்த மருத்துவ குறிப்புகள்

# கல்லீரல் மற்றும் மண்ணீரல் நோய்கள் குணமாக!











கல்லீரல், மண்ணீரல் வீக்கம் குணமாக கொள்ளுகாய், வேளை செடி வேர், மிளகு கஷாயம் சாப்பிட்டு வரவும்.

கல்லீரல் வீக்கம் குறைய மருதம்பட்டை கரிசலாங்கன்னி தூள் 1 கிராம் தேனில் கலந்து சாப்பிடவும்.

கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் வீக்கம் குறைய நொச்சி இலைச்சாறு பசுங்கோமியத்துடன் சாப்பிட்டு வர வீக்கம் குறையும்.

கல்லீரல், மண்ணீரல் உரம் பெற சீந்தில் கொடி சாப்பிடலாம்.

கெட்டுபோய் இருக்கும் ஈரலை குணப்படுத்த ஈரல் கெட்டு போன வர்கள் கரிசலாங்கண்ணி கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வர தீரும்.

பித்தம்மை நோய் வேப்பம்பூவுடன் மிளகு, சீரகம் சேர்த்து உண்டு வர குணமாகும்.

கல்லீரல் வலி குணமாக கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி சேர்ந்து 45 நாட்கள் சாப்பிட்டு வர குணமாகும்.

கல்லீரல் பலப்பட தினசரி ஒரு கொய்யாப்பழம் சாப்பிடலாம்.

இதயம், சிறுநீரகம், மண்ணீரல் சாறுவேளை இலையை கீரை போல் சமைத்து உண்ணலாம்.

கல்லீரல் நோய் தீர கரிசாலை இலை, வேப்பிலை, துளசி கீழா நெல்லி வெறும் வயிற்றில் மென்று தின்று வரலாம்.

கல்லீரல் நன்கு இயங்க வேப்பம் பூவை ஊறவைத்து வடி கட்டி சாப்பிட்டு வர கல்லீரல் நன்கு இயங்கும்.

கல்லீரல் வீக்கம் குறைய சித்திர மூல வேர் பட்டைபொடி வாழப்பழத்துடன் சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும்.

குடல் புண், நீரழிவு நோய் குணமாக வில்வ இலை பொடி அரை ஸ்பூன் 50மி.லி. தண்ணீரில் சாப்பிட்டு வரலாம்.

குடலை சுத்தப்படுத்த வில்வபழம் சதை பகுதியை சர்க்கரை சேர்த்து சாப்பிடவும். கசடு தங்காமல் சுத்தம் செய்ய சிறந்தது.

குடல் வெப்பம் நீங்கி குடற்புண் ஆற எழுத்தாணி பூண்டு இலைகளை நன்கு அரைத்து தாராளமாக மலம் போகும்படி கொடுக்க குணம் பெறலாம்.

சுவாச குழாய் அலர்ஜி, குடல்புண் குணமாக குங்குமப் பூவுடன் சம அளவு தேன் கலந்து 3 நாட்கள் தினசரி 2 வேளை உட்கொள்ளலாம்.

குடல் வாதம் குணமாக புரசப்பட்டையை நீரில் காய்ச்சி, சிறு வர்களுக்கு கொடுத்து வந்தால் சரியாகும்.

குடல் வாதம் மேககிரந்தி தீர வெள்ளறுகு சமூலம், சுக்கு மிளகு, சீரகம் கஷாயம் 50 மி.லி. காலை, மாலை குடித்து வரலாம்.

குடல் புண் குணமாகவும், வயிற்றுப் புழுக்கள் அழியவும் அகத்தி கீரை நல்ல உணவு.

வயிற்றுக் கோளாறு புதினா துவையல் நல்ல மருந்து.

அல்சர் குணமாக தினமும் ஒரு டம்ளர் திராட்சை பழச்சாறு குடித்து வரலாம்.

வயிற்றுவலி, வயிற்று பொருமல், அஜீரணம் குணமாக ஏலக்காய் பொடி தேனில் ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப் பிட்டு வரலாம்.

வாய்ப்புண் மற்றும் வயிற்றுப் புண் மணத்தக்காளி கீரை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குணமாகும்.

இரைப்பை வலுவடைய காலை இலை வேகவைத்து சாப்பி டலாம்.

குடல் வலிமை பெற வில்வமர பூக்களை புளிசேர்க்காமல் ரசம் வைத்து சாப்பிட்டு வரலாம்.

குடல் வெப்பம் நீங்கி புண் ஆற எழுத்தாணி பூண்டு இலை அரைத்து மலம் போகும். அளவு கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சண்முகர் 108 போற்றிகள்

ஓம் ஆறுமுகனே போற்றி
ஓம் ஆண்டியே போற்றி
ஓம் அறன்மகனே போற்றி
ஓம் அபிஷேகப்பிரியனே போற்றி
ஓம் அழகா போற்றி
ஓம் அப்பா போற்றி
ஓம் ஆதிமூலமே போற்றி
ஓம் ஆவினன் குடியோய் போற்றி
ஓம் இறைவனே போற்றி
ஓம் இளையவனே போற்றி
ஓம் இடும்பனை வென்றவர் போற்றி
ஓம் இடர் களைவோனே போற்றி
ஓம் ஈசன் மைந்தா போற்றி
ஓம் ஈராறு கண்ணனே போற்றி
ஓம் உமையவள் மகனே போற்றி
ஓம் உலக நாயகனே போற்றி
ஓம் ஐயனே போற்றி
ஓம் ஐங்கரன் மைந்தனே போற்றி
ஓம் ஐயப்பன் தம்பியே போற்றி
ஓம் ஒப்பிலாதவனே போற்றி
ஓம் ஓங்காரனே போற்றி
ஓம் ஓதுவார்க்கினியவனே போற்றி
ஓம் அவ்வைக்கு அருளியவனே போற்றி
ஓம் கருணாகரனே போற்றி
ஓம் கதிர்வேலவனே போற்றி
ஓம் கந்தனே போற்றி
ஓம் கடம்பனே போற்றி
ஓம் கவசப்பிரியனே போற்றி
ஓம் கார்த்திகை மைந்தனே போற்றி
ஓம் கிரிராஜனே போற்றி
ஓம் கிருபாநிதியே போற்றி
ஓம் குகனே போற்றி
ஓம் குமரனே போற்றி
ஓம் குன்றம் அமர்ந்தவனே போற்றி
ஓம் குறத்தி நாதனே போற்றி
ஓம் குணக்கடலே போற்றி
ஓம் ஞானியே போற்றி
ஓம் ஞாயிறே போற்றி
ஓம் ஞாலம் காப்பவனே போற்றி
ஓம் ஞான உபதேசியே போற்றி
ஓம் தணிகாசலனே போற்றி
ஓம் தயாபரனே போற்றி
ஓம் தண்டாயுதபாணியே போற்றி
ஓம் தகப்பன் சுவாமியே போற்றி
ஓம் திருவே போற்றி
ஓம் திங்களே போற்றி
ஓம் திருவருளே போற்றி
ஓம் திருமலை நாதனே போற்றி
ஓம் தினைப்புனம் புகுந்தோய் போற்றி
ஓம் துணைவா போற்றி
ஓம் துரந்தரா போற்றி
ஓம் தென்பரங்குன்றனே போற்றி
ஓம் தெவிட்டா இன்பமே போற்றி
ஓம் தேவாதி தேவனே போற்றி
ஓம் தேவை அருள்வாய் போற்றி
ஓம் தேரேறி வரு வோய் போற்றி
ஓம் தேசத் தெய்வமே போற்றி
ஓம் நாதனே போற்றி



ஓம் குருபரனே போற்றி
ஓம் சங்கரன் புதல்வனே போற்றி
ஓம் சஷ்டி நாயகனே போற்றி
ஓம் சரவணபவனே போற்றி
ஓம் சரணாகதியே போற்றி
ஓம் சத்ரு சங்காரனே போற்றி
ஓம் சர்வேஸ்வரனே போற்றி
ஓம் சிக்கல்பதியே போற்றி
ஓம் சிங்காரனே போற்றி
ஓம் சுப்பிரமணியனே போற்றி
ஓம் சரபூபதியே போற்றி
ஓம் சுந்தரனே போற்றி
ஓம் சுகுமாரனே போற்றி
ஓம் சுவாமிநாதனே போற்றி
ஓம் சுகம் தருபவனே போற்றி
ஓம் சூழ்ஒளியே போற்றி
ஓம் சூரசம்ஹாரனே போற்றி
ஓம் செல்வனே போற்றி
ஓம் செந்தூர் காவலனே போற்றி
ஓம் சேவல் கொடியோனே போற்றி
ஓம் சேவகனே போற்றி
ஓம் சேனாபதியே போற்றி
ஓம் சேனைத்தலைவனே போற்றி
ஓம் சொற்பதம் கடந்தவனே போற்றி
ஓம் சோலையப்பனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நீறணிந்தவனே போற்றி
ஓம் பரபிரம்மமே போற்றி
ஓம் பழனியாண்டவனே போற்றி
ஓம் பாலகுமரனே பொற்றி
ஓம் பன்னிரு கையனே போற்றி
ஓம் பகை ஒழிப்பவனே போற்றி
ஓம் பிரணவமே போற்றி
ஓம் போகர் நாதனே போற்றி
ஓம் போற்றப்படுவோனே போற்றி
ஓம் மறைநாயகனே போற்றி
ஓம் மயில் வாகனனே போற்றி
ஓம் மகா சேனனே போற்றி
ஓம் மருத மலையானே போற்றி
ஓம் மால் மருகனே போற்றி
ஓம் மாவித்தையே போற்றி
ஓம் முருகனே போற்றி
ஓம் யோக சித்தியே போற்றி
ஓம் வயலூரானே போற்றி
ஓம் வள்ளி நாயகனே போற்றி
ஓம் விராலிமலையானே போற்றி
ஓம் விநாயகன் சோதரனே போற்றி
ஓம் வினைகளைக் களைவாய் போற்றி
ஓம் வேலவனே போற்றி
ஓம் வேத முதல்வனே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் ஹரேகிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்


'பரம சத்தியம்' அல்லது 'பரம் பொருள்' அல்லது 'முழுமுதற் பொருள்' என்று கூறப்படும் பகவான் கிருஷ்ணர் வேத இலக்கியங்கள் மூலம் அறிவை வழங்கியுள்ளார். வேத இலக்கியங்கள் என்றால் ரிக், யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்கள், சம்கிதைகள், பிராமணங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பவற் றைக் குறிக்கின்றன. இவற்றையெல்லாம் தொகுத்து அளித்தவர் வேதவியாசர்.

வேத இலக்கியங்களில் பெறப்படும் அறிவு வேத அறிவு எனப்படுகிறது. இந்த வேத அறிவு மாற்ற முடியாதது. அழிவற்றது. குறைபாடுகளற்றது. மனித சமுதாயத்திற்கு பொதுவானது.

மனித சமுதாயம் இந்த அறிவைப் பெற்று அதன்படி நடக்கும் பொழுது தர்மம் நிலைக்கும். இல்லாவிடில் தர்மம் தலைசாய்ந்து அதர்மம் தலையோங்கும்.

அப்போது மீண்டும் பகவான் தர்மத்தை நிலைநாட்ட தான் விரும்பிய வடிவில் அவதரிக்கின்றார்.

காலம் இரவு பகல், மாரி கோடை, வசந்தம்



இலையுதிர் என மாறுபட்டு வருவது போல் பெருமளவில் கணக்கிடும் பொழுது யுகங்களாகப் பிரிக்கப்படுகின்றது.

அவை சத்யயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் என நான்காகும். நாம் வாழும் இந்த யுகம் கலியுகம். கலியுகம் என்றால் கலக்கமும், குழப்பமும் நிறைந்த காலம் என்பது பொருள்.

ஒவ்வொரு வேளைக்கேற்பவும் பருவத்துக்கேற் பவும் நாங்கள் செயற்படுவது போன்று யுகங்களுக் கேற்பவும் செயற்பட வேண்டும். அதுதான் யுக தர்மம் என்று அழைக்கப்படுகிறது.

சத்ய யுகத்திலே தியானத்தால், தவத்தால் அடையும் பயனையும், திரேதா யுகத்தில் யாகங்கள் நிகழ்த்தி வழிபடும் பயனையும், துவாபர யுகத்தில் கோவில்களில் மூர்த்திகளை வைத்து பஞ்சராத்திர முறைப்படி வழிபடும் பயனையும், கலியுகத்தில் ஹரிநாம கீர்த்தனத்தால் மட்டும் பெறலாம் என்று ஸ்ரீமத் பாகவதம், விஷ்ணு புராணம், பத்ம புராணம், பிருகத் நாரதீய புராணம் போன்ற புராணங்களும் நாராயண சம்கிதை போன்ற சம்கிதைகளும் கூறுகின்றன.

*ஹரேர் நாம ஹரேர் நாம ஹரேர் நாமைவ கேவலம்*
*கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ*
*நாஸ்த்யேவ கதிர் அன்யதா*

என – கலியுகத்திலே, ஹரி நாமத்தை ஓதுவதைத் தவிர

வேறு கதியில்லை, வேறு கதியில்லை, வேறு கதியில்லை என்று பிருகத் நாரதீய புராணம் கூறுகிறது.

*ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண*
*கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே*
*ஹரே ராம ஹரே ராம*
*ராம ராம ஹரே ஹரே*

எனும் பதினாறு நாமங்களைக் கொண்ட மந்திரம் கலியுக தோசத்தைப் போக்கும். வேதமனைத்திலும் தேடினும் இதைவிட வேறு உபாயத்தை காண முடியாது என்று கலிசந்திரண உபநிடதம் கூறுகிறது.

துவாபரயுக முடிவில் நாரதர் பிரம்மாவை அணுகி 'பகவானே உலகைச் சுற்றிக்கொண்டே எப்படி கலிதோஷத்தைக் கடக்கலாம்?' என்று வினவினார். பிரம்மா கூறியது:

'நீ கேட்டது நல்ல கேள்வி, சகல வேதங்களின் ரகசியமும், நன்கு காக்கப்பட வேண்டியதுமான எதனால் கலியின் சம்சாரத் துன்பத்தை ஒருவன் கடக்கலாமோ அதனைக் கூறுகிறேன் கேள்.'

ஆதி பரம புருஷரும் பகவானுமான நாராயணருடைய நாம ஜபம் ஒன்றினாலேயே கலிதோஷம் முற்றிலும் விலகிப் போகும். நாரதர் மீண்டும் அந்த நாமம் எது என்று கேட்டார். பிரம்மா,

*ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண*
*கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே*
*ஹரே ராம ஹரே ராம*
*ராம ராம ஹரே ஹரே*

என்று பதினாறு நாமங்களால் கலிகல்மஷம் (தோஷம்) நாசமாகும்.

வேதம் முழுவதிலும் இதற்கு மேலான உபாயம் எதுவும் காணப்படவில்லை என்றார். மேலும் நாரதர் இந்த நாமத்தை ஜெபிப்பதற்கு என்ன விதிமுறை என்று கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரம்மா இதற்கு விதி ஒன்றுமில்லை. சுத்தமோ, அசுத்தமோ எப்பொழுதும் ஜெபிக்கலாம் என்றார். இது கலிசந்தரணோபநிடத்தில் உள்ள பகுதியாகும்.

கலியுகத்திலே மனிதன் ஆயுள் குறைவுடையவனாகவும் கலக்கம் நிறைந்தவனாகவும் ஆன்மீக முயற்சியற்றவனாவும் தவறாக வழிநடத்தப்படுபவனாகவும் துரதிஷ்டசாலியாகவும் சிறுவிடயத்திற்கும் சண்டை போடுபவனாகவும் குழப்பமடைபவனாகவும் இருப்பான் என்று ஸ்ரீமத்பாகவதம் கூறுகிறது.

இவைதான் கலியுக தோஷங்கள், இக்கலியுகத்திலே மக்கள் ஆன்மீக விளக்கத்தைப் பெறுவதில் மிக மந்தமானவர்களாகவே இருப்பர்.

ஆனால் மனித வாழ்வின் நோக்கம் ஆத்மீக வாழ்வின் மகிமையை உணர்ந்து அதன்படி நடத்தலே. உண்ணுதல், உறங்குதல், இனத்தைப் பெருக்குதல், பாதுகாப்பைத் தேடுதல் ஆகிய நான்கு முயற்சிகளும் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் பொதுவானவை.

ஆத்மீக வாழ்வில் ஆத்மாவிற்கு நிரந்தரமான வழியைத் தேட முயலும் பொழுது தான் மனித வாழ்க்கை ஆரம்பமாகிறது. அதன் காரணமாகத்தான் மனித சமுதாயம் ஏதாவது ஒரு மதத்தைப் பின்பற்றுகிறது.

ஆனால் அதை முறையாகப் பின்பற்றத் தவறும் பொழுது – அதர்மம் தலையோங்குகிறது.

இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன்னர் கலியுகம் ஆரம்பிப்பதற்கு முன் பகவான் கிருஷ்ணர் இந்த உலகில் நேரடியாக அவதரித்து வேத இலக்கியங்களின் பொருளனைத்தையும் சேர்த்து மனித சமுதாயம் உய்ய தர்மத்தை மீண்டும் நிலைநாட்ட பகவத்கீதையை அருளிச் செய்தார்.

அதில், 'எல்லாவித தர்மங்களையும் விட்டு விட்டு என்னிடம் சரணடைவாயாக. நான் உன்னை எல்லாவித பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்.' என்று உறுதியளித்திருக்கிறார். ஆனால் மக்கள் அவற்றையெல்லாம் மறந்து நிறந்தரமற்ற புலனின்ப வாழ்க்கையையே மேலாக எண்ணிஅதில் மூழ்கித்தவிக்கின்றனர்.

இந்நிலையிலிருந்து மனித சமுதாயத்தை காக்க பகவான் மீண்டும் பக்தன் வடிவில் அவதரித்தார். கலியுகத்தில் மீண்டும் பக்தன் வடிவில் பகவான் அவதரித்து, ஹரிநாம கீர்த்தனம் ஒன்றினாலேயே இந்த கலியுக தோஷத்திலிருந்து விடுபடலாம். கலியுகத்திலே ஹரிநாம கீர்த்தனம் பண்ணினால் போதும்.

அதனால் பகவானைச் சென்றடையலாம் என்று தானே வழிகாட்டியாக ஹரிநாம கீர்த்தன இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தான் ஸ்ரீ சைத்தன்ய மஹா பிரபு என்று எல்லோராலும் இன்றும் வழிபடப்படுகிறார்.

ஆகவே நாமும் இந்த கலிதோஷத்திலிருந்து விடுபட இந்த ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை ஓதி பகவானின் அருளைப் பெறுவோமாக.

*ஹரே கிருஷ்ணா*

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களை வசீகரீக்க....

எந்த வியாபாரத்திலும், பொருட்களை வாங்க வருபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே வியாபாரம் பெருகும். ஒரே பொருளை விற்கும் பல கடைகள் இருக்கலாம். எல்லோருக்கும் கூட்டம் சேருவதில்லை. ஒரு சிலர் சில நாட்களில் வியாபாரம் சிறிதும் நடக்காத நிலையில் கவலைப்படுவார்கள். இந்த நிலை நீடித்தால் கடையை இழுத்து மூட வேண்டிய நிலை ஏற்படும்.

மக்கள் நம் கடையின்பால் கவர்ந்து இழுக்கப் பட வேண்டும். அதற்கு முக ராசி வேண்டும். அந்த முகராசி எப்படி வரும்? அதற்கு வழி வகுப்பவன், அன்னை வராகி அவளது கடைக்கண் பார்வை பட்டால் மக்கள் நமது கடைக்குப் பொருட்களை வாங்க வருவார்கள்.

அதற்கான யந்திரம் கீழே தரப்பட்டுள்ளது.

மேற்கண்ட யந்திரத்தைத் தாமிரத் தகட்டில் எழுதிக் கொள்ள வேண்டும். பின்னர் பூஜை அறையைச் சுத்தம் செய்து கோலமிட்டு பின் பீடத்தில் வைக்க வேண்டும். இதற்கென உள்ள மூலமந்திரம் கீழே தரப்பட்டுள்ளது.

மூலமந்திரம்

ஓம் ஐம் க்லீம் சௌம் சிவசம்பு
வராகி வா வா ஹும்பட்ஸ்வாஹா


மேற்கண்ட மூலமந்திரத்தைத் 1008 முறை ஜபித்துவர வேண்டும். நிவேதனப் பொருள்களாகச் சுண்டல், வடை போன்றவை இருக்கலாம். முதலில் யந்திரத்திற்கு அபிஷேகம் செய்து, பின் பீடத்தில் வைத்து தூபம் காட்டிப் பின் மூல மந்திரத்தை உச்சரித்து, அதன் பின்னர் கற்பூர தீபம் காட்ட வேண்டும். இவ்வாறு செய்தால் பொருள்களை வாங்குபவர்கள் அதிகம் வர வாய்ப்பு உண்டாகும்.

கிரகங்களினால் உண்டாகும் கெடுதல்கள் நீங்க


உலக இயக்கங்கள் நவக்கிரகங்களினால் நடத்தப்படுகின்றன. நம்முடைய ஜாதகத்தில் கிரகங்கள் இருக்கும் இடத்தின் அடிப்படையில் பலன்கள் நடக்கின்றன. நல்ல இடத்தில் கிரகங்கள் ஜாதகத்தில் இருந்தால் நல்ல பலன்களும், அவ்வாறு இல்லாவிட்டால் தீய பலன்களும் உண்டாகும்.

நாம் எந்த தொழிலைச் செய்தாலும் கிரக அமைப்புச் சரியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு தடைகள், இடையூறுகள் உண்டாகலாம். தொடங்கிய பிறகும் பலவித பிரச்சினைத் தோன்றலாம். இவ்வாறு கிரகங்களினால் உண்டாகும் கெடுதல்கள் நீங்க கீழ்க்கண்ட யந்திரத்தைத் தாமிரத் தகட்டில் எழுதி பூஜை செய்து வரவேண்டும்.

கீழ்க்கண்ட யந்திரத்திற்கான மூல மந்திரம் உள்ளது. அந்த மந்திரம் கீழே தரப்பட்டுள்ளது.




வராகி யந்திரம்




கிரக தோஷ நிவர்த்தி யந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமோ பகவதி ரக்தாஷி
ரத்த சாமுண்டி கட்கட மருகடங்க
சூலதாரிணீ வாவா ஹூம்பட் ஸ்வாஹா

மேற்கண்ட மந்திரத்தை தினமும் 1008 வீதம் உச்சரித்து வர வேண்டும். முதலில் யந்திரத்திற்கு அபிஷேகம் செய்து தூபம் காட்ட வேண்டும். பின்னர் மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். நிவே தனப் பொருளாகப் பாயசம் இருக்கலாம்.

இவ்வாறு 45 நாட்கள் உச்சரித்து வந்தால் எல்லா வித கிரக தோஷங்கள் விலகும். இதனால் தடைகள் நீங்கும். மற்றும் நலிவடைந்திருந்த வியா பாரம் அபிவிருத்தி அடையும். தொழில் மேன்மை அடையும்.

அறிவும் ஆற்றலும் வளர

வியாபாரத்தைத் தொடங்கி விட்டால் மட்டும் போதாது. அபிவிருத்தி செய்ய வேண்டும். எந்தக் காலத்தில் எந்தப் பொருள் அதிகமாக விற்பனை யாகும் என்பதை அறிந்து பொருள் கிடைக்கும் காலத்திலேயே வாங்கிச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். பொருளைப் பார்த்த மாத்திரத்திலேயே அதன் தரத்தை அறியும் ஆற்றல் வேண்டும்.

அதுபோல நாம் வியாபாரத் தொடர்பு வைத்தி ருக்கும் நபர்கள் நல்லவர்களாகவும், நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருக்க வேண்டும். தொழிலில் பிறர் நம்மை ஏமாற்றி விடாமல் இருக்க வேண்டும். இவ்வளவு பிரச்சினைகள் உள்ள வியாபாரத்தில் மேன்மையுற அறிவும் ஆற்றலும் வேண்டும். நமக்கு அறிவையும் ஆற்றலையும் கொடுப்பவள் அம்பாள். தேவியான அவள் கீழ்க்கண்ட சுலோ கத்தில் அருணா என்ற அழைக்கப்படுகிறாள்.

அருணோதயம் என்பது சூரிய உதயகாலம், அப்போது சூரியனின் கதிர்கள் சிவந்த நிறத்தில் வானமெங்கும் ஒளி வீசும். அந்த நிறம் சரஸ்வ தியின் நிறம். கீழ்க்கண்ட யந்திரத்தைத் தங்கத் தகட்டில் பதித்துக் கொள்ள வேண்டும். வசதி இல்லாதவர்கள் தாமிரத் தகட்டில் பதித்துக் கொள் ளலாம்.

கீழ்க்கண்ட சுலோகத்தைத் தினம் 1008, அல்லது




**அருணோதய யந்திரம்**

108 என்ற அளவில் ஜபித்து வர வேண்டும்.
அருணோதய யந்திரம் (image)

க்விந்த்ராணாஞ்சேத கமலவள பாலாதப ருசிம்
பஜந்தே யே ஸந்த கதிசிதருணா மேவ பவதீம்!
விரிஞ்சி ப்ரேயஸ்யாஸ் தருணதர ச்ருங்கார லஹரி
கபீராபிர் வாக்பிர் விதததி ஸதாம் ரஞ்ஜனமம்

தொடர்ந்து மேற்கண்ட சுலோகத்தை 45 நாட்கள் ஜபித்து வரவேண்டும் தினமும் நியமத் துடன் ஸ்ரீஜை செய்ய வேண்டும். நிவேதனப் பொருளாகத் தேன் இருக்கலாம். இவ்வாறு ஸ்ரீஜை செய்தால் அறிவும் ஆற்றலும் வளரும். சொல்லுக்கு மதிப்பிருக்கும். துர்தேவதைகளை விரட்டி விடும்.

இதனால் வியாபாரத்தில் தனித்தன்மையுடன் விளங்கிப் பேரும், புகழும், செல்வமும் பெற்று விளங்குவார்கள்.

**வேங்கடவன்**

## இராமர் வழிபாடு

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம வென்றிரண்டெழுத்தினால்

### ஈசாநன்

ஈசாநன் இவன் மங்கள வடிவினன், இவன் மக்களுக்கு அறிவை வளரச் செய்து ஞானத்தைப் பெருக்கி விடுதலையைக் கொடுப்பவன்.

*ஈஸாநம் வ்ருஷபாரூடம்*
*த்ரிஸூலம் வ்யாலதாரிணம்*
*சரச்சந்த்ர ஸமாகாரம்*
*த்ரிநேத்ரம் நீலகண்டம்*

### வாயு

வாயு வடிவமற்றவன். மக்களுடைய ப்ராணனுக்கு ஆதாரமாயுள்ளவன். இவனை உபாசிப்பதால் நீண்ட ஆயுளையும், பலத்தையும் பெறலாம்.

*ஆபீதம் ஹரிதச்சாயம்*
*விலோலத்வஜ தாரிசனம்*
*ப்ராணபூதம்ச பூதாநாம்*
*ஹரிணஸ்தம் ஸமீரணம்*

## முருகன் வழிபாடு

காக்கக் கடவியநீகாவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா! பூக்குங்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடங்காண் இரங்காய் இனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மம்



**ஜய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**

***செயலில் ஒருமித்த நிலைப்பாடுகளையே விரும்பும் சிம்மராசி வாசகர்களே!***

***இம்மாதம் உங்களின் ராசிக்கு ராகு வாக்கு ஸ்தானத்தில் இருந்து பல நன்மைகளை செய்வார். பேச்சாற்றாலும் செயல் திறமையும் உண்டாகும். எதிர்பாராத தனவரவு உண்டாகும்.***

**பணியாளர்களுக்கு:**

பணியாளர்களின் செல்வாக்கு உயரும். மேல் அதிகாரிகள் அரவணைப்பும் ஆதரவும் கிட்டும். பணியில் இருந்து வந்த சிரமம் குறையும். சனி பெயர்ச்சிக்கு பின்பு கவனமாக பணிபுரிய வேண்டி வரும். இரும்பு சம்பந்தமான தொழிலில் பணி மிகவும் சர்ச்சையாகவும் சோதனை நிறைந்த தாகவும் அமையும். பொருளாதாரம் தேவைகளை நிறைவு செய்யும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொதுநலனில் தன்னை முன்நிலை படுத்தி கொண்டு செயல்படும் உங்களின் எண்ணம் நிறை வேறும். உங்கள் முன் நடக்கும். அக்கிரமங்களை சகித்து கொள்ளமாட்டீர்கள். அதை தடுக்க என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள். போராட்டங் களை சந்திப்பீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானாதிபதியும் ராசிநாதனும் இணைந்து இருப்பது உங்களின் தொழிலில் மிகுந்த வளர்ச்சியை பெறும். வெளிநாடு, வெளியூர்களில் சென்று விரிவு படுத்தி கொள்ளுவீர்கள். இன்று செய்யும் முயற்சி நாளை உங்களின் வளர்ச்சி என்பதை உணர்ந்து செயல்படுவீர்கள்.

**கலைஞர்களுக்கு:**

கலைதுறையினர் திறமைகளை வளர்த்துக் கொண்டு செயல்படுவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் ஈடுபடுவீர்கள். வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு ஊக் கம் கிடைக்கும். நல்லவர்களின் சேர்க்கை உங்களை வளப்படுத்தும். பொருளாதார நிலை உயரும்.

**பெண்களுக்கு:**

மனவலிமையுடன் செயல்படுவீர்கள். எந்த இடத்திலும் விட்டு கொடுத்து பேச மாட்டீர்கள். எடுத்த முடிவுகளிலிருந்து பின் வாங்க மாட்டீர்கள். சுயதொழிலில் வளர்ச்சி உண்டாகும். பொருளாதார நிலை வளர்ச்சியை தரும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களுக்கு அறிவாற்றல் பெருகும். சிறந்த பேச்சாற்றலும் தைரியமும் உண்டாகும். சிறந்த கல்வியாளரின் உதவியால் மேலும் அறிவாற் றலை வளர்த்து கொள்ளுவீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

30.11.2014 ஞாயிறு இரவு 10.18 முதல் 02.12.2014 செவ்வாய் இரவு 01.20 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

சின்ன சின்ன சோதனைகளை சந்திக்கும் உங் களுக்கு ஆதரவு பெருகும். கணக்கு பார்த்து செய் தவர்கள் எல்லாம் தாராளமாக உதவுவார்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

**பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

குடும்பத்தில் சுபகாரியம் சம்பந்தமான பேச்சு நடக்கும். உறவுகளை பலப்படுத்தும் வேலையில் ஈடுபடுவீர்கள். புதிய முயற்சிகள் நல்ல பலனை தரும்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:**

கடன் வாங்கி தொழில் செய்பவர்களுக்கு நெருக்கடி வரும். வளமான வாழ்க்கையை தேடி யாராவது உதவுவார்களா என்று எண்ணி எதிர் பார்த்து கொண்டிருப்பீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

சிவப்பு, வெண்மை, ஆரஞ்சு.

**அதிர்ஷ்ட திசைகள்:**

கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

ஞாயிறு, வெள்ளி, புதன்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரையும் வியாழக் கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியையும் தொடர்ந்து வழிபட்டு எலுமிச்சை சாதம் வைத்து நைவேத்தியம் தர சகலகாரியமும் அனுகூலமாக அமையும்.

## வாக்குஸித்தி உண்டாக

- கீழ்க்கண்ட சுலோகத்தை பாராயணம் செய்து வர வாக்கு ஸித்தி, கல்வியில் அபிவிருத்தி உண்டாகும்.
- "ஓம் நமோம பகவதே பஞ்ச வதனாய ஊர்த்வமுகே
- ஹயக்ரீவாய ஸகல வசீகரணாய ஸ்வாஹா!!!"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## சிம்மம்

**சாதனைகளை செய்து சோதனைகளை வென்ற சிம்ம ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு அர்த்தாஷ்டம சனியாக அமர்ந்து உங்கள் ராசியை பத்தாம் பார்வையாகவும் மூன்றாம் பார்வையாக ஆறாமிடத்தையும், ஏழாம் பார்வையாக தொழில் ஸ்தானத்தையும் பார்வை இடுவது உங்களின் வாழ்க்கையில் பல சோதனை களிலிருந்தும் சாதனைகளிலிருந்தும் சனி பகவான் வளப்படுவார். உங்களின் ராசியை சனிபகவான் பத்தாம் பார்வையாக பார்ப்பதன் மூலம் இந்த காலத்தில் உங்களின் பாவ துன்பங்களை பரிகாரம் மூலம் தீர்த்து கொள்ளுவது தந்தை தாயாருக்கு கர்மம் செய்வது முன்னோர்களுக்கு திதிகள் புண் ணிய யாத்திரை செல்லுதல் போன்ற நிகழ்வுகள் நடக்கும். வாயு சம்பந்தமான உடல் உபாதை உண் டாகும். கனவுகளில் பல அதிசயங்களை காண்பீர்கள். அர்த்தாஷ்டம சனி என்பதால் அமரும் இடம் சிறப்பு என்பதால் வீடு, மனை வாகனம் போன்ற வசதிகளை பெறுவீர்கள். வீட்டை புதுப்பித்தல் விரிவு படுத்துதல், வாகன வசதிகளை பெறுதல், மனச்சுமைகளை இறக்கி வைத்து நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளுதல் வேறு புதிய நண்பர்களை சந்தித்தல் போன்ற வாய்ப்பு அமையும். மூன்றாம் பார்வையாக சனி பகவான் தன் வீட்டையும் ஆறாமிடமான எதிரி ஸ்தானத்தை பார்ப்பதால் மறைமுக எதிரிகளை அடையாளம் கண்டு கொள்ளுவீர்கள். இதுவரை உங்களிடம் இருந்து கொண்டே உங்களுக்கு கிடைத்த பாதிப்பை அறிந்து கொண்டு அவரை விட்டு விலகி விடுவீர்கள். புதிய கடன் பெறுதலும் பழைய கடன்களை அடைத்தலும், ஆயுள் காப் பீடு நிரந்தர சேமிப்புகள் போன்றவை அமையும். நீண்ட கால நோய்களை மருந்துகளால் குணப் படுத்துவதும். இடுப்பு, கால் போன்ற பாகங்களில் நரம்பு சம்பந்தமான உபாதைகள் குணமாகும். சித்த மருத்துவம், ஹோமியோபதி மருந்துகளை உண்டு. நோயை குணப்படுத்தி கொள்வீர்கள். கடவுள் வழி பாடுகளும் செய்வீர்கள்.

சனி பகவான் ஏழாம் பார்வையாக தொழில் ஸ்தானத்தை பார்ப்பது செய்யும் தொழிலை விட்டு வேறு தொழிலுக்கு மாறுவதும், இடம் விட்டு இடம் மாறுவதும், பணியாளர்களுக்கு பதவி உயர்வு வந்து வெளியூர் செல்லும் வாய்ப்பை பெறுவீர்கள். ஆடம்பர பொருட்கள், வாகனங்கள் பேன்ஸி பொருட்களுக்கு வருமானம் பெருகும். இருந்தாலும் கூட்டு தொழில் செய்பவர்களுக்கு சோதனையும் சில சிரமங்களும் வந்து சேரும். இருந்தாலும் எல்லாவற்றையும் சாதனையாக செய்து முடிப்பீர்கள். சூரியன் உங் களின் ராசிநாதன் என்பதால் தந்தை மகன் உறவில் சில சச்சரவு வந்து மறையும். கணவன் மனைவி உறவு குழப்பமாக இருந்தாலும் பெரிய பாதிப்பை தராது. சுமையாக இருந்து வந்த கடன் தொல்லை மறைந்து வளமான வாழ்வு அமையும். சுப விரைய செலவுகளை செய்து நீங்கள் நினைக்கும் வாய்ப்பு களை பெற்று திகழ்ந்திட இது சரியான காலமாக அமையும். வருமானத்திற்கு தகுந்த செலவுகளை செய்து வருவீர்கள். யாருக்கும் பிணையம் இடு வதும், கூட்டு தொழில் செய்வது சனி தனுசுக்கு செல்லும் காலம் 2017 வரை தவிர்ப்பது உங்கள் பெயரின் சொத்து வாய்க்காமல் இருப்பது நல்லது.



**பரிகாரம்:** காளியம்மன், துர்க்கையம்மனுக்கு குங்குமம் அபிசேகம் செய்து சூலத்திற்கு எலுமிச்சை குத்தி வெண்பூசணி விளக்கு நல்லெண்ணெயில் போட்டு வணங்கி வர சகல தோசமும் நீங்கி நன்மையை பெறுவீர்கள். அமாவாசையன்று பிதுர்களுக்கு பச்சரிசி எள் கலந்து வெல்லம் சேர்த்து பிண்டம் பிடித்து மூன்று பிண்டம் கடற்கரை அல்லது ஆற்றங்கரையில் வைத்து வணங்கி வர சகல பாவங்களும் நீங்கி நன்மையை பெறுவீர்கள்.

### கெட்ட கனவுகள் வராமலிருக்க

கீழ்கண்ட சுலோகத்தை படுக்கையில் அமர்ந்து ஜெபித்து விட்டு தூங்க கெட்ட கனவுகள் வராது.

"அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம்
ஸோமம் ஜனார்த்தனம் ஹம்ஸம்
நாராயணம் க்ருஷ்ணம் ஜயேத்
துர்ஸ்வப்ன சாந்தயே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணன் தொடர்ந்து சொன்னான்: "அண்ணா! அருமைத் தங்காய் சுபத்திரை! "இந்த இரண்டு பேரும் தம்பதிகளே இதில் என்ன சந்தேகம். மேலும் வத்ஸலையை அபிமன்யூவுக்குக் கொடுப்பதில் நாம் ஏதாவது குலம் கோத்திரம் விசாரிக்க வேண்டுமா என்ன? என்றைக்கு இருந்தாலும் வத்ஸலையை உன் மகன் அபிமன்யூவுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பது சத்தியமே!" என்று வாக்குக் கொடுத்தீர்கள். அந்த நேரம் நம்மிடையே நாரத முனிவரும் எழுந்தருளி இருந்தார்.

"அவர் உன்னை ஒன்று கேட்டார்: "பலராம சக்கரவர்த்தியே! நீர் இப்போது வாக்குக் கொடுத்து நிறைவேற்றுவது தான் சத்தியம் செய்வதற்கு அழகு" என்றார். நீ "உடனே, நான் ஒரு நாளும் வாக்கு மாறமாட்டேன்" என்று கூறிவிட்டு இப்போது உன் சத்திய வாக்கைக் காற்றில் பறக்க விடலாமா?" என கிருஷ்ணன் வினவினான்.

அதைக் கேட்ட பலராமன் சொன்னான்: "கேசவா நான் சொல்லும் வேளையில் பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்தத்தில் பூபதிகளாக இருந்ததால் அவ் வண்ணம் சொன்னேன். இப்போதோ அவர்கள் தங்கள் இராஜ்யம், சொத்து, சுகம் இழந்து வனவாஸத்தில் அல்லவா இருக்கிறார்கள்? நமது சகோதரி மகன் அபிமன்யூவோ நம் சிற்றப்பா, விதுரர் போஜனையில் வளர்ந்து வருகிறான். இந்த நிலையில் நம் மகள் வத்ஸலையை அவனுக்குக் கொடுக்க யார் சம்மதிப்பார்கள்?" என்றான்.

உடனே கிருஷ்ணன் சொன்னான்: "அண்ணா! இனி உங்கள் இஷ்டம். அண்ணியும் இதற்குச் சம்மதிக் கிறாள் என்னும் போது நான் மேலும் வீண் வாதம் செய்வதில் பயன் இல்லை. எல்லாம் பகவத் சங்கற்பம் போல் நடக்கும் என்பதை மறந்து விடாதே!" என்று பதில் சொல்லி விட்டு வாசுதேவன் அந்தப்புரத்திற்குப் போய்விட்டான்.

சகுனியும் பலராமனும் கிருஷ்ணன் அரண்மனையை விட்டு வெளியே வந்தனர். சகுனியை மீண் டும் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று பலராமன் அவர் கையில் தன் சம்மதத்துடன் வத்ஸலா லெட்சணன் திருமணத்திற்கு லக்கினப் பத்திரிக்கையைக் கொடுத்து அனுப்பினான்.

# வாக்குத் தவறிய பலராமன்!



அதைக் கைப்பற்றியதும் சகுனி க்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

அஸ்தினாபுரத்திற்குத் திரும்பி, நடந்த விவரங்களை துரியோதனிடம் சொன்னான் சகுனி. முகூர்த்த லக்னப் பத்திரிக்கையும் பார்த்து துரியோதனன் அதிக சந்தோஷம் கொண்டாடினான்.

இந்த முகூர்த்தப் பட்டோலையை பிதாமகர் பீஷ்மரிடமும் துரோணரிடமும் துரி யோதனன் காண்பித்தான். அப்போது அவர்கள் "இதில் வாசுதேவன் கிருஷ்ணன் கையொப்பம் இடவில்லையே? ஆக இது நிச்சயம் நடைபெறும் என எங்களுக்குத் தோன்றவில்லை" என்றார்கள்.

இவ்வாறு அவர்களும் ஏனைய பெரியோர்களும் சொன்னதைக் கேட்டு துரியோதனன் பெரிதும் கோபப்பட்டான்.

அதற்கு மேலும் "நாம் சீறி நமக்கு என்ன லாபம்?" என அவர்கள் சும்மா இருந்தனர். உடனே துரியோதனன் அஸ்தினாபுரத்தில் உள்ள தன் இஸ்டமித்ர பந்து ஜனங்கள் மற்றும் பரிவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சைன்யம் புடை சூழத் திருமண கோலத்துடன் தன் மகன் லெட்சணனையும் தன் மனைவி பானுமதியையும் அழைத்துக் கொண்டு துவாரகைக்குக் கிளம்பினான்.

துரியோதனன், சகுனி சைன்யங்கள் உட்பட இவ்வாறு போகும் வழியில் ஹரித்வார் வந்ததும் அவனுக்கு ஓர் அரிய யோசனை உதித்தது. உடனே அதைத் தன் மாமா சகுனி காதில் போட்டான்.

"மாமாஜி! நமது குமாரன் லெட்சணனுக்குக் கட்டாயம் பலராமச் சக்கரவர்த்தி தன் மகள் வத்ஸலாவைத் திருமணம் செய்து வைப்பது என்பது உறுதியா யிற்று. இனி ராம கிருஷ்ணார்கள் நம் பக்கம் தான் இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆக, இந்தச் சேதியை ஓர் கடிதத்தில் எழுதி அதை ஹரிபத்தையான சுபத்திரைக்கு ஓர் தூதன் மூலம் அனுப்பினால் என்ன?அவளோ இதே ஹரித்வாரி சிற்றப்பா விதுரர் வீட்டில் தான் இருக்கிறாள். அனுப்ப லாமா என்ன?"

"நீ கடிதம் எழுதிக் கல்யாண ஏற்பாட்டை அவளு க்கு அறிவிப்பதில் உனக்கு என்ன லாபம்?" என்று சகுனி கேட்டார்.

"மாமாஜி! கடிதம் மூலம் இந்தச் சேதி தெரிந்ததும் சுபத்திரை துடியாகத் துடிப்பாள். அவள் சோகம் தாங்காமல் உயிர் துடிப்பாள். இதை அவள் மகன் அபி மன்யூ பார்ப்பான். அவனால் அவன் தாயை இந்நேரம் பிரிய முடியாமல் தவியாய் தவித்து அவனும் செத்துப் போவான். எனக்கு இப் போது தோன்றிய யுக்தி இது. இப்படி நாம் செய்ய லாமா?"

"அப்பா மருமகனே! மகா ராஜா! நமது நல்ல காலத் திற் குத்தான் புத்தி எல்லாம் இப்படிப் போகும்! சீக்கிரமே மடல் தீட்டு. சுபத் திரைக்கு இந்தச் சுபச்சேதி தூதன் மூலம் போகட்டுமே!" என்றான் சகுனி.

உடனே கடிதம் எழுதி ஹரித்வாரில் சுபத்திரையிடம் கடிதத்தைச் சேர்ப்பித்து விட்டுத்தான் அவர்கள் அங்கிருந்து மீண்டும் தம் துவாரகைப் பயணத்தை துவங்கினார்கள்.

சுபத்திரை கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு மிகவும் மனம் நொந்தாள். நம் புதல்வனுக்கு நிச்சயித்து இருந்த வத்ஸலாவை துஷ்டன் துரியோதனன் தன் குமாரனுக்கு மனம் புரிய நேர்ந்ததே. இனி நம் உடன் பிறந்தவர்கள் ஆதரவு. அது ஏன் பிறந்த வீட்டில் இருந்து நாம் எந்த சகாயத்தையும் எதிர்பார்க்க முடியாது!" என்று நினைத்து நினைத்து மறுகினாள். மூர்ச்சையுற்று கீழே தடால் என விழுந்து விட்டாள்.

அவள் அப்படி ஏன் மூர்ச்சையானாள் என்ற சேதி விதுரர் முதலியவர்களுக்கும் தெரியாது. அவள் வீட்டு முன்புறம் விழுந்து கிடந்ததைப் பார்த்த அபிமன்யூ முதலில் மனம் கலங்கினான்.

பின்னர் அவளுக்கு மூர்ச்சை அகன்றதும் எந்தவிதச் சலனமும் ஏற்படவில்லை. அவன் தன் தாயை ஆசுவாசப் படுத்தி விட்டுத் தைரியம் சொல்லி அவளைத் தேற்றினான்.

அபிமன்யூ தன் தாயிடம் பேசுகிறான்: "அம்மா நீங்கள் இதற்காகவா மனம் கலங்கினீர்கள்? அந்த வத்ஸலையை நான் மணந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே கருணாநிதியாகிய கடவுள் அந்தச் சேதியைத் துரியோதனன் மூலம் நமக்கு அனுப்பி இருக்கிறார் என்று நினைத்துக் கொள்ளுங்கள்!

"நான் யார் மகன்? வீரசிகாமணி விஜயன் புத்திரன் என்பது உண்மையானால் நாளை உதயத் திற்குள் அந்த வத்ஸலாவை மணந்து கொள்கிறேன். இது நிச்சயம்! இப்போதே எனக்கு ஒரு ரதமும் சாரதியும் கிடைத்தால் போதும்!" என்றான்.

இதைக் கேட்ட சுபத்திரை சந்தோஷம் அடைந்தாள். விதுரருடைய ரதத்தைப் பெற்றாள். ஏற்கெனவே தனக்கு சாரத்தியம் நன்கு தெரியும் என்பதால் சுபத்திரை தேரைத் தானே ஓட்டிச் செல் வதாக கூறினாள். புரவிகள் பூட்டிய ரதத்திற்கு விதுரர் ஏற்பாடு செய்தார். அது வந்ததும் முன் தட்டில் சுபத்திரை ஏறினாள். பின் தட்டில் அபிமன்யூ ஏற, ரதம் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்து சென்றது.

அபிமன்யூ சாரத்தியம் செய்யும் தன் தாயிடம் அப்போது சொன்னான்:

"அம்மா! நாம் இன்னும் இரண்டு யாமத் திற்குள் துவாரகை போக வேண்டும்.

ஆகவே நான் அஸ்தி ரங்களால் இந் தக் காட்டில் உள்ள மரம், செடி, புதர்களை அடித்து நொறுக்கிப் புதிய சுருக்கப் பாதையை உண்டாக்கு கிறேன். அதிலே தாங்கள் ரதத்தை ஓட்டுங்கள்!" என்று சொல்லி அஸ்தி ரங்களை மழைச்சரங்கள் என பொழிந்தான். காடுகள் அழிந்தன. பாதை உண்டாயிற்று. அதில் ரதம் போய்க் கொண்டிருக்கிறது.

அன்று இரவு நடுச்சாமத்தில் அந்த ரதம் கடோத்கஜன் என்னும் அசுரன் வசிக்கும் காட்டை அவ் வாறு அழித்துச் சென்றதால், அந்த வனத்தைப் பாதுகாக்கும் அசுரப்படைகள் அபிமன்யூவின் தேரை நோக்கி சில பாணங்களை வீசினார்கள்.

அபிமன்யூ அந்தச் சரங்களை முறியடித்து விட்டு பாணம் எறிந்த அவர்களுடைய கைகளையம் தன் அம்புகளால் துண்டித்து விட்டான்.

இந்த சேதியை அவர்கள் கடோத்கஜனிடம் சொல்ல அவன் மிகவும் கோபாவேசத்துடன் தன் அசுரப் படைகளை நடத்தி வந்து அபிமன்யூவிடம் போர் செய்தான்.

*ஏ.எஸ்.வழித்துணை ராமன்*

### இராமர் வழிபாடு

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம
வென்றிரண்டெழுத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாவங்கள் போக்கிடும் புனித வேங்கடாத்ரி

**கீழ்த்திருப்பதியிலிருந்து திருமலை செல்ல பேருந்து வசதி உண்டு. போக ஒரு பாதை, வர ஒரு மார்க்கம், தூரம் 24 கிலோ மீட்டர், இரண்டுமே வளைவுகளையுடைய மலைப்பாதை.**

நடந்து செல்ல நேர்ந்து கொண்டவர்களுக்காக சோபன மார்க்கம் உள்ளது. அது பதினோறு கிலோ மீட்டர் தூரம் தான். இதில் முழங்கால் முடிச்சு எனப் படும் குத்துயரப்படிகளும் இருக்கின்றன. இதன் முடிவில் மைதிலி ஆனந்தராஜா கட்டிய காலி கோபுரத்தைக் காணலாம். இரண்டாவது மலைமேல் செல்லும் பாதையையும் இவர் வம்சத்தவரே அமைத் திருக்கின்றனர். இப்பாதை முடிவில் இளைப்பாற ஸ்ரீஇராமானுஜர் கோயில் இருக்கிறது.

இப்பாதையின் வழியில் ஒரு மணிமண்டபத்தைப் பார்க்கலாம். கி.பி.14ஆம் நூற்றாண்டில் இந்த மண்டபத்தில் சந்திர கிரியைச் சேர்ந்த ஸ்ரீரங்கநாத யாகவராயர் ஒரு பெரிய மணியைக் கட்டியிருந்தார். ஏழுமலையானக்கு மகாநைவேத்தியமானதும் இந்த மணியை அடிக்க ஒரு ஆளையும் நியமித்திருந்தார். திருமலை மணி சப்தம் இந்த மலையில் எதிரொலிக்கும். உடனே ராயரின் பணியாள் இந்த மணியை அடிப்பார்.

இந்த மணியோசையைக் கேட்ட பின்னர் தான் ஸ்ரீபாகவராயர் சாப்பிட அமர்வார். திருமலையில் தங்க சந்திரகிரியார் கட்டிய மாளிகை இன்றும் கம்பீரமாக நிற்கிறது.

சப்தகிரி வாசனின் சப்தகிரிகளையும் பார்ப்போம்.

1. வேங்கடாத்ரி வேம் என்றாம் பாபம். கட என்றால் நாசமாதல். ஸ்ரீசைலத்துக்கு மேற்கே நந்தன புரம் என்ற நகரில் மாதவன் என்ற அந்தணன் தன் மனைவி சந்திரரேகாவுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். காலக்கோளாறால் துணைவியை விட்டு ஒரு புலையர்மகளோடு கூடி வாழ்ந்தான். மது அருந்தினான். மாமிசம் புசித்தான். பொருளுக்காக வழிப்பறியும் செய்தான்.

வயோதிகமும் நோயும் தாக்க சேர்த்துக் கொண்டவள் இகழ்ந்து ஒதுக்கினாள். ஆதிசேஷன் வடிவாகிய இம்மலையில் பாதம் பதித்ததும் சடசடவென்று அவனைத் தீ சூழ்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் அதுவே அடங்க, மாதவன் தீவினைகள் பொசுங்க தேஜஸோடு நின்றான். அங்கிருந்த மகரிஷிகள் அவன் வரலாற்றைக் கேட்டறிந்து அதிசயித்தனர். பாவங்களை வேகவைத்த இந்த கிரிக்கு வேங்கடாத்ரி எனப் பெயர் சூட்டினர். பிருகு முனிவருக்கு நாரதர் உரைத்த சரிதம் இது.

2. சேஷாத்ரி: ஆதிசேஷனுக்கு ஒரு சமயம் "எம் பெருமானுக்குப் படுக்கையானோம். உலகைத் தாங்குகிறோம்" என்ற மமதை ஏற்பட்டது. அப்பொழுது திருமாலை தரிசிக்க வாயு திருப்பாற்கடலுக்கு வந்தார். இறைவன் திருமகளோடு ஏகாந்தமாயிருந்த நேரமிது. அனந்தன் "இங்கே வரக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ" என்றார்.

3. வாயுதேவன் நகைத்தபடி, "நான் நுழையாத இடமே கிடையாது. என்னைத் தடுக்க நீ யார்?" என்று கேட்டார். "இந்த இடத்தில் நானே அதிகாரி. ஸ்ரீமத் நாராயணருக்குப் படுக்கையாகவும் குடையாகவும் ஆசனமாகவும் இருந்து அருந்தொண்டாற்றுபவன். நீயும் பெருமாளுக்கு எவ்விதத்திலாவது நெருக்கமானால் என் முன் நிற்கும் தகுதி பெறுவாய்" என்றார் சேஷன்.

"தற்புகழ்ச்சி தகாது. பிறர் அல்லவோ புகழ வேண் டும்?" என்று வாயு கூற, திருமகள் மணாளர் அங்கே வந்தார். நடந்ததை இருவரும் உரைத்தனர்.

ஸ்ரீஹரி ஆதிசேஷனார் செருக்கடக்க, "வாயு இல்லாவிட்டால் எந்த ஜீவனும் மூச்சுவிடமுடியாது. உலகங்களை நீ தாங்கியதாய் எண்ணாதே! அகிலாண்டங்களையும் ஆமைவடிவில் நானே தாங்குகிறேன். வாயு எனக்கு அந்தரங்கன்" என்றார்.

சேஷன் திருமாலின் திருவடிகளை நமஸ்கரித்து, "ஸ்வாமி! நான் மேரு பர்வதத்தை இறுகச் சுற்றிக் கொள்கிறேன். இந்த வாயு என்னிலும் வலிமையுடை யவனாயின் அதைப் பெயர்க்கட்டும்" என்றார்.

பகவான், சேஷன் அறியாதபடி வாயுவுக்கு "ஒப்புக்கொள்" என்று சமிக்ஞை செய்ய, வாயு மகிழ்ச்சியாய் சம்மதித்தார். ஆதிசேசன்பெருகிமலையே தெரியாத அளவு அதைச் சுற்றிப் பிணைக்க, நிலத்தோடு மேருபர்வதத்தைப் பெயர்ந்து ஒன்றரை லக்ஷம் யோசனைக்கு அப்பால் ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையிலுள்ள ஒரு சோலையில் தள்ளினார் வாயு.

ஆதிசேஷன் கர்வம் அடங்கி ஸ்வாமி தீர்த்தத்திற்கு வாயு திசையிலுள்ள நாகதீர்த்தத்தின் கரையில் திருமாலை நினைத்து நீண்ட காலம் தவமிருந்தார். தனக்கு எத்தனை வேண்டியவராக இருந்தாலும் தன்னைப் பார்க்க வரும் தொண்டர்களைத் தடை செய்தால் பொறுக்க மாட்டார் பகவான். சனகாதியரைத் தடுத்த ஜயவிஜயர்கள் சாபம் பெற்றபோது மகாவிஷ்ணு சாட்சியாகத்தானே நின்றார்.

திருமால் சேஷனுக்குக் காட்சி கொடுக்க, அனந்தன் தன் பிழை பொறுக்குமாறு வேண்டினார். ஆதிசேஷன் கோரியபடி அவரை கிரியாக்கி அவர் மீது ஐயன் நின்று அருள் பாலிக்கிறார். சேஷன் தரிசனம் பெற்ற இடம் சேஷாத்ரி ஆயிற்று.

4. வேதாத்திரி: வேதங்களெல்லாம் மலைவடிவில் ஸ்ரீனிவாசனை ஆராதிப்பதால் இப்பெயர் வந்தது. வேதகிரி என்றும் அழைப்பார்.

5. கருடாத்ரி: "பூலோகவாசிகளுக்கு அருள்புரிய ஓரிடத்தில் நிலைபெற விரும்பினோம். ஆதலால் நீ பரமபதம் சென்று தூயகுன்றம் ஒன்றைக் கொண்டு வா" என்று கருடனுக்குக் கட்டளையிட்டார் வராகமூர்த்தி. வைனதேயன் அப்படியே ஒரு பர்வதத்தை எடுத்துவர, கௌதமி நதிக்குத் தெற்கே ஆறு யோசனை தூரத்தில் கிழக்கு சமுத்திரத்துக்கு மேற்கே ஸ்வர்ணமுகி நதிக்கரையில் அதை வைக்கச் சொன்னார் பெருமாள். அந்த மலையின் மேல் ஸ்வாமி புஷ்கரணிக்கு வடமேற்கே விமானத்துடன் அமர்ந்தார் ஆதிவராகர். தேவர்கள் பிரார்த்தனைப்படி சாந்தவராகராக பூமாதேவியை மடியில் இருத்திக் கொண்டு சேவை சாதிக்கிறார். இவரைத் தரிசித்த பிறகே ஸ்ரீனிவாசரைச் சேவிக்க வேண்டும் என்கிறது வராக புராணம். கருடன் எடுத்து வந்ததால் அவர் பெயர் கொண்டு விளங்குகிறது.

6. விருஷபாத்திரி: திருவேங்கடவர் சேனைநாதரைப் பார்த்து, "வேட்டைக்குப் போக வேண்டும். சேனைகளோடு புறப்படுக" என உத்தரவிட்டார். குதிரைமேல் சென்ற பகவான் வனவிலங்குகளை வேட்டையாடிக் களைத்தார். ரிஷபாசுரன் ஸ்வாமியை எதிர்க்க, சம்பரனை ரிஷபனோடு போரிடச் சொன்னார் பிரபு. சேனைமுதலியாரும் பாணங்களை ஏவினார். விண்ணில் மறைந்து மாயமாய் அம்புகளை விட்டான் ரிஷபன். பெருமாள் சுதர்ஸனத்தை வீச, சக்கரப்படை ரிஷபன் உடலைத் துண்டு துண்டாக சோதித்தது. விருஷபன் கோரியபடி அவன் பெயரை இம் மலைக்குச் சூட்டினார் சப்தகிரி வாசன் என்கிறது பிரமாண்ட புராணம்.

7. அஞ்சனாத்ரி: அஞ்சனா தேவி புத்திரப்பேறு வேண்டி இம்மலையில் தவமிருந்தாள். வாயுபகவான் தினமும் ஒரு கனியை அவளுக்குக் கொடுத்து வந்தார். ஒரு நாள் சிவபெருமாள் உமா தேவியோடு இப்பர் வதம் வந்தார். ஒரு கடு வன் (ஆண் குரங்கு) தன் மந்தியோடு களிப்புற்று விளை யாடுவதைக் கண்டு இருவரும் குரங்கு வடிவமெடுத்துக் கூடி மகிழ்ந்தனர். அப்போது சிவவீரியம் வெளிப்பட, அதை ஒரு இலையில் பெய்து வாயுவிடம் அளித்தார்.

வாயு அதை அஞ்சனையிடம் கொடுக்க, வெண்மையான கனி என நினைத்து அதை விழுங்கினாள். அஞ்சனை அக்கணமே கருவுற்றாள். "தவம் செய்த தான் கர்ப்பவதியானதெப்படி?" எனக் கலங்க "அஞ்சனா, அஞ்சாதே! உன் வயிற்றில் வளர்வது சிவ பெருமான் தேஜஸ். அதன் வெப்பத்தால் வாயுவின் உள்ளங்கை வேர்த்து அவன் வீரியமும் இணைந்து விட்டது. இவன் சிரஞ்சீவியாய் சாதனை கள் படைப்பான். எம்பெருமாள் தசரத மைந்தனாய் அவதரித்து துஷ்டசம்காரம் செய்கையில் அவருக்கு வாகனனாய், தூதனாய் சிறிய திருவடி என்று போற்றப்படப் போகிறான். அச்சத்தை விடு" என ஆகாயவாணி கேட்டது. அஞ்சனை அவ்வளவோடு தவத்தை முடித்துக் கொண்டு ஆஞ்சநேயரைப் பெற்றெடுத்தாள்.

**தொடரும்**

**சிவன் வழிபாடு**

நம்மானம் மாற்றி நமக்கருளாய் நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல் புரிந்தானை
அம்மானை அந்தணர் சேரும் அணிகாழி
எம்மானை எத்தவல்லார்க்கு இடர்இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## கன்னி

**வானத்தை போல விரிவான எண்ணம் கொண்டு விளங்கும் கன்னி ராசி வாசகர்களே!**

உங்களின்ராசிக்குதைரியஸ்தானத்தில்அமர்ந்து பஞ்சம ஸ்தானத்தையும் பாக்கிய ஸ்தானத்தையும் விரைய ஸ்தானத்தையும் பார்வை இடுகிறார். இது வரை ஏழரை சனி நடந்து வந்து ஏழரை ஆண்டு பல சோதனைகளையும் கஷ்டங்களையும் அடைந்து வந்தீர்கள். இனி அதிலிருந்து விடுபட்டு சனி யோக சனியாக அமர்வது உங்களின் வாழ்க்கை வளம் பெற போகிறது. உங்களின் ராசிக்கு மூன்றாமிடமான தைரிய வீரியஸ்தானத்தில் சனி அமர்வது மேலும் சிறப்பாக அமையும். சனி ராசிக்கு 3, 6, 11இல் அமர நன்மையுண்டு என்று சோதிட நூல்கள் சொல்கிறது.



ஏழரை சனி விடுபட்டு வாழ்க்கையின் நல்ல பலன்களை அடைய ஆறு மாதம் கழித்து நன்மைகள் தொடரும். மருத்துவமனைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் பதவி உயர்வு உண்டாகும். போட்டிகளில் வெற்றி பெறுதல் பொருளாதாரத்தில் நன்மை பேச்சில் திறமையும் உண்டாகும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். ஐந்தாமிடமான பஞ்சமஸ்தானத்தை பார்ப்பதால் புத்திரர்களின் திருமண வாய்ப்பும் புதிய மனைகட்டுதல், காலி மனை வாங்குதல், மேல் மாடி எடுத்தல் சுற்று சுவர்கள், தோட்டங்கள் அமைத்தல் போன்ற வளர்ச்சியை பெறுவீர்கள். இதுவரை தெய்வ வழிபாடு செய்யாதவர்கள் கூட தெய்வ வழிபாடுகளை செய்வதும், தெய்வங்களை உபாசனை செய்வதும் அமையும். பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் உண்டாகும். குடும்பத்தில் பாகப்பிரிவினை உண்டாகலாம். இதனால் உங்களுக்கு ஆதாயமே இல்லை. எழுத்துகளை நன்றாக படித்த பின்பு தான் கையொப்பமிட விட வேண்டும். எதிலும் கவனமுடன் இருந்தால் எந்த பிரச்சினையும் வராமல் தவிர்ப்பது நல்லது.

பாக்கிய ஸ்தானத்தை பார்வை பெறுவது தந்தை மகன் உறவு பாதிப்பை தரும். கவலையும் ரீதியான பாதிப்பை தரும். விரையாதிபதி சூரியன் வீட்டை சனி பார்வை இடுவது உங்களின் இரவு நேர தூக்கம் கெடும். அன்னிய தேசம் மணல் பாங்கான இடங்களுக்கு பயணம் செய்வீர்கள். நிலத்தை தோண்டும் சுரங்கத் தொழிலாளர்களுக்கு பொருளாதார வாய்ப்புகள் பெருகும். இருக்கும் இடத்திலேயே உதவியை பெறுவீர்கள். அரசாங்க காரியம் அலைச்சலில் முடியும். தாயார் உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும். சுய தொழிலில் நல்ல பலனை அடைவீர்கள். எதிர்காலத்தின் நலன் கருதி செயல்படுதல் நல்லது. தன்னை சார்ந்தவர்களும் முன்னேற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். விவசாயம் பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் மீது அதிக லாபம் பெற வாய்ப்புள்ளது. ஏற்றுமதி இறக்குமதிக்கு வாய்ப்பு கிட்டும். வீட்டின் மேல்மாடி எடுக்க வாய்ப்புள்ளது. கணக்கு பார்ப்பதில் உங்களை மிஞ்ச யாரும் முடியாது. சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அச்சகம் பத்திரிகை துறையினருக்கு வளமான எதிர்காலம் உண்டாகும்.

**பரிகாரம்:** சனிக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு செவ்வரளி பூ போட்டு தேங்காய் துருவல் வெல்லம், பச்சரிசி மாவு கலந்த உணவு நைவேத்தியம் செய்து வர தடைகள் நீங்கி நன்மையை பெறுவீர்கள். காக்கைக்கு எள் கலந்த சாதம் சனிக்கிழமை வைத்துவர தொழிலில் நன்மை அடைவீர்கள்.

### ஏழரை நாட்டு சனி நீங்க

கீழ்கண்ட சுலோகத்தை தினசரி பாராயணம் செய்து வர ஏழரை நாட்டு சனீஸ்வரரின் தொல்லைகள் நீங்கும்.

"நமஸ்தே கோணஸம்ஸ்தாய பிங்களாய நமோஸ்துதே
நமஸ்தே பப்ருரூபாய க்ருஷ்ணாயச நமோஸ்துதே
நமஸ்தே ரௌத்ர தேஹாய நமஸ்தே சாந்த காயச
நமஸ்தே யமஸம்ஜ்ஞாய நமஸ்தே ஸௌரயே விபோ
நமஸ்தே மந்தஸம்ஜ்ஞாய சனைசக்ர நமோஸ்துதே
ப்ரஸாதம் மம தேவேச தீநஸ்ய ப்ரணதஸ்யச"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி

**ஐய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**



*தான் அறிந்த விடயங்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் கன்னிராசி வாசகர்களே!*

*இம்மாதம் உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தையும் லாபஸ்தானத்தையும் பார்க்கும் செவ்வாயும், லாபஸ்தானத்தில் அமர்ந்து குருவும் பல நன்மைகளையும் பொருளாதார வளர்ச்சிகளையும் தருவார்கள்.*

**பணியாளர்களுக்கு:**

பணியாளர்களின் சோதனைகளுக்கு விடிவு காலம் வந்து இனி தொட்டதெல்லாம் நன்மை யாக அமையும். ராகு திசை நடப்பவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமையும். அன் னிய மதத்தவர்கள் உதவி கிட்டும். சோதனைகளை அனுபவமாக எடுத்து கொள்வீர்கள். பொருளா தாரம் நன்றாக இருக்கும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது நலனில் சொந்த விருப்புக்கு இடம் தராமல் மற்றவரின் நலனில் அக்கறை கொண்டு செயல்படுவீர்கள். குடும்பத்தில் சிலரின் செயல் களில் மனவருத்தம் உண்டாகும். அரசாங்க காரியம் அனுகூலமாக அமையும். பொருளாதார நிலை உயரும்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்ப்பது பலரின் போட்டி வாழ்க்கைக்கு சிறந்த வளர்ச்சி யாக அமையும். வியாபாரத்தில் தேக்க நிலை மாறி வளர்ச்சியை தரும். பணியாளர்கள் உங்களின் கட் டுபாட்டுக்குள் வருவார்கள். கவரிங், செயற்கை பொருட்களுக்கு நல்ல ஆதாயம் கிட்டும்.

**கலைஞர்களுக்கு:**

கலைத்துறையினர் வளர்ச்சி பாதையில் செல் வீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வந்து சேரும். ரசிகர்களின் ஆதரவு பெருகும்.

**பெண்களுக்கு:**

பெண்கள் சுயதொழிலில் படிப்படியாக வளர்ச்சி பெறுவீர்கள். பல சோதனைகளிலிருந்து விடுபட ஆரம்பித்து விடுவீர்கள். முக மலர்ச்சி யுடன் செயல்படுவீர்கள். திருமண வாய்ப்புகள் சிலருக்கு அமையும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெறும். தொழில் நுட்பகல்வி, கடல் சார்ந்த கல்விகளில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். ஆசிரியர் களின் ஆதரவு கிட்டும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

02.12.2014 செவ்வாய் இரவு 01.21 முதல் 06.12.2014 வெள்ளி அதிகாலை 05.53 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

தந்தையின் பூர்வீக சொத்து சம்பந்தமான பேச்சு நடக்கும். குடும்ப ஒற்றுமைக்கு ஒன்று கூடி பேசு வீர்கள். குலதெய்வம் அனுக்கிரகம் கிடைக்கும். பணவரவு வரும்.

**அஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

எந்த தொழிலாக இருந்தாலும் நெடு நாளுக்கு பயன்படும் வகையில் எதிர்காலத்தில் பயன்படும் படியும் அமைக்க சரியான நேரம் என்பதால் முயற்சி செய்தல் நல்லது.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:**

சின்ன பிரச்சினை என்றாலும் அதை உடனே தீர்த்து வைக்க வேண்டுமென்று எண்ணுவீர்கள். குதிரை கொம்பு போல தெரிந்தாலும் எளிதில் எல்லாம் நன்மையாக அமையும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

பச்சை, இளம்மஞ்சள், நீலம்.

**அதிர்ஷ்ட திசைகள்:**

தென்மேற்கு, வடக்கு, கிழக்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

புதன், வியாழன், சனி.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

நவக்கிரக வழிபாடு ஞாயிற்றுகிழமை ராகு காலத்தில் வணங்கி கோதுமை மாவு, சர்க்கரை கலந்த பாயாசம் வைத்து வணங்கி வர சகல காரியமும் நன்மையாக அமையும்.

## எதிரிகளின் தொந்தரவு நீங்க

* கீழ்க்கண்ட சுலோகத்தை ஹனுமானை வழிபட்டு பாராயணம் செய்து வந்தால் எதிரிகளின் தொந்தரவு நீங்கும்.
* "ஓம் நமோ பகவதே ருத்ர
* வதனாய பூர்வகபி முகே
* ஸகல சத்ருஸம் ஹாரணாய ஸ்வாஹா!!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய எண்ணம் நிறைவேற உடன்படுவேன். அதன்பின் இமயம் சென்று விடுவேன். இந்தக் குகையின் ஒரு மூலையில் சில அபூர்வ மூலிகைகளை நான் பதப்படுத்தி வைத்திருக்கிறேன். அது விஷமுறிவு மூலிகை. ஒரு சாடியில் அது பத்திரமாக இருக்கிறது. எத்தகைய விஷயத்தையும் அது முறித்து விடும்.

கொடிய ராஜநாகம் தீண்டிய மனிதனும் அந்த மூலிகையால் பிழைத்துக் கொள்வான். ஆனால் விஷ உபாதை ஏற்பட்ட பதினெட்டு மணி நேரத்துக்குள் பாதிக்கப்பட்ட மனிதனின் நாசித் துவாரத்தில் அந்த மூலிகைச் சாற்றை விட வேண்டும்.

அதன் மூலம், இறந்து கொண்டிருப்பவன் உயிர் பெற்று எழுவான். இதுவரை பிறருக்கு வெளிப்படுத்தாமல், நான் ரகசியமாக வைத்திருந்த மருத்துவ முறை இது. குரு பக்தியில் இணையவற்றவனான உனக்கு இந்தச் சமயத்தில் நான் இதனைப் பரிசாக அளிக்கிறேன்.

அன்பானவனே! இன்றிரவு நான் உண்ணப் போகிற உணவில் விஷத்தைக் கலந்து கொடுக்க, அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அவர்களது விருப்பப்படியே யாவும் இனிதாக நடந்தேறட்டும். நீ எப்போதும்போல் உனது கடமையில் கண்ணாயிரு. உணவுண்ட சிறிது நேரத்தில் நான் மயங்கி விழுந்து விடுவேன். எனக்கு விஷம் கொடுக் கப் போகிற சீடன், நான் சாப்பிட்டு முடிக்கும் வரை எனது நிழலாகவே தொடர்ந்திருப்பான். நான் இறந்ததை உறுதிப்படுத்திக் கொண்டு, அந்தத் தகவலை மற்றவர்களிடம் தெரிவிப்பதற்காகச் செல்வான்.

அந்த நேரத்தில் நச்சு முறிவு மருந்தை நான் உனக்குக் கற்றுக் கொடுத்த முறைப்படி பயன்படுத்தி னால் என்னைக் காப்பாற்றி விடலாம். நான் உனக்கு வைத்த இறுதித் தேர்வாகவே இதனை கருதிக் கொள்.

இதில் வெற்றி பெற்றால் நீ திறமைகள் அனைத்தும் பெற்ற முழுமையான புத்தத் துறவியாகி விடுவாய். நானும் இமயமலையை நோக்கிப் பயணம் போவேன்.

என் உடலை, என் வாழ்நாளில் கணிசமான பகுதியைக் கழித்த இந்தக் குகைக்குள்ளாகவே வைத்து மூடிவிடு. அதுவே என் இறுதி விருப்பம் என்பதை என் உடலைக் காணவரும் மக்களுக்குத் தெரிவித்து விடு. பிறகு, குகைவாயிலை யாரும் திறக்காதபடி அடைத்து வைப்பாய் என்றார் போதி தர்மர்.

தாம் அதுவரை பயன்படுத்தி வந்த தண்டத்தை ஹுய்கோவிடம் கொடுத்தார். பிறகு அவனுடன் ஷாவோலின் தேவாலயத்துக்குச் சென்றார்.

அவர்கள் மடத்தில் பிரவேசித்ததும், உண்பதற்கான உணவு வகைகள் தயாராக இருப்பதை அவர் கண்டார். வழக்கத்துக்கு மாறாக புத்தரின் சிலை முன்பாக அமர்ந்து, தமது உணவை உண்ணத் தொடங்கினார் போதி தர்மர்.

"சீன மண்ணில் நான் உண்ணும் இந்த இறுதி



# குகைக்குள் வைத்து மூடப்பட்டது போதி தர்மர் உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுக்கு புத்தபிரானே சாட்சி. அவர் எதிரில் அமர்ந்து உண்ணவே விருப்பம் என்றார்.

அந்த இரு சீடர்களும் உணவைப் பரிமாறி விட்டு, அவருக்கு அருகில் நின்றனர். போதி தர்மர் தம்முடைய பார்வையை அவர்கள் மீது திருப் பினார்.

அவர்களைக் கூர்ந்து நோக்கினார். அவர்களில் ஒருவனது கண்கள் கலங்குவதையும், அவனுடைய உடல் நடுங்குவதையும் கவனித்தார். பின்னர், தமது உணவை அமைதியாக உண்டு முடித்தார்.

சற்று நேரத்தில் அவர் மயங்கிச் சாய்ந்தார். அவருக்கு உணவில் நஞ்சிட்ட சீடன், அவரருகே சென்று நாசியில் கைவைத்துப் பார்த்தான். அவரு டைய நாடித் துடிப்பையும் பரிசோதித்தான்.



தன்னுடன் நின்றிருந்த சக சீடனிடம், போதி தர்மர் மறைந்து விட்டார்" என்றான். அவர்கள் மற் றவர்களுக்கும் அதைத் தெரிவிக்க அங்கிருந்து அகன்றனர்.

அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி ஹுய்கோ தன் குருநாதர் கட்டளைப்படி தான் செய்ய வேண் டிய காரியங்களைச் செய்து முடித்தான். பிறகு தன் இடத்தில் போய் அமர்ந்து கொண்டான்.

மடாலயத் துறவிகள் அங்கே விரைந்து வந்தனர். தங்கள் முகத்தில் அளவற்ற துயரத்தை அவர்கள் தேக்கியிருந்தனர். "தாமோ" என்று அழைக்கப்பட்ட போதி தர்மரின் உடலைச் சுற்றி அமர்ந்து கண்ணீர் விட்டனர். அந்தச் சோகமான இரவை அவர்கள் மவுனமாகக் கழித்தனர்.

பொழுது விடிந்தது.

நகரத்தின் மையத்தில் இருந்த புத்த மடாலயத் தலைமைத் துறவியும், அன்றைய சீன அரசின் சார் பாக அரண்மனை முக்கியஸ்தர்களும் ஷாவோலின் மடாலயத்துக்கு வந்து சேர்ந்தனர்.

போதி தர்மரின் இறுதிச் சடங்குகள் பற்றி விவாதம் நடந்தது. அப்போது ஹுய்கோ அவர் களி டம் சென்று, சோகம் தோய்ந்த குரலில், "பெரி யோர்களே! தம்முடைய இறுதி விருப்பத்தை குரு நாதர் நேற்று மாலையே என்னிடம் தெரிவித்து விட்டார்.

தம்முடைய மரணம் பற்றி அவர் முன்னே ஊகித்திருந்தார். தாம் இத்தனை காலமும் தங்கி யிருந்த மலைக்குகையில் தம் உடலைக் கிடத்தி, குகையின் வாயிலை நிரந்தரமாக மூடி விட வேண்டும் என்பதே அவருடைய செய்தி. சீடர்கள் தமது சமாதியைப் பாதுகாத்து, ஆராதனை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவர்கள் ஹுய்கோவின் வார்த்தைகளை ஏற்று, அவ்வாறே செய்வதென்று தீர்மானித்தனர். போதி தர்மரின் விருப்பப்படியே அவருடைய இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. துறவிகளும், அரண்மனை அதிகாரிகளும் தங்கள் இறுதி மரியா தையைச் செலுத்திச் சென்றபின், குடிமக்களும் அஞ்சலி செலுத்தினர்.

மூன்றாண்டுகள் கழிந்தன.

ஒரு நாள் அதிகாலை நேரம். பனி விழுந்து நிலமெங்கும் மலர்கள் சிதறியிருந்தன. அந்த அதிகாலை வேளையில், அவ்வழியே சென்ற உருவத்தைக் கண்ட எல்லைக் காவலர் ஒருவர் தாங்கள் தாமோ அல்லவா! என்றார்.

அந்தக் காவலர் போதி தர்மரின் மேற்பார் வையில் தற்காப்புப் போர்முறையைக் கற்றுத் தேர்ந்தவர். கோலொன்றில் தமது ஒற்றைக் கால ணியைக் கட்டி தொங்கவிட்டு, அதைத் தோளில் சுமந்த வண்ணம் சென்ற நபர் சற்றே நின்றார்.

எல்லைக் காவலர் நெருங்கி வந்து, கூர்ந்து கவனித்தார். "சந்தேகமே வேண்டாம். நீர் நினைப் பது சரிதான். நான் போதி தர்மன்தான். இதோ, எனது நீண்ட நாள் கனவான இமயத்தை நோக்கிப் பயணம் போய்க் கொண்டிருக்கிறேன்.

சீன மக்களின் நல்வாழ்வை நான் எங்கிருந்தா லும், எப்போதும் சிந்தித்திருப்பேன். எல்லாம் புத்த தேவனின் சித்தப்படி" என்ற போதி தர்மர், அங்கிருந்து நகரலானார்.

அந்தக் காவலன் மிகுந்த ஆவலுடன் கேட்டான், "தாங்கள் ஏன் ஒற்றைக் காலணியை நூலில் கட்டி, தோளில் சுமந்து செல்கிறீர்கள்?" போதி தர்மர் சிரித்தபடி சொன்னார். "என் கல்லறையைத் திறந்து பார்த்தால் உமது கேள்விக்கான பதில் கிடைக்கும்."

அந்தக் காவலன் குழம்பி நின்றான். அவனுள் வியப்பும் திகைப்பும் போட்டியிட்டன. போதி தர்மர் தொலைவில் நடந்து... நடந்து ஒரு புள்ளியாக மறையும் வரை அவன் அங்கேயே நின்றிருந்தான்.

அவன் செய்த அடுத்த காரியம் நேராக ஷாவோலின் மடத்துக்குச் சென்று, துறவிகளிடம் தான் கண்ட அதிசய நிகழ்வைத் தெரிவித்ததுதான்.

போதி தர்மர் உயிர்த்தெழுந்து, குகைக்குள் இத்தனைக் காலமும் இருந்திருக்கிறார்.

பூரண உடல்நலம் பெற்ற நிலையில் இங்கிருந்து வெளியேறி, இமயமலைப் பயணம் மேற் கொண்டிருக்கிறார்! ஊகித்த அவர்கள் புத்துணர்வு பெற்றனர்.

**தொடரும்**

**அழகர் நம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நட்சத்திரத்திற்கான தலவிருட்சம் (ஆலமரம்)

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்று பழமொழிச் சொல் பழக்கத்தில் உள்ளது. ஆலம் குச்சியைக் கொண்டு பல் துலக்கினாலும், வேப்பங்குச்சியைக் கொண்டு பல் துலக்கினாலும் அது பல்லுக்கு உறுதியை தருகிறது. நம் முன்னோர்கள் முன்பு ஆல மரக்குச்சியைக் கொண்டே பல் துலக்கி வந்தார்கள். வேப்ப மரக்குச்சியையும் பயன்படுத்தி வந்தார்கள். ஆலமரம் பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டது.

ஆலமரத்துக்கு காமரம் என்று மற்றொரு பெயரும் உண்டு. ஆல மரக்குச்சியைக் கொண்டு பல் துலக்கும் போது குச்சியில் உள்ள பால் பல்லை இறுகச் செய்யும். தலைக்கு குளிர்ச்சியை உண்டாக்கும். விந்துவை பெருக்கக்கூடிய சக்தி கொண்டது. வயிற்றுக் கடுப்பை நீக்கும். நீரிழிவு நோயை குணப்படுத்தும் சக்தியை கொண்டது. உடலுக்கு வலிமையைத் தரக் கூடியது.

ஆலமரத்தின் பால், இலைகள், பட்டை, பழம், விதைகள், மொட்டுகள், விழுதுகள், வேர்கள் அனைத்துமே மருத்துவ குணம் கொண்டவையாகும். ஆலமரத்தின் அனைத்துப் பகுதிகளும், மனிதர்களுக்கு பலன் தரக்கூடியது. உடல் சூட்டை தணிக்கக்கூடிய குளிர்ச்சியான மரமாகும்.

இந்த மரத்தின் பட்டையை வெட்டி எடுத்து காயப்போட்டு, பொடியாக அரைத்து வைத்துக் கொண்டு சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நல்ல வலிமையைத் தரும். நீரிழிவு நோயை குணப்படுத்தும். கர்ப்பப்பை வீக்கத்தை விரைவில் குணமாக்கும். காய்ச்சலை சரியாக்கும். தாம்பத்தியத்தின்போது சீக்கிரத்தில் ஆணிடத்தில் வெளியாகும் இந்திரத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு. பெண்களுக்கு மாதவிடாய் ஏற்படும் காலத்தில் இரத்தப் போக்கை கட்டுப்படுத்தும் சக்தியும் இந்த பட்டைக்கு இருக்கிறது.



ஆலமரத்தின் பட்டையை வெயிலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக் கொண்டு வெண்ணெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் வெட்டை நோய் குணமாகும். 6 கிராம் அளவு பாலில் கலந்து குடித்தால் கர்ப்பப்பை வீக்கத்தை குணப்படுத்த முடியும்.

ஆலமரத்தின் வேர் பட்டையை 12 கிராம் எடுத்து தண்ணீரில் கொதிக்க வைத்து கஷாயமாக குடித்து வந்தால் நீரிழிவு நோய் குணமாகி விடும்.

ஆலமரப்பட்டையை எடுத்து அந்த சாம்பலை புண்ணில் தடவி வந்தால் அந்த புண் விரைவில் ஆறிவிடும். இந்த பட்டையை தண்ணீரில் ஊற வைத்து அந்த சாறை மட்டும் குடித்தால் சீதப்பேதியை கட்டுப்படுத்தி குணப்படுத்தலாம்.

ஆலமரப்பட்டையை 24 கிராம் அளவு எடுத்துக் கொண்டு அரை லீட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். அந்த தண்ணீர் பாதியாக சுண்டக் காய்ச்சிப் பின்னர் 12 கிராம் பசுநெய், 12 கிராம் வெண்ணெயை சேர்த்து லேசான சூட்டுடன் குடிக்க வேண்டும். அப்படி குடித்து வந்தால் முற்றிப்போன மூலநோய் குணமாகி விடும்.

அதே போல் ஆலமரப்பட்டையை உலர்த்தி வைத்து 3 கிராம் அளவு எடுத்துக் கொண்டு அரை லீட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து பாதியாக சுண்டிய பின்னர் அதில் உப்பு கற்கண்டு சேர்த்து குடித்தால் இருமல் குணம் அடையும்.



ஆலமரம் பட்டையை பொடி செய்து வைத்துக் கொண்டு அதில் வெண்ணெயை கலந்து தினமும் காலை, மாலையும் சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி கூடுகிறது. இந்த மருந்துகளை சாப்பிடும் போது புளிப்பான உணவு பொருட்களை சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்பது மருத்துவத்தின் விதியாகும்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஆலமரத்தை தலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



ருட்சமாக கொண்ட சிவனை பற்றி பாடியிருப்ப தாவது

"வானஞ்சேர்மதி சூடிய மைந்தனை
நீநெய்'சோடு வாய் நினைகிற்இலை
ஆனஞ்சாடியை அன்பாலா வந்துரைக்
கோனெஞ் செல்னேக் கூறிய கிள்ளியே"
என்று பாடியிருக்கிறார்.

ஆலமரத்தின் பழமும் மிகவும் மருத்துவ குணம் உடையது. தினந்தோறும் நான்கு ஆலம் பழம் சாப்பிட்டு வந்தால் நரம்பு தளர்ச்சி உள்ள வர்களுக்கு குணமாகும். நரம்புகள் முறுக்கேறும். மலச்சிக்கல் உள்ளவர்கள் ஆலம் பழத்தை சாப் பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

ஆலம் பழத்தை பறித்து வந்து வீட்டில் உள்ள காற்றோட்டம் உள்ள தனி அறையில் சுத்தமான துணியை விரித்து வைத்துக் கொண்டு ஆலம் பழத்தை நசுக்கி துணியால் பரப்பி வைத்து நன்கு உலர்த்த வேண்டும். பழம் நன்கு உலர்ந்து நன் றாக காய்ந்த பின்னர் அந்த பழத்தை நன்கு பொடி யாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு அந்த ஆலம் பழத்தூளை காய்ச்சிய பாலில் ஒரு தேக்கரண்டி போட்டு கலக்கி தினமும் காலையும், மாலையும் குடித்து வந்தால் குழந்தை பெற முடியாத பெண்களின் மலட்டுத்தன்மை நீங்கி பிள்ளைப்பேறு உண்டாக்கும் சக்தி இதற்கு உண்டு.

## தல விருட்சம்

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர் களில் தல விருட்சமாக வணங்கப் பட்டு வருவது ஆலமரம். மகத்தில் பிறந்த நட்சத்திரக்காரர்கள் உல கத்தை ஆளக்கூடியவர்கள் என்று ஜோதிட சாஸ்திர நூல்கள் கூறு கின்றன. மக நட்சத்திரத்தின் அதி தேவதை "பித்ருக்கன்" என்று கூறப்படுகிறது. மறைந்த நம் முன்னோர்களை வழிபட்டு வரவேண்டும். இந்த நட்சத் திரத்தில் பிறந்தவர்களின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டு மானால் அவர்களது முன்னோர்களின் நல்லாசியும் வேண்டும். மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பரிகார விருட் சமாக ஆல மரம் உள்ளது. ஆலமரத்தை தலவிருட்சமாக கொண்ட திருத்தலங்கள் தமிழகத்தில் ஏராள மாக உள்ளன.

நாகை மாவட்டம் திருவெண் காட்டீசுவரர் பிரம்ம வித்யாம்பிகை திருக்கோவில். இங்கு சூரிய அக் கினி சந்திர தீர்த்தங்களும் உள்ளன. காசிக்குச் சமமான ஆறு திருத்தலங் களில் திருவெண்காடும் ஒன்றாகும்.



செங்கல்பட்டில் இருந்து வடக்கே 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருக்கச்சூர் புனித திருத்தலமாகும். இங்கே திருமால் ஆமை உரு வத்தில் சிவனை வழிபட்டதால் கஞ்சனாட்சி தனி சன்னதியில் அருள் பாலிக்கின்றார்.

அரியலூருக்கு தெற்கில் கீழப்பழலூர் கிரா மத்தில் ஆலந்துறை நாதராக, ஈஸ்வரன் அருந்தவ நாயகியுடன் பக்தர்களுக்கு அருள் பாலித்து வரு கிறார். தனது தாயைக் கொன்ற பரசுராமர் தனது பழி தீங்குவதற்காக சிவனை பூஜித்த திருத்தலம் கீழப்பழுவூர்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடிக்கு கிழக்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் திருவளத்துறை திருத் தலம் உள்ளது. இந்தக் கோவிலில் நாதர் தீர்த்தப்பு ரீஸ்வரர் காட்சி தருகிறார். சப்த ரிஷிகள் வழிபட்ட தலமாகும். திருவையாறுக்கு அருகே உள்ள திரு ஆலம் பொழில் கிராமத்தில் ஆத்மநாதேஸ்வரர் அருளாபாலிக்கின்றார். இங்கே அன்னை ஞானாம் பிகை தனி சன்னதியில் பக்தர்களை காத்து அருள் பாலிக்கிறார். திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள அன்பில் கிராமத்தில் சத்யாவகீசுவரர், சௌந்தர நாயகியுடன் காட்சி தருகிறார்.


அன்பில் கிராமம் திருமாலயன் துறை என்று அழைக்கப்பட்டு வருகிறது. திவ்யதேச வைணவ தலங்களில் ஒன்றாக விளங்கும் இந்த திருத்த லத்தில் சுந்தராஜப் பெருமாள். தாயார் அழகிய வல்லி நாச்சியாருடன் அருள் பாலித்து வருகிறார்.

சென்னையில் இருந்து 64 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவாலங்காடு என்னும் ஊரில் ஊர்த்துவ தாண்டவப் பெருமான்., வண டார் குழம்மையுடன் காட்சி தருகிறார். இங்கே பக்தர்கள் தெய்வத்துடன் ஆலமரத்தையும் சேர்த்து வணங்குகிறார்கள். இந்து மதம், புத்தமதம் மற்றும் ஜைன மதத்தில் ஆலமரம் புனிதமாக கருதப்படுகி றது. மடாதிபதிகளின் கையில் இருக்கும் "தண்டு" ஆலமரத்தின் கிளைகளில் இருந்து எடுக்கப்படுகி றது. இந்த புனித மான தண்டம் மடாதிபதிகளின் கையில் இருந்தால் தான் மடாதிபதிகள் என்று புனிதமான அந்தஸ்த்தைப் பெறுகின்றார்கள்.

**தி.பெருமாள் மலர்மதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துலாம்

**ஜய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**

*எதையும் தொடக்கத்தில் தயங்கி விட்டு பின்பு தைரியம் செயல்படுத்தும் துலா ராசி வாசகர்களே!*

*இம்மாதம் உங்களின் ராசிக்கு தன ஸ்தானத்தில் குரு பார்வை பெறுவதுடன் ராசிநாதன் தனஸ்தானத்தில் அமர்ந்து இருப்பதும் உங்களுக்கு நல்ல பலனை தரும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.*

**பணியாளர்களுக்கு:**

அடிக்கடி தொழிலை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டி வரும். பல நிலைப்பாடுகளால் மனஅமைதி கெடும். தொடர்ந்து பணிபுரிவதில் சிக்கல் உண்டாகும். பொருளாதார நிலை தேவைகளை நிறைவு செய்யும். இடம் அறிந்து செயல்படுவீர்கள்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொதுவாழ்வில் பல சோதனைகளை சந்தித்து வரும் நீங்கள் எதையும் பற்றி கவலைப்படமாட்டீர்கள். தான் எடுத்த முடிவுகளில் பின் வாங்க மாட்டீர்கள். பொது பிரச்சினைகளை தொடர்ந்து செயல்படுத்தி வருவீர்கள். சமயத்தில் ஆக்கபூர்வமான செயல்களை செய்து வெற்றி கொள்வீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

செய்யும் தொழிலில் கவனம் செலுத்தினாலும் தொழில் ஸ்தானத்தில் குரு தனித்து உச்சம் பெறுவதில் நன்மை இருக்காது. தொழிலில் பல சோதனைகளை சந்தித்து வருவீர்கள். எதையும் முழுமையாக செயல்படுத்த முடியாமல் போகும். பொருளாதார நிலை ஓரளவு சீராக இருக்கும்.

**கலைஞர்களுக்கு:**

கலைஞர்களின் வளர்ச்சிக்கு பல தடைகள் வந்தாலும் குரு பார்வை சுக்கிரன் மீது படுவதால் எதையும் தெளிவாக முடிவு எடுத்து செயல்படுத்துவீர்கள். கார் பந்தய வீரர்கள் வெற்றி பெற வாய்ப்பு அமையும்.

**பெண்களுக்கு:**

சுய தொழிலில் முன்னேற்றமும் கொடுக்கல் வாங்கலில் முயற்சியின் பயனாக வரவும் வந்து சேரும். பெண்களின் அழகு சாதன தொழிலில் ஆதாயம் கிட்டும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களின் கல்வியில் முற்பகுதி நன்மை உண்டாகும். பிற்பகுதி கஷ்டப்பட்டு முன்னேற வேண்டி வரும். தொழில் நுட்ப கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். முயற்சியே முழு பலமாக அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

05.12.2014 வெள்ளி அதிகாலை 05.34 முதல் 07.12.2014 ஞாயிறு பகல் 12.46 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்:**

சகோதரர்களுக்கு மனக்கசப்புகள் உண்டாகும். ஒற்றுமைக்கு பாதிப்பை தரும். இருந்தாலும் பிரச்சினைகளை தவிர்த்து நல்லதை பேசினால் நன்மை உண்டாகும்.

**சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

சொந்த காலில் நிற்க, எண்ணி பல தொழில்களில் முதலீடுகளை செய்து ஏமாறுவது உங்களுக்கு வாடிக்கை. இனி நல்லவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:**

சுமையாக இருந்த பிரச்சினைகள் ஏற்றமாக அமை யும். பல விடயங்களிலிருந்து உங்களை விடுவித்து கொள்ளுவீர்கள். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

பச்சை, பழுத்த வெண்மை, ஆரஞ்சு.

**அதிர்ஷ்ட திசைகள்:**

மேற்கு, வடமேற்கு, வடக்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

வெள்ளி, புதன், திங்கள்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தியை வணங்கி கொண்டைக்கடலை மாவு நைவேத்தியம் வெல் லம் கலந்து வைக்கவும். அம்மன் வழிபாடு வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கு போட்டு வணங்கி வர நல்ல காரியம் தடையின்றி நடக்கும்.

## சக்தி வழிபாடு

* வந்திருப்பவர் உன்னை வானவர்தானவர் ஆனவர்கள்
* சிந்திப்பவர் நல்திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளேன்
* பந்திப்பவர் அழியாப்பரமானந்தர் பாரில் உன்னைச்
* சந்திப்பவர்க்கு எளிதாம்பிராட்டி! நின்தண் அளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## துலாம்

**மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லும் துலாம் ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு சனி இதுவரை ஜென்ம சனியாக இருந்தார். இனி பாத சனியாக வர இருக்கிறார். உங்களின் இரண்டாமிடத்தில் அமர்ந்து உங்களின் ராசிக்கு சுகஸ்தானத்தையும் அட்டமஸ்தானத்தையும் லாப ஸ்தானத்தையும் பார்வை இட்டு இன்னும் மூன்றாண்டு காலம் செயல்படுவார். உங்களின் ராசிக்கு இரண்டாமிடம் கண்டம சனியாக வந்தாலும் குடும்பத்தில் குழப்பத்தையும் வாயால் யாரிடம் கெட்ட பெயர் எடுத்து அசிங்கப்படுவதும் உண்டாகும். உச்ச சனியாக இருந்தவர் சிறு நீரகத்தில் சில பிரச்சினைகளை உண்டாக்கலாம். சுகஸ்தானத்தை சனி பார்வை இடுவது உழைப்பிற்கு முக்கியத்துவம் தருவீர்கள். தாயாருக்கு பீடையும் நரம்பு சம்பந்தமாக உபாதைகள் மூட்டு வலி வர வாய்ப்புகளும் இதனால் மருத்துவ செலவுகளும் உண்டாகும். வீட்டு சாமான்களில் பழுது நீங்கும் படியும் வீடுகட்டும் இடத்தில் ஏதாவது பிரச்சினைகளும் வரவும் சனி கொடுத்தால் பார்த்து தருவார். சனி உங்களின் யோகாதிபதி என்பதால் சனி இருக்குமிடம் சிறப்பு இரண்டாமிடம் தனலாபம் தரும் இடம் என்பதால் எந்த வழியிலாவது பண வரவு வந்து சேரும். புதிய முதலீடுகளை சிறிது காலம் தள்ளி வைப்பது நல்லது. பெரிய முதலீடுகளை தவிர்த்து படிப்படியாக முன்னேற்றத்திற்கு செல்லுதல் நல்லது. செவ்வாய் வீட்டில் சனி இருப்பது நல்லதல்ல ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகளை தந்து கொண்டே இருப்பதுடன் எட்டாம் வீட்டை சனி பார்ப்பது ஆயுள் பலம் அமைந்தாலும் செய்யாத குற்றத்திற்கு பொறுப்பேற்று கொள்ள வேண்டி வரும். மனதில் பட்டதை பிறரிடம் பகிர்ந்து கொள்ளவதை கூட தவிர்த்து விடுவீர்கள். சிலருக்கு புதிய கடன் படும் நிலை உண்டாகும். ஏற்கனவே இருந்து வரும் வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டு உங்களின் பொறுமை சோதிக்கும்படி அமையும். விவாசய நிலங்களில் எதிர் பார்த்த வருமானம் வராது. கிடைத்ததை வைத்து லாபம் பெற்று அதை வைத்து வாழும்படி பழகி கொள்ளுங்கள். கொடுக்கல் வாங்களில் சிலருக்கு வரவுகளில் சிக்கல் வரும்.



உங்களின் தொழில் ஸ்தானத்தில் குரு அமர்ந்திருப்பதால் அந்த காலம் வரை தொழிலில் பல சோதனைகளை சந்தித்து வருவீர்கள். மனித இயல்பான சகிப்பு தன்மை உங்களுக்கு நல்ல பலனை தரும். வெளியூர் பயணம் மேற் கொள்ள வேண்டி வரும். உங்களின் ராசிக்கு நான்காம் ஐந்தாமிடத்திற்கு உரிய சனி பகவான் உங்களின் புத்திரருக்கு நிரந்தரமான பணியை வழங்குவதுடன் அதற்குரிய வருமானத்தையும் தந்து வளப்படுத்துவார். உங்களின் லாபஸ்தானத்தை பார்ப்பது, செய்யும் தொழில் பல வழிகளில் வருமானம் வரும். சுபச்செலவுகளால் விரையம் ஆகுமாறு செய்து விட்டால் வருமானம் வீணாகாமல் போகும், இல்லை எனின் வரும் வருமானம் காணாமல் போகும். சிலர் தங்களின் பித்ரு கர்மாவை போக்கி கொள்ள புனித யாத்திரை சென்று வருவீர்கள். சகோதரிகளின் அன்பை பெறுவீர்கள். உடல் நலமில்லாமல் அவதிப்படும் உறவினருக்காக மருத்துவமனையில் உடன் இருந்து கவனிக்கும்படி அமையும். இதனால் உங்களை அனைவரும் பாராட்டுவார்கள்.

**பரிகாரம்:** நவக்கிரகத்திற்கு ஒன்பது முறை வலம் வந்து 11 விளக்கு போட்டு புளிச்சாதம் வைத்து சிவப்பு கலந்த பூக்களை வைத்து சனிக்கிழமை ராகு காலத்தில் வணங்கி வர சகல தோசமும் மறையும். செய்யும் தொழிலில் ஆதாயம் பெறுவீர்கள். சேமிப்பும் செய்வீர்கள்.

### பிறப்பு இறப்புக்கான காரணிகள்

கருணைக்கடலான சர்வேஸ்வரனால் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட விதியையும், விலக்கையும் ஆராயாமல் அவனிட்ட ஆணைகளை அநாதிகாலமாக மனிதன் மீறி வருகிறான். அதன் காரணமாக ஏற்படும் பாவ புண்ணியங்கள்தான் ஒருவனின் பிறப்புக்கும் இறப்புக்கும் காரணம் ஆகின்றன.

பகவானிடம் அன்பு பூண்டிருப்பதாகிய பக்தியும், அவனையே உபாயமாகக் கொண்டிருப்பதாகிய பிரபத்தியுமே (சரணாகதியுமே) பிறப்பு, இறப்புக்களை ஒழிப்பதற்கு உரிய வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிசுத்தமான வாழ்க்கை ஒப்பந்தமே திருமணம்!

**அன்றைய தினம் சொல்லப்பட்ட வேத வாக்குகளை எல்லாம் இன்று இந்த கலியுகத்தில் நம்புவதற்கே இல்லை என்றுதான் கொள்ள வேண்டும். காலங்கள் மாறிவிட்டன. இயற்கையின் சீற்றங்களாலும் எல்லோருடைய மனப்பான்மையிலும் ஏற்பட்டிருக்கின்ற ஏனோ தானோ என்ற எண்ண அலைகளாலும் எப்படியும் வாழ்ந்து விட்டால் என்ன என்ற நிலைக்கு நாம் வந்து விட்ட காரணத்தால் பலபல அசம்பாவிதங்களை குடும்பங்களில் சந்தித்து வருகிறோம்.**

திருமணம் என்பது பரிசுத்தமான வாழ்க்கை ஒப்பந்தம் என்பதை மணத்தம்பதிகளே மறந்து விட்ட நிலை ஏற்படும் போது "கல்யாணம் கண்ணாம்பூச்சி விளையாட்டாய் போயிடுச்சே". இங்கு தரப்பட்ட ஜாதக ரீதியாக இன்று நடைமுறையில் ஏற்பட்டு விடும் அசம்பாவிதங்களை சித்திரித்துக் காட்ட விரும்புகிறோம்.

கும்ப லக்கனம், துலா ராசி, சுவாதி நட்சத்திரம் என்றவுடன் இந்த ஜாதகியை பாராட்டாதவர்கள் எவரும் இல்லை. பெற்றோர்களும் எத்தனையோ கனவுகள் கண்டிருப்பார்கள். ஆனால் எல்லோர் நம்பிக்கையிலும் ஏமாற்றத்தையே தந்து விட்ட நிகழ்ச்சிகள் இந்த ஜாதகியின் திருமண வாழ்விலும் ஏற்பட்டு விட்டதன் காரணம்?

மகாயோகாதிபதிகள் புதன், சுக்கிரன், சனி ஜாதகத்தில் அமர்க்களமாக வீற்றிருக்க எப்படி அசம்பாவிதங்கள் நடக்கக் கூடும் என்பது தான் கேள்வி. இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் சகல ஆணுக்கும், பெண்ணுக்கும் மனோபாவங்களில் Ego என்ற அலைகள் தாறுமாறாக தொல்லையைத் தருவதால், இவர்கள் திருமண பந்தத்தில் இணைக்கப்பட்டவுடன் தான் சோதனைகளும், சவால்களும் தோன்றுகின்றன. இந்த புதுமணத் தம்பதிகளும் உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரம் அவசரம் என்ற நிலைக்குச் சென்று இவர்களுக்குள் பிரிந்து வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இன்னமும் சொல்லப் போனால் விவாகரத்து வரை சென்று நம்மை இரண்டாம் திருமணத்திற்கு இட்டுச் செல்கிறார்கள். இந்த நிலையைத் தான் "த்விக்களத்திர தோஷம்" என்று கூறுகிறோம். இங்கு அல்லது இனியும் "செவ்வாய் தோஷம்" என்று காரணம் காட்டுவதில் அர்த்தமே இல்லை.

இதற்கெல்லாம் காரணம் "களத்திர திருஷ்டி" குடும்ப திருஷ்டி மாங்கல்ய திருஷ்டி" என்ற கிரக திருஷ்டிகள் காரணமாகிறது. அதாவது லக்கினாதிபதியும் 7ம் களத்திராதிபதியும், 2ம் குடும்பாதிபதியும், 8ம் மாங்கல்ய ஆதிபத்தியங்கள் இவைகளுக்குள் கசப்பு அனுபவத்தை ஏற்படுத்தும் வகையில், மேலே சொல்லப்பட்ட ஆதிபத்ய கர்த்தாக்கள் கன்னா பின்னா என்று இணைந்தும், பார்த்தும் ஜாதகங்களில் அமைந்து விட்ட காரணத்தால் திருமணம் ஆனவுடனேயே, கருத்து வேறுபாடு, அணுகுமுறையில் அசம்பாவிதங்கள், விசித்திரமான எதிர்பார்ப்புகள், விதண்டாவிதமான வாக்குவாதங்கள் என்று ஏற்பட்டு, "நாம் சேர்ந்து வாழ்வது கடினம், ஆகவே பிரிந்து விடுவதே மேல்" என்று அவசர முடிவிற்கு வந்து விடுகிறார்கள்.

இங்கு பாருங்கள். லக்கினாதிபதி சனி களத்திர ஸ்தானாதிபதி சூரியனை 3ஆம் பார்வையில் நறுக்கென்று பார்த்து விட்டார். குடும்ப ஸ்தானாதிபதியாகிய குரு 2ஆம் குடும்ப ஸ்தானத்தையும் 8ஆம் மாங்கல்ய ஸ்தானாதிபதி புதனையும் பார்த்து விட்ட காரணத்தால் கிரகதிருஷ்டிகளின் கொடூரம், திருமணத்தில் இணைக்கப்பட்ட உடன்தான் இந்த பெண்ணையும் தாண்டவமாடச் செய்கிறது. ஆகவேதான் "ஒண்ணுமே தெரியலையே" என்ற நிலை ஏற்பட்டு எந்த ஆலோசனையையும், சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் தான் எடுத்த முடிவே சரியான தீர்ப்பு என்ற அகங்காரம் ஏற்பட்டு சிலர் விவாகரத்தும் பெற்று அடுத்த திருமணத்திற்கு காத்திருக்கிறார்கள். சிலர் வாழாவெட்டியாக காலத்தைத் தள்ளுகிறார்கள். இதற்கெல்லாம் முழுக்க முழுக்க ஜாதக ஜோதிட கருத்துக்கள் மாத்திரம் பதில் தருவதாக இல்லை. ஆனால் ஒவ்வொரு ஜாதகரின் ஜாதக ரீதியாக ஜாதகம் இயங்கும் விதத்தை அந்தந்த ஜாதகரின் மனோபாவத்தோடு இணைத்துப் பார்த்து ஆய்வு செய்யும் கண்ணோட்டம் ஏற்பட்டு விட்டதால் தான் காரணகாரியங்களை அறிந்துக் கொள்ளவும் முடியும். அற்புதமான ஆலோசனைகள் தந்து வளமான வாழ்க்கை நடத்த வழிகாட்ட முடியும்.

*மிராண்டா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலச தீர்த்தம்
# ஒரு சமய சஞ்சீவி

**எப்போதும் கலச தீர்த்தம் வைத்திருப்பேன். அன்னையிடம் எனக்கு எப்போதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. வேள்விப்பூசை எங்கே நடந்தாலும் அங்கிருந்து கலச தீர்த்தம் வாங்கி வந்து பாதுகாப்பாக எங்கள் வீட்டின் பூசை யறையில் வைத்திருப்பது வழக்கம்.**

1987 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஒரு நாள் மாரியம்மன் கோவிலுக்குச் சென்றேன். அங்கு ஒரு பெண் குழந்தையைப்படுக்க வைத்திருந்தார்கள். அவள் அருகே பெற்றோர்கள் கண்ணீரும் கம் பலையுமாக இருந்தனர். அங்கே சென்று என்ன வென்று விசாரித்தேன். அந்தப் பெண்ணின் பெயர் மீரா, 11 வயதிருக்கும் ஏதோ ஒரு துர்தேவதை அல் லது தீய ஆவி ஒன்று அவளை ஆட்டிப்படைக்கி றதாம். எழுந்து நடமாட முடியாதபடி செய்கிறதாம். மருத்துவம் பார்த்தும் பலனில்லை. பல வழிகளில் முயற்சி செய்தும் பலன் அளிக்காததால் அந்தக் கோயிலுக்கு அழைத்து வந்து அங்கே படுக்க வைத் திருந்தார்கள்.

வழக்கம்போல கோயிலுக்குச் செல்லும் நான், அம்மாவை வணங்கி கொஞ்சம் கலச தீர்த்தம் எடுத்துச் சென்று அந்தப் பெண்ணின் நெஞ்சு, வயிறு, கால், கைகளெல்லாம் தடவினேன். எங் கெங்கே வலிக்கிறது என்றாளோ அங்கெல்லாம் கலச தீர்த்தத்தைத் தடவினேன். கொஞ்சம் குடிக் கும்படியும் கூறினேன். கலச தீர்த்தம் குடித்த சில நிமிடங்களில் அந்தச் சிறுமி எழு ந்து உட் கார்ந்து கொண்டாள். நன்றாகப் பேசவும் தொடங் கிவிட்டாள். அதன் பின் பழைய நிலைக்கு வந்து விட்டாள். அந்தக் குடும்பத்தார்க்கு ஒரே வியப்பு! ஒரே சந்தோஷம்!

### இன்னொரு பெண்

இதுபோலவே ஓர் ஆடி மாதம் ஒரு தாயும் பெண்ணும் என் வீட்டிற்கு வந்தனர். அந்தப் பெண்ணின் பெயர் மலர்க்கொடி வயது 17, "என் மகள் கடந்த 5 தினங்களாகப் பேச முடியாமல், எதையும் சாப்பிட முடியாமல் ஒரு பொம்மைபோல் கிடக்கிறாள். என் மகளைக் குணப்படுத்த நீங்கள் மருவத்தூர் அம்மாவை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லிப் புலம்பினாள் அந்த தாய். "அம்மா! எனக்கு எதுவும் மந்திரம், தந்திரம் தெரியாது. நோய் வந்தவர்க்கு இந்தக் கலசத் தீர்த் தம் கொடுக் கிறேன். அம்மா மனம் வைத்துக் குணப்படுத்தினால் உண்டு! அம்மாவை வேண்டிக் கொண்டு இந்தக் கலசத் தீர்த்தத்தைக் கொடுக்கிறேன். அம்மா தயவு காட்டினால் உண்டு" என்று சொல்லியபடி அந் தப் பெண்ணுக்கு அம்மாவின் வேள்விப் பூசையில் வைக் கப்பட்ட கலசத் தீர்த்தத்தைக் கொடுத்தேன். அந்தப் பெண்ணை அம்மா கை விடவில்லை. பழைய நிலைக்கு அந்தப் பெண் வந்து விட்டாள். இப் போது வாரவழிபாட்டு மன்றத்துக்கும் வருகின்றாள். கரு வறைத் தொண்டு செய்யவும் மருவத்தூர்க்கு வந்து கலந்து கொள்கிறாள். வேள்விப்பூசையில் வைத்த கலசத் தீர்த்தம் மகிமை உள்ளது. பெண் களாகிய நாம், அதைப் பூசையறையில் வைத்துப் பூசித்து வர வேண்டும். பெரிய ஆபத்துக் காலங்களில் நமக்குச் சமய சஞ்சீவியாக உதவுவது அது. அன்னை கொடுக் கும் சமய சஞ்சீவி அது.

*சக்தி.சரோஜா*





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் வடகிழக்குத் திசையிலிருந்து அடித்த காற்றில் ஆயிரம் இதழுடன் தாமரை ஒன்று வந்து விழுந்தது. அதன் அழகினால் கவரப்பட்ட திரௌபதி பீமனிடம், "இதோ இந்த தேவமலர் என் மனத்தைப் பரவசப் படுத்துகிறது. எனக்கு இந்தப் பூக்களில் சிலவற்றைக் கொண்டு வந்து தர முடியுமா" என்று கேட்டாள். அதற்குச் சம்மதித்து, அவளது ஆசையை நிறை வேற்றுவதற்காக அவன் உடனே வடதிசை நோக்கிப் புறப்பட்டான்.


வழியில் பீமன் ஒரு காட்டைக் கடக்க வேண்டியிருந்தது. அந்தக் காட்டில்தான் ஆஞ்சநேயர் வசித்து வந்தார். அவர் வாயு பகவானின் மூத்த மகன். அந்த முறைப்படி, பீமன் அவரது இளைய சகோதரன் ஆகிறான்.

வரக்கூடிய ஆபத்துக்களிலிருந்து பீமனைக் காப்பாற்ற விரும்பினார் அனுமன். அவனை எச்சரிப் பதற்காக, வேண்டுமென்றே பீமன் செல்லும் வழியில் படுத்துக்கொண்டார் அவர். குரங்கு ஒன்று தான் செல்லும் வழியில் படுத்துக் கிடப்பதைக் கண்ட பீமன் அதனை அணுகி வழியை விட்டுவிலகும்படி உரத்த குரலில் கூறினான்.

அனுமன் கண்களைச் சிறிது திறந்து பீமனை அலட்சியமாகப் பார்த்து விட்டு, "எனக்கு உடல் நலமில்லை. எனவே படுத்து இளைப்பாறிக் கொண்டிருக்கிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதே, மிருகங்களிடம் அன்பாக இருக்க வேண்டாமா? அதிருக்கட்டும், நீ யார்? எங்கே போகிறாய்? உனக்கொன்று சொல்கிறேன். இந்தக் காடு இதற்குமேல் மிகவும் பயங்கரமாக இருக்கும். மேலே போகாதே. வேண்டுமானால் இங்கே சிறிது நேரம் தங்கி விட்டுத திரும்பிவிடு" என்று கூறினார்.

அதற்கு பீமன், "நான் பீமன், குந்திதேவிக்கும் வாயு பகவானுக்கும் பிறந்தவன். நீ யார்? உன்னைப் பார்த்தால் சாதாரணமான குரங்காகத் தெரியவில்லை.

# அனுமானின் புனிதமான விசுவரூபம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோருக்குச் செய்யும் கடன்

ஒருவனுக்குப் பெற்றோர்கள் கண்கண்ட தெய்வம். அவர்கள் உயிருடன் இருக்கும் வரையில் ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற அளவு அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். அவர்கள் இறந்த பிறகு உரிய கர்மங்கள் செய்ய வேண்டும். இறந்து போன பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்ய முடியாத பரம ஏழையாக ஒருவன் இருந்தால், அவன் காட்டிற்குச் சென்று தனியிடத்தில் தன்னுடைய சக்தியற்ற நிலையை நினைத்துக் கண்ணீர்விட வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய அவனுடைய கடன் நீங்கும்.

குரங்கு வடிவம் கொண்ட யாராவது தேவனாகத் தான் இருக்க வேண்டும்" என்று கூறினான்.

அப்போது அனுமன், உன்னை இந்த இடத்திற்கு அப்பால் போக நான் விடமாட்டேன். திரும்பி விடுவது நல்லது" என்றார். அனுமனின் இந்த வார்த்தைகள் பீமனுக்கு எரிச்சலைத் தந்தன.

"ஏ குரங்கே, வழிவிடப் போகிறாயா, இல்லையா? இல்லையேல் என் கைகளில் சிக்கி நீ மாள்வது திண்ணம்" என்று கர்ஜித்தான் அவன்.

ஆனால் அனுமன் இதனைப் பொருட்படுத்தவே செய்யாமல் அமைதியாக, "நான் உடல் நலமின்றி இருக்கிறேன் என்பதை ஏற்கனவே கூறி விட்டேன். என்னால் எழ முடியாது. நீ கண்டிப்பாகச் சென்றே தீர வேண்டுமென்று முடிவு செய்து விட்டால் என்னைத் தாண்டிச் செல்" என்று கூறினார்.

அதற்கு பீமன், "உன்னைத் தாண்டிச் செல்வதா? எல்லாரிலும் உறைவது பரம்பொருள் அல்லவா? உன்னிலும் இருக்கின்ற அவரை நான் எப்படி அவமதிக்க முடியும்? இல்லையானால், அனுமன் கடலைத் தாண்டியது போல் உன்னைத் தாண்டிச் சென்றிருப்பேன்" என்றான்.

"ஆமாம் நீ கூறிய அந்த அனுமன் யார்?"

"அவர் என் மூத்த சகோதரர். அவர் ஒரு மகான். மிகவும் புத்திசாலி, பலவான். வலிமையில் நான் அவருக்கு நிகர் என்று சொல்கிறார்கள். எனவே என்னிடம் மோதாதே. மரியாதையாக எழுந்து வழிவிடு. இல்லையானால் நீ என் கையால் மரணத்தையே தழுவ நேரிடும்."

பீமனை மேலும் சீண்ட விரும்பிய அனுமன், ஓ பீமா, நீ சொல்வதைக் கேட்டால் நீ பெரிய வீரன் என்பது புரிகிறது. எனக்கோ வயதாகிவிட்டது. சிறிது என்னிடம் கருணையாக நடந்து கொள், தயவு செய்து என் வாலை நகர்த்தி வழி செய்து கொண்டு செல்வாய்" என்று கூறினார்.

அனுமன் கூறியதைக் கேட்ட பீமன் அலட்சியமாகத் தன் கையினால் அனுமனின் வாலை விலக்க முயன்றான். ஆனால் என்ன ஆச்சரியம்? வாலை நகர்த்தக் கூட அவனால் முடியவில்லை. இரு கைகளாலும் முயன்று பார்த்தான். அப்போதும் முடியவில்லை.

வேர்க்க, விறுவிறுக்க மீண்டும் மீண்டும் முயற்சி செய்தும் வாலை நகர்த்தும் முயற்சியில் தோல்வியே கண்டான் அவன். அவமானத்தால் அவனது முகம் சிவந்தது. தனது தோல்வியை ஒத்துக் கொண்டு அவன் அனுமனை வணங்கி. "ஐயா, நிச்சயமாக நீர் ஒரு குரங்கு இல்லை. உண்மையில் நீர் யார்?" என்று பணிவுடன் கேட்டான்.

அனுமனும் தமது சுயவுருவத்தைக் காட்டி, "பீமா, இராமாயணம் உள்ள வரையில் நான் உயிர் வாழ்வேன் என்று ராமர் வரம் தந்துள்ளார். அந்த மகத்தான காவியத்தை யார் எங்கு பாடினாலும் அதை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும் என்பதுதான் என் ஒரே ஆசை அதிருக்கட்டும். இந்தப் பாதை மிகவும் கடினமானது. உன்னை எச்சரிக்கவே தான் உன் வழியை மறித்தேன். இனி நீ செல். ஆனால் நீ தேடி வந்த மலர் உள்ள ஏரிக்கு இதற்கு எதிர்த்திசை வழியாகச் செல்ல வேண்டும்" என்று கூறினார்.

பீமனும் தன் சகோதரரான அனுமனை அன்புடன் வணங்கி, "என்னைப் போல் அதிர்ஷ்டசாலி யார்? என் சகோதரனைக் காணும் பேறு பெற்றேன் நான். அண்ணா, நீர் கடலைத் தாண்டுவதற்காக எடுத்த புனித மான விசுவரூபத்தைக் காண வெகுநாட்களாக நான் ஆவல் கொண்டுள்ளேன். தயவு செய்து என் ஆவலை நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

## உண்மை துறவறம்


அகங்காரம் பலத்தால் ஏற்படும் திமிர், செருக்கு, காமம், கோபம் உடைமை ஆகியவற்றைத் துறப்பதே துறவு. அதனால் ஒருவர் சாந்தியையும் தெய்வத்திற்கு ஒப்பான நிலையையும் அடைவார்.

இந்த துறவு இல்லாத துறவு முழுத்துறவு ஆகாது.

ஆத்ம சாட்சாத்காரம் என்ற மாளிகைக்குத் துறவுதான் அஸ்திவாரம். துறவியாக இருந்தால் உள்ளும் புறமும் துறந்திருக்க வேண்டும். இல்லறத்தானுக்குப் புறத்துறவு இயலாது. ஆதலால் அவன் புறத்துறவு அமையா விட் டாலும், உள்ளத்தில் துறந்தவனாக வாழ வேண்டும். எனவே துறவியாக இருந்தாலும் இல்லறத்தானாக இருந்தாலும் ஆத்மஞானம் பெறுவதற்கு உள்ளத்தில் துறவு கொண்டவராகத் தான் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குண்டலினி சக்தியும் சரீரமும்

மனித சரீரம் உட்பட ஒட்டுமொத்த பிரபஞ்சத்தையும் படைத்தது குண்டலினி சக்தி ஆகும். அதுவே நம் அனுபவங்களுக்கு மூலம். நல்லதோ கெட்டதோ, மகிழ்ச்சியோ கவலையோ, இன்பமோ துன்பமோ வாழ்க்கையின் அனுபவம் எதுவாயினும் அது உடம்பில் ஓடிக் கொண்டிருக்கும் குண்டலினி சக்தியின் நேரடி விளைவே ஆகும்.

படைக்கப்பட்ட யாவும் குண்டலினியின் வெளிப்பாடுகளே. மனிதனுக்குள் உடல் சார்ந்த சக்தி முதல் சக்கரத்திலும், தெய்விக சக்தி சஹஸ்ராரத்திலும் தங்கியுள்ளன. உயர்ந்த நோக்கங்களும், பிரபஞ்ச உணர்வும் சஹஸ்ராரத்தில் இணைகின்றன. சஹஸ்ராரத்தில் கவனத்தை ஒருமுகப்படுத்துகிறவரிடமும் அனைத்து அறிவும், அமைதியும், மகிழ்ச்சியும், பேரின்பமும் வெளிப்படுகின்றன. உடல் சார்ந்த, உணர்வு சார்ந்த, மனம் சார்ந்த சக்திகள் முதல் சக்கரத்தில் தங்கியிருக்கின்றன.

மனித உடலானது கருவறையில் உருவெடுக்கிற போது குண்டலினி சக்தி சஹஸ்ராரத்தையே முதலில் உருவாக்குகிறது. குண்டலினி சக்தி பிறகு முதுகுத் தண்டின் வழியே கீழ்நோக்கிச் சென்று மற்ற சக்கரங்களையும் உருவாக்கும். அது ஒரு சக்கரத்தில் இருந்து மற்றொன்றுக்குச் செல்லும் போது தன்னுடைய தெய்விக உணர்வில் சிறிதளவை ஒவ்வொரு சக்கரத்திலும் விட்டுச் செல்லும். மறுமுறை தூண்டப் படுகிறவரையில் அது முதல் சக்கரத்திலேயே தங்கியிருக்கும். பெரும்பாலோருக்குள் குண்டலினி சக்தி மீண்டும் செயற்படுத்தப்படுவதில்லை.

குண்டலினி சக்தி ஒரு முறை தூண்டப்பட்டுவிட்டால் சஹஸ்ராரத்திற்கு தன்னுடைய மேல்நோக்கிய பயணத்தைத் தொடங்கிவிடும். அது மேல் நோக்கிச் செல்லும்

## ஆழ்ந்த ஈடுபாடு அவசியம்!

சாதகன் எந்தத் தெய்வத்தை மனப்பூர்வமாக இடைவிடாமல் வழிபடுகிறானோ, அந்தத் தெய்வத்திற்கு உரிய குணநலன்களைப் பெறுவான் என்பது உண்மை.

நெருப்பைக் கொண்டு இரும்பை உருக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால் ஒரு தீக்குச்சியைக் கிழித்து ஓர் இரும்புத் தூண் மீது வைத்துவிடுவதாலேயே அந்தத் தூண் உருகி விடாது. அது போதிய அளவு உஷ்ணம் கொடுத்தால் மட்டுமே உருகும்.

நான் என் இஷ்டதெய்வத்தைப் பல காலம் வணங்கியும் எனக்கு ஆன்மிக அனுபவமோ, பக்தியோ, வைராக்கியமோ வரவில்லையே!" என்று சொல்பவர் பலர் உண்டு. ஆனால், ஆன்மிக முன்னேற்றத்திற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சி, இரும்புத்தூணை உருக்குவதற்குக் கொடுக்கப்பட்ட தீக்குச்சியின் உஷ்ணம் போன்று குறைவாக இருந்திருக்கும். போதிய உஷ்ணம் கொடுத்தால் மட்டுமே இரும்புத் தூண் உருகும் என்பது போல, போதிய ஆன்மிக உழைப்பின் மூலமே ஆன்மிக அனுபவங்களையோ பக்தியையோ பெற இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது முன்பு ஒவ்வொரு சக்கரத்திலும் தான் விட்டுச் சென்ற தெய்வீக சக்தியோடு மறுபடியும் தொடர்பு கொள்ளும். அச்சமயத்தில் சக்கரத்திலும் ஏதேனும் தடையோ அடைப்போ இருந்தால் சரி செய்யப்பட்டு விடும்.

குண்டலினி சக்தி சஹஸ்ராரத்தை அடைகிற போது சாதகரைப் பொறுத்தவரை எல்லாமும் மாறி விடும். தன்னை உணர்வதும், இறைவனை உணர்வதும் உண்டாகும். பிரபஞ்ச உணர்வுடன் முழுமையான சேர்க்கை நிகழும், சாதகர் எல்லையற்ற பேரின்ப நிலைக்கு உயர்த்தப்படுகிறார். அதற்குப் பிறகும் அவர் ஆன்மாவிலிருந்து விலகியிருக்க மாட்டார். எல்லாவற்றுடனும் அவர் ஒன்றாகி விடுவார்.

உச்சத்திற்கு செல்கிற குண்டலினி சக்தியை அங்கேயே பிரக்ஞையுடன் வைத்திருக்க முடிவதில்லை. கீழே உள்ள சக்கரங்களில் ஒன்றை நோக்கி அது செல்லக்கூடும். அப்படி நேருமாயின் சாதகர் குறிப்பிட்ட சக்கரத்தை (குண்டலினி மற்றொரு சக்கரத்திற்குச் செல்லுமுன்) சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். குண்டலினி சக்தி மேலேறும் வரை அந்தச் செயல்முறை தொடரப்பட வேண்டியது.

குண்டலினி சக்தி அதி நுட்ப சக்தியாகும். அதுவே நம்மை உலகத்துடன் இணைப்பதும், உலகத்திடமிருந்து விடுவிப்பதும், ஒருவர் குண்டலினி சக்தியை எப்படிப் பயன்படுத்துகிறாரோ அப்படியே எதுவும் அவருக்கு நிகழ்கிறது. அவருடைய தெரிவுகள் அச்சம், கோபம், குற்ற உணர்வு, பேராசை, வருத்தம் போன்ற எதிர்மறை உணர்வை அடிப்படையில் கொண்டிருந்தால் அவருக்கு வயாக்கிற அனுபவங்களும் எதிர்மறை இயல்புடன் ஒருவர் தன்னை இணைத்துக் கொள்கிற ஒவ்வொரு முறையும் எதிர்மறை சக்தி அவருக்குள் படிகமாகிறது. அந்நிலையில் மெய்மை தன்னை வெளிப்படுத்திக்கொள்ள முடியாது போகும், தன்னுடைய ஆன்மா சார்ந்த மனம் சார்ந்த, உடல் சார்ந்த இருப்பில் இருந்து சாதகர் எதிர்மறையை விடுவிக்கிற போது தான், அமைதியும் மகிழ்ச்சியும் நிரம்பிய ஒரு புதிய வழியை அவர் காண்பார். குண்டலினியும் பால் சார்ந்த சக்தியும் குண்டலினி சக்தி மண்டலம் எட்டு அமைப்புகளைக் கொண்டதாகும். அவை ஆறு சக்கரங்கள், சஹஸ்ராரம் மற்றும் குண்டலினி சக்தி (தானும்) என்று சொல்லலாம். குண்டலினி சக்தி கீழ்நோக்கிச் செல்கிறபோது பெரும்பாலும் பால் சார்ந்த சக்தியை வெளிப்படுத்தும். சாதகர் இந்த வகை வெளிப்பாட்டைத் தெளிவு செய்தால் குண்டலினி சக்தியில் பெரும் பகுதி விந்துத் திறவத்தின் மூலமாகவே உடம்பை விட்டு வெளியேறிவிடும்.

ஒருவர் பால்சார்ந்த விதத்தில் (விந்து வெளிப்பாட்டின் மூலம்) தன்னுடைய சக்தியை தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டே இருந்தால் பிரக்ஞையின் உயர்ந்த தளங்களுக்கு குண்டலினி சக்தி எடுத்துச் செல்லப்படுவது கடினம். சம்பந்தப்பட்டவருடைய உடலும் மனமும் பலவீனப்படும்.

குண்டலினியை ஒருவர் மேல் நோக்கிக் கொண்டு செல்ல விரும்பினால் பால் சார்ந்த தூண்டுதல்களை, செய்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வது முக்கியம். தந்த்ரயோகம் பயில்கிற ஒருவர் தன்னுடைய விந்து சக்தியை வீணடிக்காமல் இன்பம் துய்க்கவும், தனது குண்டலினி சக்தியை தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ளவும் முடியும். தந்த்ரயோகம் பயில்வதன் மூலம் குண்டலினி சக்தியை மேலேற்ற முடிவதுடன், உடல் மன ஆற்றல்களையும் சிறந்த முறையில் பராமரிக்க முடியும். நிறைவாக, குண்டலினி சக்தி சஹஸ்ராரத்தைச் சென்றடையவும் அவர் முழுமையாய் விடுவிக்கப் பட்டவராவார். உலகப் பிணைப்புகளில் இருந்து விடுபட்டு கடவுள் அனுபவம் பெறுகிறார்.

**பி.எஸ்.ஆச்சார்யா**

# அருகம்புல்லின் பெருமை



அருகம்புல் ஓர் இடத்தில் முளைத்துக் கொடி போல் நீண்டு, ஆறு இடங்களில் வேரூன்றிக் கிளைத்துக் கொண்டே போகும் இயல்புடையது.

அருகு போல் வேரூன்றி என்ற உவமையைப் பழமொழிகளில் காண்க.

மூலாதாரத்து மூண்டெழு கனல் என்று விநாயகர் அகவல் குறிப்பிடுகிறது. எனவே விநாயகர் மூலதார மூர்த்தியாகத் திகழ்கிறார்.

மூலாதார மூர்த்தியாகக் குண்டலினியில் வசிப்பவரான விநாயகர் குண்டலினி என்ற அருகம்புல்லை, சுவாதிஷ்டானம் முதலிய ஐந்து இடங்களில் பொருந்தச் செய்து, சகஸ்ராரத்தில் பல நுனிகளாகத் தழைக்கச் செய்கிறார். எனவே அருகு அவருக்கு உகந்ததாக ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நோய் தீர்க்கும் முத்திரைகள்

# ஆஸ்துமா குணமாக (இரு முத்திரைகள்)

**முத்திரைகள்:**

1. ஆஸ்துமா முத்திரை

இந்த முத்திரையை இரு கைகளையும் இணைத்துச் செய்ய வேண்டும்.

**செய்முறை:**

1. வஜ்ராசனம், பத்மாசனம், சுகாசனம் (சம்மனம்) இவற்றில் ஒன்றில் வசதியாக அமர்ந்து கொள்ளவும். முதுகுத்தண்டு, கழுத்து, தலை மூன்றும் நேராக இருக்க வேண்டும்.

2. இரு கைவிரல்களையும் நீட்டியபடி நெஞ்சுக்கு நேராக வைக்கவும்.

3. நடுவிரல்கள் இரண்டையும் உள்பக்கமாய் மடித்து ஒன்றின் நகம் மற்றதைத் தொடுமாறு வைக்கவும்.

4. மற்றவிரல்கள் நேராக இருக்கட்டும்.

5. உள்ளங்கைகள் தொடக்கூடாது.

**நேரம்:** சுமார் 5 நிமிடங்கள், தினமும் 3 முறை



ஆஸ்துமா முத்திரை



சுவாச கோச முத்திரை

சுவாச கோச முத்திரை

இதை மூச்சுக் குழல் முத்திரை என்றும் கூறுவர். ஆஸ்துமா முத்திரை 12 நாட்கள் செய்தபின் இதையும் சேர்த்து செய்யவும்.

**செய்முறை:**

1. வஜ்ராசனம், பத்மாசனம், சுகாசனம் (சம்மனம்) இவற்றில் ஒன்றில் வசதியாக அமர்ந்து கொள்ளவும். முதுகுத்தண்டு, கழுத்து, தலை மூன்றும் நேராக இருக்க வேண்டும்.

2. அமர்ந்து கொண்டு ஆட்காட்டி விரலை நேராக நீட்டவும்.

3. சுண்டு விரலை கட்டை விரலின் அடிப்பாகத்திலும், மோதிரவிரலைக் கட்டை விரலின் நடுப்பாகத்திலும், நடுவிர லைக் கட்டை விரலின் மேல்பாகத்திலும் வைக்கவும்.

**நேரம்:** சுமார் 5 நிமிடங்கள், இரு கைகளிலும், தினமும் 2 முறை செய்யவும்.

**தவிர்க்க வேண்டியவை:** அசைவ உணவுகள் பால் மற்றும் பால் பொருட்கள், தக்காளி, மிளகு, புகை பிடிப்பது ஆகியன.

**பலன்கள்:**

ஆஸ்துமா குணமாகிறது.

**இரத்த அழுத்தம் (BP) குறைய முத்திரை:**

ஞான முத்திரை

இதை சின் முத்திரை என்றும், தியான முத்திரை என்றும் கூறுவர். இந்த முத்திரை செய்வதால் பிரபஞ்ச ரகசியங்களை அறியலாம்.

**செய்முறை:**

1. வஜ்ராசனம், பத் மாசனம், சுகாசனம் (சம்மனம்) இவற்றில் ஒன்றில் வசதியாக அமர்ந்து கொள்ள வும். முதுகுத்தண்டு, கழுத்து, தலை மூன்றும் நேராக இருக்க வேண்டும்.

2. முழங்கால் மீது இரு கைகளையும் உள்ளங்கை மேல் நோக்கி இருக்குமாறு வைத்துக் கொள்ளவும்.

3. கட்டைவிரல், ஆட்காட்டிவிரல் இவற்றின் நுனிகளை இணைத்து லேசாக அழுத்தவும்.

4. மற்ற மூன்று விரல்களும் நேராக இருக்குமாறு வைக்கவும்.

**நேரம்:** சுமார் 5 நிமிடங்கள், இரு கைகளிலும், தினமும் 2 முறை செய்யவும்.



ஞான முத்திரை

**பலன்கள்:** அதிக இரத்த அழுத்தம் சரியாகிறது. மூளை தூண்டப்படுவதால் சிந்தனையில் தெளிவு பிறக்கிறது. நரம்புகள், நாளமில்லாச் சுரப்பிகள் தூண்டப் படுகின்றன. உடல் ஆரோக்கியமாக இருக்கிறது.

**இருதயக் கோளாறுகளுக்கு முத்திரை:**

அபான வாயு முத்திரை

இதயம் நல்ல முறையில் இயங்க இந்த முத்திரை உதவுகிறது.

**செய்முறை:**

1. வஜ்ராசனம், பத்மாசனம். சுகா சனம் (சம்மனம்) இவற்றில் ஒன்றில் வசதி



அபான வாயு முத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக அமர்ந்து கொள்ளவும், முதுகுத் தண்டு, கழுத்து, தலை மூன்றும் நேராக இருக்க வேண்டும்.

2. சுண்டுவிரலை நேராக நீட்டவும்.

3. நடு விரல், மோதிர விரல்களை உள்நோக்கிச் சிறிது வளைத்து அவற்றின் நுனிகளை கட்டைவிரல் நுனியால் தொடவும்.

4. ஆட்காட்டி விரலை மடித்து கட்டை விரலின் அடிப்பாகத்தைத் தொடுமாறு வைக்கவும்.

5. அபான முத்திரை, வாயு முத்திரை என்ற இரு முத்திரைகளின் கூட்டே இது.

**நேரம்:** சுமார் 5 நிமிடம், இருகைகளிலும், தினமும் 2 முறை செய்யவும்.

**பலன்கள்:**

இதயம் பலம் பெறுகிறது.

இதய நோய்கள் குணமாகிறது.

இதய நோய்கள் வராமல் தடுக்கிறது.

**எடை குறைய**

**முத்திரை:**

**சூரிய முத்திரை**

உடலின் வெப்பம் அதிகமாவதால் கொழுப்புச் சக்தி கரைகிறது. இதனால் எடை குறைகிறது. சாப்பிட்டவுடன் செய்தால் நன்றாக ஜீரணமாகும்.

**செய்முறை:**

1. வஜ்ராசனம், பத்மாசனம், சுகாசனம் (சம்மனம்) இவற்றில் ஒன்றில் வசதியாக அமர்ந்து கொள்ளவும். முதுகுத் தண்டு, கழுத்து, தலை மூன்றும் நேராக இருக்க வேண்டும்.

2. மோதிர விரலை உட்பக்கமாய் மடித்து கட்டை விரலின் அடிப்பாகத்தைத் தொடுமாறு வைக்கவும்.

3. கட்டை விரலால் மோதிர விரலின் மேல் சிறிது அழுத்தம் கொடுக்கவும்

4. மற்ற மூன்று விரல்களும் நேராக இருக்க வேண்டும்.

**நேரம்:** சுமார் 5 நிமிடம், இரு கைகளிலும், தினமும் 2 முறை செய்யவும்.



சூரிய முத்திரை

**பலன்கள்:**

தைராய்டு சுரப்பி தூண்டப்படும்

உடல் சூடு அதிகரித்து, அதிகப்படியான கொழுப்பு கரைகிறது. இதனால் உடல் எடை குறைகிறது.

**குறிப்பு:**

தைராய்டு குறைபாடுள்ளவர்கள் செய்யக்கூடாது.

கோடைகாலத்தில் செய்யும் நேரத்தைப் பாதியாக குறைக்கவும்

குளிர்காலத்தில் கூடுதல் நேரம் செய்யவும்.

இத்துடன் பிருத்வி முத்திரையும் 5 நிமிடங்கள் செய்தால், விரைவான பலனைப் பெறலாம்.

**கண் வறட்சி, எரிச்சல் நீங்க**

**வருண முத்திரை**

இதை பூதி முத்திரை என்றும் கூறுவர்.

**செய்முறை:**

1. வஜ்ராசனம், பத்மாசனம், சுகாசனம் (சம்மனம்) இவற்றில் ஒன்றில் வசதியாக அமர்ந்து கொள்ளவும். முதுகுத்தண்டு, கழுத்து, தலை மூன்றும் நேராக இருக்க வேண்டும்.

2. கட்டைவிரல், சுண்டு விரல் நுனிகளை இணைத்து லேசாக அழுத்தவும்.

3. மற்ற 3 விரல்களும் இணைந்தபடி நேராக, வளைவின்றி இருக்கவும்.



வருண முத்திரை

**நேரம்:** சுமார் அரைமணி நேரம், இரு கைகளிலும், தினமும் 2 முறை செய்யவும்.

**பலன்கள்:**

கண் வறட்சி, கண் எரிச்சல் குணமாகிறது.

உடல் சூடு, தாகம் தணியும்.

தோல் வறட்சி நீங்கி பளபளப்பாகும்.

இளமைத் தோற்றம் வரும்.

**குறிப்பு:** சளி, சைனஸ் இருப்பவர்கள் குறைந்த நேரமே செய்யவும்.

S.M.பன்னீர் செல்வம்

# சங்கர வேதாந்தம்!

ராமாநுஜ வேதாந்தத்தைச் சேர்ந்தவர்கள் விஷ்ணுவைத்தான் வழிபடுவார்கள்.

அவ்விதமின்றி, சங்கர வேதாந்தத்தைச் சேர்ந்தவர்கள் எந்தத் தெய்வத்தை வேண்டுமானாலும் வழிபடும் நிலையிலும் அத்வைதியாக இருந்திருக்கிறார்கள். சங்கரர் இயற்றியதாக சௌந்தர்யலஹரி சொல்லப்படுகிறது.

இதில் சாக்த தாந்திரிகத்தைச் சேர்ந்த கருத்துக்கள் உள்ளன. அத்வைதியாகவும் அதே சமயத்தில் தாந்திரிகராகவும்கூட, சங்கரர் இருந்திருக்கக்கூடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருச்சிகம்

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று எண்ணும் விருச்சிக ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு இதுவரை விரைய சனியாக இருந்த சனிபகவான் இனி ஜென்ம சனியாக தொடர் கிறார். உடல்நலக் குறைவு, மன அமைதி கெடுதல், சிறுநீரகக் கோளாறு வயிறு சம்பந்தமான குறைபாடுகள், தோல் சம்பந்தமான பிரச்சினை உருவாகலாம். செவ்வாய் வீட்டு சனி என்பதால் அடிக்கடி கீழே விழுவதும் அதனால் ரத்த காயம் ஏற்பட்டு மறையும். அடுத்த வீட்டுக்காரர் தேவையில்லாத பிரச்சினைகளும் உங்களுடன் சண்டை இடுவதும் தொடரும். மனைவிக்கு உடல் நலக் குறைவும், கண்ணில் புரை நோய், சனி தொல்லையும், பல் சம்பந்தமான உடல் உபாதைகளும் உண்டாகும்.



உங்களின் முயற்சி ஸ்தானத்தை சனி பார்ப்பதால் தடைப்பட்ட சில காரியம் தடையின்றி நடக்கவழி வகுக்கும். கடன் பட்டு இருந்த நிலை மாறி சிறிது சிறிதாக கடன் அடைக்கும் வாய்ப்பை பெறுவீர்கள். வரவுக்கு மீறிய செலவு கட்டுப்படும். சகோதர உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். பணி புரியும் இடத்தில் பல சோதனைகளையும், பிரச்சினைகளையும் சந்தித்து வந்தீர்கள்.

அதிலிருந்து விடுபடுவீர்கள். நீண்ட நாள் காதலர்கள் மனம் விட்டு பேசி திருமணத்திற்கு இருவர் சம்மதம் தெரிவித்து அதற்கு மேல் ஆக வேண்டிய வேலைகளை பார்ப்பீர்கள். கல்வியின் மந்த நிலை மாறி சுறுசுறுப்புடன் இருப்பீர்கள். ஊர் சுற்றி திரிந்த பொறுப்பற்ற புத்திரர்கூட இனி திறம்பட செயல்பட ஆரம்பித்து விடுவார்.

புதிய தொழில் வாய்ப்பு களையும் வேலை வாய்ப்புகளையும் பெறுவார்கள். ஆன்மீக சிந்தனை கோவில் சென்று வழிபாடு செய்தல், ஆன்மீக வாதிகள் ஞானிகளை சந்திப்பீர்கள். புண்ணிய தீர்த்தங்கள் சென்று வருதல் வழிபடுதல் உங்களுக்கு பூர்வ புண்ணியத்தை வலுப்படுத்தும். பொருளாதார நிலை ஓரளவு நல்ல பலனை வழங்கும்.

சனிபகவான் ஏழாமிடமான களத்திர ஸ்தானத்தை பார்ப்பதால் கணவன் மனைவி உறவில் சில சச்சரவுகள் வரலாம். கூட்டு தொழிலில் பிரச்சினைகள் வரலாம். வங்கி இருப்பு குறையும். அதிக அலைச்சல் குறைத்து அருகில் தொழில் செய்து வருவது நல்லது.

மேலும் வண்டி வாகனங்களில் போகும் போது அவசரங்கள் இன்றி பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. இருக்கும் இடத்திற்கு மேற்கு திசையில் இருக்கும் அம்மன் கோயிலுக்கு சென்று அம்மனிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி மானசீக வழிபாடு செய்து விட்டு வர சில நாட்களில் நீங்கள் நினைத்த காரியம் நடக்கும்.

உங்களின் தொழில் ஸ்தானத்தை சனி பார்வை இடுவது தொழிலில் சில தடைகள் வந்தாலும் நிரந்தரமான தொழில் வாய்ப்புகளுக்கு இது அடித்தளமாக அமையும். இன்றைய உங்களின் உழைப்பே மூலதனமாக பின்பு கூடுதல் ஆதாயம் தரும். வாகனம் வைத்திருப்பவர் அடிக்கடி பழுது பார்க்கும் நிலை ஏற்படும்.

இந்த காலத்தில் புதிய வாகனத்தை தவிர்ப்பது நல்லது. உயரமான இடங்களுக்கு செல்லும் போதும், பணி புரியும் போதும் கவனமாக இருப்பது நல்லது. குருபார்வை 2015 ஜுன் வரை இருப்பதால் மேலே சொன்னவை அனைத்தும் இந்த காலத்திற்கு பின்பு தான் அதிக பாதிப்பை தரும்.

**பரிகாரம்:** உடல் ஊனமுற்றோருக்கு ஆடை அன்னதானம் கொடுப்பது நல்லது. அறியாத குழந்தைகள் கல்விக்கு உதவி செய்ய நன்மை கிட்டும். 27 விளக்கு கௌமாரி அம்மன் முன்பு ஏற்றி வேண்டுதல் செய்ய பத்து நாட்களில் நினைத்தது நடக்கும்.

## பகவத் பக்திக்காக எதையும் இழக்கலாம்

"பகவத் பக்திக்காக மட்டும் அவசியமானால் ஒருவன் பெற்றோரையும் நிராகரித்து விடலாம். இதற்கு உதாரணமாகப் பிரகலாதனையும் துருவனையும் சொல்லலாம். தன் தந்தை எவ்வளவு தடுத்தும் கேட்காமல், பிரகலாதன் ஹரிநாமத்தை ஜபம் செய்து வந்தான். தாயின் சொல்லையும் மீறிக் காட்டுக்கு துருவன் தவம் செய்யச் சென்றான். இவர்கள் பிழை செய்தவர்கள் அல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருச்சிகம்



**ஜய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**

***குணமுள்ளவர்களாய் செல்லுமிடமெல்லாம் செல்வாக்கு அமைய பெற்ற விருச்சிக ராசி வாசகர்களே!***

***இம்மாதம் உங்கள் ராசிக்கு குருபார்வையும் தனஸ்தானத்தில் ராசிநாதனும் அமைவது தொழிலிலும், செயல்களிலும் முழு பலன்களை தரும் வாய்ப்புகள் அமையும்.***

**பணியாளர்களுக்கு:**

பணியில் இருந்த கஷ்டம் நீங்கி திறமையை வளர்த்து கொள்வீர்கள். தடைபட்ட காரியம் நல்ல படியாக அமையும். தொழிற்சங்க கூட்டங்களில் உங்களின் பேச்சு பாராட்டும் படி அமையும். எடுத்த காரியத்தில் முழு கவனம் செலுத்தி உங்களுக்கு சாதகமாக்கி கொள்வீர்கள்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது காரியங்களில் பல சாதனைகளை செய்து வரும் உங்களுக்கு பொது மக்களிடம் நல்ல மதிப்பு இருக்கும். மீனவரின் நீண்ட நாள் பிரச்சனைகளை பேசி தீர்க்க உங்களின் முயற்சி நல்ல பலனை தரும். கடல் சார்ந்த தொழில் நன்றாக அமையும்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானாதிபதி சூரியன் ராசியில் அமர்வது குரு பார்வை சூரியன் மீத படுவதும் செய்யும் தொழிலுக்கு நல்ல முன்னேற்றத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் தரும். விளையாட்டு சாமான்கள் விவசாய இடு பொருட்களுக்கு விற்பனையில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். பொருளாதாரம் வளர்ச்சியை தரும்.

**கலைஞர்களுக்கு:**

கலைத்துறையினர் விட்டு போன பணிகளை செய்து நன்மை பெறுவார்கள். குடும்ப நலன் கருதி வெளியூர் செல்லும் எண்ணத்தை தள்ளி போடுவீர்கள். திருக்கோயில் தரிசனம் கிட்டும். பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு:**

பெண்களின் சுயதொழிலில் எண்ணியபடி நல்ல பலன் பெறுவீர்கள். ராசிநாதன் குடும்பஸ்தானத்தில் அமருவது திருமண வாய்ப்பும் குழந்தை பாக்கியமும் கிட்டும்.

**மாணவர்களுக்கு:**

கல்வியின் முன்னேற்றம் உண்டாகும். விவசாயம், தொல்பொருள் ஆராய்ச்சி உயிரியல் கல்வியில் சிறந்த முன்னேற்றம் உண்டாகும். தடைபட்ட கல்வி பயிலும் வாய்ப்பு அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

07.12.2014 ஞாயிறு பகல் 12.47 முதல் 09.12.2014 செவ்வாய் இரவு 10.04 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**விசாகம் 4ஆம் பாதம்:**

கொடுக்கல் வாங்கலில் நன்மை உண்டாகும். ஒன்லைன் வர்த்தகம் சிறக்கும். முதலீடு இல்லாத வியாபாரம் நல்ல பலனை தரும். பொருளாதார நிலை உயரும்.

**அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

சனி வரவால் பாதிப்பை தந்தாலும் உங்களுக்கு அதிக கஷ்டம் வராது. இருந்தாலும் பெண்களிடம் பழகும் போது அதிக கவனமுடன் இருப்பது நல்லது. பணியில் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. பணவரவு தேவைக்கு வரும்.

**கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

குடும்பத்தில் சில சிரமங்கள் வந்தாலும் நீங்கள் எதிர் பார்த்த பணவரவு வந்து ஓரளவு சீர் செய்து விடுவீர்கள். மருத்துவத்துறையில் முன்னேற்றம் காண்பீர்கள். வரவுக்கு தகுந்த செலவு செய்வீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

ஆரஞ்சு, மஞ்சள், வெண்மை.

**அதிர்ஷ்ட திசைகள்:**

வடக்கு, வடமேற்கு, தெற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

திங்கள், வியாழன், செவ்வாய்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

சனிக்கிழமை பைரவரையும், செவ்வாய்க்கிழமை முருகனையும், ஞாயிறு அன்று சிவனையும் வழிபட்டுவர தடையற்ற தொழிலில் விருத்தியும் ஆதாயமும் பெறுவீர்கள்.

## திருவேங்கடவன் வழிபாடு

* செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
* நெடியானே! வேங்கடவா! நின்கோவிலின் வாசல்
* அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
* படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண் மற்றும் காது:**


பொதுவாக பிராணாயாம பயிற்சியின் போது கண்கள் மூடி இருக்க வேண்டும். இமைகளை இறுக்கமாக மூடாமல் லேசாக மூட வேண்டும்.

குறிப்பிட்ட சில பிராணாயாமத்தில் மட்டும் சாம்பவி அல்லது அகோசரி முத்திரை யில் புருவ நடுவையோ அல்லது மூக்கு நுனியையோ பார்க்கும்படி வைத்துக் கொள்ள வேண்டி இருக்கும்.

கண்களை முழுமையாக திறந்து வைத்துக் கொண்டு பிராணாயாமம் செய்யக்கூடாது. கண்களை திறந்து வைத்துக் கொண்டு பிராணாயாமம் செய்யும் போது கண்களில் ஒருவித எரிச்சல் உண்டாகும். மற்றும் கண்களால் புறப்பொருள்களை பார்ப்பதால் பயிற்சியில் மனம் ஒன்றாது.

பிராணாயாமத்தின் போது ஆக்ஞா சக்கரத்திலும், இரண்டு கண்களிலும் பிராண ஒளி அதிகரிப்பதால் கண்களை திறந்தபடி வைத்துக் கொண்டு செய்யும் போது கண்களின் வழியாக பிராணசக்தி வெளியேறி வீணாகும்.

அந்தந்த பயிற்சியின் போது குறிப்பிடப்பட்டுள்ள உடல் பகுதி மற்றும் சக்கரங்களின் மீது கவனம் செலுத்துவதன் மூலம். காதுகளின் வழியாக மனம் வெளியே செல்லாதபடி தடுக்க வேண்டும்.



# பிராணாயாம விதிமுறைகள்

**உமிழ்நீர்:**

பிராணாயாம பயிற்சியின் போது உண்டாகும் உமிழ்நீரை மூச்சை இழுக்கும் போது அல்லது மூச்சை அடக்கும் போது விழுங்கக் கூடாது. மூச்சை வெளியே விட்டபிறகு மீண்டும் மூச்சை உள்ளே இழுப்பதற்கு முன்பு உள்ளுக்கு விழுங்க வேண்டும்.

**நகம்:**

பல முத்திரைகளை கை விரல்களால் செய்து கொண்டு, பிராணாயாம பயிற்சி செய்வதால் விரல்களில் அதிகப்படியாக வளர்ந்திருக்கும் நகத்தை சில நாட்களுக்கு ஒரு முறை வெட்டி விட்டு, அதிகம் வளராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

**முதுகு, கழுத்து, தலை:**

பிராணாயாம பயிற்சியில் முதுகு, கழுத்து, தலை ஒரே நேர்கோட்டில் இருக்க வேண்டும். கோணலாக இருக்கக் கூடாது. முதுகு, கழுத்து, தலையை கோணலாக வைத்துக் கொண்டு பிராணாயாமம் செய்தால் நல்ல பலன்கள் விரைவில் கிடைக்காது.

**உடல்நிலை:**

பிராணாயாம பயிற்சிக்கு முன்பு, ஆசனப் பயிற்சியில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தால் நீண்ட நேரம் ஆடாமல், அசையாமல் பிராணயாம பயிற்சியில் ஈடுபட உடல் ஒத்துழைக்கிறது.

பிராணாயாம பயிற்சியின் போது முகம், கழுத்து அல்லது உடலின் மற்ற எந்த பாகமானாலும் சரி இறுக்கமில்லாமல் தளர்வாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**சுவாச இயக்கம்:**

எந்தெந்த பிராணாயாமத்தில் சுவாச இயக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பிராணாயாம செய்முறை பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளபடி கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுவாக எந்த ஒரு பிராணாயாமத்தை துவங்கும் போதும் முதலில் நுரையீரலில் இருக்கும் அசுத்தக்காற்றை வெளிமூச்சின் மூலம் வெளியேற்றிய பிறகே பிராணாயாம முறைப்படி மூச்சுக்காற்றை உள்ளே இழுக்க வேண்டும்.

**மனநிலை:**

பிராணாயாமம் பயிலும் போது மனதை அதில் முழுமையாக ஈடுபடுத்தி உற்சாகத்துடன் செய்ய வேண்டும். பயிற்சியின் போது மனதினால் வேறு பல விஷயங்களை சிந்தித்துக் கொண்டு செய்தால் பயிற்சியில் ஏற்படும் பிழைகளை அறிய முடியாது. மற்றும் பிராணாயாமத்தினால் உண்டாகும் முழு பலனையும் பெற முடியாது.

**பிராணாயாமம் செய்ய வேண்டிய முறை:**

பிராணாயாமம் செய்யும் போது உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடாமல் அசையாமல் ஒரே நிலையாக இருக்க வேண்டும். பிராணாயாமத்தின் போது அந்தந்த பிராணாயாமத்திற்கு உரிய முத்திரைகளை சரியாக செய்ய வேண்டும்.

பிராணாயாம பயிற்சிகளில் உள்மூச்சின் போது தொடர்ந்து மூச்சுக்காற்றை உள்ளுக்கு இழுக்க வேண்டும். வெளிமூச்சின் போதும் தொடர்ந்து மூச்சுக்காற்றை வெளியே விட வேண்டும். இடைவெளி விட்டு விட்டு மூச்சுக்காற்றை இழுக்கவோ வெளியே விடவோ கூடாது.

ஆரம்பப் பயிற்சியிலேயே ஆர்வத்தின் காரணமாக அதிக சுற்றுக்களை செய்யக்கூடாது. தொடர்ந்து பயிற்சி செய்து கொண்டு வரும் போது உடல்நிலைக்கு ஏற்ப சுற்றுக்களை அதிகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

உடல் தளர்ந்து போகும் அளவுக்கு, மூச்சுக்காற்றை மிகவும் உள்ளுக்கு இழுக்கவோ, வெளியே விடவோ அல்லது அடக்கவோ கூடாது. பயிற்சியின் போது மூச்சில் இறுக்கம் ஏற்பட்டால் அன்று பயிற்சியை நிறுத்தி விட்டு மறுநாள் பயிலவும்.

பயிற்சி தொடர்முறை மற்றும் ஓய்வு ஆசனப் பயிற்சி செய்பவர்கள் ஆசனப்பயிற்சிக்கு பிறகு பிராணாயாமம் செய்யலாம். ஆசனம், தியானம் ஆகிய இரண்டு பயிற்சியும் செய்யாதவர்கள் பிராணாயாமத்தை மட்டும் செய்யலாம்.

பிராணாயாமம் செய்து முடித்தவுடன் உரக்க பேசவோ, வேகமாக நடக்கவோ கூடாது. பிராணாயாமத்திற்கு பிறகு பத்து நிமிடம் சுவாசனத்தில் ஓய்வெடுக்கவும், பிறகு அன்றாட பணிகளை செய்யலாம்.



## சிவன் வேடம் புனைந்த விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த போது, ஒரு சிவராத்திரி தினத்தில் அவரை சிவபெருமான் போன்று அலங்கரித்தார்கள். அந்த வேடம் அவருக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது என்று, அப்போது அவரைப் பார்த்தவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

சுவாமி விவேகானந்தருக்குப் பிறகும் சிவராத்திரியன்று மடத்தைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஒருவர் சிவவேடம் புனைவதும், பிரம்மச்சாரிகள் இருவர் நந்தி பிருங்கி என்ற சிவகணங்களாக வேடம் புனைந்து அன்றிரவு சிவ தாண்டவம் புரிவதும், அக்கினி குண்டத்தின் எதிரில் அமர்வதும் பேலூர், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் மரபாக இருந்து வருகிறது.

கும்பக பிராணாயாம சமயத்தில் உடல் அதிக வெப்பமடைந்தால் பயிற்சியை நிறுத்தவும். சுவாசனத்தில் ஓய்வு பெறவும். அல்லது உடலை குளிர்விக்கும், சீதலி, சீத்காரி போன்ற பிராணாயாமத்தை செய்து உடலை சமநிலைக்கு கொண்டு வரவும்.

**பிராணாயாமத்தை எப்போது செய்யக் கூடாது:** தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகும், உணவு உண்ட உடனேயும், பசியோடு இருக்கும் போதும், தலைவலி, காதுவலி, கண் வலி, பல்வலி உள்ளபோதும் செய்யக்கூடாது.

**இரண்டு பிராணாயாமத்திற்கு இடையே ஓய்வு:** ஒரு பிராணாயாமத்தை செய்த பிறகு அடுத்த பிராணாயாமத்தை செய்வதற்கு முன்பு 1ல் இருந்து 2 நிமிடம் ஓய்வு கொள்ளலாம்.

**உணவு:**

காலையில் வெறும் வயிற்றில் கும்பகம் அல்லது கும்பகமில்லாத எந்த ஒரு பிராணாயாம பயிற்சியையும் செய்வது நல்லது. வெறும் வயிற்றோடு செய்வதற்கு பலகீனமாக இருந்தால் பால், காய்கறி சாறு அல்லது பழச்சாறு ஒரு டம்ளர் அருந்தி 15 நிமிடம் கழித்து பயிற்சி செய்யலாம்.

அதிக உணவிற்கு பிறகு 4 முதல் 5 மணி நேரமும், சிற்றுண்டிக்கு பிறகு 2 மணி நேரமும் கழித்த பிறகு கும்பகமில்லாத (மூச்சை அடக்காத) பிராணா யாம பயிற்சி செய்யலாம்.

**சம்போகம்:**

தம்பதியர்கள் இரவு உடல் உறவு கொண்ட பிறகு மறுநாள் காலை எழுந்ததும் குளித்து விட்டு பிறகு பிராணாயாம பயிற்சி செய்வது நல்லது. குறிப்பாக காயத்ரி பிராணாயாம பயிற்சி செய்வது நல்லது.

இதனால் இரவு சக்தியை இழந்ததினால் ஏற்படும் உடல், மனசோர்வு நீங்கி, அன்றாட பணிகளை சுறுசுறுப்புடன் செய்வதற்கான ஆற்றலை பிராணாயாம பயிற்சி அளிக்கிறது.

**விலக்க வேண்டியவை:**

பிராணாயாமம் பழக விரும்புகிறவர்கள் புகை பிடித்தல், வெற்றிலை, புகையிலை சாப்பிடு தல், பொடி போடுதல், மது அருந்துதல் ஆகிய பழக்கங்கள் இருந்தால் அவற்றை விலக்க வேண்டும்.

காரசார மான மசாலா உணவு, மித மிஞ்சிய உடலுறவும் கூடாது. கும்பக பிராணாயாமம் செய்பவர்கள் மாமிச உணவை நீக்க வேண்டும்.

**ஸ்ரீஸ்ரீ யோகி சிவானந்த பரமஹம்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை அடிவாரத்தில் சிற்றூர் ஒன்று இருந்தது. ஒரு நாள் அந்த ஊருக்குத் துறவி ஒருவர் வந்தார். ஊர் மன்றத்தில் இருந்த ஆலமரத்தடியில் அமர்ந்தார்.

அவரைப் பணிவாக வணங்கிய அந்த ஊர் மக்கள் "துறவியரே! எங்கிருந்து வருகிறீர்? எதற்காக எங்கள் ஊருக்கு வந்துள்ளீர்?" என்று கேட்டார்கள்.

"நானும் உங்களைப் போலத் தாயின் வயிற்றிலிருந்து வந்தவன்தான். சில நாட்கள் தங்கிச் செல்லலாம் என்று இங்கே வந்தேன்" என்றார்.

அவருக்காக அங்கேயே குடிசை ஒன்று கட்டினார்கள் ஊர் மக்கள், அவரும் அந்தக் குடிசையில் தங்கி இருந்தார்.

நாளாக நாளாக மக்கள் அவரை மிகவும் மதித்தார்கள். அவரும் அவ்வப்பொழுது அவர்களுக்கு அறி வுரை சொன்னார். அவர்களுக்கு எந்தச் சிக்கல் ஏற்பட்டாலும் தீர்த்து வைத்தார்.

நாட்கள் பல சென்றன.

திடீரென்று ஒரு நாள் அந்த ஊரிலிருந்து கோழிகள் அனைத்தும் நோயினால் இறந்து போயின.

தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை அவர்கள் துற வியி டம் சொன்னார்கள்.

"கோழிகள் இறந்ததற்காக வருத்தப்படாதீர்கள். நம்பிக்கையுடன் இறைவனை வழிபடுங்கள். இந்த இழப்பு உங்களுக்கு இலாபத்தைத் தரும்" என்றார் அவர்.

அதை அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு அமைதியானார்கள்.

அடுத்த வாரமே அந்த ஊரிலிருந்த நாய்கள் எல்லாம் எங்கோ ஓடி விட்டன.

துறவியிடம் வந்த அவர்கள் இது குறித்து முறையிட்டார்கள்.

வழக்கம் போல அவரும் "நீங்கள் கடவுள் மீத முழு நம்பிக்கை வைத்து வழிபட்டால் இந்த இழப்பும் உங்களுக்கு நல்லதாக ஆகும்" என்றார்.


இதைக் கேட்ட அவர்களில் சிலர் முணுமுணுத்த படி கலைந்தார்கள்.

இரண்டு நாட்கள் கழிந்தன. விந்தையான நிகழ்ச்சி ஒன்று அங்கே நிகழ்ந்தது. எல்லோர் வீட்டு அடுப்பிலிருந்த நெருப்பும் அணைந்து போயிற்று.

என்ன முயற்சி செய்தும் அவர்களால் மீண்டும் நெருப்பு மூட்ட முடியவில்லை.

இது குறித்தும் அவர்கள் துறவியிடம் முறையிட்டார்கள்.

"இதற்கு முன்னர் இப்படி நிகழ்ந்து உள்ளதா?" என்று கேட்டார் அவர்.



# எல்லாம் நன்மைக்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை" என்று பதில் வந்தது.

தன் குடிசையில் நெருப்பு உள்ளதா என்று பார்த்தார் அவர். அதுவும் அணைந்து போயிருந்தது.

வியப்பில் ஆழ்ந்த அவர் "உங்கள் நன்மைக்காகத்தான் இப்படி நடக்கிறது" என்று ஆறுதல் சொன்னார்.

துறவியின் குடிசையிலும் நெருப்பு இல்லை என்பதை அறிந்த அவர்கள்.

"இவரும் நம்மைப் போன்ற மனிதர்தான். நாம்தான் உயர்வாக நினைத்து விட்டோம்" என்ற பேச்சு அவர்களுக்குள் எழுந்தது.

அங்கிருந்த சிலர் "பக்கத்து ஊருக்குச் சென்று நெருப்பு வாங்கி வருகிறோம்" என்று புறப்பட்டார்கள்.

அவர்களைத் தடுத்த துறவி "இன்றிரவு நெருப்பு இல்லாவிட்டால் நீங்கள் யாரும் செத்துவிட மாட்டீர்கள். எதுவாக இருந்தாலும் பொறுமையாக இருங்கள்" என்றார். மறுநாள் பொழுது விடிந்தது.



நெருப்பு கொண்டு வருவதற்காகப் பக்கத்து ஊரை நோக்கிச் சிலர் சென்றார்கள்.

எதிரில் சிறிது தொலைவில் வானளாவப் புழுதி எழுந்தது. அருகிலிருந்த புதரில் அவர்கள் ஒளிந்து கொண்டார்கள்.

ஏராளமான குதிரைகளுடன் பெரிய படை அங்கே வந்து கொண்டிருந்தது. கண்ணில்பட்ட ஊர்களை எல்லாம் கொல்லையிட்டு மக்களை எல்லாம் கொன்று போட்டது அந்தப் படை.

அதன் தளபதி அவர்கள் மறைந்திருந்த புதர் அருகே நின்றார்.

அவரிடம் வீரன் ஒருவன் "அங்கே பாருங்கள். ஓர் ஊர் தெரிகிறது. நாம் அதைத் தாக்குவோம். அங்கே உள்ளவர்களைக் கொன்று கொள்ளை அடிப்போம். கட்டளை இடுங்கள்" என்றான்.

"முட்டாளே! அது மக்கள் யாரும் வாழாத பாழடைந்த ஊர். நாம் அங்கு செல்வதால் எந்தப் பயனும் இல்லை.


யாராவது அங்கு இருந்தால் இந்தக் காலை நேரத்தில் சேவல்கள் கூவாதா? நாய்கள் தான் குரைக்காதா? அல்லது சமையல் செய்யும் புகைதான் தோன்றாதா? வேற எங்காவது ஊர் இருக்கும். அங்கே செல்வோம் என்றார்.

படை வீரர்கள் வேறு திசையில் சென்றார்கள். புதரில் மறைந்திருந்தவர்கள் அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டார்கள். பரபரப்புடன் தங்கள் ஊருக்கு ஓடி வந்தார்கள். நடந்ததைச் சொன்னார்கள்.

"துறவியின் ஆற்றலால்தான் நாம் எல்லோரும் உயிர் பிழைத்தோம்" என்றார்கள்.

## தியானமும் பிராணாயாமமும்

பிராணாயாமம் செய்து வரும் ஒருவரிடமிருந்து பிராணாயாம முறையைக் கற்றுக் கொண்ட பிறகு, அவ்விதம் செய்ய வேண்டும். மூச்சைக் கட்டுப்படுத்தினால் மனம்



கட்டுப்படும் என்பது, பிராணாயாமம் பழகுவதன் அடிப்படைத் தத்துவம்

எனவே சிறிது பிராணாயாமத்திற்குப் பிறகு தியானம் செய்வது, மனதை இறைவனிடம் ஒருமுகப்படுத்த உதவுகிறது.

ஆனால் அதோடு, இறைவனைச் சதா நினைவில் கொண்டு வாழ்ந்தால், மனம் ஒடுங்கி யோகம் தானாக நம்மிடம் வந்து பொருந்தும் என்பதை நாம் முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டும்.

புறஇருளை நீக்குவதற்கு வெளியே உள்ள விளக்கு உதவுகிறது. அதுபோல் அகஇருள் நீங்குவதற்கு இடைவிடாத தெய்வசிந்தனை இருக்க வேண்டும்.

உண்மையை அறிந்த அவர்கள் துறவியிடம் மன்னிப்பு கேட்பதற்காக அவரின் குடிசைக்குச் சென்றார்கள்.

அங்கே துறவி இல்லை. அங்கிருந்து அவர் சென்று விட்டார் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

எ. சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்முள்ளிருக்கும் அதிசய இரட்டையர்கள்!

**விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் வலது பக்க மூளையைப் பற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். வலது மூளையின் அதிசயங்களை நிகழ்த்தும் பேராற்றல்கள் தான் இவர்களை வியக்க வைத்தது. இதனால் மனிதர்கள் மேம்பாட்டுக்கு இது போன்ற அதிசய ஆற்றல்கள் இருப்பது உணரப்பட்டது.**

இந்தச் சின்னங்களின் அதிசயங்களில் யார் எப்போது எது வேண்டுமானாலும் பெறலாம் என்ற உண்மையை இப்போது உணர்ந்து விட்டார்கள். இதுவரை கடவுள் இரகசியம் இறைவன் சக்தி என்று இரகசியமாக மறைத்து வைக்கப்பட்ட உண்மைகள் சின்னங்கள் மூலம் சாமானிய மக்கள் கூட விரும்பியதை அடையலாம். இதற்கு படிப்போ பக்தியோ பயிற்சியோ எதுவுமே தேவையில்லை. இது வரை மனதில் வேறுவிதமான எண்ணங்களாலும் தேவையில்லாதவைகளைப் போட்டு அடைத்து வைத்துக் கொண்டு இருக்கும் பரிதாப நிலை மாறி கஷ்டங்கள் நீங்கி வசதியாக வாழ் இந்த சைக்கோ சிம்பலாஜி பெரும் உதவி செய்திருக்கிறது. உண்மையான இறைவன் என்னும் இரட்டையர்கள் வலது மூளையும் மறைமனமும் தான். இது இரண்டும்தான் மறைத்து வைக்கப்பட்டிருந்த இறைவனாகும்.

சமீப கால ஆராய்ச்சியில் ஆய்வாளர்கள் வலது மூளையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆற்றல்களை யார் விரும்பி எதை வேண்டுகிறார்களோ அது அவர்கள் விரும்பியபடியே தயக்கமில்லாமல் கிடைக்கிறது. சாதாரண மனிதனில் இருந்து பெரிய மனிதர்கள் வரை யார் வேண்டுமானாலும் இதைப் பயன்படுத்தி விரும்பியதை அடையலாம்.

ஆகவே இப்படிப்பட்ட அதிசய இரட்டையர்கள் நம் உள்ளேயே இருக்கிறது. அது வலது மூளையும் மறைமனமும் தான். ஆகவே அதைச் செயல்படுத்தி பிரச்சினைகள் கஷ்டங்கள் வறுமையிலிருந்து விடுதலை பெறுங்கள்.

எப்படி ஒருவர் அக்கம்பக்கங்கள் பிரபலமடைந்து செயல்பட்டார் என்று பார்ப்போம். மரியா என்ற பெண் எளிமையான ஓர் இளம் பெண் ஆவார். அவர் கணவர் வேலைக்குப் போனதும் இவர் வீட்டில் தனிமையை உணர்ந்தார். தனிமையில் இருக்க விருப்பமில்லை. வீட்டை சுத்தம் செய்வது துணிகளை துவைத்து எடுத்து வைப்பது எப்போதாவது சினிமாவுக்குப் போவது என்று வாழ்க்கை இப்படிப் போய்க்கொண்டிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. எப்படியும் தன் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்படும் என்று அமைதியாகக் காத்திருந்தார். சிலசமயம் அவரது கணவர் வீட்டுக்கு விருந்தினரை அழைத்து வருவார். அப்போது வீடு கலகலப்பாக இருக்கும். இப்படி வாழ்வது பிடிக்கவில்லை. ஆகவே ஆக்கபூர்வமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணி ராபின்சன் என்கிற தாந்திரீகரை அணுகினார்.

நீங்கள் வெளியில் என்ன வேண்டும் என்பது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ அவைகளெல்லாம் உங்கள் உள்ளேயே இருக்கிறது. உங்களுக்கு இப்போது புது நண்பர்கள். கோலாகலமான தேநீர் விருந்துகள் எல்லாமே நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர்களால் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. உங்கள் தேவைகளை அடைய நீங்கள் உங்களிடமே தான் தொடர்பு கொள்ள வேண்டும். உங்களிடமே எனக்கு மாற்றிய



## துன்பம் கலவாத பேரின்பம்!

மனித உறவுகள் அனைத்தும் எல்லைக்குட்பட்டவை, நீங்கும் இயல்புடையவை. நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவுதான் எல்லையற்றது, நீங்காத இயல்புடையது.

உலகில் நாம் காணும் எல்லா இன்பங்களும் துன்பம் கலந்த இன்பமாகும். துன்பம் கலவாத இன்பம் பேரின்பம். இந்தப் பேரின்பத்தை இறைவன் திருவருளில் தங்களைக் கரைத்துக் கொண்டவர்கள் மட்டுமே பெறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுயமுயற்சியும் அவசியமே


மைக்கும் அற்புதமான ஆற்றல்கள் இருக்கிறது அதற்குத் தகுந்த சின்னத்தைப் பயன்படுத்தினால் உங்கள் அசாதாரண சக்திகளை செயல்படுத்தி விரும்பியதை அடையலாம்.

நீங்கள் உங்களிடம் மறைந்து இருக்கும். இரட்டையர்களின் ஆற்றலைப் பயன்படுத்தி விருப்பங்களை நிறைவேற்றலாம் என்று சொல்லி அவருக்கு ஒரு கம்பிச்சுருள் சின்னத்தைக் கொடுத்து அதை தினசரி இரவு படுக்கும் முன்பு கம்பிச்சுருள் சின்னத்தை பத்து நிமிடங்கள் வலது பக்க மூளையில் பார்த்து வாருங்கள். அது மறைமனதில் சென்று பரவி உங்களது ஆசைகளை எல்லாம் நிறைவேற்றும் என்று சொல்ல கம்பிச்சுருள் சின்னத்தை கொடுத்தார்.

கம்பிச்சுருள் (Spiral)

இப்படத்தைப் பார்த்து வந்தால் வாழ்க்கையில் உயரலாம்.

இந்தச் சின்னத்தை ஜாய்ஸ் என்ற பெண் தினசரி இரவு படுக்கும் முன்பு வலது மூளையில் இச்சின்னத்தைப் பார்த்து தனது விருப்பங்களை மறைமனதில் தினசரி பரப்பி வந்தார். இவர் விரும்பியபடி



புதிய தொடர்புகளை வித்தியாசமான முறையில் ஏற்படுத்திக் கொடுத்தது. தினசரி காலை நேர காப்பி சாப்பிடும் சமயத்தில் இவர் அக்கம்பக்கங்களில் உள்ள வீடுகளில் உள்ளவர்களிடம் தொடர்பு கொண்டு பேச ஆரம்பித்தார். வலது மூளையில் பரப்பப்பட்ட எண்ணங்கள் செயல்பட ஆரம்பித்தது.

ஜாயிசுடைய அறிவாற்றல், பேச்சுத் திறமைகளை எல்லாம் கண்டு அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பிரபலமாகி விட்டார். பெண் உரிமைகள், குழந்தை வளர்ப்பு, வீட்டில் ஒழுங்குமுறை, சமையல் அறையின் பரிசுத்தத் தன்மை, உடல்நலம் குறித்து அவ்வப்போது ஜாய்ஸ் சிறுசிறு கூட்டங்களில் பேச ஆரம்பித்தார். திடீரென்று ஒரு நாள் பக்கத்தில் உள்ள பெண்கள் கிளப்பில் இருந்து வந்து ஜாய்சை சொற்பொழிவாற்றக் கூப்பிட்டார்கள். இரண்டு மணிநேர சொற்பொழிவிற்குப் பிறகு அவருக்கு சன்மானமாக 30 டாலர் கொடுத்தார்கள்.

இதுபடி ஜாய்ஸ் அப்பகுதியில் பிரபலமாகி விட்டார். இப்போது அவரைத் தேடி நிறைய மாதர் சங்கங்கள் சொற்பொழிவுக்கு கூப்பிட ஆரம்பித்தனர். அதனால் அவருக்கு வாரம் 200 முதல் 300 டாலர் வருமானம் வர ஆரம்பித்தது. அரசியல் கட்சிகளிலும் ஜாய்ஸ் பேச ஆரம்பித்தார். நாளாக நாளாக அவர் அரசியலில் ஒரு பிரபல பேச்சாளராக மாறிவிட்டார். அவரது புகழ் பரவ ஆரம்பித்தது. எளிய அரசியல் கட்சியின் பேச்சாளராக மாறினார். மாதம் 3000 டாலர் வருமானம் கிடைத்தது. இவர் கணவரும் இவருடன் ஒத்துழைத்ததால் நாளடைவில் அவருக்கு பெரும் வசதிகள் எல்லாம் ஏற்பட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்.

என்.தம்மண்ணன்

ஆன்மிகவாழ்க்கையில்சுயமுயற்சிக்கு முக்கிய இடம் இருக்கிறது. இதை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதன் சுய முயற்சி செய்யாவிட்டால் சோம்பியிருந்தால், தெய்வகிருபை இருந்தாலும் உரிய பயன்தராது.

இது மழை பெய்தாலும் (நிலம் இருந்தும், விதையிருந்தும்) விதை விதைக்க வேண்டிய விவசாயி, விதியின் மேல் பழியைப் போட்டுச் சோம்பலால் விதை விதைக்காமல் போவது போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனுசு

## ஐய வருடம் கார்த்திகை மாதம்
## 17.11.2014 முதல் 15.12.2014 வரை

***மனதில் பட்டதை உடனே செய்து முடிக்கும் தனுசு ராசி வாசகர்களே!***

***இம்மாதம் உங்களின் ராசிக்கு அட்டம குருவை செவ்வாய் பார்ப்பது கேது சுகஸ்தானத்தில் அமருவது நன்மையை தராது எனினும் தொழில் ஸ்தானதிபதி புதன் லாபஸ்தானத்தில் சனியுடன் அமர்ந்திருப்பது தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.***

**பணியாளர்களுக்கு:**

தொழில் செய்யுமிடத்தில் பல இன்னல் இருந்தாலும் அனுசரித்து செயல்படுவீர்கள். சில விடயங்களில் பொறுமையை இழந்து கேள்வி கேட்க ஆரம்பிப்பீர்கள். தொழிலை மதித்து நடக்கும் உங்களுக்கு ஒரு போதும் தீமை வராது நன்மையே பெறுவீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது நலனில் வளர்ச்சியை பெறுவீர்கள். சுய நலன் கருதாது செயல்பட்டுவது மற்றவரின் பாராட்டுதல்களை பெறுவீர்கள். வாழ்வில் தரம் பாதிக்காத சூழ்நிலை உருவாக மக்களுக்காக பாடுபடுவீர்கள். நடுநிலையாக சூழ்நிலையில் இருப்பீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானாதிபதி புதன் தன ஸ்தானாதிபதி சனியுடன் இணைவு பெற்று லாபஸ்தானத்தில் அமர்ந்துபொருளாதாரநிலையில்வளர்ச்சியைபெறுவீர்கள். பத்திரிகை, உரம், ஜவுளி வியாபாரம் நன்றாக அமையும்.

**கலைஞர்களுக்கு:**

கலைதுறையினர் வெளியூர் சென்று வரும் வாய்ப்பு அமையும். வரவுக்கு மீறிய செலவுகள் வந்து கடன் படும் நிலை உண்டாகும். ஆடம்பர பொருட்கள் வாங்கி செலவுகளை அதிகப்படுத்தி கொள்வீர்கள். வேறு வழியில் பணம் வந்து சிரமம் குறையும்.

**பெண்களுக்கு:**

பெண்களின் செயல்பாடுகளில் சுறுசுறுப்பான நிலை உண்டாகும். அவசர கோலத்தில் செயல்பட்டு சிலர் அவஸ்தைப்படுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சிரமம் இருக்கும்.

**மாணவர்களுக்கு:**

கல்வியின் முன்னேற்றம் உண்டாகும். சுமையாக இருந்த தேர்வு எளிமையாக அமையும். கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

09.12.2014 செவ்வாய் இரவு 10.05 முதல் 12.12.2014 வெள்ளி காலை 09.15 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

கொடுக்கல் வாங்கலில் கவனமுடன் இருப்பது நல்லது. வீட்டு காரியங்களிலும் ஒப்பந்தங்களிலும் ஆவணங்களை சரி பார்த்த பின்பு கையொப்பம் இடுதல் நன்மை தரும்.

**பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

பெண்களுக்கு வரன் அமைவதில் சிக்கல் உண்டாகும். ஆடம்பர பொருட்கள் வாங்கி பண விரையம் உண்டாகும். ஏதாவது ஒரு பிரச்சினை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

**உத்திராடம் 1ம் பாதம்:**

கடவுள் நம்பிக்கை கொண்ட நீங்கள் என்ன நடந்தாலும் சரி நான் செய்வதே சரி என்று சொல்லி செயல்படுவீர்கள். பொருளாதாரம் சுமார் தான்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

மஞ்சள் கலந்த பச்சை (காக்கி), வைலட், வெண்மை.

**அதிர்ஷ்ட திசைகள்:**

கிழக்கு, வடமேற்கு, மேற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

புதன், சனி, திங்கள்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்தியை வணங்கி சர்க்கரை கலந்த உணவு படைத்து விளக்கு போடவும். ஞாயிற்றுகிழமை விநாயகரை அருகம்புல் மாலைகட்டி வணங்கி வர சிக்கலான பிரச்சினையும் தீரும்.

## மாலையில் தீபம் ஏற்றும் போது கூற வேண்டிய மந்திரம்

மாலை நேரத்தில் பூஜை அறையில் விளக்கேற்றும் போது கீழ்க்கண்ட மந்திரத்தை கூறி விளக்கேற்றினால் சகல சுகமும் உண்டாகும்.

* சிவம் பவது கல்யாணம்
* ஆயுரரோக்ய வர்த்தனம்
* மயதுக்க வினாசாய
* ஸந்த்யா தீபம் நமோ நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனுசு

பார்வையால் அனைவரையும் சொக்க வைக்கும் தனுசு ராசி வாசகர்களே!

உங்களின் ராசிக்கு லாபஸ்தானத்தில் இருந்து வந்த சனி பகவான் இனி ஏழரை சனியின் முதல் கட்டமான விரைய சனியாக வருகிறார். தொடர்ந்து ஏழரை ஆண்டு காலம் உங்களை உலக அனுபவங்களையும் நல்லது கெட்டது அறிய செய்வதுடன் உங்களை சுற்றி உங்களை ஏமாற்றுபவர்களையும், உங்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களையும் இந்த காலத்தில் அறிய செய்வார். தனக்கென்று எதையும் சேமித்து வைக்க தெரியாத குணம் கொண்ட நீங்கள் என்ன கையிலிருந்தாலும் உடனே மற்றவரிடம் தந்து விட்டு

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

அடுத்து பார்க்கலாம் என்று சொல்லி மனதை தேற்றிக் கொள்ளும் உங்களுக்கு ராசிக்கு தனஸ்தானத்தையும், ஆறாமிடத்தையும், பாக்கியஸ்தானத்தையும் பார்ப்பது உங்களுக்கு ஏற்ற இறக்கங்களையும் சரி பாகமாக வழங்கவிருக்கிறார். இருந்தாலும் நல்லதொரு மனிதனுக்கும் முதல் சுற்று மங்கும் சனி என்றும், இரண்டாம் சுற்று பொங்கும் சனி என்றும் மூன்றாம் சுற்று கண்ட மசனி என்றும் சொல்வார்கள். இளம் வயதினருக்கு அலைச்சல் துன்பம் மன அழுத்தம், இடுப்பு தொடை பகுதிகளில் அடிக்கடி ஏதாவது பிரச்சினைகள் வந்து சேரும். நடுத்தர வயதினருக்கு மூச்சு திணறல், வலது காதில் பிரச்சினை நாக்கு அடியில் புண்களும். நரம்பு சம்மந்தமான பிரச்சினைகளும் வந்து சிரமப்படுவீர்கள். வயது முதிர்ந்தவர்களுக்கு கால் சுளுக்கு, மன உளைச்சல், இதய நோய், சிறுநீரக குறைபாடு, தொலை தூர பயணம் மேற்கொள்ளுதல், போதை பொருட்களால் மருத்துவ செலவுகள் செய்தல், வலது பாதத்தில் பாதிப்பு போன்ற நிலை உண்டாகும். ஆறாமிடத்தை பார்வை இடுவது உடல் உபாதைகள் குறையும். மருத்துவ செலவு குறையும். தனக்கு வரும் முன் எச்சரிக்கையாக எதையும் செய்து கொள்ளுவீர்கள். குடும்ப பாரத்தை எடுத்து தன் தலையில் போட்டுக் கொண்டு அங்கும் இங்கும் அலைவீர்கள். உருப்படியான காரியம் எதையும் செய்யும் முன் பல யோசனைகளில் ஈடுபடு வீர்கள்.

வெளியூர் சென்று நீண்ட நாட்கள் தங்கி இருக்க வேண்டி வரும். பணத் திற்காக எந்த வேலையும் செய்ய துணிந்து செய்து முடிப்பீர்கள். உள்ளூரில் கௌரவம் பார்த்த நீங்கள் வெளி இடங்களில் எதை பற்றியும் கவலைப்படமாட்டீர்கள். குரு பெயர்ச்சிக்கு பின்பு உங்களுக்கு வசந்த காலமாக அமையும். உங்களுக்கு கொடுத்த வேலையை சரியாக செய்து நன்மையை பெறுவீர்கள். தகப்பனார் மூலம் உங்களுக்கு வேண்டிய உதவிகளை பெறுவீர்கள். உங்களின் யோகாதிபதி சூரியன் வலம் வரும் போது உங்கள் ராசியை பார்க்கும் போது ராசிக்குவரும்போது நல்லமாற்றத்தைஉணர்வீர்கள். சிம்மத்தில் குருவும், தனுசில் சூரியனும் இருக்கும் உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டாகும். மனதில் கூட தப்பு செய்ய எண்ண மாட்டீர்கள். காதலர்கள் இணைவார்கள். மூத்த சகோதரர்களால் ஏதாவது பிரச்சினை வரலாம். படிப்பில் கவனம் செலுத்த வேண்டி வரும். பகைவர்களை துவசம் செய்வீர்கள். மறைமுக எதிரிகள் உங்களிடம் சரணாகதி அடைவார்கள். பழைய வழக்குகள் முடிவுக்கு வரும். கடந்த கால நிகழ்ச்சிகளை மறக்க முயற்சி செய்வீர்கள். உழைப்பிற்கு உரிய ஊதியம் கிடைக்கும். கடின உழைப்பு செய்து வர வேண்டி வரும். வியாபாரிகள் புதிய சிந்தனைகளை உருவாக்கி கொள்வீர்கள்.

**பரிகாரம்:** நவக்கிரகத்திற்கு முன்பு ஏழு தீபம் ஏற்றி வெண் பொங்கல் செய்து 3 முறை வலம் வந்து காகத்திற்கு வைத்து விட்டு பக்தர்களுக்கு தானம் செய்து விட்டு வர விரைய சனி வைராக்கிய சனியாக மாறி விடுவார்.



### இறைவனைத் தரிசிக்க முடியுமா

ஆன்மிகத்தில் உடனடியாக அறுவடையை எதிர்பார்க்க முடியாது. புலனடக்கத்தோடும், தூய உள்ளத்தோடும், இறைவனிடம் ஆழ்ந்த பக்தி செலுத்தினால் இறைவனைத் தரிசிக்க முடியும் முயன்று பாருங்கள். அனுபூதி பெறுவதற்கு ஆசையே தடை.

உள்ளத்தில் ஆழ்ந்து மூழ்க மூழ்க, அரிய பல ஆன்மிக ரத்தினங்கள் கிடைக்கும்.

பக்தியுடன் அகங்குழைந்து உருகுபவர்களுக்கு ரத்தினங்கள் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாங்கள் அசி காட்டிற்குச் சென்று கங்கை யில் நீராடினோம். இந்த அசி காட்டில்தான் துளசி ராமாயணம் இயற்றிய துளசிதாசர் ஜல சமாதி ஆனார் என்று சொல்லப்படுகிறது.*

அசி காட்டிலிருந்து கங்கைக் கரையில் ஐந்து நிமிடங்கள் நடந்து சென்றால் துளசி காட்டை அடையலாம். துளசி காட்டிலுள்ள கங்கைசக்கரை படிக்கட்டுகளில் மேலே ஏறிச் சென்றால், அது துளசிதாசர் வாழ்ந்த வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்க்கும். அந்த வீட்டில் இப்போது ஒரு சிறிய ராமர் கோயில் இருக்கிறது. அதில் துளசிதாசரின் மரப்பாதுகையும், அவர் கங்கையைக் கடப்பதற்குப் பயன்படுத்திய படகின் ஒரு சிறிய மரத்துண்டையும் வைத்து இப்போது வழிபட்டு வருகிறார்கள்.

பகல் இரண்டு மணிக்கு நானும் எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவரும் ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் தசாஸ்வமேத காட் கங்கைக் கரையை அடைந்தோம். அங்கிருந்து நடந்து விசாலாட்சி கோயில் வழியாக மணிகர்ணிகா காட் சென்றோம்.

அங்கிருந்து சக்கர தீர்த்தம் என்ற குளத்தின் வழியாக சிந்தியா காட்டிற்குச் சென்றோம். இந்தச் சக்கர தீர்த்தம் என்ற குளத்தை மகாவிஷ்ணு தமது சக்கரத்தால் உண்டாக்கினார் என்பது ஐதீகம். இந்தச் சக்கர தீர்த்தத்தில் சிவனும் பார்வதியும் நீராடியதாகவும், அப்போது சிவபெருமான் காதில் அணிந்திருந்த காதணி இந்தக் குளத்தில் விழுந்தது என்றும் கூறுவார்கள். அதனால்தான் இந்த இடத்திற்கு "மணிகர்ணிகா" என்ற பெயர் ஏற்பட்டது (மணி காதணி, கர்ணிகா காது)

இந்தச் சக்கரதீர்த்தத்தின் அருகிலுள்ள படிகளில் மேலே ஏறிச் சென்றால், வலப்புறத்தில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அது தனிமையான இடம். அந்த சிவாலயத்தைக் கடந்ததும் "நரசிம்ம சுவாமி மடம்" என்ற ஒரு மடம் இருக்கிறது. இந்த மடத்தில் நரசிம்மரைப் பூஜிக்கிறார்கள். பெரும்பாலும் இங்கு மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட கேரள சந்நியாசிகள் தான் இருக்கிறார்கள். நரசிம்ம சுவாமி மடத்தையும் கடந்து படிக்கட்டுகளில் இன்னும் சற்று மேலேறிச் சென்றால் இடப்பக்கத்தில் "அபாய சந்நியாசி ஆசிரமம்" என்ற ஒரு மடம் வரும். இந்த ஆசிரமத்தில் சந்நியாசிகள் சிலர் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர மூன்று மாதம், ஆறு மாதம், ஒரு வருடம் இந்த ஆசிரமத்தில் தங்கியிருந்து விட்டு செல்லும் சந்நியாசிகளும் உண்டு.

இந்த ஆசிரமத்தில் தரை மட்டத்திலிருந்து சுமார் 25 அடி ஆழமுள்ள ஒரு கிணறு இருக்கிறது. இந்தக் கிணற்றின் அடிப்பகுதியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிவலிங்கத்தை நாம் மேலே இருந்து பார்த்தால் ஒரு

# மகாவிஷ்ணு உருவாக்கிய 'சக்கர தீர்த்தம்'





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிணற்றில் சிவலிங்கம் இருப்பதுபோல் தெரியும். மேலே இருந்து சிவலிங்கம் உள்ள இடத்திற்குச் செல்வதற்குப் படிக்கட்டுகளும், மின்சார விளக்குகளும் இருக்கின்றன. இந்தச் சிவலிங்கத்திற்குத் தவறாமல் நித்திய பூஜை நடை பெறுகிறது.

இந்தச் சிவலிங்கத்தின் அருகில் அபய சந்நியாசி ஆஸ்ரமத்தைச் சேர்ந்த சந்நியாசிகளில் யாராவது ஒருவர் அமர்ந்து "ஓம் நமசிவாய" என்ற மந்திரத்தை ஜபம் செய்து கொண்டிருப்பார். இப்படி "ஒரு மணி நேரத்திற்கு ஒருவர் ஜபம் செய்வது" என்று முறை வைத்துக் கொண்டு இந்த ஆசிரமத்தின் சந்நியாசிகள், இந்த மணிகர்ணிகேஸ்வரர் சிவலிங்கத்தின் முன்பு ஜபம் செய்யும் வழக்கம் முன்பு இருந்து வந்தது. நாங்கள் அங்குள்ள மணிகர்ணிகேஸ்வரரைச் சென்று தரிசித்தோம்.

அங்கிருந்து நாங்கள் வீரேஸ்வர் சிவன் கோயிலுக்குச் சென்றோம். நாங்கள் சென்ற போது அந்தக் கோயிலில் ஒரே ஒருவர் கூட இல்லாமல் பூரண அமைதி நிலவியது. அங்கு நாங்கள் எடுத்துச் சென்றிருந்த கங்கை நீரை வீரேஸ்வர் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் பக்தர்களுக்குக் காசியிலுள்ள இந்த வீரேஸ்வர் சிவலிங்கம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால் "தனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும்" என்று சுவாமி விவேகானந்தரின் தாய், இந்தக் காசி வீரேஸ்வரர் சிவலிங்கத்திற்குத் தனது பிரார்த்தனைகளைச் செலுத்தி வந்தார். இந்த

பிறகு நாங்கள் சிந்தியா காட்டிலுள்ள கங்கைக் கரையை அடைந்தோம். அங்கிருந்து ஹனுமான் காட்டிற்குச் செல்வதற்காக ஒரு படகை ஏற்பாடு செய்து கொண்டோம். படகு தெற்குத் திசையை நோக்கி நகர ஆரம்பித்தது.

தூரத்தில் கங்கைக் கரையில் பஞ்சகங்கா காட் தென்பட்டது. அங்கே இப்போது முஸ்லிம்களின் ஒரு மசூதி இருக்கிறது. அந்த மசூதி இருக்கும் இடத்தில் முன்பு ஒரு காலத்தில் "பிந்து மாதவ்" என்ற புகழ் பெற்ற விஷ்ணு கோயில் இருந்தது. அந்த விஷ்ணு கோயிலில் தான் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் காசிக்கு வந்த போது தங்கியிருந்தார். இப்போது அங்குள்ள மசூதியின் கட்டிடம் முடியும் இடத்தில் "திரைலங்க சுவாமி மடம்" இருக்கிறது.

திரைலங்க சுவாமி அங்கு வாழ்ந்த போது ஸ்ரீராம கிருஷ்ணர் காசிக்கு வந்தார். ஸ்ரீராமகிருஷ்ணரும், திரைலங்க சுவாமியும் சந்தித்துப் பேசியது போன்ற விவரங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. திரைலங்க சுவாமி மடத்திற்கும், கால பைரவர் கோயிலுக்குமிடையில் "தண்டபாணி கோயில்" என்ற ஒரு கோயில் இருக்கிறது. "காசி யாத்திரை செல்பவர்கள் காசியில் தரிசிக்க வேண்டிய ஒன்பது முக்கியமான இடங்களில் தண்டபாணி கோயிலும் ஒன்று" என்று ஒரு பழைய சுலோகம் கூறுகிறது.

மணிகர்ணிகா காட்டைத் தாண்டி படகு சென்று கொண்டிருந்த போது, கங்கைக் கரையில் மேலே

சிவபெருமானின் அருளால் பிறந்தவர்தான் சுவாமி விவேகானந்தர். எனவே தான் சுவாமி விவேகானந்தர் குழந்தையாக இருந்தபோது அவருக்கு அவருடைய பெற்றோர்கள் "வீரேஸ்வர்" என்று பெயர் வைத்தார்கள். காசியிலுள்ள இந்த வீரேஸ்வர் சிவபெருமானின் அம்சமாகப் பிறந்தவர்தான் சுவாமி விவேகானந்தர். இந்தக் கோயிலிலுள்ள சிவலிங்கத்தில் ஒரு விசேஷம் உண்டு. இதன் ஆவுடையாரில் 28 பைரவர்களின் முகங்கள் சுற்றிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்து திரும்பி வரும் வழியில் சற்று தூரத்தில் வடக்கில் "சங்கட்மாயி (சங்கடங்களை நீக்கும் அம்மன்)" என்ற பெயரில் பிரசித்திப் பெற்ற ஒரு தேவி கோயில் இருக்கிறது. சங்கடங்களை நீக்கும் தேவி என்பதால் இந்தக் கோயிலுக்கு நிறைய பேர் செல்வது வழக்கம். அதிலும் முக்கியமாக செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களில் இங்கு கூட்டம் மிகுதியாக இருக்கும். இதுபோன்று காசியில் முக்கியத்துவம் வாய்ந்த கோயில்கள் என்று எடுத்துக் கொண்டாலே சுமார் 100 கோயில்களுக்குக் குறையாமல் இருக்கும்.

### இறைவன் இல்லை என்று சாதிக்காதே!

இரவில் ஆகாயத்தில் எண்ணற்ற நட்சத்திரங்களை நீ பார்க்கிறாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை தென்படுவதில்லை. ஆதலால் பகல் நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான காலத்தில் நீ இறைவனைக் காண முடியவில்லை என்பதால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே என்ற ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்து, சிவலோகம் குறித்த விடயத்திற்கும் பொருந்தும்.

இருந்த ஒரு கட்டிடத்திலிருந்து பலர் பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. அங்கு ராஜராஜேஸ்வரி மடம் இருக்கிறது.

படகு மீர் காட் வழியாகச் சென்றது. இந்த இடத்திலிருந்து காசி விசாலாட்சி கோயில் அருகில் இருக்கிறது. இந்த மீர் காட்டில் "வாராகி கோயில்" என்ற ஒரு கோயில் இருக்கிறது. இந்த வாராகி உக்கிர தெய்வம். இந்தக் கோயிலை விடியற்காலை நான்கு மணிக்குத் திறந்து காலை ஆறு மணிக்கு மூடிவிடுவார்கள். அதன் பிறகு மறுநாள் விடியற்காலையில் தான் திறப்பார்கள். எனவே பக்தர்கள் இந்த தேவியை விடியற்காலை ஆறு மணிக்குள்தான் தரிசிக்கமுடியும். இந்த கோயிலை, தரைமட்டத்திலிருந்து படிக்கட்டுகளின் மூலம் சற்று கீழே இறங்கி சென்று, பக்தர்கள் வாராகிதேவியைத் தரிசிக்கும் வகையில் அமைத்திருக்கிறார்கள்.

தொடரும்...

சுவாமி கமலாத்மானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரம்

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**தன்னை நம்பி வருபவருக்கு எப்பொழுதும் நல்லதை செய்யும் மகர ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு இதுவரை தொழில் ஸ்தானத்தில் இருந்த சனி பகவான் இனி லாப ஸ்தானத்தில் அமருகிறார். ஏழரை சனியாக இருந்தாலும் எந்த வகையான சனியாக இருந்தாலும் மகர ராசிகாரர்களுக்கு எந்த பாதிப்பையும் தராது. எனக்கு பிடித்த விடயத்தை செய்கிறேன் என்று சொல்லி மற்றவரின் நலனையும் இணைத்து செய்யும் பண்பு உங்களுக்கு இருக்கும். கோபம் இருக்கும் இடத்தில் குணம் இருக்கும் என்பார்கள் அது போல் குரு பார்வை ராசிக்கு இருப்பதால் இழந்த சொத்துகளை மீண்டும் பெறுவீர்கள். சனி பகவான் சொந்த வீடான உங்கள் வீடு என்பதால் சொன்ன வார்த்தைகளை காப்பாற்ற தொடர்ந்து போராடி ஜெயிப்பீர்கள். அன்னிய மொழிகளில் பேசி அடுத்தவரை அசத்தும் நீங்கள் எந்த இடத்திலும் இனிமையாக பேசியும் வெறுப்பு காட்டுவது போல சொல்லி நீங்கள் சொல்ல வந்த விடயத்தை சொல்லி விட்டு போவீர்கள்.



தினமும் ஒரு கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது என்பது பழக்கமாக கொண்டு விடுவீர்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்தின் சனி பார்வை இடுவது புத்திரர்களுக்கு தொழில் வாய்ப்பையும், குலதெய்வ வழிபாடுகளை செய்வதும், புத்திர விருத்தி வேண்டி இருப்பவர்கள் தெய்வ வழிபாடு செய்தால் நிச்சயம் நடக்கும். வரவுக்கு தகுந்த செலவுகளை செய்வீர்கள். குரு மறைந்தாலும் நல்ல பலன் தருவார். பார்த்தாலும் நல்ல பலனை தருவார்.

இது பனிரெண்டு ராசிகளில் மகரராசிக்கு மட்டும் இந்த பாக்கியம் கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டி வரும். நரம்பு சம்ம்நதமான உபாதைகள் வந்து அடிக்கடி சிரமத்தை தரும். கண் நோய் வரலாம். காது புண் ஏற்படலாம் பல காலம் வேலை தேடிக் கொண்டு இருப்பவர்களுக்கு சீக்கிரம் வேலை கிடைக்கும். பொருளாதார நிலை முன்னேற்றம் உண்டாகும்.

சனி பகவானின் எட்டாமிடத்தை பத்தாம் பார்வையாக பார்ப்பது ஆயுள் பலம் கூடும்.

பல இன்னல்களை பட்டாலும் அதிலிருந்து விடுதலை பெறும் நீங்கள் எதையும் நிரந்தரமாக பெறுவதும் கிடையாது எதையும் தற்காலிகமாகவும் செய்வதும் இல்லை. நல்லதும் கெட்டதும் பகிர்ந்து அனுபவிக்கும் நீங்கள் சமயோசித புத்தியால் இடத்திற்கு தகுந்தபடி நடந்து கொள்வீர்கள். எட்டாம் அதிபதி சூரியன் ராசிக்கு வரும் போதும் கடகத்திலிருந்து ராசியை பார்க்கும் காலம் சில விபத்துகளில் பாதிப்பை அடைய வேண்டி வரும். மருத்துவ சிகிச்சைக்கு பின்பு நன்மை அடைவீர்கள். அட்டம ஸ்தானத்தை பார்க்க தீய காரியங்கள் நன்மையாக அமையும். கோவில் பணிகளில் ஈடுபட்டு கோயில் கட்டி முடிப்பீர்கள். சமூக சேவையில் ஈடுபாடு கொள்ளுவீர்கள். உயர்கல்வி படிப்பவர்கள் தொழில் நுட்ப துறையில் முன்னேற்றம் காண்பீர்கள். சிவில் இன்சினியரிங் கல்வியில் சிறப்பாக பயின்று பாராட்டு பெறுவீர்கள். திருமண வாய்ப்புகள் சிலருக்கு உண்டாகும். எதையும் சுறுசுறுப்புடன் செய்வீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பரிகாரம்:** திருமணத்தடை நீங்க முத்து மாரியம்மனையும் வேலை வேண்டுபவர்கள் சண்முகரை வள்ளி தேவானையுடன் வழிபடவும். 14 விளக்கு அம்மன் கோவிலில் ஏற்றி வெள்ளை நிற பூக்கள் வைத்து வணங்கி வர தடை நீங்கி நன்மை உண்டாகும்.

## வருணன்

வருணன் மழையைப் பொழிந்து பயிர்களை வளரச் செய்து மக்களுக்குக் களிப்பை உண்டு பண்ணி ஸுகத்தைக் கொடுப்பவன்.

நாகபாஸதரம் ஹ்ருஷ்டம்
ரக்தௌகத்யுதி விக்ரஹம்
ஸஸாங்க தவளம் த்யாயேத்
வருணம் மகராஸநம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரம்

**ஐய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**



*இடம் அறிந்து செயல்பட்டு அனைவரின் மனதில் இடம் கொண்டு விளங்கும் மகர ராசி வாசகர்களே!*

*இம்மாதம் உங்களின் ராசிக்கு குருபார்வையும், தொழில் ஸ்தானத்தில் ராசிநாதனும் அமர்ந்து நன்மையை பெறுவீர்கள். எடுத்த காரியம் ஜெயம் உண்டாகும். செயல்பாடுகளில் தடையின்றி சிறப்பாக அமையும். பொருளாதார நிலை உயரும்.*

**பணியாளர்களுக்கு:**

தொழிலாளர்களின் ஒற்றுமை தழைத் தோங்கும். தொழிற்கூடங்களில் சீர்திருத்த நடவடிக்கைகளால் தன் கடமையை செய்து வருபவர்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு நல்ல பலன் அமையும். கூடுதல் பணி செய்து கூடுதல் வருமானம் பெறுவீர்கள். பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொதுநலனின் எப்பொழுதும் ஆர்வமுள்ளவரான உங்களுக்கு மக்களின் ஆதரவும் அன்பும் நிலைத்திருக்கும். அரசாங்க காரியங்கள் அனுகூலமாக இருக்கும். ஒற்றுமை உணர்வுகளை உருவாக்குவீர்கள். சமரசமான பேச்சுகளுக்கு எப்பொழுதும் உடன் படுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானத்தில் புதனுடன் சனி இருப்பதால் வியாபாரத்தில் ஏற்றமான காலமாக அமையும். வாகனம் ஆடம்பர பொருட்கள் வீட்டு உபயோக பொருட்கள் விற்பனையில் நல்ல லாபம் ஈட்டுவீர்கள். அண்டை நாடுகளில் இறக்குமதி பொருட்கள் மூலம் ஆதாயம் கிட்டும்.

**கலைஞர்களுக்கு:**

கலைதுறையினர் அதிக அலைச்சலின்றி அருகில் பல நிகழ்ச்சிகள் சென்று வருவீர்கள். முக்கிய பிரமுகர்கள் விசேடங்களில் கலந்து கொள்ளுவீர்கள். கடல் சார்ந்த பகுதியில் உங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்.

**பெண்களுக்கு:**

பெண்களின் சிந்தனை சக்தி பெருகி சில காரியங்களில் திறமையான செயல்களால் பாராட்டு பெறுவீர்கள். திருமண வாய்ப்புகள் அமையும். சுய தொழில் மேன்மை அமையும். கணவன் மனைவி ஒற்றுமை நீடிக்கும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களின் எழுத்தாற்றல் பெருகும். கூடுதல் மதிப்பெண் பெறுவதுடன் சக மாணவர்களுக்கு உதவி செய்வது அனைவரும் வரவேற்பார்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

12.12.2014 வெள்ளி காலை 09.16 முதல் 14.12.2014 ஞாயிறு இரவு 08.56 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

என்ன எதிர்பார்த்தீர்களோ அது நடக்கும். பல்வேறு காரியங்களில் ஈடுபட்டு வருமானத்தை பெருக்கி கொள்ளுவீர்கள். அரசாங்க காரியம் நன்றாக நடக்கும். பொருளாதார வளர்ச்சியைப் பெறுவீர்கள்.

**திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

கூட்டு தொழில் நல்ல லாபம் பெறுவீர்கள். வெளியூர் பயணத்தில் புதிய அனுபவங்களை பெறு வீர்கள். நீண்ட நாள் நண்பரின் தொடர்பு நல்ல பலனை தரும். பொருளாதாரம் மேன்மையை அடையும்.

**அவிட்டம் 1, 2, ஆம் பாதங்கள்:**

போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். சகோதரரின் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். சுயதொழில் முயற்சியால் வெற்றி கிட்டும். பொருளாதார நிலை கூடுதல் பலன் தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

நீலம், கிளிபச்சை, மஞ்சள்.

**அதிர்ஷ்ட திசைகள்:**

தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

சனி, வியாழன், புதன்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

சனிக்கிழமைகளில் வெண்பட்டு சந்திரனுக்கு சாத்தி வெள்ளை பூ வைத்து பச்சரிசி மாவு பிடித்து நெய் விளக்கு போட்டு வர தன, தானிய லாபம் தடையின்றி கிடைக்கும்.

## அக்நி

இவனையுபாசித்து ஒளிமிக்க திருமேனியைப் பெறுவதோடு, நற்பயன்களையும் அடையலாம்.

ஸப்தார்சிஷம் சபிப்ராணம்
அக்ஷமாலாம் கமண்டலும்
ஜ்வாலாமாலாகுலம் ரக்தம்
ஸக்திஹஸ்தம் சகாஸநம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் புண்ணியம் அளித்திடும் கார்த்திகை மகாதீப தரிசனம்

**ப**ன்னிரு தமிழ் மாதங்களில் கார்த்திகை மாதம் மங்களகரமானதாகவும், திருமண மாதமென்றும் போற்றப்படுகின்றது. இந்த மாதத்தில் ஜோதி வடிவாய் அருளும் லோகநாயகன் சிவபெருமானையும், கார்த்திகை மாதத்தில் அவதரித்த முத்தமிழ் காவலராம் முருகப் பெருமானையும் தீபங்கள் ஏற்றி வழிபட்டால் பக்தர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிட்டுமென்று புராணங்கள் செப்புகின்றன.

ஐம்பூதங்கள் கொண்டு அமையப் பெற்றதே இப்பிரபஞ்சம். ஆதிகாலம் முதற்கொண்டு தெய்வ வணக்கத்தின் தொடக்கமாக மனிதர்கள் இயற்கை வடிவங்களான பஞ்சபூதங்களையே வணங்கினர். இவற்றில் நெருப்பை தீபமாக அமைத்து அவற்றுள் ஈசனை ஜோதி வடிவில் கண்டு வழிபடும் மாபெரும் திருவிழாதான் "கார்த்திகை தீபத்திருவிழா". இதை மகாதீப தரிசனம் என்றும் அழைப்பாளர்கள்.

தமிழ் மாதங்களில் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுவது கார்த்திகை மாதம். கார்த்திகை என்று நினைத்த மாத்திரத்திலேயே, நினைவுக்கு வருவது அறியாமை எனும் இருளகற்றி ஞானம் எனும் ஒளியைத் தருகின்ற, உலகெங்கும் இந்து மக்களால் இயற்றப்படுகின்ற தீப ஒளிகளும், திருவண்ணாமலையில் ஏற்றப்படுகின்ற திருவண்ணாமலை தீபமும் தான். நினைத்தாலே முக்தி தரும் புணியத்தலமான திருவண்ணாமலையில் "மகா தீபம்" ஏற்றப்படுவது இக்கார்த்திகை மாதத்தில்தான். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இவைகளைக் கொண்டு அமையப்பெற்றதே இந்தப் பிரபஞ்சம் ஆகும். ஆதிகாலம் முதற்கொண்டே தெய்வ வணக்கத் தின் தொடக்கமாக மனிதர்கள் இயற்கை வடிவங்களான பஞ்சபூதங்களையே வணங்கினார்கள். இவற்றில் நெருப்பை, தீபங்களாக வடிவமைத்து அவற்றுள் ஈசனை ஜோதி வடிவில் கண்டு வழிபடும் மிகப்பெரிய திருவிழா தான் "கார்த்திகை தீபத்திருவிழா" என அனைத்து இந்து மக்களாலும் பக்திப் பெருக்கோடு கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மாதத்தில், திருக்கார்த்திகைப் பௌர்ணமி தினத்தில் திருவண்ணாமலையில் ஏற்றப்படுகின்ற மகாதீபத்தைக் காண்பதும், அன்றைய தினம் திருவண்ணாமலையைச் சுற்றி கிரிவலம் வருவதும் மானிடராய்ப் பிறந்தவர்க்கு மகா புண்ணியத்தை அளிக்கவல்லதும், செய்த பாவங்கள் களையப்படுகின்ற அற்புதத் தருணம் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இந்த அற்புத மலையின் அருமையும் பெருமையும் வாயாலும் எழுத்தாலும் விவரிக்க முடியாததாகும்.

ஆயிரக்கணக்கான ரிஷிகளும், சித்தர்களும் இப்புண்ணியத் திருத்தலமான திருவண்ணாமலையில் வந்து தங்கி ஈசனின் திருவடிகளில் தவமிருந்து மெய்ஞானம் பெற்று, உலகுக்கு நல்வழி காட்டி சைவ சித்தாந்த நெறிகளைப் பரப்பி தானும் முக்தியடைந்திருக்கிறார்கள் என்றால், திருவண்ணாமலையார் அபீதகுஜாம்பிகையின் திருவருட்களையும் நாம் நன்குணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் தம்முள் உயர்ந்தவர் யார் என்னும் வாதம் தோன்றிய போது, அவர்களுக்காக ஆதியும் அந்தமும் அற்ற அடியும் முடியும் காணமுடியாத, வானத்தையும் பூமியையும் ஒன்றாய் தொடுகின்ற உலக சோதியாய் காட்சி தந்த சிவபெருமான் பிரம்ம விஷ்ணுவின் உயர்வு தாழ்வு எனும் அஞ்ஞானத்தைப் போக்கினார். சிவன் சோதியாய் காட்சி தந்த அந்தத் திரு நாளே "திருக்கார்த்திகை தீபத்திருநாளாக" இன்று உலகெங்கும் உள்ள இந்துக்களால் பக்திச்சிரத்தை யோடு கொண்டாடப்படுகிறது.

ஈசனின் நெற்றிக்கண்ணிலே அவதரித்த தமிழ்க் கடவுள் முருகப்பெருமானை அன்போடு எடுத்து வளர்த்த ஆறு கார்த்திகைப்பெண்களையும் நினைவு கூறுகின்ற வகையிலும் கார்த்திகைத் திருநாள் பரணி தீபமாகக் கொண்டாடப்படுகின்றது. சங்க காலத்துக்கு முன்பிருந்தே, பல நூறு ஆண்டுகளாக கார்த்திகைத் திருநாள் ஒரு மிகச் சிறந்த தமிழ் பண்டிகையாக, விழாவாக அனுஷ்டிக்கப்படுவதை சங்க காலத்து வரலாறுகள் தெரிவிக்கின்றன. சங்ககாலத்து நூல்களும், புராண வரலாறுகளும் கார்த்திகை மாதத்தின் சிறப்புக்களையும் வெகுவாக வர்ணித்துள் ளன. அவற்றில் முக்கியமானவற்றை நாம் அறிந்து கொண்டால், கார்த்திகை மாதத்தில் நாம் அடையக் கூடிய புண்ணிய பலாபன்களை விரத வழிபாடுகளின் மூலமாக அடைந்து தெய்வ அனுக்கிறகங்களைப் பெற்றிடலாம், வாழ்வில் நலமடையலாம். கார்த்திகை மாதத்தில் தினமும் அதிகாலையில் எழுந்து, சூரிய உதயத்தின் போது நீராடுபவர்கள், உலகின் எல்லா புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பலன்களைப் பெறுவார்கள். கார்த்திகை மாதத்தில் சைவ உணவை மட்டுமே உண்டு விரதம் மேற்கொள்பவர்கள் சகல பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். கார்த்திகை மாதத்தை ஒளி பொருந்திய மாதமாக்கும் எத்தனிப்பாக, ஏழை எளியோர்க்கு எதனாலாவது உருவாக்கப்பட்ட விளக்குகளை தானமாக வழங்கி கூடுதல் ஒளிக்குக் காரணமாக இருக்கும் பட்சத்தில் "பிரம்மஹத்தி" முதலான கொடிய தோஷங்களும் நம்மைவிட்டு அகன்று விடும். அதேபோல் நமது இல்லங்களிலும், திருக்கார்த்திகைத் திருநாளன்று அதிக அளவில் தீபங்களை ஏற்றி வழிபட்டால் புண்ணிய பலன் கிடைக்கும். கார்த்திகைப் பௌர்ணமியன்று முறையாக உமாமகேஸ்வர விரத்தைக் கடைப்பிடித்தால் தேவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அரிய புண்ணிய பலன்களும், இம்மையில் சகல செல்வங்களும் மறுமையும் முக்தியும் கிட்டும் என்று உபதேச புராணத்திலும், திருப்புராணத்திலும் விவரித்துச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் கார்த்திகை மாதத் தில் பெருமாளை ஒவ்வொரு நாளும் மலர் கொண்டு பூசிப்பவர்கள் வீடுபேற்றையும் துளசி இலை கொண்டு அர்ச்சிப்பவர்கள், ஒவ்வொரு துளசி இலைக்கும் ஒரு அஸ்வமேதயாகம் செய்த பயனையும் அடைவார்கள்.

இராமலிங்க அடிகளார் "ஒளியின் வடிவம் சிவம்" என்று போற்றி அருட்பெருஞ் சோதிபாடினார். நாயன்மார்களில் ஒருவரான அப்பர், நமசிவாய வடிவமே ஒளி வடிவமானது என்கின்றார். கிருஷ்ணபகவான் கீதோபதேசத்தில், விளக்கின் ஒளி போன்று மனதை அசையாமல் இறைவழிபாட்டில் ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்கிறார். திரிசங்கு மன்னன் இழந்த நாட்டையும், பெருமையையும் கார்த்திகை தீப விரதமி ருந்தே திரும்பப் பெற்றான் என்கின்றது புராண வரலாறு.

திருக்கார்த்திகை தீபத் திருநாளன்று, இல்லங்களில் வழிபாடு செய்யும்போது, முதலாவதாக ஆதி முதற் கடவுளான விநாயகப்பெருமாளை வணங்கி, வீடெங்கிலும் தீபங்கள் ஏற்றி வழிபடலாம். கார்த்திகை நட்சத்திரத்திற்கு உரிய அதிர்ஷ்ட தேவதை அக்னி ஆகும். மேலும் பஞ்ச பூதத்தலங்களுள், திருவண்ணாமலை மகேசன் குடிகொண்டுள்ள தலம் அக்னி தலமாய் போற்றப்படுகிறது. ஆகவே தான் கார்த்திகை நட்ச, த்திரத்தோடு கூடிய பௌர்ணமி தினத்தன்று பகவானுக்கு தீபமேற்றி வழிபடுவது மகா புண்ணியமாகக் கருதப்படுகிறது. இல்லம் தோறும் குத்து விளக்கில் இருக்கும் ஐந்து முகங்களையும் ஏற்றி வைத்தால் அங்கு லட்சுமி கடாட் சம் ஏற்படும் என்றும், விளக்கின் ஐந்து முகங்களையும் பெண்களின் மனஉறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை, அன்பு ஆகிய நற்குணங்களைக் குறிக்கின்றன என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆண்டுதோறும் திருவண்ணாமலையில் பத்து நாட்களுக்கு தீபத்திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. விழாவின் நிறைவாக காலை 4 மணிக்கு பரணி தீபமும், மாலை 6 மணிக்கு மகா கார்த்திகை தீபமும் "அண்ணாமலைக்கு அரோகரா" என்று பக்தர்களின் ஆரவாரக்குரல் மலையெங்கும் ஒலிக்க ஏற்றப்படுகிறது. கார்த்திகை தீபதரிசனத்தைப் காணும் கண்களே கண்கள் என்றும் மற்றவை வெறும் புண்களே என்றும் கூறுகின்றார் பொய்கையாழ்வார். இத்துணை சிறப்பும் புண்ணியமும் மிக்க திருக்கார்த்திகை மகாதீபத்தை திருவண்ணாமலைக்குச் சென்று தரிசித்து பக்தர்கள் அளப்பரிய புண்ணியத்தை பெறலாம். திருநாளில் திருவண்ணாமலை செல்ல முடியாதவர்கள் முருகன் ஆலயத்திற்கும் சிவலாயத்திற்கும் சென்று தீபகங்களை ஏற்றி வழிபட்டு எல்லா வளங்களையும் பெறலாம்.

*ஜெயா நாகேந்திரன்*

### விநாயகர் வழிபாடு

அல்லல்போம் வல்வினைபோம்
அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத்
துயரம்போம்
நல்லகுணமதிக மாமருணைக்
கோபுரத்தில் மேவு
கணபதியைக் கைதொழுதக்
கால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கும்பம்

### ஜய வருடம் கார்த்திகை மாதம்
### 17.11.2014 முதல் 15.12.2014 வரை

*குடும்ப நன்மை சீராக, தன் எண்ணங்களை மாற்றிக் கொள்ளும் கும்ப ராசி வாசகர்களே!*

*இம்மாதம் உங்களின் ராசிக்கு லாபஸ்தானத்தில் செவ்வாயும் ஏழாமிடத்தில் சந்திரனும் அமைவது பொருளாதார நிலையில் எதிர்பாராத தன வரவு வந்து சேரும். சிறு கடன் அமையும்.*

**பணியாளர்களுக்கு:**

பணியாளர்களின் வேலை பணிகளில் சில மாற்றம் உண்டாகும். அதிக நேரம் உழைத்து கூடுதல் வருமானம் பெறுவீர்கள். கருத்து வேற்றுமையுடன் இருந்தவர் காரியம் சமரசமாக இருக்க முயற்சி உண்டாகும். கடன் கட்டுக்குள் இருக்கும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது நலனில் எண்ணத்தின் படி செயல் இருக்கும். தனித்தனியே விரித்து கிடக்கும் அமைப்பு களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை எடுப்பீர்கள். சில நேரம் மன அமைதி கெட்டாலும் விடா முயற்சி உங்களுக்கு நல்ல பலனை தரும்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ஸ்தானத்தில் சூரியனுடன் சுக்கிரன் இணைவு பெறுவதும் செவ்வாய் தொழில் ஸ்தான திபதி லாபஸ்தானத்தில் அமருவதும் உங்களுக்கு வியாபாரத்தில் நல்ல ஆதாயம் கிட்டும் வாய்ப்புகள் அமையும். வங்கி கடன் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு:**

கலைத்துறையினர் சில புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வாய்ப்புகளுக்கு தாமதம் ஆனாலும் உங்களுக்கு ஊக்கம் தரும். அதிக தூரம் சென்று வர வேண்டி வரும். பொருளாதார நிலை சீராக இருக்கும்.

**பெண்களுக்கு:**

பெண்கள் கூட்டு முயற்சிகள் நல்ல பலன் தரும். சுயதொழிலில் தனித்து செயல்படுவது நல்லது. தெய்வ வழிபாடுகள் நல்ல பலனை தரும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களின் கல்வி மேன்மை பெறும். கடைசி வரை விடாமுயற்சிகளை செய்ய வேண்டி வரும். ஆசிரியர்களின் கவனம் உங்கள் மீது இருக்கும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

14.12.2014 ஞாயிறு இரவு 08.57 முதல் 17.12.2014 புதன் காலை 07.30 மணி வரையும்.

17.11.2014 திங்கள் பகல் 01.41 முதல் 19.11.2014 புதன் இரவு 12.00 மணி வரையும்.

**நட்சத்திர பலன்கள்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:**

விவசாய நிலங்கள் விளைச்சல்கள் குறைவாக இருக்கும். தொழிலில் மந்தநிலை நீடிக்கும். பணவரவு ஓரளவு சிரமமின்றி வந்து சேரும்.

**சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு சில சோதனை காலமாக அமையும். வரவுக்கு மீறிய செலவுகள் வந்து பாதிப்பை தரும். உங்களை சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். பொருளாதாரம் சுமாராக இருக்கும்.

**புரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:**

தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். சுமைகள் இறக்கி வைக்க சிலரின் உதவி கிடைக்கும். கருத்து வேற்றுமை மறையும். எழுத்து, பிணயம் இதில் கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. பொருளாதாரம் தேவைக்கு கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

நீலம், பச்சை, வெண்மை.

**அதிர்ஷ்ட திசைகள்:**

மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

சனி, புதன். வியாழன்.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**

வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்தியை வணங்கி வரவும். பிரதோசத்தன்று துர்க்கை அம்மன் முதல் நந்தி வரை வலமிருந்து இடம் மூன்று முறை அரை வட்டமாக சுற்றி வந்து சிவனுக்கு அர்ச்சனை செய்து விட்டு வர தீயப்பலன்கள் குறைந்து நலம் உண்டாகும்.

### பிரிந்த கணவன் ஒன்று சேர

அம்மன் சன்னதியில் விபூதி, குங்குமம் வைத்து அதில் கணவரின் பெயரை எழுதி கீழ் கண்ட சுலோகத்தை 108 முறை ஜெபித்து, பின் அந்த விபூதி, குங்குமத்தை பூசி வர குடும்ப ஒற்றுமை ஏற்படும்.

* "த்ரையோக்ய மோஹனாகரேத் தரயோக்யபரிபூஜிதே
* த்ரையோக்ய தேவசே தேவித்ரை யோக்ய மேவசம் குரு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## கும்பம்

**கொள்கை மீது நம்பிக்கை வைத்து மாறாது செயல் படும் கும்ப ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு இது வரை பாக்கிய ஸ்தானத்தில் இருந்த சனி பகவான் இனி தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து மூன்றாண்டு காலம் மூன்றாம் பார்வையாக விரைய ஸ்தானத் தையும் ஏழாம் பார்வையாக நான்காமிடத்தை யுடம் பத்தாம் பார்வையாக ராசிக்கு ஏழாமிடத் தையும் பார்வை இடுவதுடன் சொந்த ராசிநாதன் என்பதால் உங்களின் ராசிக்கு சனி பகவான் சகல பாக்கியங்களையும் தருவார். மேலும் இருக்கும் இடம் சிறப்பு என்பதால் செய்யும் தொழிலில் விருத்தியும் கட்டிட உபகரணங்கள், விவசாய இடு பொருட்கள் உரம், பூச்சி மருந்து விவசாய நவீன வாகனங்கள், உபகரணங்கள், விளையாட்டு சாமான்கள் வியாபாரம் சிறப்பாக அமையும். எண்ணங்களில் உதயமாகும். காரியங்களில் செயல்படுபவர்களுக்கு உன்னதமான சூழ்நிலை உருவாகும். கனவுகளில் தெரியும் நிகழ்வு நடை முறையில் வரும் சுகஸ்தானத்தை சனி பார்வை இடுவது தாயார் உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். மனைவியின் தாயாருக்கு உடல் நலம் குறைவு எற்படுதல் வயிறு சம்பந்தமான பிரச்சினை சத்திர சிகிச்சைகள் செய்ய வேண்டிய நிலைகள் உருவாகும். மனரீதியான பாதிப்புகள் குறைந்து ஆக்கபூர்வமான செயல்கள் அமையும். உணவு சம்பந்தமான பொருட்கள் விற்பனையில் புதிய தொழில் அதிபர்களின் தொடர்பு கிட்டும். கணக்கு பார்த்து செயல்படுதல், பணியாளர்களின் உதவியும் ஒத்துழைப்பும் உண்டாகும். வீட்டு மரா மத்து காரியங்களில் புதிய செலவுகள் வந்து சேரும். கூட்டுத்தொழிலில் சிலருக்கு பிரச்சினை கள் வரலாம். கூட்டணிகளிடம் கருத்து வேறுபாடுகள் வரலாம் அல்லது வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு உங்களை விட்டு வெளியில் வர வாய்ப்புகள் உருவாகும். பொருளாதார நிலை யில் முன்னேற்றம் உண்டாகும்.

ஆயுள் காப்பீடுகளில் முதலீடுகள் செய்வீர்கள். அசையா சொத் துகளில் பணம் சேமிப்பு செய் வதும், நிலங்களில் மரம் நடுதல், விவ சாயப் பொருட்கள் வாங்குதல் போன்ற வற்றில் முதலீடு செய்யும் நிலை உண்டாகும். உங்களின் விரைய ஸ்தானத்தை பார்வை இடுவது வரும் லாபத்தில் அதிக சேதமின்றி செலவுகளை குறைத்து வங்கி களில் சேமித்து வைப்பீர்கள். சகோதரர்களின் உத வியும் உங்களிடம் அனுசரித்து செல்லும் மனபக் குவமும் உண்டாகும். வெள்ளி, பித்தளை பாத்தி ரங்கள் வியாபாரம் முன்னேற்றம் தரும். டிராவல் ஏஜென்சி நடத்துபவர்களுக்கு வெளிநாட்டு தொடர்புகளால் முன்னேற்றம் உண்டாகும். பணி யாளர்களுக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் உண்டாகும். தெய்வீக வழிபாடுகளும், நேர்த்தி கடன் செலுத்தி கடவுளின் அருள் பெற்று திகழ் வீர்கள். சுமை தாங்கி போல இருந்த உங்களின் வாழ்க்கை இனி வளமாகும் வாய்ப்புகள் மலரும். மேலும் 2015ல் குரு பெயர்ச்சிக்கு பின்பு இன்னும் பல நன்மைகளை அடைவீர்கள். கும்பராசிக்கு ஒரு போதும் சனிபகவான் தீமையை செய்யமாட்டார், எனினும் உயர்ந்த நிலையை அடைய உறுதுணை யாக இருப்பார்.



**பரிகாரம்:** சனிக்கிழமை ராகு காலத்தில் ஆஞ் சனேயரை வணங்கி துளசிமாலை கட்டி போட்டு உளுந்து வடையும், சக்கரை பொங்கலுமிட்டு விளக்கு போட்டு வழிபட்டு வர அனைத்து காரியமும் அனுகூலமாக இருக்கும். வயதான முதியவர்களுக்கு அன்னம், ஆடை தானம் வழங்கி வர ஆயுள் பலமும் ஆரோக்கியமும் உண்டாகும்.

### ஞானக்கண்ணே மூன்றாவது கண்

மூன்றாவது கண் என்பது ஞானக்கண். தியான யோகத்தில் சித்தி பெற்ற ஞானி ஞானக்கண் கொண்டு உலகைப் பார்க்கும் போது பெயரும் வடிவமும் (நாமரூபம்) கொண்ட உலகம் மறைந்து, ஒன்றேயான பரப்பிரம்மம் மட்டுமே அவனுக்கு அனு பவமாகிறது இதுவே நாங்கள் குறிப்பிட் டிருக்கும் சிவலீலையில் அடங்கியுள்ள உட்கருத்தாகும்.

இது மரத்தினால் செய்யப்பட்ட யானைப் பொம்மையை, மரம் என்று மட்டும் பார்க்கும் போது யானையின் தோற்றம் மறைந்து இல்லாமல் போவது போன்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கேற்றி வழிபடும் தத்துவம்

ஒளி வடிவமான கடவுள் பஞ்ச பூதங்களில் நிறைந்தும், மனிதனின் உடலிலும் நிறைந்தும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறார். இதையே வேதத்தில், "தஸ்ய மத்யே வஹ்னிசிகா அநியோர்த்வா" என்ற வாக்யம் தெளிவுபடுத்துகிறது. இதன் பொருள் கட்டை விரல் பிரமாணத்தில் தீப ஒளியாக பிரும்மம் இதயத்தில் நிறைந்து இருக்கிறது என்பதாகும். ஜோதி உருவாய் இறைவனை எண்ணி வணங்குதல் வேண்டும். அக்னி பகவானைப் போற்றி வணங்குதல் இதன் தத்துவம். அந்திசாயும் மாலையில் தீபம் ஏற்றி வணங்குவதால், "மகாலெட்சுமி" நம் இல்லத்தில் வாசம் செய்வாள்.



விளக்கொளியாகிய மின் கொடியாளை விள்கொளியாக விளக்கிடு நீயே! விளக்கிடு மெய்நின்ற ஞானப் பொருளை விளக்கிடுவார்கள் விக்கினர்தானே திருமூலர் (திருமந்திரம்)

விளக்கின் ஒளி இருளை அகற்றுகிறது. மன இருளும் நீங்குகிறது!

# கடவுளை அரசியல் தலைவருக்குச் சமமாக்காதீர்கள்!

*சுகிசிவம் கருத்துக்கள்*



கடவுளை அரசியல் தலைவருக்குச் சமமாக்காதீர்கள்!

அரசியல் தலைவரை வாழ்க வாழ்க என்று வாயாரப் புகழ்ந்து பேசுகிறார் ஒருவர். உடனே அவருக்குப் பணம் அல்லது பதவி கிடைக்கிறது. ஏதோ கோபத்தில் கடுமையாகத் திட்டுகிறார்.

உடனே உருட்டுக் கட்டை பேசுகிறது... அதன் பிறகு அவர் பேசவே முடியாதபடி ஆகிவிட்டது. வாழ்த்தினால் பரிசும், தாழ்த்தினால் தண்டனையும் தருகிறவர் சாதாரண அரசியல் தலைவர்.

இந்தத் தலைவர்கள் போலத்தான் கடவுளும், தன்னை வாழ்த்துகிறவனுக்கு லாபங்களும், பழிப்பவனுக்குத் தண்டனைகளும் தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

கடவுள் இவற்றை எல்லாம் கடந்தவர். அவர் நாம் வாழ்க என்பதால் வாழுவதோ, ஒழிக என்பதால் ஒழிந்து போவதோ இல்லை. எனவே இவை எதனாலும் அவர் பாதிப்படைவதில்லை.

ஆனால் வாழ்த்துபவர்கள் ஆனந்த அனுபவம் பெறுகிறார்கள், பழிப்பவர்கள் அந்த ஆனந்த அனுபவத்தை இழந்து போகிறார்கள்.

நல்ல விருந்து சாப்பிடுகிறவன் சந்தோஷப் படுகிறான். புறக்கணிக்கிறவன் அந்த மகிழ்வை இழக்கிறான்.

அப்படித்தான் கடவுளும்... அனுபவிப்பவனுக்கு ஆனந்தம்.. மறுப்பவருக்கு ஆனந்தம் இல்லை. அவ்வளவுதான். தயவு செய்து உள்ளூர் அரசியல்வாதிகள் நிலைக்குக் கடவுளைக் கருதிட வேண்டாம்.

**சுகி சிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி பதில்கள்

**வரலட்சுமி சொக்கலிங்கம்,**
**கோடம்பாக்கம்**

***சித்தர்பீடம் எதிரே உள்ள அதர்வண பத்ரகாளி சன்னதிக்குச் சென்று விட்டு, வீட்டிற்கு நேராகப் போகக்கூடாதென்றும், அந்தச் சன்னதியிலிருந்து மீண்டும் சித்தர்பீடம் வந்து கருவறை அம்மனைப் பார்த்து விட்டு சித்தர்பீடத்தை வலம் வந்து செல்ல வேண்டும் என்று கூறுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?***

அதர்வண பத்ரகாளி சன்னதி தீயசக்திகள் விலகுகின்ற இடம். தன் தீவினை அழிய வேண்டும் என்று முதலில் அம்மா சன்னதிக்கு வந்து சுற்றி வேண்டிக் கொண்டு அதர்வண பத்ரகாளியைச் சுற்றி வேண்டி, பிறகு மறுபடியும் அம்மாவின் சன்னதியைச் சுற்றி விட்டுச் செல்வதால் வீட்டிற்குச் செல்லும் போது முற்றிலுமாகத் தீவினை அகலும் என்பது அம்மா கூறிய அருள்வாக்கு. ஆகையால்தான் அப்படிச் செய்கிறோம். அருள்திரு அடிகளாரும் அப்படித்தானே சித்தர்பீடத்தை வலம் வருகிறார்கள். அவர்கள் வழிதானே நாமும் செல்ல வேண்டும்.

*******************

**பி.வசந்தாமணி,**
**கரூர்**

***அம்மா! தனிப்பட்ட ஒருவர் வீட்டிலிருந்து சக்தி மாலை அணிந்து இருமுடிகட்டி வரலாமா? வாரவழிபாடு நடத்தலாமா?***

அறநிலையில் பதிவு செய்த மன்றத்தில்தான் வழிபாடு செய்ய வேண்டும். தனிப்பட்ட ஒருவர் வீட்டில் சக்திமாலை அணியக்கூடாது. அவரவர்கள் வீட்டில் குடும்பத்தில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து சக்திமாலை அணிந்து கொள்ளலாம். வழிபாடும் செய்யலாம். இருப்பினும் மன்றத்தின் தொடர்பு இருப்பது நல்லது.

*******************

**ஜே.கணேசன்,**
**மணவாள நகர்**

***ஆதிபராசக்தி அவதாரமாம் அருள்திரு அம்மாவை, என் தாயாகவும், தந்தையாகவும், ஆன்மிக குருவாகவும், குலதெய்வமாகவும், இஷ்ட தெய்வமாகவும் ஏற்றுக் கொண்டேன். இதுவும் ஒரு சரணாகதி நிலைதானே அம்மா?***

ஆதிபராசக்தியின் அவதாரமாம் அருள் திரு. அடிகளார் அவர்களை மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய நான்கு நிலைகளிலும் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டதாக எழுதியுள்ளீர்கள். நீங்கள் சொல்வதை வைத்தோ, எழுதியதை வைத்தோ சரணாகதி நிலை அடைந்து விட்டீர்கள் என்று சொல்ல முடியாது. "மனிதமனம் ஒரு குரங்கு" எந்தச் சூழ்நிலையில் எப்படி மாறும் என்று சொல்ல முடியாது. "நான் இப்படிப்பட்டவன், இப்படி நடந்துகொள்பவன்" என்று தனக்குத தானே மதிப்பிட்டுக் கொண்டு உத்தரவாதம் கொடுக்க முடியாத காலம் இது.

இது போன்றே சரணாகதி தத்துவத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு அடிகளாரைத் தூக்கி எறிபவர்களையும் இதே காலகட்டத்தில் பார்க்கவும் முடிகிறது. ஆகவே உங்கள் மனநிலை சரணாகதி நிலையா? என்பதைப் பொறுத்திருந்து பார்த்துத்தான் முடிவு செய்ய முடியும்.

உங்கள் செயல்களின் மூலம் சரணாகதி நிலையைப் பிறருக்கு உணர்த்தவும், நீங்கள் உணரவும் முயற்சி செய்யுங்கள், பிறகு உங்களுக்கே தெரியும். நீங்கள் உண்மையிலேயே சரணாகதி நிலை அடைந்து விட்டீர்களா என்று. ஒருவர் சரணாகதி நிலை அடைவதற்குள், பல சோதனைகளும் வெறுப்புணர்வுகளும் தோன்றும்.

அவற்றையெல்லாம் கடந்து சரணாகதி நிலை அடைவது மிகவும் கடினம். ஆனால் முயன்றால் முடியாதது இல்லை. அருள்கிடைத்தால் அனைத்தும் நடக்கும்.

**திருமதி லட்சுமி பங்காரு அடிகளார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாசி மாறனார்


கதை மலர்

கதையமைப்பு : ஆர்.வி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 யாகசாலையில் சுப வேளையில் வேள்வி தொடங்கியது.




08 யாகத்தில் அவிர்பாகம் அளிக்கத் தொடங்கும் நேரம், அப்போது திடீரென்று வெளியே பறைக் கொட்டும் சத்தம் பலமாகக் கேட்டது.




09 யாகசாலைக்கு வெளியே வந்து பரபரப்பாக எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே நீசன் யாகசாலைக்கு உள்ளேயே வந்துவிட்டான்.

10 யாகசாலையில் இருந்த அந்தணர்கள் வெளியே ஓடலானார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## மீனம்

**கடமையை செய்து கருத்துடன் செயல் புரியும் மீன ராசி வாசகர்களே!**

உங்களின் ராசிக்கு இதுவரை அட்டமசனியாக இருந்து வந்த சனி பகவான் கடந்த ஐந்து ஆண்டு களாக காடு மேடு என்று அலைச்சலும், பல அவ மானங்களையும், தொழிலில் நஷ்டத்தையும், கடன் தொல்லைகள், தேவையற்ற வம்பு வழக்குகளில் அவதிபட்டு வந்தீர்கள். அதிலிருந்து விடுபட்டு உங்களின் யோகா திபதி வீடான செவ்வாய் வீட்டில் மூன்றாண்டு காலம் அமர்ந்து பல நன் மைகளை செய்யவிருக்கிறார். உங்களின் ராசிக்கு பாக்கிய ஸ்தானத்தில் அமர்ந்து ராசிக்கு லாப ஸ்தானத் தையும் முயற்சி



ஸ்தானத்தையும் ஆறாமிடத்தையும் பார்வை இடு வது உங் களின் ஒவ் வொரு காரியங்களி லும் உங்களின் விடா முயற்சி யையும் தன்னம்பிக்கையும் கொண்டு செயல்படும் விதத்தை உரு வாக்கி தருவார்.

வியாபாரத்தில் புதிய முயற்சிகள் செய்து நல்ல பலனை அடைவதும், வெளிநாட்டு தொழில் அதி பர்களின் தொடர்புகளும் உண்டாகும்.

ஆறாமிடமான எதிரிகள் ஸ்தானத்தை சனி பார்வை இடுவது உங்களின் மறைமுக எதிரிகளின் தொல்லை மறையும். இதுவரை உங்களை ஏமாற்றி வந்தவர்களை விரட்டி அடிப்பீர்கள். பண பலம் கூடும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள்.

கர்ம வினைகள் மறையும். புண்ணிய தீர்த்த யாத் திரைகள் சென்று பாவத்தை தீர்த்துக் கொள்ளும் வாய்ப்புகள் அமையும். குரு பார்வை தற்சமயம் இருந்து வருவது 2017ல் கன்னியில் குரு வந்து ராசியை பார்க்கும் காலத்திலும் உங்களின் இந்த பிறவி பயன்களை விடுத்து விட்டு நல்ல பலன் பெறுவதும், பூர்வ புண்ணியத்தை அடைவதும் நல்ல காரியங்களும் செய்து கோவில் கட்டும் பாக்கியம் பெறுவதும் சுயநலமின்றி பொது நலன் கருதி செய்யும் காரியம் நன்மையாக அமையும். கடல் சார்ந்த உணவு பண்டங்களும் கடல் பாசி, பவளம் போன்ற பொருட்களால் ஆதாயம் உண் டாகும். உதவிக்கு உங்களின் உற்ற நண்பர்களின் ஆதரவு கிட்டும்.

உங்களின் ராசிக்கு லாபஸ்தானத்தை பார்ப் பது உங்களின் தொழில் வளம் பெறவும், கிடைத்த பொருட்களை கையிருப்பு வைக் காமல் விற்பனை செய்து உடனுக்குடன் பலன் அடைவதும் அமையும். சனி பகவானின் நட்பு கிரகங்களான சுக்கிரன், புதன், ராகு, குரு இரு வர்களுடன் இணையும் காலம் பார்வை பெறும் நேரங்களில் நல்ல பலன் அடைவதுடன் சுறுசு றுப்பும் வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் பெறு வதும் அமையும். சூரியன் நட்சத்திரத்தில் பிறந்த வர்களிடமும், சிம்மராசிக்காரர்களிடமும் கூட்டு வைக்காமல் இருப்பது நல்லது.

குறிப்பாக மக நட்சத்திர காரர்களிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது இன்னும் நல்லது. செல வுகள் வந்து பண விரையம் ஆனாலும் அதற்கு தகுந்த பண வரவு வந்து பிரச்சனை இன்றி நன்மை பெறுவீர்கள். முதலீடு இல்லாத கமிசன் வியாபாரம் கூடுதல் வருமானம் தரும்.

பெண்களிடம் பழகும் போது சற்று கவனமாக இருப்பதுடன் வளமான வாழ்க்கைக்கு இடையூறு வராமல் பேசும் போது எச்சரிக்கையுடன் இருப்பது நன்மையை தரும்.

ஒன்லைன் வர்த்தகம், பங்கு சந்தைகளில் கூடுதல் பங்குகள் வரும் காலம். பங்குகளை இருப்பு வைக்காமல் விற்று லாபம் ஈட்டுவதால் வருமானத்தை பெருக்க வாய்ப்பாக அமையும்.

பரிகாரம்: வியாழக்கிழமையும், சனிக்கிழமை யும் சிவன் ஆலயம் சென்று தட்சிணாமூர்த்தியையும் பிரம்மாவையும் வணங்கி வரவும். வாய் பேசாதவர் களுக்கு தானம் தர்மம் செய்து வர சகலகாரியமும் அனுகூலமாகவும் வெற்றியும் பெறுவீர்கள்.

இந்த ராசிபலனை உங்களுக்குத் தருபவர்:
சோதிடர் வாடிப்பட்டி
R. ஆனந்தன் M.A., D.A., D.V.,
0091 97893 41554





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனம்

**ஜய வருடம் கார்த்திகை மாதம்**
**17.11.2014 முதல் 15.12.2014 வரை**



***தனக்கென்று எதையும் சேர்த்து வைத்துக் கொள்ளாத மீன ராசி வாசகர்களே!***

***இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை இருப்பதும் ராசியில் கேது அமர்வதும் எதிர்பாராத தொழிலில் வளர்ச்சியும் பணவரவும் உண்டாகும். தெய்வ வழிபாடுகளின் அதிக வருமானமும் செயல்பாடுகளின் வெற்றியும் தரும்.***

**பணியாளர்களுக்கு:**

பணியாளர்களின் எண்ணம் செயல்களில் மாற்றம் உண்டாகும். போராட்ட குணங்களை விட்டு விட்டு செயல்பட விரும்புவீர்கள். கணக்கு பார்த்து செயல்படுவீர்கள். தொழிற்சங்க கூட்டங்களில் அமைதியாக இருந்து வருவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பொருளாதார நிலை மேன்மையை அடையும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பொது நலனில் எப்பொழுதும் நற்பலன்களை பெற்று தருவீர்கள். கோயில்கள் ஆன்மிக சம்பந்தமான பிரச்சினைகளில் உங்களின் ஆதரவு நல்ல பலனை தரும். பொதுமக்களின் உறவுகளை மேம்படுத்தி கொள்வீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

வியாபாரிகளின் தொழில் திறமை வலுப்படும். தனஸ்தானாதிபதியும் யோகாதிபதியுமான செவ்வாய் தொழில்ஸ்தானத்தில் அமர்வது உங்களின் தொழில் வளர்ச்சியும் வருமானமும் பெருகும். எத்தனை சோதனைகள் வந்தாலும் நன்மையே விளையும்.

**கலைஞர்களுக்கு:**

கலைதுறையினர் வெளியூர்களில் சென்று சுபநிகழ்ச்சிகளுக்கு கலை சேவை செய்வீர்கள். கலைஞர்கள் ஒற்றுமையை நிலைநாட்ட பாடுபடுவீர்கள். வருமானம் பெருகும்.

**பெண்களுக்கு:**

பெண்களின் வளர்ச்சி மேம்பாடு அடையும். வங்கி கடன் பெறுதல், தொழில் வளர்ச்சியை பெறுவீர்கள். சேமிப்புகளுக்கு வாய்ப்பு அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்களில் கல்வி ஆற்றல் பெருகும். ஜென்ம கேது கல்வியில் சில மறதியை தந்தாலும் குரு பார்வை உங்களுக்கு தேர்வில் வெற்றியை தரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்:**

19.11.2014 புதன் இரவு 12.01 முதல் 22.11.2014 சனி இரவு 12.18 மணி வரை.

**நட்சத்திர பலன்கள்**

**புரட்டாதி 4ஆம் பாதம்:**

சொந்த முயற்சிகள் நல்ல பலனை தரும். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சியை கொடுக்கும். தொழிலில் நினைத்தபடி ஆதாயம் அடைவீர்கள். வெளியூர் பயணம் பயனுள்ளதாக அமையும்.

**உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

எதிலும் அவசரம் இல்லாமல் கவனமுடன் செயல்படுவது நல்லது. எதிர்கால நலன் கருதி எடுக்கும் முடிவு சாதகமாக அமையும். ஆன்மீக சுற்றுலா சென்று வருவீர்கள்.

**கெட்ட கனவு பரிகார மந்திரம்**

நீங்கள் தூங்கும் போது கெட்ட சொப்பனங்கள் ஏற்பட்டால் கீழ்க்கண்ட மந்திரத்தை 5 முறை கூறினால் பரிகாரம் ஏற்படும். "ஓம் ஸ்ரீ கோவிந்தன நமஹ"

**ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்:**

மாணவர்களின் தேர்வு சிறப்பாக இருக்கும். கலைஞர்களுக்கு ஏற்றமான வளர்ச்சி உண்டாகும். கடமையை செய்து நல்ல பலனை அடைவீர்கள். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக அமையும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:**

மஞ்சள், சிகப்பு வெண்மை.

**அதிர்ஷ்ட திசைகள்:**

வடக்கு, வடகிழக்கு, கிழக்கு.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

வியாழன், வெள்ளி, ஞாயிறு.

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்:**


ஜென்ம கேதுவுக்கு திங்கள் கிழமைகளில் விநாயகருக்கு கொளுக்கட்டை வைத்து பாசிப்பயிறு நைவேத்தியம் செய்து தேங்காய் எண்ணெய் விளக்கு போட்டு வழிபட்டு வர சகல தோசம் நீங்கி யோக நிலை பெறுவீர்கள்.

இம்மாத ராசிபலனை
உங்களுக்குத் தருபவர்:
சோதிடர் வாடிப்பட்டி
R. ஆனந்தன் M.A.,
0091 97893 41554





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோதிடத் துளிகள்

சூரியன், சந்திரன், செவ்வாய் போன்ற கிரகங்கள் மூன்றும் பத்தாம் பாவத்தில் இருந்தால் அவருக்கு சுக ஜீவனம், உழைக்காமல் உண்பவர் ஆவார்.

விருச்சிக லக்னத்திற்கு 9,10,11 ஆம் இடங்கள் தவிர மற்ற இடங்களில் சுக்ரன் நிற்பது நல்ல குடும்ப வாழ்க்கை அமைய உதவும்.

கும்ப லக்னத்தில் பிறந்தவர்க்கு தனுசு ராசியில் புதன் இருக்க மீனத்தில் சந்திரனுடன் குரு ஆட்சி பெற்று நிற்க அரசாங்கத்தால் சன்மானம் பெறுபவர் ஆவார்.

மீன லக்னமாக இருந்து அதில் சுக்ரன் உச்சம் பெற்று, குரு ஆட்சி பெற்று சனி பகவானுடன் இணைந்து நின்றால் அரச யோகம் உண்டாகும்.

மீன லக்னத்திற்கு கடகத்தில் சந்திரன் ஆட்சி பெற்று குருவுடன் சேர்ந்து இருந்தால் இவரது புகழ் கடல்கடந்து போவதுடன் நற்பெயருடன்வாழ்வார்.

ரிஷப லக்னத்தில் சந்திரன் உச்சம் பெற்று புதன் பார்வை செய்தால் கவி எழுதுவதிலும் பாட்டெழுதி பொருள் வாங்கும் கவிஞராக விளங்குவார். பிரபலமும் உண்டாகும்.

கடக லக்னத்தில் குரு உச்சமாகி ஏழாம் பார்வையாகபுதனைபார்த்தால்ஒருசிறந்தகவிபாடும் திறமை பெற்றவர்.

மீன லக்னத்திற்கு குரு உச்சமாக அமர்ந்து 2, 9க்குடைய செவ்வாய் மகரத்தில் உச்சமாகி நின்றால் குரு பார்வை இருப்பதாலும் புதன், சனியும் 10ல் நின்றால் சக்கரவர்த்தி யோகத்தை ஏற்படுத்தி நாடாளும் தகுதியை தரும்.

மிதுனம், சிம்மம், தனுசு, கும்பம் ஆகிய இந்த நான்கு ராசிகளில் எல்லா கிரகங்களும் இருந்தால் இந்த ஜாதகர் சக்கரவர்த்தி ஆவார்.

மிதுன லக்னத்திற்கு 4ல் சந்திரனும் குருவும் இணைந்து நின்று மீனத்தில் சுக்ரன் உச்சம் பெற்றால் இவர் சகலமும் பெற்ற பாக்கியசாலி ஆவார்.

தனுசு லக்னம் சிம்ம ராசியாக அமைந்து கும்பத்தில்சுக்ரன்இருக்கப்பெற்றுமீனத்தில்குருவும், சூரியனும் இணைத்து நின்றால் இவர் புண்ணியம் செய்ய பிறந்தவர் தானம் தர்மம் செய்வதில் இவரை மிஞ்ச முடியாது.

மிதுனலக்னமாக அமைந்து 2ல் சனி அமர்ந்து 7ம் பாவத்தில் புதன் இருந்து மீனராசியாக அமைந்தால் நல்ல புகழ் உண்டாகி மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

லக்னத்தில் 5க்குடையவன் பாவிகளுடன் சம்பந்தப்பட்டால் வயிற்று வலி அல்லது குடல் சம்பந்தப்பட்ட நோய் உண்டாகும்.

5ம் பாவத்தில் வாயு கிரகமான புதன் பலம் பெற்றால் இவருக்கு வாய்வுதொல்லைஅஜீரண கோளாறு ஏற்படும்.

12ல் செவ்வாய் குரு சேர்க்கை பெற்றால் தாம்பத்ய சுகம் அதிகம் விரும்பும் ஆசையும் கொண்டவராக இருப்பார்.

**ஆர்.சூரியநாராயணமூர்த்தி**


## உள்ளத்தில் உறைகிறார் இறைவன்

நீங்கள் தூய உள்ளத்துடன் இறைவனைத் தியானம் செய்தால் இறைவன் உங்கள் உள்ளத்திலேயே இருப்பதைத் தெளிவாக உணர முடியும் வீட்டுக்குள்ளே இருக்கும் மகனை வீதி முழுவதும் தாய் கூவிக்கூவி அழைத்தாலும் மகன் கிடைக்க மாட்டான்.

அது போல் உள்ளத்தில் இருக்கும் இறைவன் வெளியே எங்கே தேடினாலும் கிடைக்க மாட்டான் பக்தியால் நமது மனித மனம் பக்குவம் பெறும் போது எல்லா உயிர்களிலும் இறைவன் இருப்பதை உணர்ந்து கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# NIRO HOLIDAY RESORT

## கதிர்காமத்தில்...

தமிழ் பேசும் மக்களுக்காக
வரவேற்பாளர்கள் முதல்
ஊழியர்கள் வரை தமிழில்

கதிர்காம யாத்ரீகர்களின் நலன்கருதி
சகல வசதிகளுடன் கூடிய அறைகள்
உங்கள் குடும்பத்தினருடன் தங்கி மகிழ









No.51, Sella Road, Kataragama. Tel: 047 2236901, 047 5701055, 0777 216263
E-mail: niroholidayresort@gmail.com www.niroholidayresort.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்

# மலையாள மாந்த்ரீக உட்சாட்டபீடம்



மலையாள மாந்த்ரீக
சித்தர் பேராசிரியர்.
தேசபந்து.
திரு.P.K.சாமி
(J.D.G.A.N) J.P ஐயா







**போ**காத இடமில்லை போய் போய் சோர்ந்து விட்ட ஆத்மாக்களுக்கு தெட்டத் தெளிவான பலன் கிட்ட என்னிடம் வாருங்கள். என் அருள் ஞான சித்த மூலம் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. எமது நிறுவனம் 48 வருட உண்மை சேவை என்பதால் நீண்ட தொலைபேசி ஆலோசனைக்கு எமக்கு கால அவகாசமில்லை. சொந்த விடயங்களை தொலைபேசி மூலமாக தீர்க்க முடியாது. நேரில் வந்தால் மட்டுமே நன்கு கலந்தாலோசித்து வெற்றி பெற முடியும். கொழும்பு கொட்டாஞ்சேனை சுப்பர் மார்க்கட்க்கு வந்து தொலைபேசி அழைப்பு தந்தால் எமது வாகனம் வந்து உங்களை அழைத்து வர உதவி செய்வோம். கிரகக் கோளாரினால் ஏற்படும் பல துன்பம் கஸ்டங்களையும் ஸ்ரீ துர்க்காதேவியின் அருள் ஞான சித்தத்தால் கண்டறிந்து சுபமாக வாழ அற்புத சக்தி அருட் செல்வ அச்சரங்கள் என்னிடம் உண்டு.

1. **சூரிய பகவான்** அச்சரத்தின் மூலம் சகல விதமான திருஸ்டி தோஷம், துன்பம், துயரம், காரியத்தடை விலகும். சூரிய பகவானால் ஏற்படும் சர்வ கஸ்ட நஸ்ட துன்பங்களையும் விலக்கி, சுகமாக வாழ, குடும்ப பிணக்கு தீர, ஓடிப்போனவர் தேடி வர, காதலன் காதலி ஒன்று சேர, பெற்றோர் விருப்பம் இல்லாத திருமணம் விரும்பி நடக்க, நெஞ்செறிவு, நெஞ்சுவலி, மாரடைப்பு, உடல் பீடை நீங்கி ஐஸ்வரியம் கிட்டும்.
2. **சந்திர பகவான்** அச்சரத்தின் மூலம் வைத்தியம், சித்தக்கோளாறு, தோல்வியாதி, ரோக பயம், ஸ்திரி சாபம், செய்வினை தோஷங்கள், திருமணத்தடை, மாங்கல்ய தோஷம் உடையவர்கள், புத்திர தோஷம் உடையவர்கள், வீண் கஸ்டம், நஸ்டம் கோர்ட் விராஜ்ச்சிய தோஷம், வாழ்வா சாவா என்று சிந்திப்பவர்களுக்கு பிரச்சினை தீர, முறிந்த காதல் ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, காதல் கைகூட எல்லாவற்றிற்கும் இந்த அச்சரம் வெற்றி தரும்.
3. **குரபகவான்** அச்சரத்தின் மூலம் திருமணத் தடை, தரித்திரியம், புத்திரவிருத்தி இல்லாமை நீங்கவும், சர்வ நலன்களையும், யோக சித்தியையும், கல்வியில் சித்தம் பெறவும். காதலர்கள் நினைத்ததை சாதிக்கும் தன்மையையும் கொண்டது
4. **ராகு கேது பகவான்** அச்சரத்தின் மூலம் ராகு திசை, ராகு புத்தி, கேது திசை, கேது புத்தியால் ஏற்படும் சகல ராகு கேது தோஷமும் நீங்கிவிடும். சர்பாதி தோஷம், பூர்வ ஜென்ம மாதி பதிகள் சாபங்கள் நிவர்த்தியாகிவிடும். துர் சொப்பணம், செய்வினை தோஷம், காற்று சேட்டை, அபஸ்மாரகம், குலதெய்வம் அருள் இல்லாமையை பெற, வாழ்வில் பிடிப்பு இன்மை, துன்பம், துயரம், விண் மனஸ்தாபங்கள், தெய்வ குற்றம் உடையவர்கள், மேலதிகாரிகளின் தொல்லை உடையவர்கள் சகல தோஷங்களும் நீங்கி மேன்மை அடைந்து சர்வ மங்களம் ஏற்படும்.
5. **புத பகவான்** அச்சரத்தின் மூலம் சர்வ விஷயங்களுக்கும் பெரும் சக்தியை அடைந்து, செல்வாக்கு யோகமிக்க பெரு வாழ்வைப் பெற. வியாபார கஸ்டம் நீங்கவும். சர்வ நலன்களையும், யோக சித்தியையும் பெற, காதலர்கள் நினைத்ததை சாதிக்கும் சக்திகளையும், வெளிநாட்டு பிரயாண தடை நீங்கி வெளிநாடு செல்லவும் சகல சௌபாக்கியங்களையும் அள்ளித்தரும் வல்லமைக் கொண்டது.
6. **சுக்கிர பகவான்** அச்சரத்தின் மூலம் பணப்பிரச்சினை, ஆண் பெண் உடலுறவு கோளாறுகள், தொற்று நோய்கள், மலட்டுத் தன்மை வியாதிகள் தீரவும். சுகம் இல்லாமை, மனவசியம் இவைகளை அடியோடு போக்கவும். இழுபறியாக இருக்கும் காரியங்கள் நிறைவேறவும் உகந்தது.
7. **சனி பகவான்** அச்சரத்தின் மூலம் மதிப்பு உயரும். ஆயள் ஆரோக்கியம், புத்திர பாக்கியம், அதிஸ்டம், தனம், சுகம் கிட்ட சனிப்பிரதீ, சனிதிசை, சனிப்புத்தி, சனி மகா திசை, மாரக புத்தி, மா அதிபதி இவைகளுக்கு உபயோகம் செய்ய பரிபூரண பலன் கிட்டும்.

*இது மத சார்ப்பற்ற நிறுவனமாகும். எமக்கு எம்மதமும் சம்மதமே!*

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்

## மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P : 011 2342463, 011 2342464
Fax : 011 2344831.

33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P : 052 2222508, 077 8431761,
052 2223093, 052 2235097

கொழும்பு கொட்டாஞ்சேனை சுப்பர் மார்க்கட்க்கு வந்தால் எமது வாகனம் மூலம் உங்களை அழைத்து வந்து உங்கள் எண்ணங்கள் நிறைவேற்றப்படும்.

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org